# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

### தெய்வச்சிலையார் உரை.

நிழற்படப் பதிப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகப்
பதிப்புத் துறை நூல்கள் :

☐ மராட்டியர் செப்பேடுகள் 50
- செ. இராசு
விலை உரூ. 130/-

☐ கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரை)
இ. வை. அனந்தராமையர் பதிப்பின்
விலை உரூ. 150/-

☐ சங்க இலக்கியக் கட்டுரைகள்
– கருத்தரங்கம்
விலை உரூ. 30/-

☐ ஆராய்ச்சித் தொகுதி
– மு. இராகவையங்கார்
விலை உரூ. 100/-

☐ தொல் - சொல் - தெய்வச்சிலையார் உரை
விலை உரூ. 60/-

அச்சில்

தொல்காப்பியம் - நன்னூல் - சொல்லதிகாரம்
பேரா. க. வெள்ளைவாரணர்

நன்னூல் – காண்டிகையுரை
ஆறுமுக நாவலர் பதிப்பு.

தொல்-சொல்
தெய்வச்சிலையார் உரை
நிழற்படப் பதிப்பு

# தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புரை

தொன்மைத் தமிழ் இலக்கண நூல்களுள் முழுமையாகக் கிடைத்துள்ளது தொல்காப்பியம்.

எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக்கொண்ட இதற்கு உரைகள் பல எழுந்தன. இலக்கணங் கற்போர்க்கு இடையதிகாரமாம் சொல்லதிகாரத்திற்கு விரிவான பொருள் இன்றியமையாததாகக் கருதப்பட்டதால் அதற்கு மட்டும் சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார் முதலிய பலர் தனித்தனியே உரை எழுதினர்.

தெய்வச்சிலையார் உரை செம்பாகமானது. அதனைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் விரிவான பிற்சேர்க்கையுடன் 1929இல் பதிப்பித்தனர். கிடைத்தற்கரிய இப்பதிப்பு நிழற்படப் பதிப்பாக வெளிவருகின்றது.

இதனைப் பதிப்பித்துக்கொள்ள உளமுவந்து இசைவளித்த கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு ச. இராமனாதன் அவர்கட்கும், செயலாளர், உறுப்பினர்க்கும் எம் உளமார்ந்த நன்றி.

இலக்கண ஆர்வலரும், பேராசிரியர்களும், ஆய்வாளர்களும் பெற்றுப் பயனடைய வேண்டுகின்றோம்.

தி. ஆ. 2015-சித்திரை
ஏப்ரல்-1984, பதிப்புத்துறை
தஞ்சாவூர். தமிழ்ப் பல்கலைக் கழகம்,

தமிழ்ப் பல்கலைக் கழக
வெளியீடு : 5.
நிழற்படப் பதிப்பு

தி. ஆ. 2015 - சித்திரை
ஏப்ரல் - 1984

விலை உரூ. 60/-

கிடைக்குமிடம் :
இயக்குநர், பதிப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

அச்சு :
தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்.
தஞ்சாவூர்.

உ

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

தெய்வச்சிலையார் உரை.

கரந்தைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு.

சுக்கில வைகாசி.

**1929**

உ

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

## தெய்வச்சிலையார் உரை.

### பதிப்புரை.

*தொல்காப்பியமும் அதன் உரைகளும்.*

அமிழ்தினு மினிய நம் தமிழ்மொழியிலுள்ள இயல் (இலக்கண) நூல்களுட் பழமையும் பெருமையும் வாய்ந்தது தொல்காப்பியம் எனும் நூலாகும். இதனை யியற்றினோர் தொல்காப்பியர் என்ப. இது, எழுத்து, சொல், பொருள் எனும் முப்பெரும்பிரிவுகளை யுடையது. இதற்கு நல்லிசைப் புலவர் சிலர் உரைகண்டுளார். பண்டைத் தமிழ் நூல்களுள் இன்னும் அச்சிடப்பெறாத எட்டுச் சுவடிகளையும் அவற்றையுடையார்களையும் அளந்தறிதலாகாமையின், இத்தொல்காப்பியம் முழுமைக்குமோ, அன்றிச் சிலபல பகுதிகட்கோ உரைகண்டார் இவரிவரே யென அறுதியிட்டுக் கூறுதல் இயலாது; கூறுதல் காலப்போக்கிற் பிழைபடுவதாகும். பழைய நூலுரைகளை அச்சிட்ட பேரறிஞர்கள் தாம் அச்சிட்ட

நூல்கட்கு எழுதிவந்திருக்கும் முன்னுரை, பதிப்புரை முதலாயவற்றைத் தொடர்புற நோக்குவார்க்கு, பண்டை நூல்களின் பெயர்கள், அவற்றை ஆக்கியோர் பெயர்கள், அவற்றிற் கூறப்பெறும் பொருள்கள், அவற்றின் உரைகள் முதலாயவற்றிற் காலந்தொறும் எய்தியுள வேறுபாடுகள் இனிது புலப்படும். வேறு கூறுவானேன்? தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இவ்வுரையொன்றுளதெனப் பெரும்புலவருட் பலரும் சிலகாலங்கட்கு முன்வரை உணர்ந்திலரன்றோ? எனவே இதுகாறும் அச்சிட்டிருப்பவைகளைக் கண்டும், அறிஞர் கூறுவதைக் கேட்டும் உணரும் அளவில், தொல்காப்பிய உரைகளென இதுபோது கூறத்தக்கன எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் (இவ்வுரையாளர்), நச்சினார்க்கினியர், கல்லாடர் என்பார் உரைகளும், பொருளதிகாரத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் எனும் இவர்கள் உரைகளுமேயாகும். பேராசிரியரும் கல்லாடரும் தொல்காப்பியம் முழுவதற்கும் உரை கண்டவர் என்பதும், இளம்பூரணரின் வேறாக உரையாசிரியர் என்பாரொருவர் உளர் என்பதும் உண்டு.

சொல்லதிகாரத்து ஏனை உரைகளும் இவ்வுரையும்.

சொல்லதிகாரத்திற்குரியனவாய் மேற்கண்ட ஐவர் உரைகளுள், கல்லாடர் உரை வெளிவாராமையின் அதுபற்றிச் சொல்லாடற் கொன்றுமிலது. எவற்றினும் முன்னையதெனக் கூறப்பெறும் இளம்பூரணர் உரையினைப் பின்தொடர்ந்து சேனாவரையரும், இவ்விருவர் உரையினையும் பெரிதும் பின்தொடர்ந்து நச்சினார்க்கினியரும் உரையெழுதியிருப்பது அவற்றைப் பயின்றார் யாவரும் அறிவர். ஆனால் இவ்வுரையோ, அவற்றுள் எவற்றிற்குப் பின்னையது அன்றி முன்னையது; எவர் உரையின் எப்பகுதியை மேற்கொள்ளுகின்றது அன்றி மறுக்கின்றது; இவ்வுரையின் எப்பகுதி எவரால் மேற்கொள்ளப்படுகின்றது அன்றி மறுக்கப்படுகின்றது என்பன போன்ற ஆராய்ச்சிகள் செய்து முடிவு கட்டற்கு எளியதொன்றாக விலது. இளம்பூரணர் முதலியோர் கொள்கைகளின் மறுப்புக்கள் சில இதன்கண் காணப்பெறுகின்றன. அவற்றாற்

பெற்றதென்? மற்று, இவ்வுரைக் கொள்கைகளின் மறுப்புக்கள் போல்வனவும் ஒரோவழி அவ்வுரைகளிற் காணப்பெறுகின்றன! இவ்வுரையாளர் எவர் பெயரையும் எவ்விடத்தும் கூறிற்றிலர்; அங்ஙனமே இவர் பெயரையும் எவரும் எங்கும் கூறினரிலர். இளம்பூரணர் முதலோர் உரைப் போக்கு நடைப்போக்குக்கள் வேறு; இவர் உரைப் போக்கு நடைப்போக்குக்கள் வேறு. இவ்விருவகையினரும் கொண்ட நூற்பாக்களின் பாடம், அடிகள், முறைவைப்பு முதலாயவே பல்லிடங்களில் வேறுபடுவன. இங்ஙனம் பல்லாற்றானும் வேறுபட்டு நிற்கும் இவ்விருவகை யுரைகளையும் ஒருங்குவைத்து ஆராய்ந்து முடிவு காண்டல் ஆராய்வார்க்குப் பேரூக்கத்தினையும், பெருமகிழ்வினையும் விளைப்பதொன்றாகும். இதன்கண் நன்னூல் மயிலைநாதர் உரையுடன் ஒற்றுமைப்படும் பகுதிகள் பலவுள. இவ்வுரையினுள், சமயப் பற்று மிக்க பிற்காலத்தினர் ஒருவர் எழுதிச்சேர்த்த சிற்சில பகுதிகளும் உளவோ எனும் ஐயம், இதனை அச்சிடற்குக் கிடைத்த முதலேட்டிற்கும் இரண்டாவது ஏட்டிற்கும் உள்ள சில வேறுபாடுகளாலும் வேறுசில குறிப்புக்களாலும் உண்டாகும். நிற்க. இவ்வுரை, சொல்லழகு பொருளழகு திட்ப நுட்பங்களில் எவ்வுரைக்கும் பின்னிடுவதொன்றன்று. பிறவுரைகளிற் காணலாகாத பல அரும் பொருள்களும் தெளிவுகளும் ஆங்காங்குக் கொண்டு வியப்பிப்பது இவ்வுரை. இதன்கண் வலிந்து கூறல், மெலிந்து போதல் முதலாய குறைகள் யாண்டுங்காண்டல் அரிது. இங்ஙனமாய இதன் தனிச்சீர்கள் விரிப்பிற் பெருகும். *

இவ்வுரை யேடு அச்சிட்ட வரலாறு.

நம் தமிழ்மொழியின் அரிய அணிகலன்களின் ஒன்றாக வைத்தெண்ணற்குரிய இவ்வுரை யேடு ஒன்று, தஞ்சைமாநகரில், சரபோஜி மன்னர் பெரும் புகழென விளங்கியொளிரும் கலைமகள் மன்றத்தே (சரசுவதிமால்) உளதெனத் தமிழ்ப்பெரும்புலவர் சிலர் பல்லாண்டு

---

* தமிழ்ப்பொழில் துணர் 1. மலர் 4, 5-இல் இவ்வுரையின் சிறப்பும் ஏனையவுரைகளின் ஒப்புநோக்கமும் சிறிது சிறிது காட்டப்பட்டன; இனியும் எழுதப்பெறும். இரண்டாம் பதிப்பில் இவையாவும் இணைக்கப்பெறும்.

களுக்கு முன்னரே இரண்டோரிடங்களிற் குறித்துள்ளார். எனினும் பல காலம்வரை இதனை அச்சிடக்கருதி முன்வருவா ரிலராயினர். இக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தலைவர், திரு. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் மேற்கூறிய கலைமகள் மன்ற நூல் நிலையத்தின் மேற்பார்வையை யெய்தியதொருகாலத்தே, அங்கு ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த தமிழ்ப் புலவர் திரு. L. உலகநாத பிள்ளை யவர்கள் வாயிலாக இந்நூலினை எடுத்துப் பார்த்து, இதன் அருமை பெருமைகளை யுணர்ந்து, இதனை அச்சிடும் அவாவெய் தினர். அதன்மேல், இச்சங்க உறுப்பினரும், தமிழ்ப் பெரும் புலவருமாகிய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியாரவர்கள் இதனை யுணர்ந்து, விரைவில் அச்சிட்டு வெளியிடத் தூண்டிய தோடு, தமது அரிய நண்பரும், இச்சங்க உறுப்பினரும், பெருந் திருவினருமாகிய பலவான்குடி ராம. குமா. சு. குமரப்பச் செட்டியா ரவர்களிடம் இதனை அச்சிடற்குப் பொருளுதவி செய்ய வேண் டினர். அவர்கள் அன்புடன் ஏற்று, ஒரு பெருந்தொகையினை உடன் தந்துதவினர். பின்னர், இச்சங்கம் இவ்வேலையினை மேற் கொண்டு செய்து முடித்தலை என்பாற் பணித்தது. என் தகுதி யினை நோக்காது கடன் நோக்கி ஏற்ற யான், இவ்வேட்டினைப் பெற் றுப் பார்த்தகாலை, இது, சில ஏடுகள் முழுவதும் இன்றியும் சில ஏடுகள் பாதியில் மூரிந்தும் சில பொடிந்தும் போய்விட்டமையின் மிகப் பழுதுபட்டிருப்பதும்; கற்றறிஞர் எவராலும் எழுதப்பெறாது கூலிக்கு எழுதுவோர் எவராலோ எழுதப்பெற்றதால், ண, ன, ந, ல, ள, ழ—வேறுபாடுகளும் பிறவும் தேறுமையான் எழுந்த எழுத்துப் பிழை சொற்பிழைகளும் ஒருமை பன்மைப் பிறழ்ச்சி முடிபுகள் முதலாய சொற்றொடர்ப் பிழைகளும் மல்கியும், சில விடங்களில் நூற்பாவின்றியும், சிலவிடங்களில் உரைகளின்றியும், சிலவிடங்களில் அவை பிறழ்ந்தும் காணப்பெற்றமையின் பல்விடங் களிற் பொருள்துணிதற் கியலாதவா றிருப்பதும் காணலாயி னேன். இதன் பிரதியென நூனிலையாளர் எழுதி வைத்திருப்ப தொன்றுளதேனும், அது, பிரதிசெய்தோரால், இடைவெளியுற்ற பகுதிகள் இணைக்கப்பெற்றும், குறையுற்றிருந்த நூற்பாக்கள் சில சொற்களால் முடிக்கப்பெற்றும் இன்னோரன்ன பிற புத்தாக்கம்

பெற்றும் இருப்பதால், இவ்வேலைக்குப் பயன்படாததாயிற்று. அரித்துவாரமங்கலத்தில் புலவரும், புலவரைப் போற்றும் செல்வருமாகவிருந்த வா. கோபாலசாமி ரகுநாத ராசாளியாரவர்கள் வீட்டில் இவ்வேட்டின் பிரதியொன்றிருப்பதுணர்ந்தேன் ஆங்குச் சென்று அரிதிற்றேடிக் கண்ட அப்பிரதிதானும், மேற்கூறிய பிரதி போன்ற தொன்றேயா யிருந்தது. எனினும், இது, சிறிது முற்காலத்தில் எழுதப்பெற்றதொன்றாயினமையின், இவ்வேட்டில் இப் பாற்பொடிந்துள சில பகுதிகளைக் கண்டுகொள்ளுமளவில் உதவியாயிருந்தது. வேறு ஏடுகள் பெறவேண்டிப் பழைய ஏடுகள் இருக்கும் இடங்களெனத் தெரிந்த சில்லிடங்களிற் கேட்டுப் பார்த்தும் ஒன்றும் கிடைத்திலது. இவ்வளவில் இவ்வொற்றை ஏட்டினை, பிழைமலி ஏட்டினை, சிதைவுறும் ஏட்டினைக் கொண்டு அச்சிடல் பெரியதோர் அச்சத்தினை விளைத்ததேனும், இவ்வேடு ‘நென்னற்கண்ட திருமேனி யின்று பிறிதா நிலைதளரும்’ நிலையிலிருந்ததால், காலந்தாழ்த்தலில் உண்டாகும் ஏதப்பாடு அதனினும் காட்டில் அச்சம் விளைத்தமையின், உடனே தொடங்கி முடிக்கும் இன்றியமையாமை எய்தியது.

பண்டைத்தமிழ் நூல் ஏடுகளை அச்சிடுவதென்பது எளிய வேலையன்று. ஆழ்ந்தகன்ற பயிற்சியும், கூர்ந்து கூர்ந்து செல்லும் மதிநுட்பமும், ஏட்டுச்சுவடியிற் பன்னெடுங்காலப் பழக்கமும், சிறந்த பயிற்சியுடையார் துணையும் உடையாரே பண்டைத் தமிழ் நூலேடுகளை அச்சிடற்குரியார். இன்னோர்தாமும், தாம் அச்சிடப்புகும் நூலிற்குப் பற்பல ஏட்டுப்பிரதிகள் தேடிவைத்துக் கொள்ளல் வேண்டும். அவற்றுள் ஒன்றிரண்டேனும் சிறந்தபுலவர் கைப்பட்டனவாய் அன்றிச் சிறந்த பயிற்சியுடையோரால் எழுதப் பெற்றனவா யிருத்தல் வேண்டும். இவர், தாம் அச்சிட எடுத்துக் கொள்ளும் நூலுரைகளைப் பன்முறை பயின்று அந்நூற்பொருள் முழுவதையும் சிலையெழுத்தெனத் தம் மனத்தகத்தே பதிப்பித்துக் கொண்டு, அவ்வுணர்ச்சியோடு பண்டைத்தமிழ் இயனூல் செய்யுனூல்களை யெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து, ஒப்புமைப் பகுதிகள். மேற்கோள் விளக்கங்கள் முதலாயவற்றைத் திரட்டிக்கொள்ளல் வேண்டும். இங்ஙனமெல்லாம் பண்டைநூற்

விஞ்சியதை உணர்ந்த தஞ்சை லாலி அச்சுக்கூடத் தலைவர் திருவாளர் A. சுந்தரபாண்டியன் அவர்கள் இதன் அச்சுக் கூலி முழுவதையும் தமது நன்கொடையாக்கி யருளினர். இவர் கட்கு இச்சங்கத்தின் மனமார்ந்த நன்றியறிவினையும் வாழ்த்தினை யும் தெரிவிக்கின்றேன்.

இனி, இவ்வரிய எட்டுச்சுவடியினைப் பேணிவைத்திருந் துதவிய தஞ்சைக் கலைமகள் மன்றத்தாருக்கும், தாம் வைத்திருந்த இதன் பிரதியை அன்புடன் தந்துதவிய அரித்துவாரமங்கலம் இராசாளியாரவர்கள் குடும்பத்தினருக்கும், இரண்டாம் எட்டினை தந்துதவிய தமிழ்ப்பெரியார் ஆய ஐயரவர்கட்கும். இந்நூலின் வெளியீட்டிற்குப் பல்லாற்றானும் முதன்மையாளராகின்ற பண்டிதமணியாரவர்கட்கும், இச்சங்கத் தலைவரவர்கட்கும் என் மனமார்ந்த நன்றியறிவினையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நலம்.

விரிந்த வுலகில் வியப்பார் பொருளாய்ச்
செறிந்த பலவுட் சிறந்து—தெரிந்த
பொருள்ஓங்கு நூலோர் புரிபுன் னகைக்காம்
சிறுநூலு மோரேன் செயல்.

R. வேங்கடாசலம்.

# தொல்காப்பியம்.

## சொல்லதிகாரம்.

### தெய்வச்சிலையார்.

#### முதலாவது கிளவியாக்கம்.

1. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே.

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், மேற்சொல்லப்பட்ட எழுத்தினானியன்று பொருளறிவிக்குஞ் சொற்களைப் பாகுபடுத்துதலாற், சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. அஃதியாங்ஙனம் உணர்த்தினானெனின், சொற்களைப் பொருணிலைமை நோக்கித் தொடர்மொழி, தனிமொழியென இருவகைப்படுத்து; அத்தொடர்மொழியை அல்வழித்தொடர், வேற்றுமைத்தொடரென இருவகைப்படுத்து; அவ்விருவகைத் தொடரும் செப்பும் வினாவுமாக நிகழ்தலான், அவற்றை வழுவாமற் கூறுதற்காக முற்படச் சொன்னிலைமையாற் பொருளை உயர்திணை யஃறிணையென இருவகைப்படுத்து; அவ்வுயர்திணையுணர்த்துஞ் சொற்களை ஒருவனையறியுஞ்சொல் ஒருத்தியையறியுஞ்சொல் பலரையறியுஞ்சொல்லென மூவகைப்படுத்து; அஃறிணையுணர்த்துஞ் சொற்களை ஒன்றனையறியுஞ்சொல் பலவற்றையறியுஞ்சொல்லென இருவகைப்படுத்து......வவகைப்பட்ட சொல்லும் பெயர்ச் சொல்லும் பெயர்ச்சொற்கண்ணும் வினைச்சொற்கண்ணும்

வருதலிற் பெயராற் பாலறியப்படுஞ் சொல்லினும்?) அமைக்க வேண்டும் சொற்களை எடுத்தோதி; அதன் பின் வேற்றுமைத் தொடர் கூறுவார் மயங்கா மாபினவாகி வருவன எழுவகை வேற்றுமை புணர்த்தி; அதன் பின் அவ் வேற்றுமைக்கண் மயங்குமாறு உணர்த்தி; அதன் பின் எட்டாவதாகிய விளிவேற்றுமை புணர்த்தி; அதன்பின் தனிமொழிப் பகுதியாகிய பெயர்ச் (சொற் பாகுபாடும்,) வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொற் பாகுபாடும் உணர்த்தி; அதன்பின் சொற்கள் விகாரப்படுமாறும் ஒட்டுமாறும், எஞ்சுமாறும் பிறவும் உணர்த்தினு(னென்க) அவற்றுள், அல்வழித்தொடர் கிளவியாக்கத்துள்ளும், வேற்றுமைத் தொடர் வேற்றுமையோத்துள்ளும், வேற்றுமை மயங்கியல் விளிமர பென்பனவற்றுள்ளும், தனிமொழிப்பகுதியாகிய பெயரிலக்கணம் பெயரியலுள்ளும், வினையிலக்கணம் வினையியலுள்ளும், இடைச்சொல்லிலக்கணம் இடைச்சொல்லோத்தினுள்ளும், உரிச்சொல்லிலக்கணம் உரிச்சொல்லோத்தினுள்ளும், எஞ்சிய வெல்லாம் எச்சவியலுள்ளும் உணர்த்தினனென்று கொள்க. இவ்வகையினானும் ஒன்பதாயிற்று. பொருளுணர்த்துவன தனிமொழியாதலால், தொடர் மொழியென வகுத்ததனாற் பயனென்னை யெனின், பொருளுணர்த்துதற் சிறப்புடையன தொடர்மொழியென்று கொள்க. என்னை சிறந்தவாறெனின்; சாத்தனென்றவழிப் பொருண்மை மாத்திரமுணர்த்துதலல்லது கேட்டார்க் கொரு பயன்பட நில்லாமையின், சாத்தனுண்டானெனப் பயன்பட வருஉந் தொடர் மொழியே பொருள் இனிது விளக்குவதென்க. சொல்லிலக்கணமறிந்ததனாற் பயன், தொடர்மொழியாகிய வாக்கியத்தினைப் பிரித்துப் பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச் சொலெனக் குறியிடவேண்டுதலின் அதன் பிற் கூறப்பட்டது.

இனி, எழுவாய் வேற்றுமையையும் விளி வேற்றுமையையும் எழுத்ததிகாரத்துள் அல்வழிக்கண்ணே முடித்தானாதலான் அவற்றை வேற்றுமைத் தொடரென்றலமையாதெனின்:— அவை வேற்றுமை யென்று குறிபெறுதலானும், எழுவாய் வேற்றுமை கிளவியாக்கத்தொடு மணந்துகிடப்ப வைத்தலானும், விளிவேற்றுமை எழுவாயது திரிபாதலானு மமையுமென்க.

இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட வொன்பதோத்தினுள்ளும் முதற்கண்ணது கிளவியாக்கம். அது கிளவிய தாக்கமென விரியும். அதற்குப் பொருள், சொல்லினது தொடர்ச்சி யென்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருண் மேலாகு நிலைமையைக் கிளவியாக்க மென்றார். அது வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகி, அதனையுடைய வோத்திற்குப் பெயராயிற்று.

இவ்வோத்தினுள் இச்சூத்திரமென்னுதலிற்றோ வெனின், சொல்லிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

"உயர்திணை.........சொல்லே" என்பதனுள், உயர்தலென்பது மிகுதல். திணை யென்பது பொருள். என்மனாரென்பது என்று சொல்லுவாரென்றவாறு. மக்களென்பது மக்களென்னும் பொதுப்பொருண்மை. சுட்டென்பது குறிப்பு, இனச்சுட்டில்லா வெனவும், தெய்வஞ்சுட்டிய வெனவும் ஓதினாராகலின், அது சுட்டப்படும் பொருண்மேல் ஆகுபெயராய் நின்றது. ஏயென்பதிற்றசை. அல் என்பது அல்லாமை. திணை யென்பதற்கும் என்மனாரென்பதற்கும் மேலுரைத்தவாறே கொள்க. அவரலவென்பது மக்களல்லாத பொருள். பிற என்பது பிற பொருள். மக்களல்லாதவும் பிறவும் என்னும் உம்மை எஞ்சி நின்றது. ஆவென்பது அவ்வென்னுஞ் சுட்டு நீண்டிசைத்தது. இருதிணை யென்பது இரண்டு திணையின்கண்ணும் என்றவாறு. கண்ணென்னுமுருபும் உம்மும் தொக்கு நின்ற(ன.) இசைக்குமன சொல் லென்பது ஒலிப்பன சொல்லாவன என்றவாறு.

உலகத்துப் பொருளெல்லாவற்றினும் மக்களென்று சுட்டப்படும் பொருளை உயர்திணையென்று சொல்லுவர்; அவரல்லாத பொருளையும் பிறபொருளையும் அஃறிணையென்று சொல்லுவர் ஆசிரியர். அவ்விரு திணையின்கண்ணு மொலிப்பன சொல்லாவன என்றவாறு.

எனவே, உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல் எனச் சொல் இருவகையாமென்பது பெறுதும். அஃதேல் திணையிடையாக, அத்திணைக்கட் பிறவற்றை யிசைத்தல் வேண்டுமெனின், ஒக்கும். அவ் விருதிணைக்கண்ணு முளவாகிய பாலினையே

சொற்களிசைப்பன வென்ப. மேலெழுத்ததிகாரங் கூறி, இனிச் சொல்லதிகாரங்கூறுவார், சொல்லாவ திக்தன்மையதெனல் அதனிலக்கணங்கூற வேண்டுதலின், இச்சூத்திரம் முற்கூறப் பட்டது. அஃதற்றாக, தேவரை யறியுஞ்சொல் அஃறிணை யாகுமோ வெனின், அஃதாகாவாறு முன்னர்க் கூறப்படும். உயர் என நிற்பத் திணை யென வந்தசொல் எவ்வாறு வந்த தெனின், ஒரு சொன்முன் ஒரு சொல் வருங்கால், தொகைநிலை வகையான் வருதலும், தொகாநிலை வகையான் வருதலுமென இரண்டல்ல நில்லே. அவற்றுள் தொகைநிலை வகையான் வந்தன: யானைக்கோடு, பொன்மேனி, கொல்யானை, கருங்குதிரை, உவாப்பதினன்கு, பொற்றொடி என்பன. தொகாநிலை வகையான் வந்தன: சாத்தன் உண்டான், சாத்தனை வெட்டினன், உண்டான் சாத்தன், உண்டு வந்தான், நிலம் நீர் தீ வளி யாகாயம் என்பன. அவற்றுள் இது தொகைநில வகையான் வந்தது. தொகைதாம் பல: அவற்றுள் இஃதெத் தொகையான் வந்ததெனின் பண்புத் தொகையான் வந்த தென்க. மற்றுள்ள பொருளெல்லாவற்றினும் உயர் பொருளென விசேடித்து நின்றமையின், உயர்வான மென்றாற்போல வினைத்தொகை யாகாதோவெனின், **வினையின் றொகுதி காலத் தியலும் (எச். கஅ)** என்றாதலின் ஈண்டுக் காலந் தோன்றாமையின் ஆகாதென்(க) எற்றாக்து? உயர்ந்த மக்கள், உயராநின்றமக்கள், உயருமக்களென நல்வினை யேதுவாக மூன்று காலமும் கொண்டாலாதுமே யெனின், அவ்வாறு கருதா வார்க்கு வினைத்தொகையுமாம். உயர் பொருள் என்னாது திணை யென்றது என்னை யெனின், அவ்வாறு ஆடல் வேண்டி ஆசிரியன் இட்டதோர் குறி யென்று கொள்க. என்மனார் என என்ப வென்னும் முற்றுச்சொல் திரிந்து நின்றது. குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனான் பகாரம் குறைத்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனான் மன்னும் ஆருமென இரண்டிடைச் சொற் பெய்து என்மனார் என்றாயிற்று எனப் பொருளுரைப்பவா லெனின், *பகரங் குறைக்கின்றது செய்யுளின்பம் வேண்டியன்றே ஆண்டுக் குறைத்தவழிப் பின்னும் இரண்டெழுத்து விரித்தல் வேண்டுமாயிற் குறைத்ததனாற் பயனின்மையின் இவ்வாறு

---

* இளம்பூரணம். இறையனாரகப் பொருளுரை. சூ. க.

எழுதும் உரை குற்றமென்க. இஃது எதிர்காலச் சொல்லாயினும் இறந்தகாலம் குறித்து நின்றது, இறப்பும் எதிர்வும் மயங்கப் பெறுமாகலின். அஃது ஆசிரியரென்னும் பெயர்கொண்டு முடியும். ஈண்டு அப்பெயர் எஞ்சி நின்றது. மக்களென்னுஞ் சுட்டென்ற தென்னையெனின், மக்களாவார் ஒரு நீர்மையரன்றி, ஆணும் பெண்ணும் அலியுமாகிய வடிவு வேற்றுமை யுடையராகலின், அவரெல்லார்மாட்டும் பொதுவாகக் கிடக்கும் மக்கட்டன்மையைக் குறித்து மக்களிவ ரென்னும் பொதுப்பொருண்மை உயர்திணையாவதென்பதறிவித்தற்குச் சுட்டென்றார். அவரல்லாத அஃறிணை யென்னாது, பிறவென்ற தென்னையெனின், மக்களல்லாதவென்றவழி, உயிருடையனவற்றையே சுட்டுமென் றையுற்று, உயிரில் பொருளும் அஃறிணை யென்ப தறிவித்தற்குப் பிறவென்றார். இசைக்குமன வென்பது செய்ம்மனவென்னும் தொழிற்பெயர். அது செய்புமனவென விரிந்து நின்றது. அது சொல்லென்னும் பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்தது. இனி இச்சூத்திரத்திற்குப் பிறவாற்றானும் (பொருள்படுமெனக்) கடாவிடை யுள்ளுறுத்துரைப்பிற் பெருகும். [க]

2\. ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.

நிறுத்தமுறையானே உயர்திணைச்சொற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்:—ஆடூஉ வறிசொல் லென்பது ஆண்மகனை யறியுஞ் சொல். எ—று. அறிவார்க்குக் கருவியாகிய சொல் அறிசொல் லாயிற்று. மகடூஉ வறிசொல்லென்பது பெண்டாட்டியை அறியுஞ் சொல். எ—று. பல்லோரறியுஞ் சொல்லொடு சிவணி என்பது பலரை யறியுஞ் சொல்லொடு கூடி. எ—று. அம்முப் பாற்சொல் உயர்திணையவ்வே என்பது அம்மூன்று கூற்றுச்சொல் உயர்திணையிடத்த. எ—று.

உயர்திணைப் பொருள்பற்றி வரும் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் மூன்று பகுதிய என்றவாறாயிற்று. எற்றுக்கு? ஆண்,

பெண், அலி; ஆண்பன்மை, பெண்பன்மை, அலிப்பன்மை, இவ ரெல்லாருந் தொக்க பன்மை யெனப் பலவகைப்படுமாலெனின், பொருள் நோக்கிக் கூறினாரல்லர்; சொல்முடிபு மூவகையென்று கூறினாரென்க. என்னை? அலிப்பன்மை மகடூஉவறிசொல்லானும் கூறப்படுமாதலானும், ஆண்பன்மையும் (பெண்பன்மையும்) எல் லாருந் தொக்க பன்மையும் வந்தாரெனவே முடிதலானும், மூவகையாகி யடங்கிற்றென்க. பல்லோரறியுஞ் சொல்லென்னாது சிவணியென்றதனாற் பெற்ற தென்னையெனின், ஒன்று, இரண்டு, பலவென வடமொழிப் புலவர் கூறியவாறுபோலப் பாகுபடும் வழக்கின்மையின், ஒன்று, பலவெனத் தமிழ் நடை இரண்டுபாலாம். அவற்றுள், உயர்திணை ஒருமை, யாடூஉ வறிசொல் மகடூஉ வறி சொல்லென விருமுடி புடைத்தாகலின், அச்சொற்கள் பலரறி சொல்லொடு கூடி மூன்று பாலாயின, அல்லது பாலுள்ளன இரண்டென்பது அறிவித்தற்கெனக் கொள்க. சிவணி என்பது வினையெச்சமன்று; ஒடுவின் பொருண்மை தோன்ற வந்தது, தாயொடுகூடி மூவர் என்றாற் போல. அம்மூப்பாற் சொல்லும் என உம்மை கொடாதது என்னையெனின், பால் நிரம்புளவாதலிற் கொடாமையும் அமையும் என்க. (உ)

**3. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்**
**றாயிரு பாற்சொல் லஃறிணை யவ்வே.**

அஃறிணைச் சொற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்:—ஒன்றனையறியுஞ் சொல்லும், பலவற்றை யறியுஞ் சொல்லுமென அவ்விருகூற்றுச்சொல், அஃறிணையிடத்த. எ—று.

அஃறிணைப் பொருண்மை உயிர்ப்பொருள் உயிரில்பொரு ளெனவும்; உயிர்ப்பொருட்கண், ஆண், பெண் எனவும்; அவை யெல்லாம் பொருள் தொறும் ஒருமையும் பன்மையுமாகியும் பல வகைப்படுமாலெனின், அவையெல்லாம் ஒருமையாயின், வந் தது எனவும், பன்மையாயின் வந்தன எனவும் வழங்கப்படுதலிற் சொன்முடிபு நோக்கிக் கூறினாரென்க. அஃறிணைப் பொருள் பற்றிவரும் பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும் இரு பகுதிய வாமென்றே கொள்ளப்படும். (௩)

4. பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென வறியு மந்தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

எஞ்சியது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்:— பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் என்பது: பெண்மையைக் குறித்த உயர்திணைப் பெண் பிறப்பினுள் எ—று. ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவியும் என்பது, ஆண்மைத்தன்மையிற் றிரிந்த பெயர்க்கண் நிற்குஞ் சொல்லும் எ—று. தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும் என்பது, தெய்வப் பொருண்மையைச் சுட்டிய பெயர்க்கண் நிற்குஞ் சொல்லும் எ—று. இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே என்பது, இவை யென அறிய நிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக்கென இல. எ—று. உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும் என்பது, உயர்திணை மருங்கிற் பாலாகிப் பிரிந்திசைக்கும். எ—று. ஆண்மை திரிந்த பெயராவது பேடி, அச்சத்தி னாண்மையிற் றிரிந்தாரைப் பேடி யென்ப வாகலான். ஈண்டு அப்பெயர் பெற்றது அலியென்று கொள்க. அலி மூவகைப்படும். ஆணுறுப்பிற் குறைவின்றி ஆண்டன்மையிழந்ததூஉம், பெண்ணுறுப்பிற் குறைவின்றிப் பெண்டன்மை யிழந்ததூஉம், பெண்பிறப்பிற்றோன்றிப் (பொருணமைத்திற் ?) பெண்ணுறுப்பின்றித் தாடிதோற்றி ஆண்போலத் திரிவதூஉமென. அவற்றுட் பிற்கூறியது ஈண்டுப் பேடி யெனப்பட்டது. அதன்கண் நிற்குஞ் சொல்லாவது வினைச் சொல். இப்பேடி யென்னுஞ் சொல்லோடு தொடரும் வினைச்சொல்லும், தெய்வப் பொருண்மை குறித்த பெயரோடு தொடரும் வினைச்சொல்லும், உயர்திணை யாண்பா லறிசொல்லானும், பலரறிசொல்லானும் ஒலிக்கும் என்றவாறாயிற்று.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

தேவரும் மக்களும் விலங்குமாகிய கதிப் பொருண்மை கூறி, நரககதிப் பொருண்மை கூறாததென்னை யெனின், அக்கதிமே

னிகழ்வதோர் வழக்கின்மையிற் கூறாராயினர். நாகன் வந்தான் நாகிவந்தாள், நாகர் வந்தார் என வழங்குபவாலெனின், அக் கதியுட் டோன்றுவார் ஆணும் பெண்ணுமாகிப் போகம் நுகர்வ ரென்னும் இலக்கணமின்மையான், மக்களிற் றாய்மை யில்லா தாரை யுலகத்தார் வழங்குமாறுபோலவென்க. நாகர் துயநுழப்பர் என அக்கதி மேற்றோற்றுவார் (தம்) மேலும் வருமாலெனின், அவ்வாறு வருவன பால் கூறப்படுதலின்றி ஆணும் பெண்ணும் வரையறுக்கப்படாத பொருளை உயிர்த்தன்மையைக் குறித்து உயர்திணைப் பன்மையான் வழங்கினரென்க. [௪]

## 5. னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்.

நிறுத்த முறையானே யாடூஉ வறிசொல்லாமாறு உணர்த்துத னுதலிற்று.

இ—ள் :—னகாரமாகிய ஒற்றை அந்தமாகவுடைய சொல் ஆண்பாலுணர வருஞ்சொல். எ—று.

ஏகாரம் ஈற்றசை. அந்தம் என்பது மேலைச் சூத்திரத்தி னின்றுந் தந்துரைக்கப்பட்டது. இவ்வுரை வருகின்ற சூத் திரங்கட்கும் ஒக்கும். உ—ம் :—உண்டான், உண்ணாநின்றான், உண்பான் இவை வினைச்சொல். கரியன், நெடியன் இவை வினைக்குறிப்பு. பாண்டியன், மாயவன் இவை பெயர்.

அஃதேல் வினையியலுள்ளும், "அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்—ஒருவர் மருங்கிற் படர்க்கைச்சொல்லே" (வினை சூ. அ) என ஓதுகின்றாராகலின், ஈண்டுக் கூறுதற்குக் காரணம் என்னை யெனின். "வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் பெயரிற் றோன்று பாலறி கிளவியும் மயங்கல் கூடா" (சூ. கக) என வழூஉக் காக்கின்றாராகலின், அவை வழுவாமற் கூறுங்கால், அச் சொற்களின் இயல்பு அறிய வேண்டுமன்றே அதற்காக ஈண்டுத் தோற்றுவாய் செய்தாரென்க. ஆண்மைப் பொருண்மைக்கண் வரும் பெயர்ச்சொற்கும் வினைச் சொற்கும் ஈற்றெழுத்துப் பல வுளவாயினும் அவையெல்லாங் கூறாது, னகரவொற்றொன்றனையுங் கூறினமையானும் தோற்றுவாய் செய்தவாறுணர்க. இவ்வுரை முன்வருகின்றவற்றிற்கும் ஒக்கும். [௫]

## 6. ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்.

மகடூஉ வறிசோல் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—ளகாரமாகிய ஒற்றை அந்தமாகவுடைய சொல் பெண்பால் உணரவருஞ் சொல். எ-று.

ஏகாரம் ஈற்றசை. உ-ம்.—உண்டாள், உண்ணுநின்றாள், உண்பவ்; இவை வினை. கரியள், குறியள் இவை வினைக்குறிப்பு. அவள், திருவினாள்; இவை பெயர். [சூ]

## 7. ரஃகா னொற்றும் பகர விறுதியும்
## மாரைக் கிளவி *யுளப்பட மூன்றும்
## நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

பலரறி சோல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—ரகாரம் ஆகிய ஒற்றும், பகாரம் ஆகிய உயிர் மெய்யிறுதியும், மார் என்னுஞ் சொல் உளப்பட இம் மூன்றும் பொருந்தப் பலரறிசொல் தோன்றும். எ-று.

மூன்றும் பொருந்த என்றாராயினும் பால் காட்டுவது தனித் தனி யென்று கொள்க.

பகரம் என்னாது இறுதி யென்றது, பகரம் ஒற்றாகவரின் மொழிக்கு ஈறாகாமையின் உயிரீறு என்பது தோற்றுதற்கு. † கானந் தகைப்ப செலவு ‡ எனப் பகரம் அஃறிணைக்கும் உரித்தா கலின் உயர்திணைக்கே யுரித்தாமாறு என்னை யெனின், அஃறிணைக் கண் ஓதுகின்ற அகரம் எல்லாப்புள்ளியினும் ஏறி முடிதலின் ஆண்டு அகர ஈறாகி வந்தது. ஈண்டுப் பகர ஒற்றின் மேல் அல்லது வாராமையிற் பகரம் என வேறுபட்டு நின்றது.

மார் என்பது ரகரத்துள் அடங்காதோ வெனின், வினைக்கண் ஏனைய போல முற்றிநில்லாது எச்சம் போல வருதலானும்,

---

* உட்பட. இளம்பூரணம். †கலி. பாலை. உ

‡ இரண்டாம் எட்டின் உரை:—கானம் தகைப்ப செலவு எனவும், நயந்து தாங் கொடுப்ப போல் எனவும் அஃறிணைக் கண்ணும் வந்ததென எடுத்துக் காட்டினர் உளராலெனின், தாழிசை மூன்றனுள்ளும் தகைப்ப என ஓதியவண்ணம் அவ்வாறு சுரிதகத்துக்கண்ணும் வரின் அவ்வண்ணக் கேடு குறித்துக் குறைக்குவழிக் குறைத்ததென்க. நயந்து தாங் கொடுப்ப போலென்பது விரும்பிக் கொடுப்பாரைப் போலென மாந்தரோடு உவமை குறித்து வந்தது.

பெயர்க்கண் ஆர் ஈறாகி வருமிடத்துப் பன்மை யுணர்த்தாத சொற்கள் மார் ஈறாகி வரவேண்டுதலானும் வேறுபடுத்தோதப் பட்டதென்க.

உ-ம்.—உண்டனர், உண்ணாநின்றனர், உண்பர், உண்ப, ஆ கொண்மார் வந்தார்; இவை வினை. கரியர், நெடியர்; இவை வினைக்குறிப்பு. அவர், இவர், நம்பியர், நங்கையர், தாய்மார், தந்தைமார்; இவை பெயர். *பகர இறுதி அஃறிணைப் பெயரா பல்லது வாராது. [எ]

8. ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

அஃறிணை யொருமை யுணரவருஞ் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—த, ற, டக்களை யூர்ந்த குற்றுகரத்தினை ஈறாகவுடையன ஒன்றனை அறியுஞ் சொற்களாம். எ-று.

உ-ம்.—உண்டது, உண்ணாநின்றது, உண்பது, கூயிற்று, உண்டு; இவை வினை. கரிது, கோடின்று, குண்டுகட்டு; இவை வினைக்குறிப்பு. அது, ஒன்று, இரண்டு; இவை பெயர். [அ]

9. அஆ வஎன வரூஉ மிறுதி
அப்பான் மூன்றே பலவறி சொல்லே.

பலவறிசொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—பல்வற்றை யுணரவருஞ் சொல் அ, ஆ என்னும் உயிரெழுத்தினையும், வ என்னும் உயிர்மெய்யெழுத்தினையும் ஈறாகவுடைய அக்கூற்று மூன்று. எ-று.

உ-ம்.—உண்டன, உண்ணாநின்றன, உண்பன, உண்ணா, உண்குவ; இவை வினை. கரிய, நெடிய; இவை வினைக்குறிப்பு. பல, சில, யா, வருவ; இவை பெயர்.

வ என்பது அகரத்துள் அடங்காதோ எனின், அடங்காது. என்னை? உண் என்னும் தொழிற்சொல் இறந்தகாலங் குறித்துழி உண்டு எனவும், நிகழ்காலங் குறித்துழி உண்கின்று எனவும், எதிர்காலங் குறித்துழி உண்பு எனவும் நின்று, அன் அள்,

---

*(இ. ஏ) பகர வீறுற்றறியாது உயர்திணைப் பெயராயல்லது வாராது.(?)

அர், அது, அ என்னும் பால் உணர்த்தும் எழுத்தோடு கூடிப் புணருழி, அன் சாரியை மிக்கும், இயல்பாகியும் இறந்தகாலத்துக் கண் உண்டனன், உண்டனள், உண்டனர், உண்டது, உண்டன, உண்ட எனவும், நிகழ்காலத்துக்கண் உண்கின்றனன், உண்கின்றனள், உண்கின்றனர், உண்கின்றது, உண்கின்றன எனவும், எதிர் காலத்துக்கண் உண்பன், உண்பள், உண்பர், உண்பது, உண்பன எனவும் வரும். உண்கு என நின்ற எதிர்காலச்சொல் பன்மை யுணர்த்தும் அகரம் ஏறியவழி உண்க என வியங்கோட்பொருண் மைப் படும் ஆகலின், ஆங்கு உண்குவ என வகர வுயிர்மெய் கொடுக்கவேண்டுதலின் வகரமென வோதல் வேண்டுமென்க. [௯]

10. இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றுநின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

மேல், பாலுணர்த்தப்பட்ட எழுத்திற்கெல்லாம் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—இரண்டு திணைக்கண்ணும் ஐந்துபாலும் விளங்க இறுதிக்கண் நின்று ஒலிக்கும் பதினோரெழுத்தும் தாந்தோற்ற மாக வினையோடு வரும். எ-று.

தோற்றமாக என்பது பெரிதாக என்பது குறித்து நின்றது. எனவே, பெயரொடு வருகை சிறுவரவிற்று என்று கொள்ளப்படும். ஆடூஉ, மகடூஉ, மக்கள், மரம், அவை எனப்பெயர்க்கட் பிறவாற்றானும் வரும் ஆதலின். உதாரணம் மேற்காட்டப்பட்டன. [௰]

11. வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

வழுப்படாமற் கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—இவ்வோத்தினுட் செப்பும் வினாவும் வழுவாமற் கூறுதல் பயனாதலின், அவை வழுவாமற் கூறுங்கால் வினையிற் றோன்றும் பாலறிசொல்லும், பெயரிற் றோன்றும் பாலறி சொல் லும் தம்முள் மயங்குதல் பொருந்தா; தத்தம் மரபினையுடைய வாதலான். எ-று. ஆதலால் என்பது எஞ்சிநின்றது.

பெயர் என்றதனால் தன் பொருண்மையாகிய திணை பெறுதும். பாலறிசொல் என்றதனாற் பால் பெறுதும். வினையென்றதனால் அதற்கு இன்றியமையாத காலமும் இடனும் பெறுதும். தம்மரபின என்றதனால் மரபு பெறுதும். மயங்கல் கூடா என்பதனால் வழூஉப்படுதல் குற்றமென்பது பெறுதும்.

திரிபின்றிப் பால் உணர்த்துவது வினையாதலிற் சிறப்பு நோக்கி முற்கூறினார். அன்றியும் மேனின்ற சூத்திரம் வினையதிகாரப்பட்டு வருதலின் அதனோடு சேரவைத்தார் எனினும் அமையும்.

உ-ம்.—அவன் நெருநல் உண்டான் என்பது. இதனுள் அவன் என்னும் உயர்திணைப்பெயர் உயர்திணைவினை கொண்டு முடிதலின், திணை வழுவாதாயிற்று. ஆடூஉப்பெயர் ஆடூஉவினை கொண்டுமுடிதலிற் பால் வழுவாதாயிற்று. படர்க்கைப் பெயரோடு படர்க்கைவினை முடிதலின் இடம் வழுவாதாயிற்று. நெருநலென்னும் இறந்தகாலப் பெயரோடு இறந்தகால வினை முடிதலின் காலம் வழுவாதாயிற்று. உண்டற்றொழிற்கு உரியானை உண்டான் என்றமையான் மரபு வழுவாதாயிற்று. பிறவுமன்ன.

இனி, வழுவாமாறு:—உயர்திணை மூன்று பாலும் அஃறிணையிரண்டு பாலொடு மயங்குதல் திணைவழுவாம். அவை தம்முட்டாம் மயங்குதல் பால் வழுவாம். தன்மை, முன்னிலை, படர்க்கையென்னும் மூன்றிடமும் ஒன்றேடொன்று மயங்குதல் இட வழுவாம். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலமும் தம்முண்மயங்குதல் காலவழுவாம். எல்லாப் பொருளையும் பயின்ற மரபினாற் கூறாதது மரபு வழுவாம்.

உ-ம்.—அவன் உண்டது: திணைவழூஉ. அவன் உண்டனள்: பால்வழூஉ. நீ யுண்டனன்: இடவழூஉ. நாளை உண்டேன்: காலவழூஉ. அவன் மேய்ந்தான்: மரபு வழூஉ. பிறவுமன்ன. திணைவழூஉப் பன்னிரண்டு. பால்வழூஉ எட்டு. இடவழூஉ ஆறு. காலவழூஉ ஆறு. மரபுவழூஉ வரம்பில. [கக]

12. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
யாண்மை யறிசொற் காகிட னின்றே.

ஐயம் அறுத்தலை நுதலிற்று.

இ-ள்.—மேல், உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும் (ச. சூ) என்று ஓதப்பட்ட பேடி யென்னும் பெயர்க்கண் நிற்கும் சொல் ஆண்மையறிசொற்கு ஆகும் இடன்இலது. எ-று. எனவே பெண்மையறிசொற்கு ஆகும் என்றவாறும்.

உ-ம்.—பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ—கண்ணவாத் தக்க கலம் (நாலடி. உருக.) எனவரும்.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி பெண்மை யறிசொற்கு ஆகும் என்னாது, ஆண்மை யறிசொற்கு ஆகுமிடமின்று என எதிர்மறைவாய்பாட்டாற் கூறினமையாற் சிறுபான்மை ஆடூஉ வறிசொல்லால் வருவன உளவேற்கொள்க.

இச்சூத்திரம் பெண்மை சுட்டிய என்னுஞ் சூத்திரத்தின் (ச சூ) பின் வையாது ஈண்டுக் கூறியது என்னை யெனின், பெயரும் வினையும் மயங்காமற் கூறுக என்றாராகலிற் பேடி யென்பது இவ்வாறு சொல்லத்தகும் என இறந்தது காத்து ஈண்டு ஓதப்பட்டது. [கஉ]

## 13. செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்.

இதுவும் வழுப்படாமற் கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—செப்பினையும் வினாவினையும்வழுவாமற்கூறுக. எ று.

உலகத்துப் பொருளுணர்த்துஞ் சொல்லெல்லாம் வினாவுஞ் செப்பும் ஆகிய பொருண்மேல் நிகழ்தலின், அவை வழுவாமற் கூறல்வேண்டும் என்றவாறாயிற்று.

எனவே வழு எழுவகையாம் என்பது பெற்றாம். செப்பு வருமாறு :—அச்செப்பு நான்கு வகைப்படும். துணிந்து கூறல், கூறிட்டுமொழிதல், வினாவிவிடுத்தல், வாய் வாளாதிருத்தல் என. துணிந்துகூறலாவது, தோன்றியது கெடுமோ என்றவழி, கெடும் என்றல். கூறிட்டு மொழிதலாவது :—செத்தவன் பிறப்பானோ என்றவழி, பற்றறத் துறந்தானோ, பிறனோ என்றல். வினாவி விடுத்தல் என்பது :—முட்டை மூத்ததோ பனைமூத்ததோ என்ற வழி, எம்முட்டைக்கு எப்பனை என்றல். வாய்வாளாமையாவது:-

* இவ்வகை மற்றை உரைகளிற் காண்பனவற்றின் பெரிதும் வேறு படுவது காண்க. இளம் :—வினாவெதிர் வினாதல், ஏவல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், உடன்படுதல் என அறுவகைப்படும் என்பர்.

ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை. (மணி-30: 235—249)

இனி, அவற்றுள் வினா வழுவாவது வினவியசொல்லாற் பயனின்றி நிற்பது. அஃது ஒருவிரல் காட்டி நெடிதோ குறிதோ என்றலும், ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றலும்.

செப்பு வழுவாவது :—துணிந்து கூறும்வழித் தோன்றியது கெடுமோ என்றார்க்குக் கெடாதென்றலும், ஒலி செவிக்குப் புலனன்று என்றலும், என் தாய் மலடி என்றலும், பிறவும் இந்நிகரானவும். இனிக் கூறிட்டு மொழியவேண்டும் வழியும், வினவி விடுக்க வேண்டும்வழியும், வாளாதிருக்கவேண்டும் வழியும் துணிந்துகூறின் வழுவாம். [வினாவின்றியும் வருதலிற் செப்பு முற்கூறப்பட்டது. அது யான் குமரியாடிப் போந்தேன், ஒரு பிடி சோறு தம்மின் எனவரும்] (இ. எ.) [கங]

14. வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே.

செப்பின்கட் கிடநததோர் வழுவமைத்தலை நுதலிற்று.

இ-ள்.—வினாவும் செப்பாம் நிலையைப் பெறும், வினாவப் பட்ட சொற்றன்னானே யெதிர்த்து வருமாயின். எ-று.

உ-ம்.—சாத்தா உண்ணாயோ என வினாயவழி, உண்ணேனோ என்பது உண்ணேன், உண்பல் எனச்செப்பாது உண்பன் என்னும் பொருள்படச் செப்பினமையான் வழுவமைதி யாயிற்று. [கச]

15. செப்பே வழீஇயினும் வரை நிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இதுவும் அது.

இ-ள். செப்பு வழீஇயினும் நீக்கப்படாது, அச் செப்பு தற்குப் பொருண்மையைப் பொருந்திய சொல்லின்கண். எ-று.

எகாரம் சிறப்புப்பற்றி வந்தது. அதிகாரப் புறநடையாற் கொள்ளப்படும்.

உ-ம்.—உண்ணாயோ சாத்தா என்றவழி, நீ யுண் எனவும், வயிறு குத்திற்று எனவும், வயிறு குத்தும் எனவும் இவ்வாறு

வருவன. இவையும் உண்ணேன், உண்பல் என வாராமல் * உண்ணேனென்னும் பொருள்பட வருதலின் வழுவமைதி யாயின. [௧௫]

16. செப்பினும் விணுவினுஞ் சினைமுதற்கிளவிக்கு
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே.

செப்பின்கண்ணும் வினுவின்கண்ணும் உறழ்பொருட்கண் வரும் வழுக்காத்தலை நுதலிற்று.

† இ-ள்.—சினையு முதலு மாகிய பொருளுணர்த்துஞ் சொற்குச் செப்பின்கண்ணும் விணுவின்கண்ணும் உறழப்படும் பொருள் அப் பொருளாகும். எ-று.

துணை யென்பதிணை. முதலென்றதனுற் பண்புந் தொழிலுங் காலமு மிடனும் பொருளுங் கொள்க. சினைபற்றி யுறழ்தல் பெரும்பான்மையாகலான் முற்கூறப்பட்டது. அப்பொருளென்றது அவ்வப் பொருட்கு அவ்வப்பொருளே யுறழப்படுவது. எ-று.

அவை யொருபொருட்கண்ணும் பிறபொருட்கண்ணும் ஒத்தன கொள்ளப்படும்.

அவை விணுவின்கண் வருமாறு:—வல முலையோ இட முலையோ பெரிதெனத் தன்பொருட்கண் வந்தது. இவள் முலையோ அவள் முலையோ பெரிதெனப் பிறபொருட்கண் வந்தது. இவைசினை. இந்நிறமோ அந்நிறமோ நல்லது: இது பண்பு. இந்நடையோ அந்நடையோ நல்லது: இது தொழில். ‡ இன்றோ நாளையோ வாழ்வு: இது காலம். இந்நிலமோ அந்நிலமோ விளைவது: இது இடம். இவளோ அவளோ கற்புடையாள்: இது பொருள்.

இனிச் செப்பு வருமாறு:—இம்முலையின் அம்முலை பெரி தென்றுனும், ஒக்குமென்றுனும் வரும். பிறவு மன்ன.

இனி அப் பொருளல்லாப் பிறிது பொருளோடு உறழ்தல் வருகின்ற சூத்திரத்தான் அமைக்கப்படும். [௧௬]

---

* உண்ணெனனும். (இ. ஏ). †16, 17-ஆம் சூத்திர உரைகள் மற்றையோர் உரைகளினின்றும் முற்றும் வேறுபட்டவை. ‡ நெருநலோ இன்றோ நல்லது: இது காலம். (இ. ஏ).

17. தகுதியும் வழக்கும் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

**மேற்சொல்லப்பட்ட உறழ்பொருட்கண் வரும் வழுவமைத்தல் நுதலிற்று.**

இ-ள்.—சினை முதலாகிய பொருள்களை அவ்வப்பொருளோடு உறழ்தலே யன்றித் தகுதியையும் வழக்கினையுந் தழுவினவாய் நடக்கும் ஒரு கூற்றுச்சொல் விலக்கும் நிலைமையில. எ-று.

சினைமுதற்கிளவியும், உறழ்பொருளும் அதிகாரத்தான் வந்தன.

தகுதியாவது இதற்கிது தகுமோவெனப் பண்பினுறுதல் தொழிலினுறுதல் உறழுநிற்பது. வழக்காவது ஒப்புமையின்றி உலகத்தார் பயில வழங்கப்படுவது.

அவற்றுள் தகுதிபற்றி வந்த வினு:— இந்நங்கை கண் நல்லவோ இக்கயல் நல்லவோ என வருவது: இது பண்பு. இம்முகிலோ இவன் கையோ கொடுக்க வல்லது: இது தொழில்.

செப்புவருமாறு:—கயலிற் கண் நல்ல என்றானும், ஒக்கும் என்றானும் உரைப்பது.

இனி, வழக்குப்பற்றி வினு வருமாறு:—கரிதோ வெளிதோ: இருப்பேனோ போவேனோ: ஊரோ காடோ: பகலோ இரவோ: எனவும், தேவராய் வாழ்தல் நன்றோ, நரகத்துள் உறைதல் நன்றோ எனவும், பிறவும் இவ்வாறு ஒன்றினொன்று பொருத்த மின்றி உலகவழக்கின்கண் வருவன கொள்க.

செப்பு வருமாறு:—கரிதன்று வெளிதென்றானும், வெளிதன்று கரிதென்றானும் இவ்வாறே பிறவாற்றானும் உரைப்பன.

இவை மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தின் வழுவுதலின் அமைதியாயிற்று. [கஎ]

18. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்
வழக்கா றல்ல செய்யு ளாறே. [கொடை

உலகத்துப் பொருளெல்லாம் இனச்சுட்டுடையவும், இனச்சுட்டில்லவு மென இருவகைப்படும். அவற்றுள் இனச்சுட்டுடையன உறழ்ச்சிவகையுள் அடங்குதலின், இனச்சுட்டில்லாத பொருண்மேற் செப்புவழீஇ யமையுமாறுணர்த்துதல் நுதலிற்று

இ-ள் :—ஒரு பொருட்கு இனச்சுட்டில்லாத பண்புகொள் பெயரைக் கொடுத்தல் வழக்குநெறியல்ல : செய்யுள் நெறி. எ-று.

'பொருட்கு' என்னும் வேற்றுமையேற்ற பெயர் எஞ்சி நின்றது. அல்லவென்பது வழக்குப்பன்மை குறித்து வந்தது. செய்யுணெறி யென அமையும், வழக்குநெறி யல்ல வெனல் வேண்டாவெனின், நன்கு † மறுத்தற்குக் கூறினுரென்க.

இனச்சுட்டில்லாத பொருளாவன :—ஞாயிறு, திங்கள், தீயென்பன. அவை ‡மாக்கட னிவந்தெழு செஞ்ஞாயிற்றுக் கவினை எனவும், நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே (அகம். உ) எனவும், வெவ்வெரி கொளீஇ எனவும் வரும். இவை வழக்கின்கண் வரின் கருஞாயிறும், கருந்திங்களும், தண்ணெரியும் உளபோலத் தோன்றும். ஆயினும் செய்புட்கண் அமையும் என்று வாறு. செம்போத்து என வழக்கின்கண் இனஞ்சுட்டாது வந்ததா லெனின், அப்பொருட்கு அது பெயரென்க. பெருவண்ணன், பெருங்கோல்லன் என வழக்கின்கண் இனஞ்சுட்டாது வந்ததா லெனின், பண்பாவது தமக்குள்ள தோரியல்பு: ஈண்டப்பெருமை யியல் பன்மையான், அஃது உயர்த்துச் சொல்லுதற்கண் வந்த தென்க. பண்புகொள் பெயர் என்று விசேடித்தமையால், ஏனைப் பெயர்கள் இருவகை வழக்கினும் இனஞ்சுட்டாது வரப்பெறு மெனக் கொள்க. [கஅ]

## 19. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

உலகத்துப் பொருளெல்லாம் இயற்கைப்பொருள், செயற் கைப்பொருள் என அடங்குதலின், அவற்றுள் இயற்கைப் பொருண்மேற் சேப்பு நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இயற்கைப் பொருளென்பது காரணப்பொருள், அதனை யித்தன்மைத்து எனச் சொல்லுக. எ-று.

அவை நிலம் நீர் தீ வளி ஆகாயம் உயிர் என்பன. அவற்றை நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளியுளரும், ஆகாயம் நிற்கும், உயிர் உணரும் எனக்கூறுக.

நிலம் வலிதாயிற்று எனக் கூறலாகாது. என்னை? ஆக்கங் கொடுப்பின் அதற்கு இயல்பு பிறிதாவான் செல்லுமாகலின் வழுவாம். [கக]

---

† மதித்தற்கு (இ-வ.) ‡ புறநா-ச.

### 20. செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்.

செயற்கைப் பொருண்மேற் செப்பு நிகழுமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—செயற்கைப் பொருளாவது காரியப் பொருள்; அதனை ஆக்கச் சொல்லொடு படுத்துக் (சொல்லொடடுத்து. இ. ஏ) கூறுக. எ-று.

செயற்கையாய்த் தன்னியல்பின் வேறுபடுவன வெல்லாம் செயற்கைப் பொருளென்று கொள்க.

உ-ம்.—மண்குடமாயிற்று, நூல் ஆடையாயிற்று, மாங் கதவாயிற்று எனவும்; பைங்கூழ் நல்லவாயின, மயிர் நல்ல வாயின எனவும் வரும். அஃதேல், மயிர்நல்ல, பைங்கூழ் நல்ல என ஆக்கமின்றியும் வருமால் எனின், அவை யக்காலத்தியற்கைபற்றிக் கூறப்பட்டன: முன்புநின்றநிலைகண்டு கூறப்பட்டன அல்ல வென்க. அதனானேயன்றே வருகின்ற சூத்திரங் கூறல்வேண்டி யது. [உ0]

### 21. ஆக்கந் தானே காரண முதற்றே.

மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட ஆக்கக்கிளவி காரணத்தை முதலாகவுடைத்து. எ-று.

செயற்கைப் பொருளெல்லாம் ஆக்கங்கொடுத்துக் கூறப்படா. (கூறப்பட்ட. இ. ஏ) காரணமுள் வழியே ஆக்கங் கொடுப்ப தென்றவாறாயிற்று. [உக]

### 22. ஆக்கக் கிளவி காரண மின்றியும் போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஆக்கச் சொல் காரணமின்றியும் வரும் வழக்கினுள். எ-று.

எனவே, செய்யுளகத்து வரப்பெறா என்றவாறும். போக்கின் றென்பது போகுதலின்று (போக்குதலில்லை. இ. ஏ) என்றவாறு. எனவே வரும் என்று பொருளாயிற்று. உம்மை இறந்தது தழீஇயிற்று.

ஆடைநன்றாயிருந்தது, மணி நன்றாயிருந்தது என நன்று தற்குக் காரணங் குறியாது வந்தன. பைங்கூழ் நல்லவாயின வென இடமுங் காலமும் இனமுஞ் சுட்டாது கண்டகாலத் தியற்கைபற்றி வரும் வழக்குக்கொள்க. [உஉ]

23. பான்மபக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்.

மேற் சொல்லப்பட்ட இருவகைப் பொருட்கண்ணும் ஐயக்கிளவி யுணர்த்துகின்றாராகலின், இச்சூத்திரம் அதன் பகுதி யாகிய பால் ஐயம், திணையையம் என்னும் இரண்டனுள்ளும் பால் ஐயம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—தானறிந்த பொருட்கட் பான்மயக்குற்ற ஐயப் பொருண்மையைப் (பொருண்மையை யப்பன்மை. இ. எ.) பன் மையாற் கூறுக. எ-று.

தானறி பொருள் என்றமையால் திணையறிந்து பால் அறியாத வழி என்பது பெறப்பட்டது. பால் ஐயம் பெருவழக்கிற்று ஆகலின் முற்கூறப்பட்டது. சேய்மைக்கட் டோன்றுவதோர் மக்கட்பிழம்பு கண்டு, ஒருவன் கொல்லோ ஒருத்திகொல்லோ என ஐயுற்றான் அதனைத் தோன்றுவான் எனவும் ஆகாது, தோன்று வாள் எனவும் ஆகாது, ஆயிடைத் தோன்றுவார் என்க. பைங்கூழ் அழிவுகண்டான் ஒன்றுகொல்லோ பலகொல்லோ செய்புக்கன என்க. [உ௩]

24. உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்று முரித்தே சுட்டுங் காலை.

திணை ஐயத்தின்கண் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயர்திணை அஃறிணை யென்னும் இரண்டு வேறு பாட்டினையுஞ் சுட்டி ஐயப்படுங் காலத்து, உருவெனச் சொல்லினு முரித்து, அஃறிணை ஒருமையாற் கூறலுமுரித்து அப்பொருள். எ-று.

மேல் தானறி பொருள் என்றமையானும், ஈண்டு இரு வீற்று மென்றமையானும் திணைஐயம் என்பது பெற்றாம். ஐயம் என்பது அதிகாரத்தான் வந்தது. இருவீற்று முரித்து என்பதனை

உரித்திரு விற்றும் என்று மொழிமாற்றுக. அஃறிணைப் பிரிப் பென்றதனுல் பொதுமையிற் பிரிவது (பன்மையிற் பிரிவது. இ. ஏ) ஒருமையாதலின் ஒருமைச் சொல்லாற் சொல்லினும் என்றுராகக் கொள்க.

குற்றியோ மகனோ என ஐயுற்றுழி, குற்றியோ மகனோ தோன்றுகின்ற உருபு, தோன்றுகின்ற அது என்க.

உருபு என்றதனுன், அப்பொருள் பயக்கும் பிழம்பு, வடிவு, பிண்டம் என்பனவுங் கொள்க. [உச]

25. தன்மை சுட்டலு முரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

மேல் ஐயப்பட்ட பொருள் துணியப்பட்டவழிச் சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—துணியப்பட்ட பொருளின் வேருகிய பொருட்கண் வரும் அன்மைக்கிளவி, துணியப்பட்ட பொருளைச் சுட்டலும் உரித்தென்று சொல்லுவர் புலவர். எ-று.

தன்மை என்பதனுன் அப்பொருட்கு இயல்பு என்பது பெற்றும். பெறவே துணியப்பட்ட பொருளாயிற்று. வேறிடத்து அன்மைக்கிளவி தன்மை சுட்டலும் உரித்தெனக் கூட்டுக. உம்மை எதிர்மறை யாதலால் சுட்டாமை பெரும்பான்மை.

உ-ம்.—குற்றியல்லன் மகன்; மகன் அன்று குற்றி; பெண் டாட்டி அல்லன் ஆண்மகன்; ஆண்மகன் அல்லள் பெண் டாட்டி; ஒன்றல்ல பல; பலவன்று ஒன்று இவை துணியப் பட்ட பொருளைச்சுட்டி வந்தன. குற்றியன்று மகன்; மகன் அல்லன் குற்றி; பெண்டாட்டியல்லள் ஆண்மகன்; ஆண்மகன் அல்லன் பெண்டாட்டி; ஒன்றன்று பல; பலவல்ல ஒன்று இவை துணியப்படாத பொருளைச்சுட்டி வந்தன.*

குற்றியல்லன் மகனே எனத் தேற்றேகாரங் கொடுத்துழி அன்மை துணியப்பட்ட பொருளைச் சுட்டில், குற்றி நின்று வற்றும் ஆதலால், அன்மைக்கிளவி அல்லாத பொருளைச்சுட்டுதல் ஆசிரியர் மதமென்று கொள்க. [உரு]

* இங்குள்ள உதாரணங்கள் இரு எடுகளையும் வைத்து ஒப்புநோக்கி முறை செய்யப் பெற்றன.

26. அடைசினை முதலென முறைமூன்று மயங்
[காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

ஒருசார் மரபு வழுக்காத்தலை நுதலிற்று.

இ-ள்.—வண்ணம் பெற்ற சினையையுடைய பெயர்ச்சொல் முற்படஅடையும், அதன்பின், சினையும் அதன்பின் முதலுமாகி அம்முறை மயங்காமை வழக்குப்பெற்றியலும். எ-று.

வண்ணச் சினைச் சொல் மயங்காமை நடைபெற்றியலும் எனவே, வண்ண முதற்சொல் மயங்கியல்லது நடவாதென்ற வாறும்.

இதனாற் பெற்ற பொருள் என்னையெனின், பொருட்கு உளதாகிய பண்பும், சினையும், பொருளோடு அடுத்துக் கூறக் கருதுவானாயின், பொருண்மேற் செல்லாது சினைமேற் செல்லும் என்பது அறிவித்தற்கென்க.

உ-ம்.—செங்கால்நாரை: வண்ணம் சினைமேலேறி முதலொடு முடிந்தது. கருங்கோட்டியானை எனப் பண்பினை முதலோடு அடுத்துக் கூறக் கருதுவானாயின், கருமை யானையின் மேற்செல்லாது கோட்டின்மேற் செல்லுதலின் இம்முறை நடை பெறுவதாயிற்று.

* வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால், வடிவு முதலாய பண்புங் கொள்ளப்படும்.

உ-ம்.—சிறுகண்யானை. பிறவும் அன்ன.

அடையென்று பொதுபடக்கூறிய வதனால் ஒரு பொருண் மேலடையிரண்டு வருதலுங் கொள்க. கருநெடுங்கூந்தற் காரிகை எனவரும்.

முறை மயங்காமை என்றதனால், மயங்குமாயின், குறித்த பொருண்மேற் செல்லாதென்க.

உ-ம்.—பெருந்தலைப் புல்லார் நல்லா(ர்) என்றவழி, பெருந் தலை யென்பது புல்லோடு சார்ந்து வருதலிற் சொல்லுவாள் குறிப் புள் ஒன்றாயினும் † அதன்மேற் செல்லாதாயிற்று.

---

* வந்தது கண்டு (இ. ஏ). † குறிப்பு வேறாயினும்.

கவிசெங் தாழிக் குவிபுறத்திருந்த—செவிசெஞ் சேவலும் (புறம். உஅ௩) என முறை மயங்கி வந்ததால் எனின், ஆண்டுச் செஞ்செவி என்பது மொழிமாறி நின்றதென்க. [உசு]

27. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

ஒருசார் பால்வழுவும் திணைவழுவும் அமைத்தலை நுதலிற்று.

இ-ள்:—ஒருவரைச் சொல்லும் பன்மைச் சொல்லும் ஒன்றனைச் சொல்லும் பன்மைச் சொல்லும் இலக்கண மருங்கிற் சொல் நெறியல்ல, வழக்கின் ஆகிய உயர்சொற்கிளவி. எ-று.

உயர் சொற் கிளவி—இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

உ-ம்:—அவர் வந்தார் எனவரும். ஒருவனையும் ஒருத்தியையும் ஒன்றினையும் இவ்வாறு கூறுதல்வழுவாயினும், உயர்வுகுறித்துச் சொன்னமையான் அமைதியாயிற்று. இயற் பெயர் முன்னராரைக் கிளவி—பலர்க்குரி யெழுத்தின் வினையோடு முடிமே (இடையியல் 22.) என்புழியடங்காதோஎனின், ஆண்டு, நம்பி, நங்கை, சாத்தன் என்னும் பெயர் தானே பால் காட்டுதலான் அதன் மேல் ஓர் இடைச்சொல்லாயிற்று, ஈண்டுப் பன்மைச் சொற்றானே ஒருமைக்கு வருதலின் அடங்காதாயிற் றென்க. வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால், ஒருபசுவை எம் அன்னை வந்தாள் எனவும், பெருங்கொல்லன், பெருவண்ணான் எனவும் வருவன(வுங்) கொள்க. [உஎ]

28. * செலவி னும்வரவி னும் தரவி னும் கொடை-
[யி னும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூவிடத்தும் உரிய வென்ப;
அவற்றுள்,

* இச்சூத்திரத்தினை இளம்பூரணர் முதலியோர் முச்சூத்திரங்களாகக் கொள்வர்.

தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை யாயீ ரிடத்த;
ஏனை யிரண்டும் ஏனை யிடத்த.

ஒருசார் *வினைச்சொற்கு இலக்கணம் உணர்த்தலை நுதலிற்று

இ-ள் :—செலவு, வரவு, தரவு, கொடை யென்னும் தொழிற்கண் நிலைபெறத்தோன்றும் அந்நாற் சொல்லும் தன்மை முன்னிலை படர்க்கையென்னும் அம்மூன்றிடத்தும் உரியவென்ப ஒருசாரார். அவற்றுள், தருசொல் வருசொல் ஆயிருகிளவியும் தன்மை முன்னிலை யென்னும் இரண்டிடத்தினும் வரும்; ஏனை யிரண்டும் படர்க்கைக்கண் வரும். எ-று.

உ-ம்: எனக்குத் தந்தது; எனக்கு வந்தது; நினக்குத் தந்தது; நினக்குவந்தது; அவர்க்குச் சென்றது; அவர்க்குக் கொடுத்தது எனவரும்.

இந்நான்கு சொல்லும் மூன்றிடத்தும் வரும் என்பார் உதாரணங் காட்டுமாறு:—எனக்குச் சென்றது; எனக்குக் கொடுத்தது; நினக்குச் சென்றது; நினக்குக் கொடுத்தது; அவர்க்குத்தந்தது; அவர்க்கு வந்தது எனக்காட்டுவர்.

இவற்றுள் கொடுவென்பதனை கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்-தன்னைப் பிறன்போற் கூறுங்குறிப்பில்-தன்னிடத்தியலும் என்மனர் புலவர் (எச்-சகூ) என எடுத்து வழுவமைக்கின்றார் ஆகலானும், பிறவும் இத்துணைச்சிறப்பில வாதலானும் இலக்கண வழக்கு மேற்காட்டப்பட்ட †ஆறுதாரணமுமே. ஏனைய ஆறும் ஒருமுகத்தான் வழுவமைத்தவாறாகக் கொள்க. [உஅ]

29\. யாதெவ னென்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.

வினு வழுக் காத்தலை நுதலிற்று.

இ-ள் :—யாது எவன் என்று சொல்லப்பட்ட இரண்டு சொல்லும் அறியாத பொருட்கட் பொருந்தத்தோன்றும். எ-று.

---

* வினைச்சொற்கண் இடவழுக்காத்தலை (இ. ஏ.) †ஆறுதாரணமும். இ. வ.

நின்னொடு யாது? இப்பண்டியுள்ளது எவன்? என வரும்.

எனைப்பால் உணர்த்தும் வினாச்சொற்களெல்லாம் கூறாது இவ்விரண்டினையும் வகுத்துக் கூறியது என்னையெனின், ஆண்டு உளதோர் வழுவமைத்தற் பொருட்டென்க. [உகூ]

30: அவற்றுள்
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாகலு முரித்தே.

வினாவழு அமைத்தலை நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள் யாது என்று சொல்லப்பட்ட அறியாத பொருண்மைக்கண் நிகழும் சொல், அறிந்த பொருட்கண் ஐயந்தீர்தற் பொருட்டு ஆராய்ந்த சொல் லாகலும் உரித்து. எ-று.

உம்மை எச்சவும்மை ஆகலான், ஐயம் அறுத்தலை யன்றி அறிவொப்புக் காண்டற் பொருட்டும் வினாவப்படும் என்றுங் கொள்க. ஐயம் அறுத்தலாவது, இச்சொற்குப் பொருள் இது என உணர்ந்தான் ஒருதலையாகத் துணிதலாற்றாது, அஃதறிவான் ஒருவனை வினாதல். அறிவு ஒப்புக்காண்டலாவது, சொல் இலக்கணம் அறிவான் ஒருவன் அஃதுஅறிவான் ஒருவனை இதற்குப் பொருள் யாது என வினாதல். பிறவும் அன்ன. இவ்வாறு அறிந்த பொருளை வினாதல் வழுவாயினும் அமைக என்றவாறு. [ஙய]

31 இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவி
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்.

ஒரு சார் செப்பு வழுக் காத்தலை நுதலிற்று.

இ-ள்:—இத்துணை யென வரையறுக்கப்பட்ட சினைக்கிளவி யும், முதற்கிளவியும் தொழிற்படு தொகுதிக்கண் உம்மை பெறல் வேண்டும். எ-று.

எனவே, தொழிற்படாத் தொகை இயல்பாகி வரப்பெறும் என்பது பெறுதும்.

உ-ம்.—தேவர் முப்பத்து மூவரும் வந்தார், நங்கை முலை யிரண்டும் நல்ல: இவை தொழிற்பட்டதொகை. தேவர் முப் பத்துமூவர், ஆவிற்கு முலை நான்கு: இவை தொழிற்படாத் தொகை. "கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு—வதுவைவந்த வன்பறழ்க்குமரி—இருதோள் தோழர்பற்ற" என்புழி உம்மை வந்த தன்றால் எனின் ஆண்டு எஞ்சிநின்றது என்க. [ஙக]

## 32. மன்னாப் பொருளும் அன்ன வியற்றே.

### இது மருவுவழுக் காக்கின்றது.

இ-ள்:—பொருந்தும் பொருளும் பொருந்தாப் பொருளும் உறழவேண்டும் இடத்தும், பொருந்தும் பொருள் கூறுமிடத்தும் உம்மை கொடுத்துச் சொல்லவேண்டும். எ-று.

வேதாகமத்துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து, உலகும், உயிரும், பரமும் அநாதி. பதியும், பசுவும், பாசமும் அநாதி எனவரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும்; பாசமும் பதியும் இவற்றொடு பொருந்தாத பொருள் ஆனவாறுங் காண்க. உடம்பும் உயிரும்வாடியக்கண்ணும் என வும், 'நோயும் இன்பமும்' எனவும் கூறியவாறுங் காண்க. மன்னிக் கழிகின்றேன் என்றான்:—மன்னுதல் பொருத்தமும் மன்னாமை பொருத்தாமை(யு மா)னவாறுங் காண்க.

### இரண்டாவது எட்டிற்காணும் உரை.

### இதுவுமது.

இ-ள்:—நிலையாத பொருள் உம்மை பெறல்வேண்டும். எ-று. அவையாவன இளமை, செல்வம், யாக்கை யென்பன.

உ-ம்:—சக்கரவர்த்தி இளமையும் நிலையாது. சக்கரவர்த்தி செல்வமும் நிலையாது. சக்கரவர்த்தி யாக்கையும் நிலையாது. "எம மாக இந்நில மாண்டோர் சிலரே," "பெருங்கேளினிளும்— பலரே யத்தைஅம் கறியா தோரே—அன்னோர் செல்வமும் மன்னி நில்லா." எனவரும். [ஙஉ]

இல்லாப்பொருளென உரைப்பவாலெனின் இல்பொருள் வழக்கின்றெனமறுக்க. உம்மை கொடாக்கால் வருங்குற்றம்

என்னை யெனின், பிறரிளமையும் செல்வமும் யாக்கையும் நிற்கு மெனப் பொருள்படு மாதலான் கொடுக்கவேண்டுமென்க. [௩௨]

33. எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்,

செப்பு வழுவமைதி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—யாதானும் ஒருபொருளாயினும் அல்லது என்னும் சொல்லொடு கூட்டி இல்லை எனக்குறித்தான்ஆயின், அவன் வினாவியபொருள் அல்லாத பிறிதாயபொருளைச் சொல்லுக. எ-று.

எனவே அதனொடு கூட்டிச் சொல்லுக என்றவாறும். 'அப்பொருள் அல்லாப் பிறிது' என்றமையான் அதற்கு இனமாகிய பொருளையே சொல்லப்படும்.

பயறு உளவோ வணிகீரே என்றார்க்கு உழுந்தல்லது இல்லை என்க. கொல்லவன் பட்டு உளவோ என்றால் கோசகம் அல்லது இல்லை என்க. எனவே அவன் கருத்திற்கேற்ற வினாவிய பொருளை இல்லை என்னாது, பிறிது ஒன்று கூறுதல் வழுவாயினும், அப்பொருள் பயத்தலின் அமைதியாயிற்று. [௩௩]

34. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்.

செப்பின்கண் வழுக்காத்தலை நுதலிற்று.

இ-ள்:—வினாவிய பொருளையே சொல்லி அல்லதில்லை யெனின், சுட்டிக்கூறுக. எ-று.

இப்பயறு அல்லதில்லை; இப்பட்டு அல்லதில்லை என்க. எனவே அவன் கருத்திற்கேற்றபயறும் பட்டும் இல என்றவாறும். [௩௪]

35. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே.

செப்பு வழுவமைத்தலை நுதலிற்று. மேலதற்கோர் புறநடை எனினும் அமையும்.

இ-ள்:—வினாவப்பட்ட பொருளோடு புணராச் சுட்டுப்பெயரைச் சொல்லினும், பொருள் வேறுபடாது ஒன்றும். எ-று.

இப்பயறல்லது இப்பட்டல்லது இல்லை *என்னாது இவை யல்லது இல்லை எனினும் பொருள் வேறுபடாவாறு கண்டு கொள்க. [௩௫]

36. இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப் பெயர்க் [கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.

ஒரு பொருண்மேற் பலபெயர் வருவழிச் செப்புவழுக் காத்தலை நுதலிற்று.

இ-ள் :—ஒரு பொருள்மேல் வரும் இயற்பெயர்ச்சொல்லும், சுட்டுப்பெயர்ச் சொல்லும் வினைகோடற்கு ஒருங்கு இயலுங்காலம் தோன்றின், சுட்டுப் பெயர்ச்சொல்லை முற்படச்சொல்லார்; இயற் பெயர் வழியவாகக் கூறப்படும் என்று சொல்லுவர் புலவர். எ-று.

வழிய எனப்பன்மை கூறியது சுட்டுப்பெயர் பல ஆகலான். இயற் பெயராவன :—சாத்தன், கொற்றன், சாத்தி, கொற்றி என்பன. சுட்டுப்பெயராவன :—அவன், இவன், அவள், இவள் என்பன. இயற் பெயர் என்றாராயினும் வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனான் ஒரு பொருட்குப் பெயராகி வரும் நிலப்பெயர் முதலாயினவுங் கொள்க. ஒருங்கு இயலுங் காலம் தோன்றின் என்றதனால், ஒருபெயர் ஒருவினையொடு முற்றி நில்லாது பலசொல்லொடு தொடருங் காலத்து இவ்வாறு வருவ தென்று கொள்க.

சாத்தன்வந்தான் அவற்குச் சோறு கொடுக்க. சாத்தி வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க எனவரும். பிறவும் அன்ன.

சுட்டுப்பெயர் முற்கூறின் ஒரு பொருளாதல் தோன்றா தாம். [௩௬]

---

* 33, 34, 35 ஆம் சூத்திரங்களில், பட்டுப்பற்றிய வினாவிடை யுதாரணங்கள் இரண்டாவதேட்டில் இல்லை.

37. முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலை நுதலிற்று.

இ-ள் :—மேலைச் சூத்திரத்துப் பிற்படக் கூறப்படும் என்று சொல்லப்பட்ட சுட்டுப் பெயரை முற்படக் கூறுதல் செய்யுட்கண் ஆம். எ-று.

அவனணங்கு நோய்செய்தான் *ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி— முகனமர்ந்து †
அன்னை யலர்கடப்பந் தாரணியின் என்னைகொல்
பின்னை யதன்கண் விழைவு.

இதனுள் சேந்தன் என்பதூஉம், அவன் என்பதூஉம் ஒரு பொருள் ஆகியவாறும், சுட்டு முன் வந்துழியும் பொருள் வேறு படாமையுங் கண்டுகொள்க.

அஃது அற்றாக, சுட்டுப் பல ஆகலின் உரிய எனப் பன்மையிற் கூறாதது என்னை யெனின், ஈண்டு அகரச் சுட்டேவருதலின் ஒருமையாகக் கூறப்பட்டது. ‡வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனாற் கொள்க. நாயுடைமுதுநீர்க் கலித்த என்னும் அகப் பாட்டினுள் (அகம். ௧௬) கூர் எயிற்றரிவை குறுகினள், செத்தனள், கொண்டனள், நாணி நின்றோள், அணங்கருங் கடவுள் அன்னோள் என ஒரு பொருண்மேற் பல பெயர்(ச்)சுட்டிக் காலங் காட்டியவாறு காண்க. [௩௭]

38. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்
[றும்.

செப்பு வழுக்காத்தலை நுதலிற்று.

இ-ள்:—சுட்டெழுத்து முதலாகிய காரணச் சொல்லும், சுட்டுப்பெயர் இயற்கை போலப் பொருந்தத் தோன்றும். எ-று. என்றது பிற்படக் கூறப்படும். எ-று.

---

* நோயென்றான். † முகமலர்ந்து. ‡ அதனைப்பல்பொருட்கேற்பின் நல்லது கோடல் என்பதனாற் கொள்க. (இ. வ). 'வந்தது கொண்டு' என்பது முதல் இச்சூத்திரமுடிபுவரை உள்ளன இரண்டாவதேட்டில் இல்லை.

உ-ம்:—மழை பெய்தது, அதனால் யாறு பெருகும். பிறவும் அன்ன.

இது, சுட்டுப்பெயருள் அடங்காதோ எனின், பொருளைச் சுட்டாது தொழிலைச் சுட்டுதலானும், காரணக் கிளவி கருவியாத லானும் வேறு ஓதப்பட்டது. [௩௮]

39. சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

இதுவும் அது.

இ-ள்:—மன்னர் முதலாயினாரால் பெற்ற சிறப்பினான் ஆகிய பெயர்ச் சொற்கும், உம்மையான் நிலப்பெயர் முதலாகிய பெயர்க்கும் இயற்பெயர்ச் சொல்லை முற்படக் கூறார் ஆசிரியர். எ-று.

சிறப்பினான் வந்தன:—ஏனாதி, வாயிலான், படைத்தலைவன். அவை ஏனாதி நல்லுதடன், வாயிலான் சாத்தன், படைத்தலைவன் கீரன் என்பன. இக்காலத்து, உடையார், தேவர் என்பனவும் சிறப்பினான் ஆகிய பெயர். அருவாளன் சாத்தன், பாண்டியன் மாறன், முனிவன் அகத்தியன், ஆசிரியன் சாத்தன். பிறவும் அன்ன. [௩௯]

40. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன்
[இலவே.

இதுவும் அது.

இ-ள்:—ஒரு பொருள் குறித்த வேறுவேறாகிய பெயர்ச் சொல் தொழிலைப் பெயர்தோறுங் கிளப்பின் ஒரு பொருளாகி ஒன்றும் இடன் இல. எ-று.

எனவே, பல பெயர் அடுக்கி வரின் ஒருவினையான் முடித்தல் வேண்டும் என்றவாறும். ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் எனவரும். ஆசிரியன் வந்தான்,

பேரூர் கிழான் வந்தான், செயிற்றியன், இளங்கண்ணன், சாத்தன் வந்தான் எனின் ஒரு பொருள் ஆதல் தோன்றுதாம்.

வீழைந்துமுதிர் கோற்றத்து விறலோன் வாழி,
கடற்கடம் பெறிந்த காவலன் வாழி,
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் வாழி;
பூந்தண் பொருநைப் பொறையன் வாழி,
மாந்தரஞ் சேரல் மன்னவன் வாழி கேள்.

என்றவழி, ஒருபொருள்குறித்த பெயர்தோறும் வினை வந்ததால் எனின், இச்சூத்திரத்தில் தொழில் வேறுகிளப்பின் என்பதற்கு மொழிந்த பொருளோடு ஒன்றவைத்தல்* என்பதனான் வேறுவேறு வினை கிளப்பின் ஒன்றிடன் இலவெனப் பொருளுரைக்கப் பெயர்தோறும் ஒரு வினைவரின் ஒன்றும் என்பது பெற்றும். அதனானே இவ்வாறு வருவன அமைத்துக் கொள்க. விழைந்து முதிர்கொற்றத்து விறலோன்வாழ்க. கடற்கடம் பெறிந்த காவலன் கெடுக எனின் வழுவாம். [௪0]

41. தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

திணை வழு வமைத்தலை நுதலிற்று.

இ-ள்:—தன்மைப் பெயர்ச் சொல்லும் அஃறிணைப் பெயர்ச் சொல்லும் எண்ணுமிடத்தில் விரவுதல் நீக்கார். எ-று.

உ-ம்:—யானுமேன் னெஃகமுஞ் சாறும் அவனுடைய—யானைக்குஞ் சேனைக்கும் போர் எனவரும். நீயும் நின் படைக்கலமுஞ் சாறீர். அவனும் அவன் படைக்கலமும் சாலும் என வினையிடத்தும் வருமால் எனின், முன்னிலைவினை இருதிணைக்கும் பொது வாகலினானும், படர்க்கை வினைக்கட் 'செய்யும்' என்னும் முற்றுச் சொல் இருதிணைக்கும் பொதுவாய் வருதலானும் அவை ஆண்டு அடங்குமென்க. [௪௧]

---

* ஒப்பக் கூறல் (இ. எ.)

42. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது.

உயர்திணைப் பொருண்மேல் எண்ணுமுறை நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஒருமை யெண்ணின் பொதுமையாகிய ஒருவர் என்னும் சொல்லினின்றும் பிரிந்த ஒருவன், ஒருத்தியென்னுஞ் சொல் அவ்வொருமைக் கல்லது எண்ணு முறைக்கண் ணிடாது. எ-று.

எனவே, எண்ணுமுறைக்கண் ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் ஒருவர், இருவர், மூவர் என எண்ணினல்லது பால் தோன்ற எண்ணப்படாது என்றவாறும். [சஉ]

43. வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு
[வரையார்.

ஐயமறுத்தலை நுதலிற்று.

என்னை? வினையியலுள் வியங்கோள் இருதிணைக்கும் பொது என்றாராயினும், எண்ணுங்கால் தனித்தனி எண்ணல் வேண்டுமோ, விரவி எண்ணல் வேண்டுமோ என்னு கின்ற ஐயம் நீக்குதலின். இது திணைவழு வமைதியுமாம்.

இ-ள் :—வியங்கொள்ளும் எண்ணுப் பெயர் திணை விரவுதல் நீக்கார். எ-று. [சங]

உ-ம். ஆவும் ஆயனுஞ் செல்க எனவரும்.

44. வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை
[கிளவார்.

மரபு வழுக்காத்தலை நுதலிற்று.

இ-ள் :—பலவினையை யுடைய பொதுப்பெயரை ஒரு வினையாற் கூறார், அறிவோர். எ-று. எனவே, பொதுவினையாற் கிளத்தல் வேண்டும் என்றவாறும். அது, இயம் என்பது கொட்டுவனவும் எறிவனவும் ஊதுவனவும் ஆம். ஆதலின இயம் கொட்ட-

ஞர், ஊறினார், எறிந்தார் என்னற்க. பொதுவினையால் இயம் இயம்பினார் என்க. பிறவும் அன்ன. [௪௪]

## 45. எண்ணுங் காலை யதுவதன் மரபே.*

மேலதற்கு எய்துவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வேறு வேறு வினையுடைய பொருளைப் பொதுப் பெயராற் கூறுதலன்றி எண்ணுமிடத்தும் அதன் மரபு பொது வினையாற் கிளத்தல். எ-று.

உ-ம்:—அம்பும், வேலும், தண்டும், வாளும் வழங்கினார் என்க. எறிந்தார் எய்தார் என ஒரு வினையாற் கிளவற்க. ஊன் றுவை—கறிசோ றுண்டு வருந்துதொழில் அல்லது-பிறிதுதொழி லறியா வாகலின் (புறநா—௧௪.) என்றவழி உண்டு என ஒரு வினையான் வந்ததால் எனின், அது பொதுவினை என்று கொள்க. என்னை? உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்கு (கலி—குறி, ௧௫) எனவும், பாலுமுண்ணாள் பழங்கண் கொண்டு (அகம்—௪௮.) என வும், கலைப்புற வல்குல் கழுக்குடைந் துண்டு (மணிமே-௬, ௪௧-௧௧௨.) எனவும், கள்ளுண்ணாப் போழ்து (குறள்—௯௨௰.) எனவும், உண்ணாமை வேண்டும் புலால் (குறள்—உருள) எனவும் வருதலின். † [௪௫]

## 46. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா.

இது செப்பு வழுக்காத்தலை நுதலிற்று.

இ-ள்:—இரட்டித்துச் சொல்லப்படுஞ் சொற்கள் அவ்விரட் டித்தலிற் பிரிந்து ஒலியா. எ-று.

உ-ம்:—ஒன்றொன்றாக வந்தன. இரண்டிரண்டாக நீக்குக எனவரும். இவை ஒன்றாக வந்தன. இரண்டாக நீக்குக என்றவழிப் பொருண்மை படாமையால் பிரிந்தொலியா வாயின. [௪௬]

---

* எண்ணுங் காலும் அதுவதன் மரபே. இ. ஏ.

† பாலும், கலை, கள்என்று தொடங்கும் உதாரணங்கள் இரண்டாவ தேட்டில் இல்லை.

47. *ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் [ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்.

மரபு வழுவமைத்தலை நுதலிற்று.

இ-ள் :—ஒரு பெயராகிப் பல பொருட்கும் உரித்தாகிய பொதுச் சொல்லை வகுத்துக் கூறுதல் தலைமையானும் பன்மையானும். எ-று.

எனவே, தலைமையும் பன்மையும் இல்வழி, பொதுச்சொல்லாற் கிளக்க என்றவாறாம்.

உ-ம் :—பார்ப்பார் வேதம் என்பது அரசர்க்கும் வணிகர்க்கும் பொதுவாயினும், பார்ப்பார்வேதம் எனத் தலைமைபற்றி வந்தது. எயினர்நாடு என்பது பிறவுங் குடி உளவாயினும் பன்மை பற்றி வந்தது. ஆமேய்ப்பான் என்பதும் அது. இளமாக்கா என்பது தலைமையும் பன்மையும் இல்வழிப் பொதுவாய் வந்தது. பிறவும் அன்ன. [சஎ]

48. உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்
பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

எண்ணின்கட் கிடந்ததோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.
வழுக்காத்ததுமாம்.

இ-ள் :—உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும் பெயரானும் தொழிலானும் பொதுமையிற் பிரியும் பொருளெல்லாம் எண்ணுங்கால், தம்முள் மயங்குதல் கூடாத வழக்கு வழிப்பட்டன. எ-று.

மரபல என்றவாறு; எனவே, இனஞ்சேர எண்ணல் வேண்டும் என்றவாறாயிற்று. எண்ணுங்கால் என்பது தந்துகோணர்ந்

*இளம்பூரணர் முதலியோர் அடுத்த சூத்திரத்தின் முதல் வரியையும் இதனொடு சேர்த்துள்ளார்கள். இச்சூத்திரங்களின் உரைப்போக்கும், வேறுபடுகின்றது.

துரைத்தல் என்னும் தந்திர உத்தியால், வருகின்ற சூத்திரத்தினின்றுங் கொணர்ந்துரைக்கப்பட்டது.

உ-ம் :—முனிவரும் அந்தணரும் சான்றோரும் எனவும், பாணருங் கூத்தரும் விறலியரும் எனவும், முத்தும் மணியும் பவளமும் பொன்னும் எனவும், மாவும் மருதும் புன்னையும் ஞாழலும் எனவும் எண்ணுக. இவை பெயர். எறிவாரும் எய்வாரும் வெட்டுவாரும் குத்துவாரும் எனவும், ஆடுவாரும் பாடுவாரும் நகுவாரும் எனவும், உண்பனவும் தின்பனவும் பருகுவனவும் நக்குவனவும் எனவும் எண்ணுக. இவைவினை. அஃதேல், ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்—பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்—தென்புல வாழ்நர்க்கு இருங்கடன் இறுக்கும்—பொன்போற் புதல்வற் பெறாஅ தீரும்—எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின் (புறநா. கூ) எனக்காட்டி இதனுள் அடங்காதால்* எனின், அவைபும் உய்யத்தகுவார் இவரென்னும் இனங்குறித்து நின்றனவென்றுகொள்க. பிறவும் அன்ன. [சஅ]

49. பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப் [பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

திணைவழுவமைத்தலை நுதலிற்று.

இ-ள் :—எண்ணின் கண், திணை விரவிவரும் பெயர், பெரும்பான்மையும் அஃறிணை முடிபின செய்புளுள். எ று.

எனவே, சிறுபான்மை உயர்திணையான் முடியவும் பெறுமென்று கொள்க.

உ-ம்:—கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ—ஆல் வீழ்பு† போலும் அமைச்சனும்-வேலின்-கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்—படைவேந்தன் பற்று விடல். (திரி. கூகூ) இது விரவி எண்ணி அஃறிணையான் முடிந்தது. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்குந்—திங்களுஞ் சான்றோரும் ஒப்பர் (நாலடி. கரிக) எனவும், பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்

* சேர்மின் என்பதனுள் மயங்கி வந்ததாலெனின். †வீழ்து. இ. எ.

டார்—மூத்தார் இளையார் பசுப் பெண்டிர் என்றிவர்கட்கு—ஆற்ற வழிவிலங்கி ஞரே பிறப்பிடைக்கட்—போற்றி எனப்படு வார் (ஆசாரக்கோவை. ௬௪) எனவும் இவை உயர்திணையான் முடிந்தன. யானையுங் குதிரையும் வீரரும் போர்க்களத்துப்பட்டன; அரசனும் படையும் பட்டன எனவும் வழக்கின்கண்ணும் வருமால் எனின், மொழிந்த பொருளோடொன்றவைத்தல் என்னும் தந்திர உத்தியால் * இச்சூத்திரத்திற்குப் பலவயினானும் அஃறிணை முடிபின செய்யுளுள் என்றமையான், சிலவயினான வழக்கினுள்ளும் விரவி வந்து தலைமையும் பன்மையும் பற்றி வந்த அஃறிணையான் முடியவும் பெறுமென்று கொள்க. [௪௯]

50. வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வினைவேறு படாஅப் பலபொரு ளொரு
சொலென்
றாயிரு வகைய பலபொரு ளொரு சொல்.

பலபொரு ளொருசொற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—பலபொருளுணரவருஞ் சொல்லாவ(ன)-பலபொருட்கும் தனித்தனிப்பெயராகி வருவதூஉம் பலபொருளொரு சொல்லாம்: பலபொருட்கும் பொதுப்பெயராகிவருவதூஉம் பலபொருளொருசொல்லாம். அவற்றுள் வினைவேறுபடூஉம் பலபொருளொரு சொல்லாவன: மா, வேங்கை எனவும், மக்கள், பெற்றம் எனவும் வருவன. வினைவேறுபடாஅப் பலபொருளொரு சொல்லாவன: சேவல், பெடையென்பன. அவற்றுக்கு உதாரணம் வருகின்ற சூத்திரத்தாற் காட்டுதும். [௫௰]

50-A. அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்
[பினும்
தேறத் தோன்றும் பொருடெரி நிலையே.

வினைவேறுபடும் பலபொருளொரு சொல் பொருளுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* ஒப்பக்கூறல் என்னும் தந்திர உத்தியால் (இ. ஏ.)

இ-ள்:—மேற் கூறப்பட்டவற்றுள் வினைவேறுபடும் பல பொருளொருசொல் பொருள் தெரியுங்காலத்து வேறுபட்ட வினையினானும், இனத்தினானும், சார்பினானும் தெளியத் தோன்றும். எ-று.

உ-ம்:—மா காய்த்தது; வேங்கை பூத்தது என்றவழி மாம் என்பது அறியப்பட்டது. மா ஓடிற்று; வேங்கை பாய்ந்தது என்றவழி விலங்கு என்பது அறியப்பட்டது. இவை தனிதனிப் பொருள் உணர்த்தின. இவ்வூர் மக்களெல்லாம் போர்க்குப் போயினார் என்றவழி ஆண்பால் உணரப்பட்டது. இவ்வூர் மக்களெல்லாம் தைந்நீராடினார் என்றவழிப் பெண்பால் உணரப்பட்டது. இவ்வூர்ப் பெற்றமெல்லாம் அறம் கறக்கும் என்ற வழிப் பெண்பால் உணரப்பட்டது. இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழவு ஒழிந்தன என்றவழி ஆண்பால் உணரப்பட்டது. இவை பொதுப் பொருள் உணர்த்தின. இவை வினையினாற் பொருள் விளக்கின. மாவும் மருதும் அவை என்றவழி மாமரமென்பது அறியப்பட்டது. மாவும் புள்ளும் என்றவழி விலங்கென்பது அறியப்பட்டது. இவை இனம். இப்பொழிலகத்து நூறு மாவுள என்றவழி மரம் என்பது அறியப்பட்டது. இப்போர்க் களத்து நூறுமாவுள என்றவழி விலங்கென்பது அறியப்பட்டது. இவை சார்பு. பொதுமைபுணர்த்தும் பலபொரு ளொருசொல் இனமும் சார்பும்பற்றி வருவன வந்தவழிக்கண்டு கொள்க. (இ.எ.)

‡51. ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்.

மேலதற்கோர் புறநடையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வினைவேறுபடும் பல பொருள் ஒருசொல், வேற்று வினை கொண்டு முடிதலேயன்றி இருபொருட்கும் பொருந்தின ஒருவினை கொண்டு முடியின், பிறிதொரு சொல்லோடு (பொருளொடு இ. எ.) ஒன்றிப்பொருள் தோன்றும். எ-று.

பிறிதொரு சொல்லென்பது எஞ்சி நின்றது.

---

‡ 51, 52-ம் சூத்திரங்களைச் சேனாவரையர் ஒன்றாக்குவார்.

உ-ம் :—மாவீழ்ந்தது என்றவழி இன்ன மாவென்பது அறியலாகாமையின், யானை முறித்தலால் வீழ்ந்தது என்றவழி மாம் என்பதூஉம், அம்பு படுதலான் வீழ்ந்தது என்றவழி விலங்கு என்பதூஉம் உணர்த்தியவாறு கண்டுகொள்க. [௫௧]

52. வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

இது வினைவேறுபடாப் பலபொருள் ஒருசொல் பொருள் உணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வினை வேறு படாத பலபொருள் ஒரு சொல் பொருள் உணருங்கால் எடுத்துக்கூறல் வேண்டும். எ-று.

உ-ம் :—சேவல், பெடை என்பன வினையால் வேறுபடாமையால் அன்னச்சேவல், குயிற் சேவல், அன்னப் பெடை, குயிற் பெடை என எடுத்துக் கூறப் பொருள் விளங்கினவாறு கண்டு கொள்க. [௫௨]

53. குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி.

மேலதற்கோர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—தெரிந்து வேறுபடுக்கவருஞ் சொல்லைக் கிளந்துரைத்தலே யன்றி, குறித்தோன் கூற்றமும் ஆம். எ-று.

உம்மும் ஆமும் எஞ்சி நின்றன. உ-ம் :—சிவந்தோங் குயர் கோடிச் சேவலோய் (பரி : ௩ : ௧௮.) என்றவழிச் சொல்லுவான் குறிப்பு மாயவனை நோக்கலிற் கருடனாயிற்று. சேவலங் கோடியோன் காப்ப (குறு—க) என்றவழிச் சொல்லுவான் குறிப்பு முருக வேளை நோக்குதலிற் கோழியாயிற்று. பிறவும் அன்ன. [௫௩]

54. குடிமை யாண்மை யிளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை யரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி

காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொ
[லென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்.

திணை வழுவமைதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—குடிமை முதலாக எண்ணப்பட்டனவும், அத் தன்மைய பிறவும் அவற்றொடு பொருந்திக் குறிப்பினான் உணருங் கிளவி யெல்லாம் உயர்திணை மருங்கில் நின்றன வாயினும் அஃறிணை யிடத்துச் சொல்லான் வழங்கப்படும். எ-று.

உயர்திணை மருங்கின் நிலையின வாயினும் என்ற உம்மையான் இவையெல்லாம் பண்பு குறித்தவழி அஃறிணையாம் என்பதூஉம், பொருள் குறித்தவழி உயர்திணையாம் என்பதூஉம் கூறியவாறாயிற்று. குடிமையாவது குடியாகிய தன்மை. அது அக்குடியிற் பிறந்தாரைக் குறித்து நின்றது. இக்குடி வாழ்ந்தது, இக்குடி கெட்டது என்ப. குடிமை என்பது குடி என வருமோ எனின் மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்(கு)— அடிமை புகுத்தி விடும் (குறள்—சுாஅ) என்றவழிக் குடி எனப் பொருளாகியவாறு கண்டு கொள்க. ஆண்மை யென்பது ஆணாகிய தன்மை: அத்தன்மையைக் குறித்து ஓர் ஆண் வந்தது என்ப. இளமை யென்பது இளையாரைக் குறித்து நிற்கும். இவ்வவை இளமையின்று என இளையாரை இலது என்னும் பொருள்பட வந்தது. மூப்பு என்பது முதியாரைக் குறித்து நிற்கும். இவ்வவை மூப்பு இன்று என முதியாரை இலது என்னும் பொருள்பட வந்தது. அடிமை என்பது அடிமைத் தொழில் செய்வார் மேற்று. அவனதடிமை வந்தது என அப்பொருள் குறித்து நின்றது. வன்மை யென்பது வலியாகிய தன்மை. அவனது வலி போயிற்றென அவற்குத் துணையாயினாரைக் குறித்து நின்றது. விருந்து என்பது புதுமை. விருந்து வந்ததென,

புதியார் வந்தார் என்பது குறித்து நின்றது. குழூஉ என்பது திரள். குழூஉப்பிரிந்தது, அவை எழுந்தது, படைதிரண்டது என்ப குழுவிய மாந்தரைக் குறித்து. பெண்மை என்பது பெண்ணாகிய தன்மை. ஒரு பெண் வந்தது என்ப.

அரசு என்பது அரசத்தன்மை. அரசிருந்தது என்ப அரசன் என்பதைக் குறித்து. மக என்பது மகன், மகள் என்னும் முறைப்பெயர் இரண்டற்கும் பொதுவாகி நிற்பது. மகக்கிடந்தது என்ப. குழவி என்பது அப்பொருளின் இளமை குறித்து நிற்கும். குழவி அழுதது என்ப. தன்மை திரிபெயர் என்பது தன் இயல்பிற்றிரிந்த பொருட்பெயர். அது மருள் என்பது, அதனை மருள் வந்தது என்ப. உறுப்பின் கிளவி என்பது உறுப்பினாற் கூறப்படும் சொல். அஃதாவது குருடு முடம் என்பன. குருடு வந்தது, முடம் வந்தது என்ப. காதல் என்பது காதல் பற்றி நிகழுஞ்சொல். காதற்சொல் சிறப்புச்சொல் என ஒரு சொல் வருவிக்க, என்பாவை வந்தது, என் யானை வந்தது என்ப. தன்மக்களை ஈங்கிதோர் நல்கூர்ந்தார் செல்வ மகள் (கலி. நூ) என்றவழி இது என்பது காதல் பற்றி வந்தது. சிறப்பு என்பது சிறப்பைப்பற்றி வருஞ்சொல். கண்போலச் சிறந்ததனை என்கண் வந்தது என்ப. செறற் சொல் என்பது செறலினாற் கூறுஞ்சொல். என்பகை வந்தது, திருவிலி வந்தது என்ப. ஏஎ இஃதொத்தன் (கலி. சுஉ) என்றவழி இஃதென்பதும் அது. விறற் சொல் என்பது வீரியத்தாற் கூறுஞ்சொல். விறல் வந்தது, சிங்கம் வந்தது, புலி வந்தது என்ப அவ்வீரியங்குறித்து. அன்ன பிறவும் என்றதனால், குடும்பம் வாழ்ந்தது, வேந்து சென்றது, ஆள் வந்தது, அமைச்சு வந்தது, தூதுவந்தது, ஒற்று வந்தது, நட்பு நன்று என்பன கொள்க. அவற்றொடு சிவணி முன்னத்தின் உணருங் கிளவியெல்லாம் என்றதனால், உலகு வாழ்ந்தது, நாடுவந்தது, ஊர்வந்தது என்பது அவ்விடத்திலுள்ள மாந்தரைக் குறித்தது. பிறவும் அந்நிகரனவெல்லாம் கொள்க. இவையெல்லாம் ஆகுபெயர் அன்றோ எனின் ஆகுபெயராயின் தன் பொருட்கு உரிய பாலான் முடியும், இவை அன்னவன்றி வேறுபட்டு முடிதலிற் குறிப்புமொழியாயின். [நுச]

55. கால முலகம் உயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

உயர்திணைப் பொருட்கண் எஞ்சியது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—காலம் முதலாகச் சொல்லப்பட்டனவும், அத் தன்மைய பிறவுமாகிய பொருட்கண் வரும் சொல்லெல்லாம் உயர்திணை யிடத்தன. ஆண்டுப் பால் பிரிந்திசையா. எ-று.

காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலும் கீழும் நடுவும் ஆகி எல்லாவுயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன். உடம்பு என்பது மனம் புத்தி ஆங்காரமும் பூத தன்மாத்திரையுமாகி வினையினாற் கட்டுப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதனை மூலப்பகுதி எனினும் ஆம். பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய நிலைமையை வரைந்து நிற்கும் பாம் பொருள். வினை என்பது ஊழ். பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகு விளக்குவது. திங்களென்பது நீர்த்திரளாய் உலகிற்கு அருள் செய்வது.

சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்வது.— அச்சொல்லினான் இயன்ற மந்திரம், விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. * இந்நூல் செய்தான் வைதிக முனிவன் ஆதலின் சொல்லென்பது வேதம் என்று கொள்ளப்படும். பிறவும் என்றதனால், வியாழம், வெள்ளி முதலாயின கோண்மீனும், பரணி கார்த்திகை முதலாயின நாண்மீனும், தாரகையும், பூதம், பேய் எனப் பாலுணர நில்லாத தெய்வப் பொருண்மையும் கொள்ளப் படும். உதாரணம் †முன்னர்க்காட்டுதும். [௫௫]

* செய்தான் வைதிக முனிவன். (இ. ஏ.) †௫௭ ஆம் சூத்திரம்.

56. நின்றுங் கிசைத்தல் இவணியல் பின்றே.

மேலதற்கோர் புறநடையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேல் உயர்திணைக்கட் பால் பிரிந்திசையா என்று ஓதப்பட்டன வெல்லாம் அஃறிணை யுணர நின்றனவேனும், அவ்வாறு உயர்திணை யுணரநின்று ஒலித்தல் இவ்விடத்து வழக்கின்று. எ-று. இவ்விடம் என்றது உயர்திணையை. [ருசு]

57. இசைத்தலு முரிய வேறிடத் தான.

மேற்கூறப்பட்ட சொற்கள் பாலுணர வருமாறு உணர்த்துதல் நுதலிற்று. வழுவமைதியும் ஆம்.

வேறிடம் என்பது அஃறிணையை.

இ-ள்:—மேல் பால் பிரிந்திசையா என ஓதப்பட்ட சொற்கள் அஃறிணையாய் இசைத்தலும் உரிய. எ-று. உம்மை எச்சவும்மை ஆகலான் அஃறிணைக்குரிய சொல்லான் அன்றி இருதிணைக்கும் பொதுவாகிய சொல்லானும் இசைத்தலும் உரிய. எ-று.

உ-ம் :—காலம் வந்தது, வரும். உலகு கிடந்தது. உயிர் போயிற்று. உடம்பு விட்டது. தெய்வம் தந்தது. வினை விளைந்தது. பூதம் செறிந்தது. ஞாயிறு எழுந்தது. திங்கள் எழுந்தது. சொல் பயன் தந்தது. வியாழம் எழுந்தது. வெள்ளி பட்டது. பரணி தோன்றிற்று. பூதம் புடைத்தது. பேய் பிடித்தது. பிறவும் அன்ன. [ருஎ]

58. எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே.

இது செப்பின்கட் கிடந்ததோர் குறிப்பு உணர்த்துதல் நுதலிற்று

இ-ள்:—எடுத்துச் சொல்லப்பட்ட சொல் தனக்கு இனமாகிய பொருளைச் சொல்லுதலும் உரித்து. எ-று. உம்மையாற் சொல்லாமலும் உரித்து. எ-று.

தென்சேரிக் கோழி வென்றது என்றவழி, வடசேரிக்கோழி தோற்றது என்னும் பொருளும் காட்டி நின்றது. இது இனம் செப்பியது. அந்தணர்வாழ்க என்றவழி, அரசரும் வணிகரும் கெடுக என்றவாறன்றி, அந்தணரையே குறித்து நின்றது.

இது இனம் செப்பாது வந்தது. இன்னும் இச்சூத்திரத்தின்கண் இனம் செப்பலும் உரித்து என்றதனாலே இனமல்லாதன செப்பலும் உரித்து என்று கொள்ளப்படும். அவ்வாறு வருவன எற்புழிக் கொள்க. சுமந்தான் வீழ்ந்தான் என்றவழி, சுமவாதவன் வீழ்ந்திலன் என்னும் பொருள்படுதலே யன்றிச் சுமக்கப்பட்டதும் வீழ்ந்ததெனச் செப்பியவாறுங் கண்டு கொள்க. பிறவும் அன்ன. [ருஅ]

59. கண்ணுந் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே.

ஒருசார் பாலறிசொற்கட் கிடந்ததோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:-கண்ணும், தோளும், முலையும், அத்தன்மைய பிறவும் ஆகிய பன்மை சுட்டிய சினை உணர வருஞ்சொல், தம் வினைக் கேற்ற எழுத்தான் முற்றுப்பெறுதவழிப் பன்மை புணர்த்தும் மரபில. எ-று

எனவே, பன்மை ஈற்றான் வாராக்கால் ஒருமை-ஈற்றான் வாப்பெறும் என்பதூஉம், அவ்வழி அவ்விரு பொருட்கண்ணும் கிடப்பதொரு பொதுமையைக் குறிக்கும் என்பதூஉங் கொள்ளப்படும். கண் நொந்தது, முலை எழுந்தது, தோள் தசைத்தது என்றவழி, பன்மை புணர்த்திற்றில வாயினும் அச்சாதியொருமையை உணர்த்தியவாறு கண்டு கொள்க. பிறவும் என்றதனால், கை, கால் என்பனவுங் கொள்க. * இருநோக் கிவளுண்கண் உள்ளது (குறள்-௲௯௱௧) என்றவழி நோக்காகிய ஒருமை குறித்து வந்தது. ஒப்பக்கூறல் என்னும் தந்திர உத்தியால், சினைப் பொருளே யன்றி முதற்பொருளும் சாதியொருமை பற்றி வருவனவும் அமைத்துக்கொள்க. உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தான்—உள்ளான் வெகுளி யெனின் (குறள். ௩௰௯) இதனுள் உள்ளியவெல்லாம் எனற்பாலது நினைக்கப்படுதல் ஆகிய ஒருமை குறித்து வந்தது. அஃதேல் கண்ணலல்லன் என்பது

எவ்வாறு வந்ததெனின், கண்ணது நன்மையுடையன் என்னும் பொருள் படவந்தது. கண் நொந்தான் என்பது எவ்வாறு வந்த தெனின், கண் நோவப்பட்டானெனச் செயப்படுபொருள் குறித்து நின்றது. இவை வினையியலுட் காணப்படும். [ருகூ]

முதலாவது கிளவி யாக்கம் முற்றும்.

இவ்வோத்தினுட் சூத்திரமுட்பட்ட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது. (ஐந்நூற்று அறுபது. இ. ஏ)

## இரண்டாவது வேற்றுமை *யியல்.

60. †வேற்றுமை தாமே யேழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே,

இஃது என்ன பெயர்த்தோ எனின், வேற்றுமை யியல் என்னும் பெயர்த்து: பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை யொருகால் ‡வினைமுதலாக்கியும், ஒருகாற் செயப்படு பொருளாக் கியும், ஒருகாற் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறு படுத்தது என்க. மேல் அல்வழித் தொடர் கூறி இனி வேற்றுமைத்தொடர் கூறுகின்றார் ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

இவ்வோத்தினுள், தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வேற்றுமை இனைத்தென வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வேற்றுமை என்பனதாம் ஏழென்று சொல்லுப ஒரு சாரார்; விளி கொள்வதன்கண் நிகழும் விளியோடு எட்டாம். எ-று.

ஏகாரம் தேற்றம். விளி கொள்வது என்றது பெயரை. ஏழென்று சொல்லுவார் விளி வேற்றுமையை எழுவாயுள் அடக்கு வார். [க]

61. அவைதாம், பெயர் ஐ ஒடு கு,
இன் அது கண் விளி யென்னு மீற்ற.

வேற்றுமைச்சொற்கு ஈற்றெழுத்து வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

---

*(ஓத்து. இ. ஏ.) †இதனை இளம்பூரணர் முதலோர் இரண்டு சூத்திரங் களாகக் கொள்வர். ‡ ஒருக்கால். (இ. ஏ.)

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட வேற்றுமைகள் தாம் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி யென்று சொல்லப்பட்ட ஈறுகளையுடைய. எ-று.

விளி யிறுவது விளிக்கண் வரும் எழுத்துக்கள். பிறவும் வேற்றுமை ஈறு உளவாயினும் சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனால் இவை எடுத்து ஓதப்பட்டன. எடுத்தோதாதன, மூன்றுவதன்கண் ஆன் ஆல் ஒடு; ஆறுவதன் கண் அ; ஏழாவதன்கண் இடப் பொருண்மை உணர்த்துஞ் சொற்கள்.

உ-ம்:—சாத்தன், சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்த னின், சாத்தனது, சாத்தன்கண், சாத்தா எனவரும்.

ஐ முதலாயின மற்றொரு பெயர்க்கு ஈறாகிவருதலின், பெயரீறு என்பதும் மற்றொரு பெயர்க்கு ஈறாகி வரல்வேண்டும் எனின், அஃதன்று கருத்து. பெயர்தானே ஈறாகியும், பிற வெழுத்தோடு கூடி ஈறாகியும் வருமென்று கொள்ளப்படும். இவ்வேற்றுமைகளை இவ்வீற்று வேறுபாட்டானே, பெயர் வேற்றுமை, ஐகார வேற் றுமை, ஒடு வேற்றுமை, குவ்வேற்றுமை, இன் வேற்றுமை, அது வேற்றுமை, கண் வேற்றுமை, விளி வேற்றுமை எனவும் குறியிட்டு வழங்குப. அஃது யாண்டுப் பெறுதும் எனின், ஐ யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி (சொல். ௬அ) ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி (சொல். எ0) எ(ன்புழியு)ம் பிறுண்டும் பெறுதும். [உ]

62. அவற்றுள்,
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

மேல், வேற்றுமை எட்டு என்பதும், அவற்றுக்கண் வரும் ஈறும் கூறினார் அல்லது, அவற்றது பெயரும் முறையும் கூறிற் றிலர் அன்றே, அவை கூறுவார், முறைபட, முதல் வேற்றுமை யாவது இது என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள் முதல் வேற்றுமை யாவது பெயர் தோன்றும் நிலை. எ-று.

அஃதேல், பெயர் என அமையும், தோன்றும் நிலை என்ற தனாற் பயன் என்னை யெனின், பெயர் கண்டுழியெல்லாம் வேற்றுமை யென்று கொள்ளற்க என்பது அறிவித்தற்கெனக் கொள்க. அஃது யாதோ எனின், ஆயன் சாத்தன் வந்தான் என்றவழி ஆயன் என்பது சாத்தற்கு அடையாகி நிற்றலானும், வருதற்றொழில் சாத்தனொடு முடிதலானும், இருபெயரும் ஒரு பொருட்கண் வருதலின் இரண்டினையும் வேற்றுமை எனப்படாது (பட்டது. இ. எ.) ஆகலானும் இறுதி நின்றதே வேற்றுமை எனப்படுவது என்று கொள்க. இதனை எழுவாய் வேற்றுமை யடுக்கென்றார் உளரால் எனின், ஆயன் சாத்தனை வெட்டினான் என்றவழி, இறுதி நின்ற பெயர் உருபேற்று இரண்டாம் வேற்றுமையாயிற்று. ஆண்டு உருபு ஏலாத ஆயன் முதல் வேற்றுமை யாதல் வேண்டும், அவ்வாறாக, வெட்டினான் என்பது ஒற்றுமைப்பட்டு முடியாதாகலான் அது பொருளன்று என்க. அஃதற்றாக, பெயரை முதல் வேற்றுமை என்னாது, எட்டு வேற்றுமையுள்ளும் யாதானும் ஒன்றை முதல் வேற்றுமை எனினும் அமையும் எனின், ஒருவன் ஒன்றை ஒன்றனே யியற்றி ஒருவற்குக் கொடுப்ப, அவன் அதனை அவனினின்றும் தனது ஆக்கி ஓரிடத்து வைத்தான் கொற்றா என்றவழி, செய்கின்றான் முதல் வேற்றுமையாகி இம்முறையே கிடத்தலின் அமையாது என்க. அஃதேல், யாற்றினது கரைக்கண் நின்ற மரத்தை அறச்சாலை யியற்றுதற்கு ஊரினின்றும் வந்து மழுவினானே வெட்டினான் சாத்தன் என்றவழி, எழுவாயாகிய பெயர் ஏழாவதுமாய் நின்றதால் எனின், சொல்லுவான் குறிப்பினால் முதல் வேற்றுமை யாயிற்று என்பது (என்பதன்று இ. எ.) கருத்து. யாதானும் ஒரு தொழிலும் செய்வான் உள்வழி அல்லது நிகழாமைபின் அது செய்து முடிக்கும் கருத்தா முன் வைக்கப்பட்டான். அவன் ஒரு பொருளைச் செய்து முடிக்குங்கால் செய்யத்தகுவது இது எனக் குறிக்க வேண்டுதலின் செயப்படுபொருள் இரண்டாவது ஆயிற்று. அவ்வாறு அப்பொருளைச் செய்து முடிக்குங்கால் அதற்காங் கருவி தேடுமாதலின் அக்கருவி மூன்றாவதாயிற்று. அவ்வாறு, செய்து முடித்த பொருளைத் தான் பயன்கோடலேயன்றிப் பிறர்க்குங் கொடுக்கும் ஆதலின் அதனை ஏற்று நிற்பது நான்காவது ஆயிற்று. அவ்வாறு கொடுப்புழி அவன் கையினின்

றும் அப்பொருள் நீங்கி நிற்பது ஐந்தாவது ஆயிற்று. அவ்வாறு நீங்கின பொருளைத் தனதென்று கிழமை செய்தலின் அக்கிழமை ஆறுவது ஆயிற்று. ஈண்டுக் கூறப்பட்ட எல்லாவற்றிற்கும் இடமும் காலமும் பொதுவாகி நிற்றலின், அவை ஏழாவது ஆயின. இவையிற்றோடு ஒத்த இயல்பிற்று அன்றி எதிர்முகம் ஆக்குதற் பொருட்டு ஆகலின், விளி என்பது எல்லாவற்றினும் பிற்கூறப்பட்டது. அஃதேல் ஆறுவதாகிய கிழமை, கொண்டான்கண்ணுதலேயன்றிச் செய்தான்கண் இயையாதோ வெனின் தோற்றுவித்தாற்குக் கிழமை சொல்லாமலும் பெறும், அதனைக்கொண்டாற்கே கிழமை கூறல் வேண்டுவது என்க. [ரு]

63. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

எழுவாய் வேற்றுமைக்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—பொருண்மை சுட்டல் என்பது, முடிக்குஞ்சொல் எழுவாயாகி நின்ற பொருடன்னையே சுட்டி, அதன் தொழில் முதலாயின சுட்டாது நிற்கும் நிலைமை. எ-று.

உ-ம்:—சாத்தன் உளன் எனவரும்.

வியங்கொள வருதலாவது தொழிலைப் பெயர்ப்பொருண்மை கொள்ளுமாறு வரும் ஏவற்சொல். உ-ம்:—சாத்தன் செல்க.

வினைநிலை யுரைத்தலாவது அப் பொருளின் தொழிலின் நிலைமையை உணர்த்தவருஞ் சொல்.

உ-ம்:—சாத்தன் சென்றான்.

வினாவிற் கேற்றலாவது, அப்பெயர்ப் பொருண்மையை வினவுதற்கு ஏற்புடைய சொல்.

உ-ம்:—சாத்தன் யாவன்? சாத்தன் யாண்டையன்? சாத்தன் எத்தன்மையன்? என்பன.

பண்புகொள வருதலாவது, அப்பெயர்ப் பொருண்மை பண்பு கொள்ளுமாறு வருஞ் சொல்.

உ-ம்:—சாத்தன் கரியன், நெடியன் என்பன.

பெயர்கொள வருதலாவது, அப்பெயர்ப் பொருண்மை யுணரம் பிறிதோர் காரணத்தான் வந்து முற்பெயரோடு ஒட்டுப் படாது நிற்பது.

உ-ம்:—சாத்தன் வணிகன், முடவன் என்பன.

என்று அன்றி யனைத்தும் பெயர்ப் பயனிலையே என்பது, என்று சொல்லப்பட்ட அவ்வனைத்தும் பெயர்க்குப் பயனிலையாம். எ-று.

பயனிலை என்பது:—பெயர் வாளாது நிற்குமாயின், செப் பின்கட்பயனின்றும் ஆதலான், அதனை முடிக்கும் சொல் பயனிலை என்றுயிற்று. அஃதேல், இவை யெல்லாம் பெயர்ப் பொருண்மை யைச் சுட்டி நிற்றலின், பொருண்மை சுட்டல் என அடங்கும் எனின், அடங்குமாயினும், பொருண்மை சுட்டல் பொருண்மை மாத்திரத்தைக் குறித்தலானும், வியங்கொள வருதல் அப் பொருண்மை புடை பெயர்தற்கு நிமித்தம் ஆகி வருதலானும், வினைநிலை யுரைத்தல் அப்பொருளின் புடைபெயர்ச்சி யாகலானும், வினவிற் கேற்றல் அவ்வாறன்றி வினவப்படும் நிலைமையதாகி நிற்றலானும், பண்புகொள வருதல் அப்பொருட்கண் உள்ளதோர் குணத்தைக் குறித்து நிற்றலானும், பெயர்கொள வருதல் அப் பொருண்மை முழுதும் உணரப் பிறிதோர் வாய்பாடாக வருத லானும், வகுத்துக் கூறினர் என்க.

சாத்தன் தலைவன் ஆயினன், இரும்பு பொன் ஆயிற்று என் பன எவ்வாறு வந்தன எனின், அவையும் பொருளின் புடை பெயர்ச்சி யாகலானும், ஒன்று ஒன்றாகித் திரிதலாகிய வினையான் வருதலானும், வினைநிலை யுரைத்தலுள் அடங்கும். அஃதேல், தலை வன் பொன் என்னும் பெயரை எழுவாய் என்றுமோ பயனிலை என்றுமோ எனின், இரண்டும் அல்ல: தலைவன் ஆதல், பொன் ஆதல் எனத் திரிபு குறித்து நின்றன, பெயர் குறித்து நின்றன எனப்படா வென்க.

அன்றி யனைத்தும் பெயர் முடிபு என்றது பயனிலை என்றதனல் பயனிலை பெயர்க்கு முன்னிற்றலே யன்றிப் பின்னிற்றலும் ஆம் என்று கொள்க.

உ-ம் :—உளன் சாத்தன்; வந்தான் சாத்தன்; யாண்டையான் சாத்தன்; கரியன் சாத்தன்; வாணிகன் சாத்தன் என வரும்.

ஈண்டுக் காட்டப்பட்ட உதாரணத்துள் வினைபற்றி வருவனவெல்லாம் முற்றுச்சொல் பெயர் கொண்டு முடிந்ததாம், பயனிலை மாறி நின்றன ஆகா வெனின்; முற்றுச்சொல் எனவே முடிந்த சொல் என்பது பெறுதும், அது பின்னும் மற்றொரு சொல்லை அவாவி நிற்கும் என்றல் பொருந்தாமையானும், மற்றுச்சொ ணேக்கா மரபின அனைத்தும்—முற்றிநிற்பது முற்றியன் மொழியே என அகத்தியனர் ஓதுதலானும், மொழிமாறுதல் இலக்கணமாக எச்சவியலுள் ஓதுகின்றமையானும் அது சொல்லறியாதார் உரையென்க. [௪]

**64.** பெயரி ஞகிய தொகையுமா ருளவே
அவ்வு ரிய அப்பா லான.

எய்தியதன் மேற் சிறப்புவிதி வகுத்தலை நுதலிற்று.

இ-ள் :—பெயரான் ஆகிய தொகைச் சொல்லும் உள அவையும் எழுவாயாகிப் பயனிலை கோடற்கு உரிய. எ-று.

ஏற்புழிக்கோடல் என்பதனல் பல பொருள் குறித்த பெயரே கொள்ளப்படும். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

உ-ம் :—யானை குதிரை உள; செல்க; வந்தன; கரிய; யாண்டைய; பல—என வரும்.

அஃதேல், பலபொருள் குறித்து வருதல் வேண்டுமென்றதென்னை? ஒரு பொருட்கண் வரும் பெயரும் தொகை யாகாதோ எனின், தொகையாம் ஆயினும், இறுதிக்கண் நின்ற பெயர் பயனிலைகொண்டும் ஏனையபெயர் பயனிலை ஏலாதும் நிற்கும். இவை இரண்டு பெயர் மேலும் பயனிலை ஒத்துவருதலின் வேறோதப்பட்டன. [ரு]

65 எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்விய னிலையல் செவ்வி தென்ப.

இது எழுவாய் வேற்றுமைக்கு உரியதோர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மூன்றிடத்துப் பெயரும் வெளிப்படத் தோன்றி, பயனிலைப்பட நிற்றல் செவ்விது. எ-று.

எனவே, வெளிப்படத் தோன்றாது பயனிலை கோடல் செவ்விது அன்று என்றவாறும்.

அவையாவன:—(க) 'சோறு உண்ணுயோ சாத்தா' என்றவழி 'உண்பல்' என்பது. செப்பின்கண் 'யான் உண்பல்' என எழுவாயும் பயனிலையுமாக நிற்கற்பாலது 'உண்பல்' என்னும் பயனிலை வெளிப்பட 'யான்' என்னும் பெயர் தோன்றாது நிற்பினும், அப்பொருள்பட நிற்றலின் அத்தொடர் வழு எனப் படாமையால் செவ்விதன்று ஆயிற்று. இது இத் தொடர்ச்சிக்கண் வழுவமைத்தவாறு. இது தன்மை. (உ) 'யான் யாது செய்வல்' என்றானை 'இது செய்' என்பது. இதன் கண் 'நீ' என்னும் பெயர் வெளிப்படாது நின்றது. இது முன்னிலை. (ங) 'அவன் யார்' என்றார்க்குப் 'படைக்கை மறவன்' என்றவழி 'அவன்' என்னும் பெயர் தோன்றாது நின்றது. இது படர்க்கை.

அஃதேல், இவை, பெயரெச்சம் என்று எச்சவியலுட் (ருஎ) கூறுகின்றதனுள் அடங்காதோ வெனின், அடங்குமாயினும், எழுவாயும் பயனிலையும் ஆகி நிற்குங்கால், பெயர் தோன்றாது நிற்பின் வழுவாம் என்பதனால் ஈண்டுக்கூறல் வேண்டும் என்க.

இன்னும் இச் சூத்திரத்திற்குப் பொருள், வெளிப்படத் தோன்றாத பெயர் திரிபு உடைய என்றவாறும்.

அவை யாவன:—இரும்பு பொன் ஆயிற்று; குயவன் குடத்தை வனைந்தான் என்றவழி, எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடைக்கிடைந்த பொன், குடம் என்பன ஆயிற்று என்பதனோடும் வேற்றுமை யுருபினோடும் திரிந்தவாறு கண்டுகொள்க.

அஃதற்றாக, வினைந்தான் என்பது குயவனோடு முடிக, இடைக்கிடந்த குடத்தை யென்பதற்கு முடிபு யாதோ எனின், அது 'குடத்தை வனைந்தான்' என ஒரு சொல் நீர்மைப் பட்டுக் 'குயவன்' என்பதற்குப் பயனிலையாகி நிற்பின் அல்லது வேறு முடிபு உரைக்கப்படா தென்க. ஆயின், எழுவாயும் பயனிலையும் என எல்லாச் சொலலும் அடங்கும்; வேற்றுமை எட்டு எனல் வேண்டா எனின், குயவன் வனைந்தான் என்றவழி, வனையப் பட்டதும், அதற்காம் கருவியும் அதனாற் பயனும், பிறவும் தோன்றுமாதலின், அப்பொருள்களே வேற்றுமையாகி இடைக் கிடக்கின்றன வென்க. இவை யெல்லாம் இடைக்கிடப்பன ஆகலின், செய்கின்றானை முன் வைக்கப்பட்டது. [சா]

**66.** கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப.

பெயர்ச் சொற்கண் உருபுநிற்கும் நிலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—சொல்லப்பட்ட உருபு முறையானே நின்ற நிலையைத் திரியாது பெயர்க்கு ஈறாகும் இயல்பினையுடைய. எ-று.

முறையானே என்றது அடைவே ஒன்றொன்றாக என்றவாறு. நிலையைத்திரியாது என்றது உருபேற்று நிற்கும் பெயரைத்திரியாது அதன்கண் இயல்பாகி நிற்கும் என்றவாறு. இச் சூத்திரங்கூற வேண்டா: மேலைச்சூத்திரத்து பெயர் ஐ ஒடு கு இன் அது கண்விளி யென்னும் ஈற்ற என்பதனாற் பெறுதும் எனில், அது கருதியன்று கூறியது: வடமொழிக்கண் எழுவாயாகிய பெயர் ஈறுகெட்டு உருபேற்கும், அவ்வாறன்றித் தமிழ்மொழி ஈறுதிரியாது எழுவாயாகிப் பெயரின் மேலே உருபுநிற்கும் என்பது அறிவித்தற்கெனக் கொள்க. உதாரணம் மேற்காட்டப் பட்டன. வருகின்ற சூத்திரத்தின் கண்ணும் விளங்கும். [எ]

**67.** பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே.

மேற்பல சூத்திரத்தானும் பெயர் என்று எடுத்தோதிப்போந்தார் அது இத்தன்மையதென அதன் இலக்கணங்கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—பெயர்நிலைமையுடைய சொல் காலம் தோன்ற: தொழில் நிலையோடு ஒட்டி நிற்கும் பெயரும் ஒருவகையல்லன காலம் தோன்ற. எ-று.

காலம் தோன்ற என்றது மத்திம தீபமாகி நின்றது. உம்மை இறந்தது தழீஇயிற்று. பெயர்க்கு இலக்கணம் பயனிலை கோடலும், உருபு ஏற்றலும், காலந்தோன்றாமையும் ஆம். அவற்றுள், பயனிலை கோடலும், உருபேற்றலும் முற்பட்ட சூத்திரத்தாற் கூறலின் காலந்தோன்றாமை கூறப்பட்டது.

பெயராவன—தனிப்பெயர், ஒட்டுப்பெயரென இருவகைப்படும். அவற்றுள் தனிப்பெயர்—பொருள்மேல் வருவனவும், தொழில் மேல் வருவனவும் என இருவகைப்படும், ஒட்டுப்பெயர் தெரிநிலைவினை யொட்டுப் பெயரும், குறிப்புவினை யொட்டுப் பெயரும் என இருவகைப்படும். அவற்றுள் பொருள் மேல் வரும் தனிப்பெயர்-சாத்தன், கொற்றன், யானை, குதிரை, மா, தெங்கு என்பன. தொழில் மேல் வரும் தனிப்பெயர்-உண்டல், தின்றல், கொடுத்தல், எடுத்தல் என்பன. தெரிநிலைவினை யொட்டுப் பெயராவன—தொழிற்பெயரோடு ஒட்டி ஒருபொருட்குப் பெயராகி வருவன. அவை—உண்டான், தின்றான், கொடுத்தான், எடுத்தான் என்பன. இவை வினைக்கருத்துள்வழி வினைச் சொல்லாம், பெயர்க் கருத்துள்வழி பெயராம். குறிப்புவினை யொட்டுப் பெயராவன—மற்றொருபெயரோடு ஒட்டியொரு பொருட்குப் பெயராகி வருவன. அவை குழலன், கோட்டன், கச்சினன், கழலினன் என்பன. இவையும் வினைக்கருத்துள்வழி வினைக் குறிப்பாம், பெயர்க்கருத்துள்வழி பெயராம்.

இவற்றுள் தெரிநிலை வினைப்பெயரல்லாதன காலந்தோன்ற. இப்பெயர்கள்—சாத்தனை, உண்டலை, உண்டானை, குழலனை என உருபேற்கும். [அ]

**68.** இரண்டா குவதே,
ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலிற் றோன்று மதுவே.

நிறுத்த முறையானே இரண்டாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இரண்டாம் வேற்றுமை யாவது ஐ எனக்குறித்த வேற்றுமைச்சொல். அஃதியாதானும் ஒரு பெயர் வரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய அவ்விரண்டு முதற்கண்ணும் தோன்றும். எ-று.

ஐகார வேற்றுமை இரண்டாவதென்னும் குறியும் பெற்றது. வினை யென்பது செயல். வினைக்குறிப்பென்பது அவ்வினையினாற் குறிக்கப்பட்ட பொருள். அஃதாவது செயப்படுபொருள். முதல் என்பதனை வடநூலாசிரியர் காரகம் என்ப. அஃது தொழிலையுண்டாக்குவது. அது பல்வகைத்து—செய்வானும், செயலும், செயப்படுபொருளும், கருவியும், கொள்வானும், பயனும், காலமும், இடமும் என. * வினையே செய்வது செயப்படு பொருளே, நிலனே காலங் கருவியென்றா இன்னதற் கிதுபய னாக வென்னும் அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ, ஆயெட் டென்ப தொழின்முத னிலையே. என எட்டென்றாராகலின், அவற்றுள் இது செயப்படு பொருள்மேலும் செயல்மேலும் வரும். குடத்தை வனைந்தான் என்பது செயப்படுபொருள் மேல்வந்தது. வனைதலைச் செய்தான் என்பது செயன்மேல்வந்தது. தொழின் முதனிலை யெட்டென்றமையால் காரகப் பொருண்மேல் வரும் வேற்றுமை யெல்லாம் வினையான் முடியும் என்றுகொள்க. [கூ]

69\. காப்பி னொப்பி னூர்தியி னிழையின்
ஒப்பிற் புகழிற் பழியி னென்றா
பெறலி னிழவிற் காதலின் வெகுளியிற்
செறலி னுவத்தலிற் கற்பி னென்றா [தலின்
அறுத்தலிற் குறைத்தலிற் றொகுத்தலிற் பிரித்
நிறுத்தலி னளவி னெண்ணி னென்றா
ஆக்கலிற் சார்தலிற் செலவிற் கன்றலின்
நோக்கலி னஞ்சலிற் சிதைப்பி னென்றா
அன்ன பிறவு மம்முதற் பொருள
என்ன கிளவியு மதன்பால வென்மனார்.

* வேற்றுமை மயங்கியல்.—உஅ.

இரண்டாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—காப்பு முதலாகச் சிதைப்பீறாக ஓதப்பட்டன வற்றினும், அத்தன்மைய பிறவினும் வருஞ் சொல்லும், செயப்படு பொருளவாகி வரும் எல்லாச்சொல்லும் இரண்டாம் வேற்றுமைப் பாலன, எ-று.

காப்பு என்பது காவற்றொழிலையும், காக்கப்படும் பொருளையும் உணர்த்தும். ஏனைய தொழிலும் பொருளும் உணர்த்துமாறு அறிந்து கொள்க. 'அன்ன பிறவினும்' என 'இன்' செய்யுள் விகாரத்தால் தொக்கது. இவை யெல்லாம் வகுத்துக் கூறவேண்டா: வினைக்குறிப்பென அடங்கும் எனின், அடங்கும் எனினும், செயப்படுபொருள் காரியகாரணம் தோன்றி நிற்பனவும் தோன்றாது நிற்பனவும் என இருவகைப்படும் எனற்கு வேறு ஓதினர் என்க. ஆடையை நெய்தான், குடத்தை வனைந்தான். இவை காரணகாரியம் தோன்ற நின்றன. ஊரைக் காத்தான் என்பது தோன்றாது நின்றது. ஈண்டு ஓதினவெல்லாம் தொழிற் சொல் ஆதலின், இவற்றை முடிக்குஞ் சொல்லும் இவையடியாகப் பிறந்த சொல்லென்க. ஊரைக்காக்கும் என்பது காக்கப்படும் பொருள். காவலைக் காக்கும் என்பது காவற்றொழில் மேல் வந்தது. தந்தையை ஒக்கும். தேரை ஊரும். இழை என்பது அணிகலன். ஆடகத்தைப் பூணும். அன்றியும் நூலையிழைக்கும். கிளியை ஓப்பும். கொடுப்பாரைப் புகழும். கொடாதாரைப் பழிக்கும். புதல்வனைப் பெறும். பொருளை இழக்கும். அகத்தைக் காதலிக்கும். பகைவரை வெகுளும். செற்றாரைச் செறும். நட்டாரை உவக்கும். நூலைக் கற்கும். வினையை அறுக்கும். ஆசையைக் குறைக்கும். பலவற்றைத் தொகுக்கும். சிலவற்றைப் பிரிக்கும். பொன்னை நிறுக்கும். அரிசியை அளக்கும். அடைக்காயை எண்ணும். அறத்தை யாக்கும். தூணைச் சாரும். நெறியைச் செல்லும். சூதினைக் கன்றும். கணையை நோக்கும். * கள்வரை யஞ்சும். அறிவைச் சிதைக்கும்.

அன்ன பிறவும் என்றதனால், இசையைப் பாடும். பகைவரைப் பணிக்கும் எனவும், குழையையுடையன் வலியை

* கள்வர்க் கஞ்சும் என்று பிரதியில் காணலுறுகின்றது.

யுடையன், கல்வியையுடையன். காவலையுடையன் என ஆறும் வேற்றுமைப் பொருள் மொழிமாற்றாகி வருவனவும் கொள்க. பிறவும் அன்ன. அம்முதற் பொருள என்ன கிளவியும் என்றத னால், செயப்(படு)பொருளே யன்றி அதற்குக் காரணமாகிய பொருள் மேலும் பொருளினது உறுப்பின்மேலும் பொருண் வருவன கொள்க. மண்ணை வனைந்தான், நூலைநெய்தான். இவை காரணம். விளிம்பை நெய்தான்—உறுப்பு. சுவரை யெழுதினான்— இடம். பிறவும் அன்ன. [ய]

70. மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே.

மூன்றும் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். மூன்றும் வேற்றுமையாவது ஒடுவெனப்பெயர் பெற்ற வேற்றுமைச்சொல். அது வினைமுதலுங் கருவியுமாகி அவ்விரண்டு காரகத்தையும் உடைத்து. எ-று.

ஈண்டு, முதல் என்பது காரகம். கருத்தாவின் கண்ணும், கருவியின் கண்ணும் வரும். எ-று. கொடியொடு தொடக்குண் டான். இது வினை முதல். "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" இது கருவி. [கக]

71. அதனி னியறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனி னாதல்
அதனிற் கோட லதனொடு மயங்கல்
அதனோ டியைந்த வொருவினைக் கிளவி
அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த வொப்ப லொப்புரை
இன்னா னேது வீங்கென வரூஉம்
அன்ன பிறவு மதன்பால வென்மனார்.

இதுவும் மூன்றும் வேற்றுமைக்குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். அதனினியறன் முதலாக ஒப்பல் ஒப்புரை ஈறாக எடுத்தோதப்பட்ட சொல்லினான் வரும் பொருண்மையும், இன் ஆன், ஏது என இவ்விடத்துவரும் அத்தன்மைய பிற சொற்களும் மூன்றாம் வேற்றுமைப்பாலன. எ-று.

அதனின் இயறலாவது:—இயலப்படுவதற்குக் காரணமாகிய பொருண்மேல் உதாரணவாய்பாட்டான் வந்தது. மண்ணினானியன்ற குடம், அரிசியானாகிய சோறு. அதற்றகு கிளவியாவது:-அதனாற் றகுதியையுடைத்தாயிற் றென்னும் பொருண்மைதோன்ற வருவது. கண்ணான் நல்லன், குணத்தான் நல்லன், நிறத்தான் நல்லன் என உறுப்பும், பண்பும்பற்றி வருவன. அதன்வினைப்படுதலாவது:—ஒன்றன் றொழின்மேல் வருதல். புலிபாய்தலாற் பட்டான், ஒட்டாற்கடித்து குதிரை என்பன. அதனானாதலாவது:-ஆக்கத்திற்கு ஏதுவாகிவருவது. வாணிகத்தினாயினான், எருப்பெய்து இளங்களை கட்டமையாற் பைங்கூழ் நல்லவாயின. அதனிற் கோடலாவது:—ஒன்றனானே ஒன்றைக்கோடல். காணத்தாற் கொண்ட வரிசி. அதனொடு மயங்கலாவது:—ஒன்றோடொன்று விரவிவருதல். பாலொடு கலந்த நீர். அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவியாவது:—ஒருவினையான் இரு பொருள் முடிவது. படையொடுவந்தான் அரசன். அதனொடு இயைந்த வேறு வினைக்கிளவியாவது:—வேறுவினையுடையன இரண்டு சொல் ஒரு வினையொடு தொடர்வது. காவோ டறக்குளந்தொட்டான். அதனோடு இயைந்த ஒப்பலொப்புரையாவது:—உவமையின்றி யிதுவும் அதுவும் ஒக்குமென அளவினாலும் நிறையினாலும் எண்ணினாலும் வருவன. இதனோடு ஒக்கும் இது, இக்கூற்றோடொக்கும் இக்கூறு. இன்னென்பது இன் என்னும் சொல். ஆனென்பது ஆன் என்னும் சொல். ஏதுவென்பது ஏது என்னும் சொல். அன்ன பிறவாவன:—காரணம், நிமித்தம், துணை, மாறு என்பன. இவையும் மூன்றாம் வேற்றுமைப் பொருளுணர்த்து முருபுகளும் பொருளுணர்த்தும் சொற்களுமாம். எ-று. புகைபுண்மையின் நெருப்புண்மையறிக. புகைபுண்மையான் நெருப்புண்மையறிக, புகையேதுவாக நெருப்புண்மையறிக, புகை காரணமாக நெருப்புண்மையறிக, புகை நிமித்தமாக நெருப்புண்மையறிக, சுக்கிரீபன் துணையாக இலங்கை கொண்டான். "அனையை யாகன் மாறே மன்னுயி ரெல்லாம் நின்னஞ் சும்மே." (புறம். ௨௰) இன்னும்,

அன்னபிறவு மென்றதனான், ஒடு ஆல் எனவரும் உருபுங் கொள்க. "என்னோ டிருப்பினும் இருக்க இளங்கொடி-தன்னோ டேடுப்பினும் தகைக்குந ரில்லென்று" (மணி-சிறைவிடுகாதை. ௩௫-௬.) "கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடுங் கமழ்கின்ற காந்தளிதழா—லணிகொண்ட" (சூளா. அரசியல். ௧௧௯) என்புழி ஒடு வந்தது. ஆன்வந்துழி யெல்லாம் ஆல் வருதல் வழக்கினிற் கண்டு கொள்க. [௧௨]

72\. நான்கா குவதே,
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினுங் கொள்ளு மதுவே.

நான்காம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். நான்காம் வேற்றுமையாவது கு எனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல். அது யாதானுமொரு பொருளாயினும் ஏற்று நிற்கும் நிலைமைத்து. எ-று. எனவே, ஏற்கும் பொருண்மைக்கண்வரும். எ-று.

அந்தணர்க்குக் கொடுத்தான் எனவரும். [௧௩]

73\. அதற்குவினை யுடைமையி னதற்குடம் படுதலின்
அதற்குப் படுபொருளி னதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையி னதற்பொருட் டாகலி
நட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென் [ன்
றப்பொருட் கிளவியு மதன்பால வென்மனார்.

இதுவும் நான்காம் வேற்றுமைக்கண் வரும் பொருள் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். அதற்கு வினையுடைமை முதலாகச் சிறப்பீறாகச் சொல்லப்பட்ட வற்றின்கண் அப்பொருள்பட வருஞ்சொல்லும், உம்மையால் அந்நிகரன பிறபொருட்கண்வருஞ் சொல்லும் நான்காம் வேற்றுமைப்பாலன. எ-று. உம்மை எச்சவும்மை.

அதற்கு வினையுடைமையின் என்பது மேற்சொல்லப்பட்ட கொடைப்பொருண்மையே யன்றி உருபேற்கும் பொருட்கு வினையாதலுடைமை கூறும் வழியும் நான்காம் வேற்றுமைப் பாலனவாம். எ-று. உ-ம். அவர்க்குப் போக்குண்டு, அவர்க்கு வரவுண்டு, இவ்வ வினை. கரும்பிற்குழுதான் என்பதுமது. அதற்கு

உடம்படுதலென்பது உடம்பாடு கூறும்வழியும் நான்காவதாம். எ-று. உ-ம். கொலைக்குடம்பட்டான். அதற்குப் படுபொருளாவது—உருபேற்கும் பொருட்கு இயல்பு கூறும்வழியும் நான்காவதாம். எ-று. உ-ம். இதற்கு நிறங்கருமை; இதற்கு வடிவு வட்டம்; இதற்கு அளவு நெடுமை; இதற்குச் சுவை கார்ப்பு; இச்சொற்குப் பொருள் இது; இவ்வாடைக்கு விலை இது எனவும், இவ்வாறு வருவனவும் கொள்க. இன்னும் அதற்குப் படுபொருள் என்றதனன், உடைப்பொருளும் அவ்விடத்திற்கு ஆம்பொருளும், காலத்திற்கு ஆம் பொருளுமாகி வருவனவுங் கொள்க. அவற்குச் சோறுண்டு, ஈழத்திற் கேற்றின பண்டம், காலத்திற்கு வைத்த விதை எனவரும். அதுவாகுகிளவி—ஒன்றொன்றாகத் திரிந்து வரும்பொருட்கு வருவது. கடிசூத்திரத்துக்குப் பொன், சும்மாயத்திற்குப்பயறு. அதற்கியாப்புடைமையாவது—உருபேற்கும் பொருட்கு வலியாதலுடைமை. யாக்கையை யாப்புடைத்தாப் பேற்றவர் தாம்பெற்ற, யாக்கை (நாலடி. உஅ.) என்றவழி வலி எனப்பொருளாயிற்று. உ-ம். போர்க்கு வலி குதிரை; நினக்கு வலி வாள் எனவரும். அதற்பொருட் டாகலின் என்பது—ஒரு பொருட்காக வென்பது படவருதல். உ-ம். கூழிற்குக் குற்றேவல் செய்யும், கூலிக்கொலிக்கும். நட்பு-அவற்குத் துணை, அவற்கு நட்பு எனவரும். பகை-அவற்குப்பகை. காதல்-மகற்குக் காதலன். சிறப்பென்பது-இன்றியமையாமை பற்றிவரும். உ-ம். யாமுமக்குச் சிறந்தன மாத லறிந்தனிராயின் எனவும், "நிலத்திற் கணியென்ப நெல்லுங் கரும்பும்" (நான்மணி. கூ.) எனவும் வரும். உம்மையாற் கொள்ளப்படுவன—இவ்வூர்க் கவ்வூர் காதம், நாளைக்கு வரும், இவர்க்குத்தரும் இது, இவர்க்கு நன்மை பயக்கும், அவற்குப் பிறந்த மகன். பிறவும் இந்நிகரன வெல்லாம் கொள்க. [கசு]

74\. ஐந்தா குவதே,
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னு மதுவே.

ஐந்தாம் வேற்றுமை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—ஐந்தாம் வேற்றுமையாவது இன் என்று பெயர் கொடுக் கோதப்பட்ட வேற்றுமைச்சொல். அஃது இப்பொரு

ளின் இத்தன்மைத்து இப்பொருள் என உணர்த்தும். எ. று. எனவே இவ்வாய்பாட்டான் வரும் பொருண்மை யெல்லாம் ஐந்தாவதாம். எ-று.

அவையாவன :—நீங்க நிற்பதூஉம், பொருவும், ஏதுவும் என்(பன.) அவற்றுள் நீங்க நிற்பது பொருள் நீங்கி நிற்பதூஉம். இடம் நீங்கி நிற்பதூஉம் என இருவகைப்படும். பொருவும் மிகுதலும், குறைதலும், ஒத்தலும் என மூன்று வகைப்படும். அவற்றுள் பொருவும், ஏதுவும் வருகின்ற சூத்திரத்தால் கூறுத லானும், பல்பொருட் கேற்பின் நல்லது கோடல் என்பதனானும் இச்சூத்திரம் நீங்க நிற்பது குறித்ததென்பது கொள்ளப்படும்.

உ-ம். வரையினின்றும் வீழாநின்றது அருவி. [௭௪]

75. வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை யென்று
முதுமை யிளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்று
இன்மை யுடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்
றன்ன பிறவும் அதன்பால என்மனார்.

இதுவும்

ஐந்தாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:-வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாக ஓதப்பட்டன வும், அத்தன்மைய பிறவும் ஐந்தாம் வேற்றுமைப் பாலன. எ-று.

யாதானும் ஒன்றைப் பொருவிக் கூறும்வழி, பண்பினானும், தொழிலினானும், பொருளினானும் கூறல்வேண்டுதலின், அவை யெல்லாம் எடுத்தோதப்பட்டன. உ-ம். இதனிற்கரிது. இத னின் வட்டம், இதனின் நெடிது, இதனிற் கைக்கும், இதனிற் றண்ணிது, இதனின் வெய்து, இதனின் அஞ்சும், இதனின்

னன்று, இதனிற்றீது, இதனிற்சிறிது, இதனிற்பெரிது, இதனின் வலிது, இதனின் மெலிது, இதனிற்கடிது, இதனின் முதிது, இதனின் இளைது, இதனிற்சிறந்தது, இதனின் இழிந்தது, இதனிற் புதிது, இதனிற் பழைது, இதனின் ஆக்கம்.* இவனின் இலன், இவனின் உடையன், இதனின் நாறும், இதனிற்றீரும், இவரிற் பலர் இவர், இவற்றிற் சில ஏறும், இதனிற் பற்றுவிடும். அன்ன பிறவும் என்றதனன், இவனிற் காக்கும், இவனிற் பண்ணும், இவனிற்பாடும் எனவருவன கொள்க. இவற்றுட் பெரிதென்பது மிகுதி குறித்து நின்றது. சிறிதென்பது குறைவு குறித்து நின்றது. ஏனையவும் இவ்வாறு நோக்கிக்கொள்க. இவையெல்லாம் ஒப்புக்குறித்துழி உவமையாம். ஏதுக்குறித்துழிக் கரிதாயிற்று, வட்டமாயிற்று என உதாரணங் காட்ட உருபேற்ற பொருளெல்லாம் ஏதுவாம். [கரு]

**76.** ஆறு குவதே,
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனதிதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

ஆறும் வேற்றுமை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—ஆறும் வேற்றுமையாவது அதுவெனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல். அது தன்னினும் பிறிதினும் இதனது இது என வரும் பெற்றிப்பட்ட பொருட் கிழமையை யுடைத்து. எ-று.

தன் என்றது உடையானை. பிறிதென்றது உடைப்பொருளை. ஈண்டுக் கிளவி என்பது பொருள். கிளக்கப்படுவது கிளவியாயிற்று. கிழமை என்பது உரிமை. தன்னோடும் பொருளோடும் உள்ள உரிமைபுணரவரும் ஆறுவதென்றவாறு. அது வென்பது ஒருமை புணர்த்தும் சொல்லாகலின், வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனல், பன்மைபுணர்த்தும் அகர உருபுங் கொள்க. உ-ம்:—சாத்தனது குழை, சாத்தனகுழை

* இதனின் ஆம்—இரண்டாம் ஏடு.

கள். உலகத்துக்குழையுடையாரும் பலர். குழையும் பல. ஆயி னும், இக்குழை இவனதென்னும் உரிமை தோன்ற வந்தவாறு கண்டுகொள்க. [சன]

77. இயற்கையி னுடைமையின் முறைமையிற்— கிழமையிற்
செயற்கையின் முதுமையின் வினையின் என்று
கருவியிற் றுணையிற் கலத்தின் முதலின்
ஒருவழி யுறுப்பிற் குழுவி னென்று
தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சி
திரிந்துவேறு படூஉம் பிறவு மன்ன [யிற்
கூறிய மருங்கிற் றோன்றுங் கிளவி
ஆறன் பால வென்மனார் புலவர்.

இது
ஆறும் வேற்றுமைப் பொருள் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—இயற்கை முதலாக வாழ்ச்சி யீறாக எண்ணப்பட்ட கிழமையினும், திரிந்து வேறுபடூஉம் பிறவற்றினும், அத்தன்மைய வாகி மேற்சொல்லப்பட்ட இதனது இது எனும் பொருட் டோன்றும் சொல்லெல்லாம் ஆறும் வேற்றுமைப் பாலன. எ-று.

மேலைச்சூத்திரத்தான், உடையானும் உடைப்பொருளுமாகிய கிழமை எடுத்தோதினார் இச்சூத்திரத்தான் அதனின் வேறு பட்டு வருவன எடுத்தோதினார் என்று கொள்க. இயற்கை என் பது இயல்பாகிய கிழமை. அஃதாவது பொருட்கு இயல்பாகிய பண்பு. நிலத்தது வலி. நீரது தண்மை. தீயது வெம்மை என வரும். உடைமை என்பது உடைப்பொருளின் பாகுபாடு உணர நில்லாது பொதுமை உணர நிற்பது. அப்பொது கிழமையினும் வரும் என்றவாறு. சாத்தனது உடைமை எனவரும். சாத் தனது குழை என்றதனோடு இதனிடை வேற்றுமை என்னை யெனின், சாத்தனதுடைமை குழை எனவும் வந்து, குறிப்பு வினைப்பொருளொடு முடிதலின் வேறாகப்பட்டது. வினைக் குறிப்பு ஓதுகின்றவழி, அதுச் சொல் வேற்றுமை யுடைமை யானும் * என்று ஓதினார் ஆகலின், ஈண்டுக்குழை என நிற்றலே

* வினையியல்—கசு.

யன்றிக் குழையை யுடையன் எனவும் வருதலின் ஈண்டு வேறு படுத்து ஓதல்வேண்டுமென்று உணர்க. முறைமை என்பது உடையானும் உடைப்பொருளுமன்றி, முறைமையாகிய கிழமை யான் வருவது. ஆவினது கன்று, மறியது தாய். கிழமை என்பது உரிமை. அஃதாவது இவற்கு இவள் உரியள் என்னும் பொருள்பட வருவது. முறைமை சாரவைத்ததனால் கிழத்திய ரென்று கொள்ளப்படும். அரசனது உரிமை. செயற்கையாவது, செயற்கையான் வருவது. சாத்தனது கல்வி, சாத்தனது கோலம். முதுமை என்பது பரிணாமம் குறித்து நிற்கும். சாத்தனது முதுமை. வந்தது கண்டு வாராதது முடித்தல் * என்பதனால், இளமையுங் கொள்க. சாத்தனது இளமை. வினையென்பது தொழில் உணர வருவது. சாத்தனது வரவு. கருவி என்பது உடைமை குறியாது இதற்கிது கருவி யென்னும் பொருள்பட வருவது. யானையது கோட்டி, வனைகலத்தது திகிரி. துணை யென்பது நட்பின் மேல்வரும். சாத்தனது துணை இது. வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால் பகையும் கொள்க. சாத்தனது பகை. மாறுபாடும் இனம் ஆகுமோ எனின், மாறுபடும் அப்பொருள் குறித்தலின் இனமாம். கலம் என்பது (?)பாலதுகலம், நிலத்தது விலைக்கலம். முதலென்பது சினையோடு அடுத்து முதலுணர வருவது. கொடியது முதல். ஒருவழியுறுப்பு என்பது முதலோடு சினையடுத்து வருவது. சண்பகத்துக் கோடு. குழா மென்பது பலபொருட்டொகுதி. படையது குழாம், நெல்லது குப்பை. தெரிந்து மொழிச்செய்தியாவது தெரிந்த மொழியினது செயல் கூறல். பாட்டது கருத்து, பாட்டது பொருள். நிலை என்பது அவரவர் நின்ற நிலைமை குறித்து வருவது. சாத்தனது இல்வாழ்க்கை, சாத்தனது தவம். வாழ்ச்சி என்பது இடம் பற்றிவரும். யானையதுகாடு, காட்டது யானை. திரிந்து வேறு படுவன, எண்ணது சாந்து, கோட்டது நூறு. கூறிய மருங்கிற் றோன்றுவன, சாத்தனது தோப்பு, பொருளது கேடு, ஆவினது பால், கரும்பினது சாறு என இங்ஙிகான வெல்லாம் கொள்க. இன்னுங் கூறிய மருங்கிற்றோன்றுங் கிளவி என்பதனால், உருபின் பொருள்படவரும் உடைய வென்னுஞ் சொல்லுங் கொள்க. [கஅ]

---

* தன்னினமுடித்தல். இரண்டாவதேடு.

78. ஏழா குவதே,
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் யிடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பிற் றோன்றும் அதுவே.

ஏழாம் வேற்றுமை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஏழாம் வேற்றுமையாவது கண் எனப் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல். அது வினை நிகழுமிடத்து நிலத்திலும், காலத்திலும், அவ்விருவகைக் குறிப்பினும் தோன்றும். எ-று.

எனவே, தொழில் நிகழாதவழி, நிலமும், காலமும் ஏழாம் வேற்றுமை யாகா என்றவாறும்.

உ-ம் :—அரங்கின்கண் வனைந்தான். யாடத்தின் கண் இருந்தான், இவை நிலம். காலைக்கண் வனைந்தான். மாலைக்கண் வனைந்தான். இவை காலம். போரின்கண் வந்தான் என்றவழி இடங் குறித்தான் ஆயின், போர் அட நின்றவிடத்து வந்தான் எனவும், காலங் குறித்தானாயின் பொராநின்ற (கால)த்து வந்தான் எனவும், நிலமும் காலமும் குறித்துக் கொள்ளக்கிடந்தது. ஆலின் கீழ்க் கிடந்தது ஆ. ஆலின்கண் இருந்தது குரங்கு என்றவழி கீழ்க் கிடந்தது ஆ: மேலிருந்தது குரங்கு. இவ்வாறுவரும் இட வேறுபாடுங் குறித்துக்கொள்ளப்படும். பிறவும் அன்ன. *இவை பொருண்மைக்கண் உருபு புலப்படாமல் இட வேறுபாடு காட்டுவன. சில கண்டவற்றை எடுத்தோதுகின்றார் வருகின்ற சூத்திரத்தான். [௧௧]

79. கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன் பால என்மனார்.

* இவை எனச் சுட்டப்படுவனவாய மேற்கோள் விடுபட்டிருத்தல் வேண்டும் போலும்.

இது ஏழாம் வேற்றுமைப் பொருள் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—கண்முதலாக இடம் ஈறாக ஓதப்பட்டனவும், அத் தன்மைய பிறவும் ஏழாம் வேற்றுமைப் பால. எ-று.

இவையெல்லாம் பெயரைச் சார்ந்து தனித்தனி வரில் பெயராகி உருபேற்கும். பெயரைச் சாராது இடமும் காலமும் ஆகிய பொதுமை உணரவரினும், உருபு மாத்திரமாகி நிற்கும். இடம் வேறுபாடு உணரவரின் உருபு புலப்படாது பொருள் உணரவரும்.

அகத்தை, அகத்தொடு, புறத்தை, புறத்தொடு—என்ப(ன) தனித்து உருபேற்றன. அரங்கினுள் அகழ்ந்தான். மரத்துழை இருந்தான் என்பன உருபாகி நின்றன. இனி இடம் வேறு பாடு காட்டுமாறு :—கண் என்பது இடம். அரசர்கட் சென்றான் என்பது நெறிக்கட் சென்றான் என்றாற்போல,................. ......................அரசன் ஆதாரம் ஆதலின்றி அவனிடத் துச் சென்றான் என உருபு புலப்படாமல் இடம் என்பதோர் பொருள் உணர்த்தியவாறு கண்டுகொள்க. கால்—ஊர்க்காலி வந்த பொதும்பர். ஊரை..................ஆகிய பொருள் மேல் வந்தது. புறம்—சுவர்ப்புறத்துப் பாவை. பாவைக்கு ஆதாரமா கின்றது சுவராயினும் அச்சுவரகத்துப் பாவை யின்மையின் புறமென ஒரு பொருள் தோன்ற நின்றது. அகம்-எயிலகத்துப் புக்கான். புறம் உண்டாகலின் அகம் என ஒருபொருள் தோன்ற நின்றது. உள்-சிலையுட் பொருள். சிலைப்புறத்துப் பொருள் இன்மையின் உள் என ஒரு பொருள் தோன்றிநின்றது. உழை அரசனுழை இருந்தான். அரசன் அருகென ஒரு பொருள் தோன்றி நின்றது. கீழ்-மாடத்தின் கீழ் இருந்தான்: மேல் அன்மை காட்டிற்று. மேல் மாடத்தின் மேலிருந்தான்: கீழ் அன்மை காட்டிற்று. பின்-அரசன் பின் இருந்தான்: முன் அன்மை காட்டிற்று. சார்-காட்டுச்சார் ஓடும் குறுமுயால்: காட்டைச்சார்ந்த இடம் என்பது தோன்றிற்று. அயல்-மனை அயல் இருந்தான்: மனை அல்லாத பிறஇடம் தோன்ற வந்தது. புடை என்பது பக்கம். எயிற்புடை நின்றான். எயிலின் கண் ஒருபக்கம் என்பது

தோன்றிற்று. தேவகை என்பது திசைக்கூறு. அரங்கின் வடக்கிருந்தான், தெற்கிருந்தான் என்ற வழி, வடக்கு தெற்கென ஒரு பொருள் தோன்றி நின்றது. முன்-அரசன் முன் இருந்தான்: பின் அன்மை காட்டிற்று. இடை, கடை, தலை என்பன கலத்தின் இடை நின்றான்; கலத்தின் கடை நின்றான்; கலத்தின் தலைநின்றான் என மரக்கலத்தின் இட வேறுபாடு காட்டின. வலம், இடம் என்பன அரசன் வலத்திருந்தான் அமைச்சன், அரசன் இடத்திருந்தான் சேனாபதி என வலம் இடம் எனச் சில பொருள் தோன்றி நின்றன.

அன்ன பிறவும் என்றதனால், இல், வயின், வழி, மாட்டு, தேம், மருங்கு, பால்......ய முதல் என வருவன வெல்லாம் கூறிய நெறியினால் வேறுபாடு உணர்த்துவனவும், உருபுமாத்திரமாகி நிற்பனவும், பெயராகி நிற்பனவும் அறிந்துகொள்க. [உ0]

**80.** வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றின் இயலும் தொகைவயிற் பிரிந்து
பல்லாறாகப் பொருள் புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப.

அறுவகை வேற்றுமைக்கும் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வேற்றுமைக்கு உரிய பொருளை விரியக் கூறுங்கால், முதற்பெயர் இறுதிக்கண் இயலும் தொகைச் சொல்லின் கண், தொகையாம் தன்மையிற் பிரிந்து, பலநெறியாகப் பொருளைப் புணர்ந்து ஒலிக்கும் எல்லாச் சொல்லும் உரிய என்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

தொகுத்தல் என்பது செறிதல். முதற் பெயரோடு செறிவது தொகை என்று பெயர் ஆயிற்று.

இவையாவன:—படைக்கை, குழைக்காது, தாய்மூவர், குதிரைத்தேர், கருப்புவேலி, வரையருவி, பாண்டியநாடு, குன்றக்கூகை என்பன.

இவற்றுள் இறுதிப் பெயர் முதற்பெயரோடு ஒன்றி நிற்றலின் தொகை என்றார். இவை விரிய நின்ற காலத்து, இவற்றைப்

புணர்ந்து ஒலிக்கும் சொல்லாவன :—படைக்கை என்றவழி படையைப் பிடித்தகை, எடுத்த கை, ஏந்திய கை எனவும்; குழைக்காது என்றவழி குழையை யுடைய காது, செறித்த காது, இட்ட காது, அணிந்த காது எனவும்; தாய் மூவர் என்ற வழித் தாயோடு கூடி மூவர், கூடிய மூவர் எனவும்; குதிரைத் தேர் என்றவழிக் குதிரையாற் பூட்டப்பட்ட தேர், பூணப்பட்ட தேர், ஓட்டப்பட்டதேர் எனவும்; கரும்புவேலி என்றவழி கரும் பிற்கு ஏமமாகிய வேலி, வலியாகிய வேலி எனவும்; வரையருவி என்றவழி வரையினின்றும் வீழாநின்ற அருவி, ஒழுகா நின்ற அருவி எனவும்; பாண்டிய நாடு என்றவழிப் பாண்டியனது நாடு, உடைய நாடு, எறிந்த நாடு, கொண்ட நாடு எனவும்; குன்றக் கூகை என்ற வழி, குன்றத்துக்கண் வாழாநின்ற கூகை, இரா நின்ற கூகை எனவும் இவ்வாறு வருவன இவையெல்லாம் எடுத் தோதின் வரம்பில ஆதலின், எல்லாச் சொல்லும் உரிய எனப் புறநடை ஓதல் வேண்டிற்று.

இவற்றுள் ஆறாம்வேற்றுமை உருபு புலப்பட்டவழிப் பெய ரோடு முடிந்தும், புலப்படாத வழிச் சிறுபான்மை வினைக்குறிப் போடும், வினையோடும் முடிந்தும், ஏனை வேற்றுமைகள் எல்லாம் வினையோடும், வினைக்குறிப்போடும் முடிந்தும் வருதலால், பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும் வேற்றுமைக்கு முடிபாம் என்று கொள்க. அவ்வழி, வினையும் வினைக்குறிப்பும் ஆகிய சொற்கள் இறுதி நின்ற பெயரோடும் முடிபுழிப் பெயரெச்சமாகியும், தனிவரின் முற்றாகியும் வரும் என்று கொள்க. இச்சூத்திரத்தானே வேற்றுமைக்கு முடிபு கூறினாரும் ஆம். [உக]

வேற்றுமை ஓத்து முடிந்தது.

இவ்வோத்தினுள் சூத்திரம் உட்பட உரையினது அளவு கிரந்த வகையால் மூந்நூற்று முப்பது.

## வேற்றுமை மயங்கியல்.

**81.** கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையும் உடைத்தே கண்ணென்வேற்றுமை.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், வேற்றுமை மயங்கியல் எனனும் பெயர்த்து : ஒன்றற்கு உரிய உருபு ஒன்றனோடு மயங்குதலும், ஒன்றற்கு உரிய பொருள் ஒன்றனோடு மயங்குதலும் கூறினமையாற் பெற்றபெயர்.

இதனுள் இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின்,

இரண்டாவது ஏழாவதனோடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று. கருமம் என்பது வடமொழிச் சிதைவு. செயப்படு பொருளை அவர் கருமம் என்று வழங்குப.

இ-ள் :—செயப்படு பொருள் அல்லாத சார்பு என்னுஞ் சொற்கு ஏழாம்வேற்றுமை உரிமையாதலும் உரித்து. எ-று.

உம்மை எதிர்மறையாதலால் இரண்டாம் வேற்றுமை உரித்தாதல் பெரும்பான்மை.

உ-ம் :—மனையைச் சார்ந்தான்-மனைக்கட் சார்ந்தான் என வரும். தூணைச் சார்ந்தான் என்றாற்போலச் சாரப்பட்டபொருள் தோன்றாது இடம் தோன்றுவதற்கும், பொ(ருள்) தோன்றுவதற்கும் உரித்தாவதாயிற்று. ஒருபொருள் இரண்டு உருபிற்கும் உரித்தாகி வருதலின் உருபு மயக்கம் ஆயிற்று. [க]

**82.** சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்
வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்.

இதுவும் அது.

இ-ள் :—சினைப் பொருண்மைக்கண் நிற்கும் பெயர்க்கும் இரண்டாவதும் ஏழாவதும் வினைநிலைக்கண் ஒத்த இயல்பின. எ-று.

உ-ம் :—கண்ணைக்குத்தினன். கண்ணுட் குத்தினன் என வரும். கண் என்பது குத்தப்படு பொருளுமாகிக் குத்துதற்கு இடமும் ஆகி வருதலின், இரண்டும் ஒத்த இயல்பின ஆயின.

இடம் ஆயினவாறு என்னை யெனின், கண்ணின் கண்ணும் குத்தப்படுவது ஓர் இடம் ஆகலின் என்க. வினைநிலை ஒக்கும் என்றார் ஆயினும் ஒக்கும் வினையே கொள்ளப்படும். [௨]

**83.** கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே.

இதுவும் அது.

இ-ள் :— கன்றலும் செலவும் ஆகிய வினைப் பொருண்மை மேற் சொல்லப்பட்ட இரண்டாவதனோடும், ஏழாவதனோடும் ஒன்றித் தோன்றும், எ-று.

இரண்டும் ஏழும் என்பது மேலைசூத்திரத்தினின்றும் தந்துரைக்கப் பட்டது.

உ-ம் :—சூதினைக் கன்றினான்; சூதின்கண் கன்றினான். நெறியைச் சென்றான்; நெறிக்கண் சென்றான். அவை பொருளுமாகி இடமுமாகி நிற்றலின் இரண்டற்கும் உரிய வாயின. [௩.]

**84.** முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே
முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப.

இதுவும் இரண்டாவதும் ஏழாவதும் ஒரு பொருட்கண் நிகழ்வ தோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :— முதலும் சினையும் சேர வருஞ் சொற்கு, முதற்கண் அது வரின் சினைக்கு ஐ வரும், முதற் கண் ஐ வரின் சினைக் கண் கண் வருதல் தெளியப்பட்டது என்று சொல்லுவர் புலவர், எ-று. மயக்கம் அன்று என்றவாறும்.

உ-ம் :—யானையது கோட்டைக் குறைத்தான்; யானையைக் கோட்டின்கண் குறைத்தான் என வரும்.

'கண்ணென் வேற்றுமை சினைமுன் வருதல் தெள்ளிது' எனவே தெள்ளிதன்றிச் சிறுபான்மை ஐ வருதலும் கொள்ளப்படும்.

உ-ம் :—யானையைக் கோட்டைக் குறைத்தான். [௪]

**85.** முதலுஞ் சினையும் பொருள் வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.

முதல் சினைக் கிளவி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—முதல் **சினை** என்பன பொருளால் நியமம் இல. அவற்றைச் சொல்லு மிடத்துச் சொற் குறிப்பினுல் அறியப் படும். எ-று.

என்றது:—ஒரு காற் சினையாகி வந்தது தானே ஒரு கால் முதலும் ஆகி வரும் என்றவாறு.

உ-ம்:—கோட்டது நுனியைக் குறைத்தான். கோட்டை நுனியைக் குறைத்தான் என வரும். [௫]

**86.** பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே.

பிண்டப் பெயருக்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—பிண்டப் பெயராவது திரட்சியானுகிய பெயர் அதுவும்-திரட்சியும் திரண்டபொருளும் பொருளான் வேறுபடா, அவையிற்றைச் சொல்லுந் திறம் பண்டு வழங்கின பக்கத்து...... மரபினவாம். எ-று. எனவே, மேற் சொல்லியவாறு போலச் சொல்லுவான் குறித்த வழியோடாமென்ற வாறும்.

உ-ம்:—படையது குழாத்தைக் கெடுத்தான். நெல்லது குப்பையைச் சிதறினுன். குப்பையைத் தலைக்கட் சிதறினுன். குப்பையைத் தலையைச் சிதறினுன் என வரும். குழாத்தைத் தலைக்கட் கெடுத்தான் எனவும், படையைக் குழாத்தின்கட் கெடுத்தான் எனவும், நெல்லைக்குப்பையின்கட் சிதறினுன் எனவும் வரின், பொருள் ஒற்றுமைப் பட்டுத் தோன்றுமையின் மரீஇய மரபு அன்றுயிற்று. பிறவும் அன்ன. [௬]

**87.** ஒரு வினை ஒடுச்சொல் உயிர்பின் வழித்தே.

மூன்றும் வேற்றுமை உடனிகழ்ச்சிக்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இருபொருட்கண் ஒருதலை பற்றிவரும் ஒடுச்சொல் அவ்விரு பொருளினும் உயர்ந்த பொருளின் வழியை உடைத்து எ-று.

வழி என்றது அப் பொருளின் வழியாகிய பொருள் என்று கொள்க. உயர்வு என்பதைச் சிறப்பென்று கொள்க. கொள்ளவே, அத்தொழிற்குச் சிறவாத பொருட்கண் வரும் என்றவாறும்.

உ-ம்.—அமைச்சரோடு இருந்தான் அரசன். இருந்தான் என்னும் தொழிற்குச் சிறந்தான் அரசன் ஆதலின், சிறவாத அமைச்சர் மேல் ஒடு வந்தது. அரசனொடு இருந்தார் அமைச்சர் என்ற வழி இருந்தார் என்னும் தொழிற்குச் சிறந்தார் அமைச்சர் ஆதலின் ஒடு அரசர்மேல் வந்தது. இஃது உடனிகழ்ச்சி ஆகலான் அத்தொழிற்கு இருவரும் சிறந்தார் எனிற் குற்றம் என்னையெனின், அரசரோடு இருந்தார் அமைச்சர், அவரை மந்திரம் இருமின் என்றார் என்றவழி, ஆச்சுட்டு ஈரிடத்தும் செல்லாமையாலும், தொழில் முடியும் பெயரே சிறப்புடையதெனவும் கொள்க. இனிச்சிறப்புடைய பொருண்மேல் ஒடு வருமெனப் பொருள் உரைத்தார் உளர் * ஆயினும், இப்பொருள் பாணினியார்க்கும் ஒக்கும். [எ]

88. மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனார் புலவர்.

மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மூன்றுவதன்கண்ணும் ஐந்தாவதன்கண்ணும் விளங்க எடுத்தோதப்பட்ட ஆக்கம் என்னும் சொல்லோடு தொடர்புபட்ட ஏதுக்கிளவி, இருவகை வேற்றுமைக்கும் நோக்கு ஒரு தன்மைய. எ-று.

உ-ம் :—வாணிகத்தான் ஆயினான்; வாணிகத்தின் ஆயினான் என இருவாற்றானும் வரும்.

* இளம் பூரணர்.

ஆக்கமோடு புணர்ந்த ஏதுக்கிளவி :—என விதந்தோதிய அதனுன், ஏனை ஏதுக்கள் நோக்கு ஒவ்வாத நிலைமைய என்பது பெறுதும். "அமைத்தனுற் றக்கான் அரசன்" என்னும் பொருட்கண், "அமைத்தனிற் றக்கான் அரசன்" என்றவழித் திரிபின்றி ஏதுப்படுதலேயன்றி, அமைத்தனைப்போல வென்றுதல், அமைத்தனிற் காட்டில் என்றுதல் பொருள் உரைக்கவும் படுமாகலால், ஆக்கமொடு புணர்ந்த ஏதுவே ஒப்பமுடிவது. ஏனை ஏதுக்கள் திரிபுடைய என்பது அறிவித்தற்கு இச்சூத்திரங் கூறப்பட்டது. [அ]

**89.** இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கமவ்
விரண்டன் மருங்கின் ஏதுவு மாகும்.

இரண்டாவதனோடு மூன்றாவதும் ஐந்தாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இரண்டாம் வேற்றுமைக்கண் ஓதப்பட்ட........ பொருண்மையின் நோக்குதல் அல்லாத நோக்கம், மூன்றாவதினும் ஐந்தாவதினும் ஓதப்பட்ட ஏதுவினும் ஆம். எ-று.

அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறநோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. (திருக்குறள்-புறங்கூறாமை.க)

என்ற வழி அறத்தை நோக்கியென விரித்தலேயன்றி, அறத்தான் நோக்கி யாற்றுங்கொல், அறத்தின் நோக்கி யாற்றுங்கொல் என் விரிப்பினும் ஆம் என்றவாறு. புன்சொல் உரை(ப்பா)னை (நி)லம் பொறுக்கின்(றது) பொறையாகிய தருமத்தைக் குறித்தோ, அத்தருமம் தனக்கியல்பாதலின் அஃதேதுவாகவோ என இருவாற்றானும் விரிப்பினும் அமைந்தவாறு கண்டுகொள்க. [கூ]

**90** * தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றுங்
கடிநிலை யிலவே பொருள்வயி னான.

இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* இங்கே, ஏனை உரையாசிரியர்கள், அதுவென் வேற்றுமை என்ற சூத்திரத்தை வைத்து உரை செய்துள்ளார்கள்.

இ-ள் :—இரண்டு பொருள் தடுமாறிவரும் தொழிலையுடைய பெயர்க்கு இரண்டாவதும், மூன்றாவதும் வருதல் நீக்கப்படா : பொருள் கொள்ளுமிடத்து. எ-று.

அஃதாவது 'புலிகொல் யானை' என்பது. இதற்குப் பொருள் உரைக்குங்கால், புலியைக்கொன்ற யானை எனவும், புலியாற் கொல்லப்பட்ட யானை யெனவும் இவ்வாறு இருவகை வேற்றுமைக்கும் உரித்தாகலின் மயக்கம் ஆயிற்று. பொருள் துணியுமாறு வருகின்ற சூத்திரத்துட் கூறுப. [௯௰]

**91.** ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணரு மோரே.

மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இள் :—இறுதிக்கண் நின்ற பெயர்முன்னர்ப் பொருள் அறியவரும் முறைமையினால், வேறுபாடறிப, அதன் இயல்பு உணர வேண்டுவார்.

உ-ம் :—புலி கொல் யானை ஓடுகின்றது; புலி கொல் யானைக் கோடுவந்தது என்றவழி, கொலையுண்ட பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க. [௯௧]

**92.** ஓம்படைக் கிளவிக் கையு மானுந்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.

இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஓம்படுத்துச் சொல்லுதற்கண் வருஞ் சொற்கண், உருபு தொகையாகி வருங்காலத்து, இரண்டாவதும் மூன்றாவதும் நீங்குதல் இல. எ-று. இரண்டாவதன் பொருளும் மூன்றாவதன் பொருளும் படும். எ-று.

உ-ம் :—'அறம் போற்றி வாழ்மின்' என்றவழி, அறத்தைப் போற்றி வாழ்மின் எனப் போற்றப்படுவது அறம் என்னும் பொருளும் பட்டது : அறத்தாற் போற்றி வாழ்மின் எனப் போற்றப்படுவார் தாம் என்னும் பொருளும் பட்டது. [௯௨]

**93.** குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி
அப்பொரு ளாறற் குரித்து மாகும்.

**நான்காவதோடு ஆருவது மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—நான்காம் உருபு தொக எதிர்காலம் பற்றிவரும் கொடைப்பொருண்மை ஆறுவது விரித்தற்கு உரித்தும் ஆகும். எ-று.

உ-ம் :—'தேவர் பலி' என்பது 'தேவர்க்கு நோக்கின பலி' என விரிதலே யன்றித் 'தேவரது[பலி]' என[வும்] விரியும். [கங]

**94.** அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்
எச்ச மிலவே பொருள்வயி னான.

**ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—அச்சம் என்னும் பொருண்மைக்கு ஐந்தாவதும் இரண்டாவதும் பொருட் பக்கத்தான் ஒழிபில. எ-று. எனவே சொற் பக்கத்தான் ஏனை வேற்றுமையும் ஒழிபில என்றவாறு.

உ-ம் :—கள்ளரை அஞ்சும் என்பது செயப்படுபொருள் குறித்து நின்றது. கள்ளரின் அஞ்சும் என்பது பொரூஉப்பொருளும், ஏதுவும் குறித்து நின்றது. இனிக் (கள்ளரின்) அஞ்சும், கள்ளர் மாட்டு அஞ்சும் எனவரின், அவை ஏதுக் குறித்து நிற்ற லின் பொருள் வகையான் ஏதுவாகி யடங்கின. [கச]

**95.** அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகை [யாயின்
அதுவென் னுருபுகெடக் குகரம் வருமே.

**ஆருவது நான்காவதனோடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள்.—உயர்திணைத் தொகைப்பொருண்மேல் வரும் அது வென்வேற்றுமை அது என் உருபுகெடக் கு கரம் வரும். எ-று.

உ-ம்.—நம்பி மகன் என்பதனைக் கிழமைப் பொருள்பட விரிப்புழி, நம்பிக்கு மகன் என விரியும். நம்பியது மகன் எனின் வழுவாம். [கரு]

---

* இங்கு, ஏனை உரையாசிரியர்கள், ஆறன் மருங்கின் என்னுஞ் சூத்திரத்தை வைத்து உரைசெய்துளார்கள்.

**96.** ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு
ஏழு மாகும் உறைநிலத் தான.

ஆறுவதனேடு ஏழாவது மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—ஆறும் வேற்றுமைக்கண் வாழ்ச்சிக் கிழமைக்கு ஏழாவதும் ஆம்: பொருள் உறையும் நிலத்துக்கண், எ-று. எனவே உறையும் பொருட்கண் வாராது என்றவாறும்.

உறை பொருண்மேல் வந்தது—யானையது காடு. உறையும் நிலத்துக்கண் வந்தது—காட்டது யானை. அது காட்டுள் யானை என வரும். [கசு]

**97.** அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயி னிலையும் வேற்றுமை யெல்லாம்
திரிபிட னிலவே தெரியு மோர்க்கே.

வேற்றுமை மயக்கத்திற்குப் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—மேற்சொல்லப்பட்டன போல்வன பிறவும் ஆகித் தொன்னெறியிற் றப்பாது, உருபானும் பொருளானும் இயல்பு தடுமாறி, இரண்டிடத்தும் நிலைபெறும் வேற்றுமைச் சொல்லெல்லாம் ஆராய்ந்து உணர்வார்க்குப் பொருள் திரியும் இடன் இல. எ-று.

என்றது—பரந்துபட்ட சொல்லெல்லாம் எடுத்து ஓதப் படாமையின், ஈண்டு எடுத்து ஓதப்பட்ட நிகரன வாகி உயர்ந்தோர் வழக்கினும், சான்றோர் செய்யுளினும் வரூஉம் வேற்றுமை மயக்கம் எல்லாம் இதுவே ஒத்தாகப் பொருள் உரைத்துக் கொள்க என்றவாறாயிற்று.

உ-ம்.—'நோயின் நீங்கினான்' என்பது 'நோயை நீங்கினான்' எனவும், 'சாத்தனை வெகுண்டான்' என்பது 'சாத்தனொடு வெகுண்டான்' எனவும் ஆம்.

இத்துணையும் ஒரு வேற்றுமைக்குரிய பொருள் மற்றொரு வேற்றுமைக் கண்ணும் மயங்கல் கூறப்பட்டது. [கஎ]

**98.** உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒரு சொன்னடைய பொருள்சென் மருங்கே.

ஓர் உருபு பல தொடர்ந்தடுக்கியவழி வரும் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

ஒரு சொல் பல அடுக்கி வரும் வழி—பெயரடுக்கு, வேற்றுமை யடுக்கு, முற்றுச்சொல் லடுக்கு, பெயரெச்ச அடுக்கு, வினையெச்ச அடுக்கு, இடைச்சொல்லடுக்கு, உரிச்சொல்லடுக்கு எனப் பலவகைப்படும். அவற்றுள், வேற்றுமை யடுக்காவது—ஒருருபு அடுக்கி வருதலும், பல உருபு அடுக்கி வருதலும் என இருவகைப்படும். அவற்றுள் ஓருருபு அடுக்கி வருதல்—ஒரு பொருண்மேல் அடுக்கி வருதலும், பல பொருண்மேல் அடுக்கி வருதலும் என இருவகைப்படும். அவ்விருவகையும் இச்சூத்திரத்தாற் கூறப்படும்.

இ-ள்.—உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைச் சொல் ஒரு சொல் நடையவாம், முடிக்கும் பொருண்மை செல்வுழி எ-று.

ஓர் உருபு ஒரு வினையான் முடியாது, பல உருபு ஒரு வினையான் முடியும் என்றதனான் வழுவமைதி கூறியவாறும் ஆம்.

தெம்பைந்தார் மாறனைத் தென்னர் பெருமானை
வேந்தனை வேந்தர்மண் கொண்டானை—யாஞ்சிறிதும்
அங்கோல் வளைகவர்ந்தான் என்னலும் ஆகுமோ!
செங்கோல் சிறுமை யுற.

இதனுள் ஐகார உருபு பல அடுக்கி, ஒரு பொருட்கண் வந்து, வளைகவர்ந்தான் என்னலும் ஆகுமோ என்பதனோடு முடிந்தவாறு கண்டுகொள்க.

கொல்லிப் பொருப்பனாற் கொங்கர் பெருமானால்
வில்லிற் பகைகடிந்த வேந்தனால்—அல்லியந்தார்க்
கோதையால் வையங் குளிர்தூங்க என்கொலோ!
பேதையார் எய்துவது பேது.

இதுவும் மூன்றாவது அடுக்கி வந்து குளிர்தூங்க என்பதனோடு முடிந்தது.

"வாராய்நீ புறமாறி வருந்திய மேனியாட்கு
ஆரிருட் டுணையாகி யசைவளி யலைக்குமே
கமழ்தண்டா துதிர்ந்துக வூழுற்ற கோடல்வீ
யிதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு." கலி. நெய். ச.

இதனுள் நான்காவதுடன் அடுக்கிவந்து அலைக்கும் என்பதனோடு முடிந்தது.

வீரப் புலியானின் வெல்போர் வளவனிற்
கோரப் பரியுறந்தைக் கோமானின்—ஆரலங்கல்
மற்படுதோட் செம்பியனின் மல்லன் மணிநேரி
வெற்பனிற் றீர்ந்துளவோ வேந்து.

இதனுள் ஐந்தாவது பலவடுக்கிவந்து தீர்ந்து என்பதனோடு முடிந்தது.

பெற்றி திரிந்து பெருவறங் கூறினும்
மற்றுயிர்கள் நோயால் வருந்தினுங்—கொற்றக்
குடையான்கண் நீதிபுரி கோலான்கண் ஆழிப்
படையான்கண் நிற்கும் பழி.

இதனுள் ஏழாவது பலவடுக்கிவந்து நிற்கும் என்பதனோடு முடிந்தது. இவை ஒரு பொருண்மேல் ஒருருபு அடுக்கி வந்தன.

உழவை, வாணிகத்தைச் செய்யும் எனவும்; சோற்றால், தண்ணீரால் வயிறு நிறைக்கும் எனவும்; அந்தணர்க்குச், சான்றோர்க்கு..............எனவும்; நிலத்தினும், வானினும் பெரிது எனவும்; நல்லாற்றது, தீயாற்றது என்றது கொள்ளும் எனவும்; அரங்கிலே, அறையிலே நடிக்கும் எனவும் இவ்வாறு வருவன பல பெயர்க்கண் ஒருபு வந்து ஒரு சொல்லான் முற்றுப்பெற்றன.

துணிநீராற் றூய்மதி நாளா லணிபெற
ஈன்றவ டிதலைபோ லீர்பெய்யுந் தளிரொடும்
ஆன்றவ ரடக்கம்போல் அலர்செல்லாச் சினையொடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடும்
நல்லவர் நுடக்கம்போல் நயம்வந்த கொம்பொடும்
உணர்ந்தவர் ஈகைபோல் இணரூழ்த்த மரத்தொடும்
புணர்ந்தவர் முயக்கம்போற் புரிவுற்ற கொடியொடும்
நயந்தார்க்கோர் நல்லமன் இளவேனில். கலி. பாலை. ௩௨.

என்பதனுள் ஆலும், ஒடும் பல அடுக்கிவந்து நல்லே என்பதனேடு முடிந்தன. [கஅ]

**99.** இறுதியு மிடையு மெல்லா வுருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்.

பல உருபு தொடர்ந்து அடுக்கி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—முதற்கண் நின்ற வேற்றுமை உருபே பொருளோடு முடிதலன்றி, இறுதிக்கண்ணும் இடையின்கண்ணும் எல்லா உருபும் விரவிவந்து முடிக்கும் பொருண்மைக்கண்ணே நிலைபெறுதல் நீக்கார். எ-று.

நெறிபடுபொருள் என்பது முதலும் இடையும் இறுதியும் நின்ற பலவகை உருபிற்கும் ஏற்புடைப் பொருள்.

உ-ம்.—குயவன் குடத்தைத் திரிகையால் அரங்கின்கண் வனைந்தான் எனவும்; சாத்தனது ஆடையை வலியினுற் காட்டின்கண் பறித்தான் எனவும் இறுதியும் இடையும் முதலும் நின்ற உருபெல்லாம் ஒரு வினையால் முடிந்தவாறு கண்டுகொள்க. [ககூ]

**100.** பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

இது பல உருபுந் தொடர்ந் தடுக்கியவழி வரும் வேறுபாடும், உருபு தொகுமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—இறுதியும் இடையும் நின்ற எல்லா உருபும் முடிக்கும்வினை ஒன்றனேடு முடிதலேயன்றி, வேறு வினையேற்று ஒரு வினையோடு முடிதலும், அவ்வுருபுகள் தொக்குநின்று முடிக்குஞ் சொல்லோடு முடிதலும் நெறிபட வழங்கிய பக்கத்தன என்று சொல்லுவர். எ-று.

இறுதியும் இடையும் என்பது மேலைச் சூத்திரத்தினின்றும் தந்துரைக்கப்பட்டது. நெறிபட வழங்கிய பக்கம் என்ற பெயரான், ஏற்கும் வினையே கொள்ளப்படும். பிறிது பிறிதேற்றல் கூறவேண்டா; வேற்றுமை உருபு வினையோடு முடியும் என்பதனாற் பெறுதுமெனின், மேல் நின்ற அதிகாரம் பல உருபடுக்கிய

வழி ஒருவினையான் முடியும் என்றமையால், தனித்தனி வினை கொண்டு முடியவும் பெறுமோ என நின்ற ஐயம் தீர்த்தற்குக் கூறல் வேண்டுமென்க. ஈண்டு உருபு தொகுதல் கூறிய தென்னை? வேற்றுமைத் தொகை என எச்சவியலுட் கூறுகின்று ராதலின் எனின், தொகைச் சொல்லாவது இறுதிப் பெயரோடு தொக்கு ஒரு சொன்னீர்மைப் பட்டு நிற்பது: இஃதன்ன தன்றித் தொகா நிலைத் தொடர்ச்சிக்கண் உருபு மாத்திரம் தொக்கு நிற்கும் என்று கொள்க.

உ-ம்.—காதலியைக் கொண்டு கவுந்தியொடு கூடி
மாதரிக்குக் காட்டி மனையி னகன்றுபோய்க்
கோதி லிறைவன்து கூட்டற்கட் கோவலன்சென்
றேத முறுதல் வினை.

இதனுள், பல உருபு பலவினையான் வந்தன ஒருவினையான் முற்றுப்பெற்றன

உருபுதொக வருமாறு:—நிலத்தைக் கடந்தான்; வாளால் வெட்டினான்; கொலைக்கு உடம்பட்டான்; வரையினின்றும் பாய்ந்தான்; சாத்தனது பொத்தகம்; மாடத்துக்கண் இருந்தான் என்பன நிலம் கடந்தான்; வாள் வெட்டினான்; கொலை யுடம்பட்டான்; வரைபாய்ந்தான்; சாத்தன் பொத்தகம்; மாடத்திருந்தான் என உருபு தொக்கவழியும் ஒட்டுப்படாது நின்று, தொகா நிலைத் தொடர்ச்சியாகிப் பொருள் பட்டவாறு கண்டுகொள்க.

தொகைச் சொல்லும், உருபு தொகைச் சொல்லும் வேறு பாடில..............மோசை வேற்றுமையான் வேறுபாடறிந்து கொள்க. பிறிது பிறிதேற்றல் என்பதனை ஆறனுருபு ஏனையுரு பேற்கும் எனப் பொருளுரைத்துச் * சாத்தனதனை, சாத்தனத னொடு என உதாரணங் காட்டுபவாலெனின், அவ்வாறு வரும் அது என்பது உருபுநிலை யொழிந்து பொருளாய் நிற்றலானும், சாத்தனதனைக் கொணர்ந்தான் என்றவழி இடைநின்ற அது என் பது உருபாயிற் சாத்தனைக் கொணர்ந்தான் என்னும் பொருள் படல்வேண்டும்: அவ்வாறு பொருள்படாது உடைப்பொருளையே காட்டுதலானும்; அஃறிணை யொருமை அது என்னும் பெயர்க்காதலானும், சாத்தன் பொத்தகத்தைக் கொணர்ந்தான் என்றாற்

* இளம்பூரணர் முதலியோர் உரை.

போல் வந்ததல்லது, உருபு உருபிலேற்றல் என்றல் அமையா தென்க. [௨0]

**101.** * ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகா விறுதி யான.

உருபேற்றசொல்லும் முடிக்குஞ் சொல்லும் மாறி நிற்கவும் பெறும் என்பது பெற்றாம்: என்னை? அவை இறுதியிற்றொகா என்றமையின்.

அவை மொழிமாறி நிற்குமாறு:—கடந்தான் நிலத்தை; வெட்டினான் வாளால்; கொடுத்தான் சாத்தற்கு; நீங்கினான் ஊரின், ஆடை சாத்தனது; இருந்தான் குன்றத்துக்கண் என்பன; இவற்றுள் உருபுதொக வந்தன:—கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து. என்னை? இவை உருபு தொக்கவழியுந் தம் பொருண்மை விளக்கின. ஏனையவும் இவ்வாறு வருமெனக் கருதின் அவை தம் பொருள் படாமையிற் றொகா என்றார். வெட்டினான் வாள்; கொடுத்தான் சாத்தன்; நீங்கினான் ஊர்; ஆடை சாத்தன் என்றவழித் தம்பொருள் படாமை கண்டுகொள்க. [௨௧]

**102** யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

வேற்றுமை உருபு தம்முள் மயங்குதலின்றிப் பிற உருபோடு மயங்கும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—யாதொன்றன் உருபிற் கூறினும் பொருள் செல்லும் வழி வேற்றுமையும் செல்லும். எ-று.

யாதனுருபு என்பது வேற்றுமை யல்லாத உருபு. உருபு எனினும் வடிவு எனினும் ஒக்கும். † அம்மு வுருபின தோன்ற லாறே என வடிவிற்குப் பெயராகிப் பிறண்டும் வந்தது.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று. (குறள்-வான். ௧.)

---

* இச்சூத்திரத்திற்கு—நுதலியது உரைத்தலும், பொழிப்புரையும் காணப்பட்டில. † தொல், பெயர், ௬௩.

எனவும், மருந்துண்டு நோய்தீர்ந்தது எனவும் வருவழி, உலகம் வழங்கி வருதற்கு மழை ஏதுவாகலானும், நோய் தீர்தற்கு மருந்து ஏதுவாகலானும் இவற்றிற்குப் பொருளுரைக்குங்கால் மழை நிலைநிற்றலான் உலக நடை தப்பாது வருதலான் எனவும், மருந்துண்டலால் நோய் தீர்ந்தது எனவும் உரைக்கவேண்டுதலின், இவை வேற்றுமை உருபான் வந்தில வாயினும், பொருண் முகத்தான் வேற்றுமை யாதலின், இவை இவ்வாறு வரப்பெறும் என்று வழுவமைத்த வாறும். [உஉ]

**103.** எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

எல்லா வேற்றுமைக்கும் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வேற்றுமைச்சொல் தமக்குரிய பொருணிலையை எதிர்மறுத்து மொழியினும் திரியா. எ-று.

உ-ம்:—குடத்தை வனையான், சாத்தனொடு கூடான் அந்தணர்க்குக் கொடான், ஊரின் நீங்கான், சாத்தனதன்று ஆடை, குன்றத்துக்கண் இரான் எனவரும். குடத்தை வனையான் என்றவழிச் செயப்படுபொருள் தோன்றிற்றின்றாயினும், இவ்வாறு சொல்லப்பெறும் என வழுவமைத்தவாறு. [உ௩]

**104.** கு ஐ ஆன்என வரூஉ மிறுதி
அவ்வொடு சிவணுஞ் செய்யு ளுள்ளே.

வேற்றுமை யுருபினுள் சிலவற்றிற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—கு, ஐ, ஆன் என்று சொல்லப்பட்ட-தொடர் மொழி இறுதிக்கண் வரும் உருபு, அவ்வொடு சிவணும் செய்யுளகத்து. எ-று. உதாரணம் வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும். [உ௪]

**105.** அ எனப் பிறத்தல் அஃறிணை மருங்கிற்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப.

எய்தியது ஒருமருங்கு விலக்குதல் நுதலிற்று.

இ-ள் :—அஃறிணைப் பொருட்கண் குவ்வும், ஐயும் அகரத்தொடு சிவணு. எ-று.

எனவே, உயர்திணைக்கண் மூன்றுருபும் சிவணும் என்பதாம். அஃறிணைக்கண் ஒருருபு சிவணும் என்பதூஉம் கூறியவாறும்.

உ-ம் :—* கடிநிலை யின்றே ஆசிரி யற்க; புள்ளினை; புலவரினை என வந்தன. ஐகாரம் அகரத்தோடு சிவணுமாறு வந்தவழிக் கண்டுகொள்க. பரிபாடலகத்து-நின்னோக்கும் புகழ் நிழலவை (பக்கம்-௪.) நீழ னேமியன என்பன அகரத்தோடு சிவணி வந்தன எனினும் அமையும். இவை அஃறிணைப் பொருள் அன்றோ எனின், தெய்வப் பொருண்மையான் உயர்திணையாம். [௨௫]

**106.** இதன திதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயப்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பி னாக்கமும்
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழி கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபிற்
றொன்னெறி மரபின தோன்ற லாறே.

ஒருருபு பலபொருட்கண் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—இதனது இது இற்று என்பது முதலாகச் சொல்லப்பட்டனவும், அத்தன்மைய பிறவும் நான்கன் உருபில் பண்டையோர் வழக்காகிய மரபின வாகித் தோன்றுதல் நெறி. எ-று.

'இதனது இது இற்று' என்பது 'யானையது கோடு வெள்ளிது' என்பது 'யானைக்குக் கோடு வெள்ளிது' எனவரும்.

---

* தொல்.. புள்ளி. ௬௪.

'அதனைக் கொள்ளும் பொருள் வயினானும்' என்பது ஒன்றைக் கொள்ளும் பொருட்கண்ணும் வரும். எ-று. ஆன் இடைச்சொல். 'காணத்திற்குக் கொண்ட அரிசி' எனவும் வரும்.

'அதனாற் செயப்படற் கொத்த கிளவி' என்பது அவனாற் செய்யப்படும் என்னும் பொருண்மைக்குப் பொருந்திய சொல் என்றவாறு. 'அவனான் முடியும்' என்பது 'அவற்கு முடியும்' என வரும்.

'முறைக்கொண்டெழுந்த பெயர்ச்சொற் கிளவி' என்பது முறையைக் கொண்டெழுந்த பெயர்ச்சொற் பொருண்மை (என்றவாறு.) 'ஆவினது கன்று' என்பது 'ஆவிற்குக் கன்று' என வரும்.

'பால்வரை கிளவி' என்பது இடம் வரைந்த சொல் (என்றவாறு.) கருவூரின் கிழக்கு என்பது கருவூர்க்குக் கிழக்கு என வரும்.

'பண்பின் ஆக்கம்' என்பது ..........................என்றவாறு. 'இதனின் நெடிது' என்பது 'இதற்கு நெடிது' எனவரும்.

'காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவி' என்பது காலத்தான் உணருஞ் சொல் என்றவாறு. 'காலைக்கண் வரும்' என்பது 'காலைக்கு வரும்' என வரும்.

'பற்றுவிடு கிளவி' என்பது 'இதனிற் பற்றுவிடும்' என்னும் ஏதுப் பொருண்மைக்கண் 'இதற்குப் பற்றுவிடும்' என வரும்.

'தீர்ந்துமொழிகிளவி' என்பது 'மருந்தில் தீர்ந்தது' என்பது மருந்திற்குத் தீர்ந்தது என வரும்.

'அன்ன பிறவும்' என்றதனால் * கிளையறி நாணற் கிழங்கு மணற் கீன்ற என ஏழாவதன் இடப்பொருண்மைக்கண் நான்காவது வந்தது. பிறவும் இந்நிகரனவெல்லாம் வந்தவழி அனுமித்துக்கொள்க. [உ.சு]

**107.** ஏனை யுருபும் அன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான.

---

* அகம். உஉக.

நான்காவது ஒழிந்த உருபுகள் ஏனை உருபிற்கும் உரிய பொரு-ளோடு மயங்கும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—*நான்காவது ஒழிந்த உருபுகளும் ஏனைப் பொருளோடு மயங்கும் மரபினை யுடைய; அவை சொல்லிலக்கணத்தாற் குற்றமில எ-று.*

உ-ம்.—" கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினிர் என்று". [*குறள்.* ௧௩௨-௩]

*இதனுள் ஒருத்திக்கு எனற்பாலது ஒருத்தியை யென இரண்டாவதனோடும் மயங்கி வந்தது.* * " அறல்சாய பொழுதோடெம் அணிநுதல் வேறாகி " *என்றவழிப் பொழுதின்கண் எனற்பாலது பொழுதோடென மூன்றாவது ஏழாவதனோடு மயங்கிற்று. பிறவும் அன்ன.* [௨௭]

**108.** *வினையே செய்வது செயப்படு பொருளே*
*நிலனே காலங் கருவி யென்றா*
*இன்னதற் கிதுபயன் ஆக வென்னும்*
*அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ*
*ஆயெட் டென்ப தொழின்முதல் நிலையே.*

எழுவகை வேற்றுமையினும் காரக வேற்றுமை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—*வினையும், கருத்தாவும், செயப்படுபொருளும், இடமும், காலமும், கருவியும் என்று சொல்லப்பட்டவற்றோடு கொள்வதூஉம், பயனும் ஆகிய அவ்விரண்டொடும் தொகைஇ, அவ் வெட்டென்று சொல்லுவர் தொழிற் காரகம் என்றவாறு.*

*நெய்தான் என்றவழி, நெய்யப்பட்டபொருளும், நெய்வதாகிய தொழிலும், நெய்தற்குக் கருவியும், நெய்தற்குக் காலமும், நெய்தற்கு இடமும், நெய்யுங் கருத்தாவும், அதனைக் கொள்வானும், அதனாற் பயனும் உள்ளவழி யல்லது நெய்தற் றொழிலாற் செய்யப் பட்ட பொருள் உளதாகாமையின், அவற்றை*

* கலி. பாலை. ௨௬.

முதனிலை யென்றார். அவற்றுள், பயனும் கொள்வதூம் ஏனையவற்றோடு ஒத்த சிறப்பின்மையின், இரண்டென, வகுத்துக் கூறினார். இவற்றுள், தொழிலும், செயப்படுபொருளும் இரண்டாவதாயின: ஆடையை நெய்தான், நெய்தலை நெய்தான். கருவியும், கருத்தாவும் மூன்றாவதாயின: சாலியனால் நெய்யப்பட்டது, நெம்பினால் நெய்யப்பட்டது. கொள்வதும் பயனும் நான்காவது ஆயின: அந்தணர்க்கு நெய்தான், கூலிக்கு நெய்தான். இடமும் காலமும் ஏழாவது ஆயின: கூடத்துக்கண் நெய்தான், காலைக்கண் நெய்தான். இவற்றுள் கருத்தா முதல் வேற்றுமையும் ஆம். சாலியன் நெய்தான். அஃதேல், ஐந்தாவதாகிய நீங்க நிற்றல் காரகம் அன்றோ எனின், காரகம் என்பது தொழில் முதனிலையாகலிற் காரகம் அன்றென்பது போலும் கருத்து. நீங்க நிற்றல் முதனிலையாகாவாறு என்னை யெனின், ஆடையை நெய்து முடித்தான் படமரத்தினின்றும் வாங்குதல் நீக்கம் ஆகலின், அத்தொழில் முடிந்தபின் நிகழின் அல்லது தொழிற் குறிப்(பு அன்)மையால் காரகம் அன்றாயிற்று. ஆறாவது அவ்வாடையைக் கிழமை செய்தான் மாட்டே நிகழ்தலின், அதுவும் காரகம் அன்றாயிற்று. முதற்காரணம் கருவியின் அடங்கும்: நூலால் நெய்தான். [உஅ]

109. அவைதாம்,
வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்.

மேலதற்கு ஓர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட எண்வகைப் பொருளினும் வழங்கிய நெறிக்கண் குறைவன குறையும். எ-று. தொழில் கண்டுழி யெல்லாம் இவை எட்டும் வருதல் நியமமின்று என்றவாறும்.

உ-ம்:—ஆடையை நெய்தான் றனக்கு என்றவழிக் கொள்வான் பிறன் ஒருவன் இன்மையின், பொருண்மை குறைந்து நின்றது. உலகினைப்படைத்தான் என்றவழிக் கொள்வானும், பயனும் இன்றி வந்தது. கொடி ஆடிற்று என்றவழிக் கருத்தாவும், கொள்வானும் பயனும் இன்றி வந்தது. பிறவும் அன்ன. [உகூ]

**110.** முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
அனைய மரபினவே ஆகுபெயர்க் கிளவி.

**ஆகுபெயர்க்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. வேற்றுமைப் பொருள் மயக்கம் உணர்திற்று எனினும் அமையும்.**

ஆகுபெயர் என்பது யாதோ எனின், யாதானும் ஒரு பொருத்தத்தினால் ஒன்றன்பெயர் ஒன்றற்காக வருவது.

இ-ள் :—முதலிற் கூறும் சினையறி கிளவி முதலாக எண்ணப்பட்டனவும், வினைமுதல் உரைக்குங் கிளவியொடு கூட அத்தன்மையாகிய மரபினையுடையவும் ஆகுபெயர்ச் சொல்லாம் எ-று.

மரபினவும் என்னும் உம்மை எஞ்சி நின்றது. ஏகாரம் எண்ணுக் குறித்து நின்றது. ஆம் என்பது எஞ்சி நின்றது.

உம் :—"முதலிற் கூறும் சினையறி கிளவி" என்பது சினைப் பொருளை முதலாற் கூறும் பெயர்ச் சொல்; கடு என்பது கடுவினது காயைக் கடு என வழங்குதலின் ஆகுபெயராயிற்று.

"சினையிற்கூறும் முதலறி கிளவியாவது" முதற்பொருளைச் சினையாற் கூறும் பெயர்ச்சொல்; பூ நட்டார் என்பது, நடப்படுவது பூவினது முதலாதலின், அம்முதலைப் பூ என்று வழங்குதலின் ஆகுபெயராயிற்று. நகையச் சாக நல்லமிர்து கலந்த-நடு நிலை திறம்பிய நயமி லொருகை (பரி. பக்கம். கசு.) என்பதும் அது.

"பிறந்த வழிக் கூறலென்பது" இடத்து நிகழ் பொருளை இடத்தாற் கூறுதல்; வேளாகாணி என்பது, வேளாகாணியிற் பிறந்த ஆடையை அப்பெயரான் வழங்குதலின் ஆகுபெயராயிற்று. யாழ்கேட்டான் என்பதும் அது : யாழிற் பிறந்த ஓசையையும் யாழ் என்றமையால்.

"பண்பு கொள் பெயராவது" பண்பின் பெயரால் பண்புடையதனைக் கூறல்; நீலம் என்றவழி அந்நிறத்தை உடைய மணியை நீலம் என்பதாதலின் ஆகுபெயராயிற்று.

"இயன்றது மொழிதலாவது" இயன்றதனான் மொழிதல் எனவிரியும். அது காரியப் பொருளைக் காரணத்தான் மொழிதல். பொன் பூண்டாள் என்றவழிப் பொன்னினான் ஆகிய அணிகலத்தை(ப்) பொன் என்று வழங்குதலின் ஆகுபெயராயிற்று. தன் மெய் காட்டி இஃதோர் அம்பு, இஃதோர் வேல் என்றவழி அவை பட்ட வடுவை அவற்றிற்குக் காரணமாகிய கருவிப் பெயரான் வழங்குவனவும் அமையும். இன்னும் இயன்றது மொழிதல் என்பதன்கண் இரண்டாவதை விரித்து இயன்றதனை மொழிதல் எனவாம்; அது காரணப்பொருளைக் காரியத்தாற் கூறுதல். நெல்லாதல், காணமாதல் ஒருவன் கொடுப்பக் கொண்டவன்-இற்றைக்குச் சோறு பெற்றேன் என்னும்: அவ்வழிச் சோற்றுக்குக் காரணமாகிய நெல்லுங், காணமும் சோறு என ஆகுபெயராயின.

"இருபெயரொட்டு" என்பது இரண்டு பெயர் தொக்கு ஒரு சொன்னீர்மைப் பட்டு மற்றொரு பொருள்தரு பெயராகி வருவது. அது துடியிடை என்பது, துடிபோன்ற இடையினை உடையாளைத் துடியிடை என்பவாகலின் ஆகுபெயராயிற்று. இஃது உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையன்றோ எனின், ஒட்டுப் பட்ட பொருளோடு ஒற்றுமைப் பட்ட உருபு: அன்மொழித் தொகையாவது அப்பொருளின் வேறுபட்டுவரும். அன்னதாதல் அன்மொழி என்றதனானும் விளங்கும். அதனானேயன்றே பண்பு தொகவரூஉங் கிளவி யானும்-உம்மை தொக்க பெயர் வயினானும்-ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே * என ஓதுவாராயிற்று.

"வினைமுதலுரைக்குங் கிளவி" என்பது-வினையும் முதலும் உரைக்குங் கிளவி என உம்மைத் தொகையாகக் கொள்ளப்படும். கொள்ளவே, வினையால் உரைக்குங் கிளவியும், வினைமுதலான் உரைக்குங் கிளவியும் ஆகுபெயராம் என்றவாறாம். வினையான் உரைக்கப்பட்டன :—எழுத்து, சொல் என்பன எழுதப்பட்டதனை

* எச்சவியல்—உக.

யும், சொல்லப்பட்டதனையும் அப்பெயரான்வழங்குதலின், ஆகுபெயராயிற்று. என் காவலிலே கட்டான் என்பதும் அது. வினைமுதலான் உரைக்கப்பட்டன செய்தானாற் செயப்படுபொருட்குப் பெயராகி வருவன: சாலியனால் நெய்யப்பட்ட ஆடையைச் சாலியன் என்பது. தொல்காப்பியம் என்பதோ எனின், அஃது ஈறுதிரிந்து நின்றவதனால் செய்யப்பட்டது என்னும் பொருளை விளக்குதலின் ஆகுபெயராகாது; காரணப் பெயராம்.

'அனைய மரபின' என்றதனான் ஈண்டு ஓதப்பட்டனவற்றுள் அடையடுத்து வருவனவும் கொள்க. தாழ்குழல் என்றவழி அதனையுடையாட்குப் பெயராகி வருதலின் ஆகுபெயராயிற்று இது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யன்றோவெனின், ஆண்டு எடுத்து ஓதாமையினானும், பொருள் ஒற்றுமைப்படுதலானும் ஆகாது என்க. [௩௰]

**111.** அவைதாம்,
தத்தம் பொருள் வயிற் றம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இதுவும் ஒருவாற்றான் ஆகுபெயர்க்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. விரிந்தது தொகுத்தலை நுதலிற்று எனினும் அமையும்.

இ-ள்.—மேற் சொல்லப்பட்ட ஆகுபெயர்தாம், தத்தம் பொருள்வயிற் சிவணலும், தம்மொடு சிவணலும், பொருத்தமில்லாத நெறிக்கண் சுட்டலும், பிறிதின்கிழமைப் பொருளைச் சுட்டலும் ஆகிய அவ்வியல்பினையுடைய; அவ்வாறு சொல்லுங்காலத்து வேற்றுமைப் பொருட்கண் பாதுகாத்தல் வேண்டும்.

சிவணல் என்பதனை இரண்டிடத்துங் கூட்டுக. சுட்டல் என்பதனையும் இரண்டிடத்துங் கூட்டுக. 'தத்தம் பொருள் வயிற் சிவணல்' என்பது முதற்பொருள் சினைப்பொருளைச் சிவணுதல். அவை கடு, பொன் என்பன. 'தம்மோடு சிவணல்' ஆவது சினைப்பொருள் முதற்பொருளைச் சிவணுதல். அவை பூ, நீலம்,

சோறு, துடியிடை, தாழ்குழல் என்பன. ஒப்பில் வழிக்கண் சுட்டியது வேளாகாணி. 'பிறிது பொருள் சுட்டியது' சாலியன். வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும் என்பது-ஆகு பெயர் என்பது வேண்டியவாறு சொல்லப்படாது: வேற்றுமைப் பொருட்கண்ணே வரப்பெறுவது என்றவாறு. அவை அப் பொருட்கண் வந்தவாறு-முதலிற் கூறும் சினையறிகிளவியும், சினையிற் கூறும் முதலறி கிளவியும், பண்புகொள் பெயரும், இருபெயர் ஒட்டும் ஆறும்வேற்றுமைப் பொருண் மயக்கம். பிறந்தவழிக் கூறல் ஏழாம் வேற்றுமைப் பொருண் மயக்கம். இயன்றது மொழிதலும், வினைமுதல் உரைக்கும் கிளவியும் மூன்றும் வேற்றுமைப் பொருண் மயக்கம். [௱௧]

**112.** அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே.

இதுவும் ஆகுபெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—அளவுப்பெயரும் நிறைப்பெயரும் மேற்சொல்லப் பட்ட ஆகுபெயரோடு கொள்ளுமிடமும் உளவென்று சொல் லுவர் உணர்ந்தோர். எ-று.

கொள்வழி உள என்றதனால், தம்பெயர் விளங்கும் எண்ணுக் குறிப்பன்றி அளக்கப்பட்ட பொருள் மேலும், நிறுக்கப்பட்ட பொருள் மேலும், கருவி மேலும் வரின் அவையும் வேற்றுமைப் பொருள் ஆகு பெயராம் என்று கொள்க. எண்ணுமுறையான் உழக்கு நாழி, என்னும் அளவினைக் கொள்ளும் பாண்டத்தினை யும், அளக்கப்படும் பொருளினையும் உழக்கு, நாழி என்ப. கால் கழஞ்சு என்னும் நிறையையும், அதன் அளவாகிய கல்லையும், பொன்னையும் கால், கழஞ்சு என்ப. இரு நிலம், ஒருமா, இம்(மி) முக்கால் என்பனவும் அளவுப் பகுதிய. அஃதேல், இவ்வொருது ஒன்று என எண்ணப்பட்ட பொருள்மேல் எண்ணுப் பெயர் வரு வது ஆகுபெயர் ஆகாதோ எனின், அளவும் நிறையும் போலாது எண்ணப்பட்ட பொருளை எண்ணுப் பிரிந்து நில்லாமையான், அதுவும் அப்பொருட்கு ஒரு காரணத்தாற் பெற்ற பெயர் எனின் அல்லது ஆகுபெயர் எனப்படாதென்று கொள்க. அள வும், நிறையும் பிரிந்து நின்றவாறு என்னை யெனின், இப்பொன்

கால், இப்பொன் கழஞ்சு என்றவழி, அவை ஓர் உருவாகியும், பல உருவாகியும் வரின் அல்லது, கால், கழஞ்சு என்னும் நிறைப் பொருண்மை புலப்படாது நிற்றலிற் பிரிந்து நின்றன. [௩௨]

**113.** கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

ஆகுபெயர்க்குப் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எடுத்து ஓதப்பட்ட வாய்பாட்டான் அன்றி வேறு வருவனவுளவும் எடுத்தோதிய நெறியினான் ஆகுபெயர் ஆமாறு அறிந்துகொள்க. எ-று.

அவையாவன :—பாவை, திரு என வடிவுபற்றியும்; பசு, கழுதை எனக் குணம் பற்றியும்; புலி, சிங்கம் எனத் தொழில் பற்றியும் ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆகி வருவனவும் ஆகுபெயர் என்றே கொள்ளப்படும்.

§ எயின் முகம் சிதையத் தோட்டி ஏவலிற்—**தோட்டி தந்த தொடிமருப் பியானை** என்ற வழித் தோட்டியை யுடையானைத் தோட்டி என ஆகுபெயர் ஆயிற்று.

இவை ஆகுபெயர் ஆகுங்கால் பாவை வந்தாள், சிங்கம் வந்தான் எனத் தத்தம் பொருண்மை வாய்பாடான் முடியும். [௩௩]

* கவழக் களிப்பியன் மால்யானை சிற்றுளி
தவழத்தா னில்லா ததுபோற்—பவழக்
கடிகை யிடைமுத்தங் காண்டோறு நில்லா
தொடிகை யிடைமுத்தந் தொக்கு.

என்பது தொடியென ஆகுபெயராயிற்று.

வேற்றுமை மயங்கியல் முடிந்தது.

இவ்வோத்துனுட் சூத்திரமுட்பட உரையினது அளவு
கிரந்த வகையான் முந்நூறு.

---

§ பதிற்று. ௩அ.

* திணைமாலை நூற்றைம்பது. ௬௨. இவ்வெண்பா மிகவும் சிதைந்துளது.

## விளிமரபு.

**114.** விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்று மியற்கைய வென்ப.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், விளிமரபு என்னும் பெயர்த்து. நிறுத்த முறையானே எழுவகை வேற்றுமையும், அவ்வாறு மயக்கமும் உணர்த்தியதன்பின், எட்டாவதாகிய விளி இலக்கணம் உணர்த்தினமையாற் பெற்ற பெயர்.

இதன் முதற் சூத்திரம் என்னுதலிற்றோ எனின், விளி இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—விளி என்று சொல்லப் படுவன தம்மை ஏற்கும் பெயரோடு விளங்கத் தோன்றும் இயற்கையினை யுடைய என்று சொல்லுவார். எ-று.

ஏனை வேற்றுமை போல உருபு பிரிந்து வாரா: பெரும்பான்மையும் பெயரோடு ஒற்றுமைப்பட்டு வருமென்பதூஉம், 'கொள்ளும் பெயரொடு' என்றமையாற் கொள்ளாப் பெயரும் உளவென்பதூஉம் பெறுதும். விளி என்றதனான் அவ்வேற்றுமை விளித்தற் பொருண்மைக்கண் வரும் என்று கொள்க. [க]

**115.** அவ்வே,
இவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப.

எய்தியன்மேற் சிறப்புவிதி வகுத்தலை நுதலிற்று.

இ-ள் :—சொல்லப் பட்ட விளி வேற்றுமைதாம் இவையென அறிதற்கு உருபு பெறவும் கிளப்ப ஆசிரியர். எ-று.

உம்மை எஞ்சி நின்றது. இவ்விரண்டு சூத்திரத்தானும் சொல்லியது விளி வேற்றுமை வருவழி, அதனை ஏற்கும் பெயர் இயல்பாகியும் திரிந்தும் குறைந்தும் மிக்கும் வரும் என்றவாறு. [உ]

**116.** * அவற்றுள்,
இ உ ஐ ஓ வென்னு மிறுதி
யப்பா ணன்கே உயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

உயர்திணைப் பெயருள் உயிரீறாகி விளியேற்கும் பெயரை வகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயர்திணை யிடத்துள்ள பொருளைச் சுட்டிய விளி யேற்கும் பெயர் இ, உ, ஐ, ஓ என்னும் ஈற்றினை யுடைய அக் கூற்று நான்கு. எ-று.

உயர்திணை மருங்கினுள்ள பொருள் சுட்டிய என்றமையான் உயர்திணைப் பெயரென வகுத்தோதப் படுவனவும், விரவுப் பெயருள் உயர்திணை குறித்தனவும் கொள்ளப்படும். [௩]

**117.** அவற்றுள்,
இ ஈ யாகும் ஐ ஆ யாகும்.

இகர ஐகார ஈற்றுப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இகரம் ஈகாரமாய்த் திரிந்தும், ஐகாரம் ஆய் எனத் திரிந்தும் விளி ஏற்கும். எ-று.

உ-ம் :—நம்பி, சாத்தி என்பன நம்பீ, சாத்தீ என விளி யேற்கும். நங்கை நங்காய் எனவும், தந்தை தந்தாய் எனவும் வரும். [௪]

**118.** § ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்
உகரந் தானே குற்றிய லுகரம்.

உகர ஓகாரப் பெயர் விளி யேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஓகாரமும், உகரமும் ஏகாரம் பெற்று விளி யேற்கும்; ஆண்டுக் குற்றிய லிகரமே ஈறாகும். எ-று.

உ-ம் :—கோ, கோவே; வேந்து, வேந்தே என வரும். பிறவு மன்ன. [௫]

---

* அவைதாம்—எனை உரைகள். § இதனை இரண்டு சூத்திரங்களாகக் கொள்வர் ஏனை யுரையாளர்.

**119.** ஏனை யுயிரே உயர்திணை மருங்கிற்
றாம்விளி கொள்ளா வென்மனார் புலவர்.

ஐயந்தீர்த்தல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட உயிரல்லாத உயிர்கள் உயர்திணையிடத்து வரின் விளி ஏலா. எ-று.

உ-ம் :—அவையாவன-ஆடூஉ, மகடூஉ, நீ என்பன. [௬]

**120.** அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.

இகர ஈற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அளபெடை மிக்க இகர ஈற்றுப் பெயர் இயற்கைய வாகிய செய்தி யுடைய. எ-று.

உ-ம் :—தோழீஇ என்பது விளிக்கண்ணும் அவ்வாறே வரும். செயற்கை என்றதனான் விளிக்கண் வரும் ஓசை வேறுபாடு அறிந்து கொள்க, [எ]

**121.** முறைப்பெயர் மருங்கின் ஐயெ னிறுதி
ஆவொடு வருதற் குரியவு முளவே.

ஐகார வீற்று முறைப் பெயர்க்கண் வரும் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—முறைப் பெயர்க்கண் வரும் ஐகார ஈறு, ஆய் ஆகி வருதலன்றி, ஆ வோடு வருவதற்கு உரிய பெயரும் உள. எ-று.

உ-ம் :—அன்னை, அன்னாய் என வருதலேயன்றி, அன்னா எனவும் (வரும்.) உம்மை இறந்தது தழீஇயிற்று. [அ]

**122.** அண்மைச் சொல்லே யியற்கை யாகும்.

இத்திணைக்கண் வரும் எல்லாவீற்றுப் பெயரும் அண்மைக்கண் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இச்சூத்திரம் முன்னும் பின்னும் நோக்கி நிற்றலிற் சிங்க நோக்காகிக் கிடந்ததென்று கொள்க.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட உயிரீற்றுப் பெயரும், இனி யோதுகின்ற புள்ளியீற்றுப் பெயரு(ம் அஃறிணை)ப் பெயரும் அண்மைக்கண் இயல்பாகி விளியேற்கும். எ-று. னகர ஈறு சிறப்பு விதி பெறுதலின், அஃதொழிந்த ஏனைய கொள்ளப்படும்.

உ-ம் :—நம்பிவாழி; நங்கைவாழி; வேந்துவாழி; கோவாழி; மாதர் கூறு; அண்ணல் கூறு;..............தும்பி கூறு : அன்னங் கூறு; கானல் கூறு என வரும். பிறவும் அன்ன. ஆவு மானியற் பார்ப்பன மாக்களும் என்பதும் அண்மை விளி. பிறவும் அன்ன. [கூ]

**123.** னரலள வென்னு மந்நான் கென்ப
புள்ளி யிறுதி விளி(கொள்) பெயரே.

இ-ள் :—உயர்திணைப் பெயருள், புள்ளியீறாகி விளி கொள்ளும் பெயர் ன, ர, ல, ள, என்னும் ஈற்றினை யுடைய அந் நான்கென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உயர்திணை என்பது அதிகாரத்தான் வந்தது. ன, ர, ல, ள என்பன ஆகுபெயராய் அவ் வீற்றினை யுடைய பெயர்க்குப் பெயராயின. உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும். [க0]

**124.** ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா.

ஐயமறுத்தலே நுதலிற்று.

இ-ள் :—உயர்திணைப் பொருட்கண் மேற் சொல்லப்பட்ட நான்கீற்றுப் பெயரும் ஒழிய, ஏனையீற்றுப் பெயர்கள் விளி யேலா. எ-று.

உ-ம் :—அவை :—யான், யாம், நாம், எல்லோரும், எல்லீரும் எல்லாம், தாம் என்பன. [கக]

**125.** அவற்றுள்,
அன்னெ னிறுதி ஆவா கும்மே.

நிறுத்த முறையானே னகர ஈறு விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள், அன் என்னு மீற் றினையுடைய பெயர் ஆ என விளி ஏற்கும். எ-று.

ஈறென்றது ஈற்றினையுடைய பெயரை.

உ-ம் :—சோழன், சோழா; வெற்பன், வெற்பா; சாத்தன், சாத்தா எனவரும். [கஉ]

**126.** அண்மைச் சொல்லிற் ககர மாகும்.

எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அன் என்னுமீறு அண்மைக்கண் அகரமாகி விளியேற்கும். எ-று.

அன் என்பது அதிகாரத்தான் வந்தது.

உ-ம் :—சோழ, சாத்த, வெற்ப என வரும். [கங]

**127.** ஆனெ னிறுதி யியற்கை யாகும்.

இதுவும் னகர வீற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயர்திணைப் பொருள் உணர்த்தும் னகார வீற்றுப் பெயருள் ஆன் என்னும் ஈற்றுப் பெயர் இயல்பாகி விளியேற்கும். எ-று.

உ-ம் :—சேரமான், மலையமான் என்பன விளிக்கண்ணும் அவ்வாறே வரும். [கச]

**128.** தொழிலிற் கூறும் ஆனென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

ஆனீற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—தொழிலாற் கூறப்படும் ஆன் ஈற்றுப் பெயர் ஆய் என வரும் விளித்தற் கண்ணும். எ-று.

உ-ம் :—உண்டான், வந்தான் என்னுந் தொழிற்பெயர் உண்டாய், வந்தாய் என விளி ஏற்கும். தொழில் என்றதனாற் குறிப்பு வினைப்பெயருங் கொள்க. உடையான், கழலான் என்பன உடையாய், கழலாய் என வரும். மீண்டும் விளி வயி னான என விதந்தோதினமையால், தொழிலால் வருஞ் சொல் முன்னிலை யாகிய வழியும் உண்டாய் எனவரும்: அதன்று இது என்பதூஉம், அதனோடு இதனிடை ஓசை வேறுபாடு உளது என்பதூஉம் அறிவித்தற்கு எனக் கொள்க. [கரு]

**129.** பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.

ஆனீற்றுப் பெயருள் பண்புப் பெயர்க்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பண்பினால் பெற்ற ஆன் ஈற்றுப் பெயரும் ஆய் என விளி ஏற்கும். எ-று.

உ-ம் :—கரியான், கொடியான் என்பன கரியாய், கொடியாய் எனவரும். கரியான் எனவும் விளியேற்குமாலெனின், அவ்வாறு வருவது பண்பு குறியாது அப் பொருட்கு இடுகுறியாகி வந்ததென்க. [கசு]

**130.** அளபெடைப் பெயரே அளபெடை யியல.

னகர ஈற்றுள் அளபெடைப்பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—னகார இறுதி அளபெடைப் பெயராயின் இயல்பாகி விளி ஏற்கும். எ-று.

உ-ம் :—கிழாஅன், கோஒன் என்பன விளிக்கண்ணும் அவ்வாறே வரும். [கஎ]

**131.** முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே.

னகார ஈற்றுள் முறைப்பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—னகார ஈற்றுள் முறைமை குறித்த பெயர் ஏகாரத்தோடு விளி ஏற்கும். எ-று.

உ-ம் :—மகன் என்பது மகனே என வரும்.

ஒப்பின் முடித்தல் என்பதனான் முறைமை சுட்டாத மகன் என்னும் பெயரும் ஏயொடு சிவணும் என்று கொள்க. §"பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே" என வரும். ‡சான்றாள ரீன்ற தகாஅத் தகாஅ மகாஅ-ஈன்றாட் கொருபெண் இவள் என ஆகாரமாகியும் வரும். வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால் பிற பெயர்க்கண்ணும் ஏ ஓடுவருதல் கொள்ளப்படும்.

*கூந்தன்மா வூர்ந்து குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லியஞான் றுண்டால்—யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு. எனவும், கோவே எனவும் வரும்.

இவை செய்யுள் மருங்கினும் என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்ளினும் அமையும். [௧௮]

**132.** தானென் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி யனைத்தும் விளிகோ ளிலவே.

ணகார ஈற்றுப் பெயர் விளி ஏலாதன உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—தான்; அவன், இவன், உவன், அத்தன்மையன் அத்தன்மையான், அன்னான், அனையான்; யான்; யாவன் என வருவன விளி ஏலா. எ-று. [௧௯]

**133.** ஆரும் அருவும் ஈரொடு சிவணும்.

நிறுத்த முறையானே உயர்திணைக்கண் ரகரம் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஆர், அர் என்னும் ஈற்றுப் பெயர் ஈர் என்பதனோடு சிவணும். எ-று.

---

§ குறு. ௧௫௬. ‡ பரி. ௮-ஆம் பாடல். * முத்தொள்ளாயிரம்.

உ-ம் :—பார்ப்பார், கூத்தர், உடையர் என்பன பார்ப்பீர், கூத்தீர், உடையீர் என வரும். **வந்தது கொண்டு வாராதது முடித்தல்** என்பதனால் பெண்டிர், பெண்டீர் எனவும் வரும். [௨௦]

**134** தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட ஈறுகள் தொழிற் பெயராயின் ஏகாரம் வருதலும் குற்றமில்லை என்பார் அறிந்தோர். எ-று.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

உ-ம் :—வந்தார், வந்தவர் என்பன வந்தீர் என வருதலேயன்றி, வந்தாரே, வந்தவரே எனவும் வரும். ஈரோடு சிவணும் என்றோதி, ஏகாரம் வருதலுங் குற்றமில்லை என்றதனான் அதனோடு அடுத்து வருதலும் கொள்க. வந்தீரே எனவும் வரும். [௨௧]

**135.** பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.

ரகார ஈற்றுப் பண்புகொள் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ரகார ஈற்றுப் பண்பினான் வரும் பெயரும் தொழிற்பெயர் போல விளி ஏற்கும். எ-று.

உ-ம் :—கரியார், கரியவர் என்பன கரியீர் என வருதலேயன்றிக் கரியாரே, கரியவரே, கரியீரே எனவும் வரும். [௨௨]

**136.** அளபெடைப் பெயரே அளபெடை யியல.

ரகார ஈற்றுள் அளபெடைப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.—ரகார ஈற்றுள் அளபெடைப் பெயர் மேற்சொல்லப்பட்ட அளபெடைப் பெயரே போல இயல்பாகி விளியேற்கும். எ-று.

உ-ம் :—மகாஅர், சிறாஅர் என்பன விளிக்கண்ணும் அவ்வாறே வரும். [௨௩]

**137.** சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.

ரகார ஈற்றுள் விளி ஏலாதன உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டு முதலாகிய பெயர் மேற் சொல்லப்பட்ட சுட்டு முதற் பெயர் போல விளி ஏலா. எ-று.

உ-ம்:—அவர், இவர், உவர், அத்தன்மையர், அத்தன்மையார் என்பன விளி ஏலா. [௨௪]

**138.** நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை யிரண்டும் அவற்றியல் பினவே.

இதுவும் அது.

நும்மின் திரிபெயராவது நீயிர். வினாவின் திரிபெயராவது வினாவாகிய பெயர். அது யார், யாவர் என்பது. அம்முறையாகிய இரண்டு பெயரும் விளியேலா என்றவாறு. இவ் வீற்றினுள் முறைப் பெயர் கூறாதது என்னையெனின், அது பொது விதியான் அடங்குதலின் என்க. [௨௫]

**139** எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற வீற்றயல் நீட்டம் வேண்டும்.

லகார ளகார ஈற்றுப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—லகார, ளகார ஈற்றுப் பெயர் விளி ஏற்புழி ஈற்றயல் நீட்டம் கொடுத்தல் வேண்டும். எ-று.

உ-ம் :—குருசில், தோன்றல், மக்கள் என்பன குருசீல், தோன்றால், மக்காள் எனவரும். [௨௬]

**140.** அயல்நெடி தாயின் இயற்கை யாகும்.

இ-ள் .—லகார, ளகார ஈற்றுப் பெயர் விளி ஏற்புழி, ஈற்றயல் நெடிதாயின் இயல்பாகி விளி ஏற்கும். எ-று.

உ-ம் :—பெண்பால், கோமாள் என்பன விளிக்கண்ணும் அவ்வாறே வரும். [௨௭]

141. வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆளென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

ளகார ஈற்றுள் ஒருசாரன விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—தொழிற்பெயர்க்கண்ணும் பண்புப் பெயர்க்கண்ணும் வரும் ஆள் என் இறுதி ஆய் ஆகும் விளித்தற்கண். எ-று.

பெயரென்பது அதிகாரத்தான் வந்தது. ஈண்டு விளிவயினான என்பதற்கு மேல் உரைத்தவாறே உரைக்க.

உ-ம் :—உண்டாள், கரியாள் என்பன உண்டாய், கரியாய் எனவரும். [உஅ]

142. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல.

ளகார வீற்றுள் முறைப்பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ளகார ஈற்றுள் முறைப் பெயர்ச்சொல் னகார ஈற்றுள் முறைப் பெயர் போல விளி ஏற்கும். எ-று.

உ-ம் :—மகள், மகளே எனவரும். ஒப்பின் முடித்தல் என்பதனால் முறைமை சுட்டாத மகள் என்பதும் ஏகாரம் பெற்று விளி ஏற்கும். * அகவன் மகளே அகவன் மகளே என வரும். [உகூ]

143. சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

ளகர வீற்றுப் பெயருள் விளி ஏலாதன உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டெழுத்தை முதலாக உடைய பெயரும், வினாவாகிய பெயரும் மேற்சொல்லியவாறு போல் விளி ஏலா. எ-று.

உ-ம் :—அவள், இவள், உவள், அத்தன்மையள், அத்தன்மையாள், யாவள் என்பன விளி ஏலா என்றவாறு. [௩௰]

* குறு. உ௩.

**144.** அளபெடைப் பெயரே அளபெடை யியல.

லகார ளகார ஈறுகள் அளபெடைக்கண் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—லகார, ளகார ஈற்றுள் அளபெடைப்பெயர் மேற் சொல்லப்பட்ட அளபெடை போல இயல்பாகும். எ-று.

உ-ம்.—வலம்புரித் தடக்கை மாஅல்; மேவார்த் தொலைத்த விறன்மிகு வேஎள் என வரும். [௩௧]

**145.** கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை.

அஃறிணைப் பொருள் உணரவரும் விரவுப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட ஈற்றின வுடையவாகிய அஃறிணைப் பொருண்மேல் வரும் விரவுப் பெயர் சொல்லப்பட்ட நெறியவாம் விளிக்குங் காலத்து. எ-று.

உ-ம் :—சாத்தன், சாத்தா; சாத்தி, சாத்தீ; குருடன், குருடா; குருடி, குருடீ எனவரும். பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. [௩௨]

**146.** புள்ளியு முயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றிற்
றெளிநிலை யுடைய ஏகாரம் வரலே.

அஃறிணைக்கு உரிய பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—புள்ளியும் உயிருமாகிய எழுத்தினை ஈறாக வுடைய அஃறிணைப் பெயராகி வருவனவெல்லாம் விளிஏற்குங் காலந் தோன்றின், ஏகாரம் வருதல் தெளிநிலை யுடைய. எ-று.

எனவே, பிறவாற்றான் வருவன இத்துணை விளக்கம் இல என்றவாறும். என்பது என் சொன்னவாறோ எனின், அஃறிணைப் பெயர் ஏகாரம் பெற்று விளி ஏற்றல் பெரும்பான்மை: உயர் திணைக்கு ஓதிய வாய்பாட்டால் வருதல் சிறுபான்மை என்ற

வாறு. சாலத் தோன்றின் என்றது அஃறிணைப்பெயர் உயர்திணை போல விளி ஏற்பன சில என்பதூஉம், ஏலாதனவும் ஒருகாலம் பற்றி விலக்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கு எனக்கொள்க.

உ-ம் :—புலியே, வண்டே, மரையே, மானே, மாவே, குயிலே, மரமே எனவரும். தும்பி, தும்பீ எனவும்; யானை, யானாய் எனவும்; வேங்கை, வேங்காய் எனவும்; தென்றல், தென்றால் எனவும்; அரிமான், அரிமானே எனவும் உயர்திணை வகையான் வருவ சிறுபான்மை. [கஙு]

**147.** உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையி னிசைக்கும் வழக்கத் தான.

இருதிணைக்கண்ணும் வரும் விளிவேற்றுமைக் கெல்லாம்
உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இருதிணைக்கண்ணும் விளி ஏற்றுள எனப்பட்ட எல்லாப் பெயரும் ஓதிய அளவையினன்றி மாத்திரை நீண்டு ஒலிக்கும்: சேய்மைக்கண் நின்ற பொருளை விளிக்கும் வழக்கின் கண். எ-று.

எனவே, மேற் சொல்லப்பட்டவற்றுள் நெட்டெழுத்துப் பெற்றன விடநிலைப் பொருட்கண் என்று கொள்ளப்படும். அளபிறந்தன என்றமையான் மூன்று மாத்திரையின் நீண்டு ஒலித்தலும் கொள்க. [கச]

உ-ம் :—சாத்தாஅ, கொற்றாஅ எனவும்; சாத்தாஅஅ, கொற்றாஅஅ எனவும் வரும்.

**148.** அம்ம வென்னும் அசைச்சொன் னீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.

இடைச்சொற்கண் விளிப் பொருண்மை உணர
வருவன உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அம்ம என்னும் அசைச்சொல் நீட்டமாகிய அம்மா என்னும் சொல் அம்முறைப் பெயரொடும் பொருந்தா தாயினும், அதனை விளிப்பொருண்மை உணர்த்துஞ் சொல்லொடு கூட்டிக் கொள்ப அறிவோர். எ-று.

உ-ம் :—அம்மா கொற்று எனவரும். வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால், ஏட, ஏடா ; ஏடி, ஏடீ என வருவனவுங் கொள்க. [நடு]

**149.** தநநு எஎன அவைமுத லாகித்
தன்மை குறித்த னரளவெ னிறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மைவேண் டும்விளி §வேற்றுமை கொளலே.

எஞ்சிய உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—த, ந, நு, எ-என்பன முதலாகிப் பொருண்மை குறித்த, ன, ர, ள என்னும் ஈற்றினையுடைய சொற்களும், அத் தன்மைய பிறவும்........பெயராகி........விளியேற்றலின்மை வேண்டும் ஆசிரியர். எ-று.

அவையாவன :—தமன், தமள், தமர் ; நமன், நமள், நமர் ; நுமன், நுமள், நுமர் ; எமன், எமள், எமர். அன்ன பிறவும் என்றதனால் பிறன், பிறள், பிறர் என வரும். இவை விளி ஏலா.

* விளங்கு மணிக்கொடும் பூணாஅய் நின்னொட்
டிளம்பிடி யொருசூல் பத்தீ னும்மோ.

என்புழி, யகர விளி யேற்றதாலெனின், அவ்வாறு வருவன வழக்குப் பயிற்சி யின்மையின், எடுத்தோதிற்றிலர். ஆயினும் செய்யுண் மருங்கின் என்னும் அதிகாரப் புறனடையால், இந்நிகர வெல்லாம் அமைத்துக் கொள்க.

இவ்விளி வேற்றுமையை முடிக்குஞ் சொல் யாதோ எனின், இஃது எழுவாய் வேற்றுமையது திரிபாகலான், அதற்குப் பயனிலையாகி வருவனவற்றுள் இதற்கு ஏற்புடையன முடிக்குஞ் சொல்லாம் எனக் கொள்க. இவ்வாறு ஒற்றுமை யுடைத்தாகலானே ஒருசார் ஆசிரியர் வேற்றுமை யேழெனக் கொண்டது உணர்க. [நசு]

விளி மரபு முடிந்தது.

இவ்வோத்தினுட் சூத்திரம் உட்பட உரையினது அளவு கிரந்த வகையான் நூற்று முப்பது.

§ விளியொடு கொளலே—ஏனை யுரைப் பாடங்கள். * புறநா. கங0.

**150.** எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், பெயரியல் என்னும் பெயர்த்து. பெயரியல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். கிளவியாக்க முதலாக விளிமரபு ஈறாகத் தொடர்மொழி இலக்கணங் கூறி, இனி, அத்தொடர் மொழிக்கு உறுப்பாகிய தனிமொழி இலக்கணம் கூறுகின்றார். அத் தனிமொழி நான்கினும் பெயர்ச்சொல் சிறந்ததாகலின், இவ்வோத்து முற்கூறப் பட்டது. மேலதனோடு இயையுமிது.

இதனுள் முதற்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், எல்லாச் சொற்கும் உரியதோர் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :— உலகத்தாரான் வழங்கப்பட்ட எல்லாச்சொல்லும் பொருள் குறித்தன. எ-று.

எனவே, பொருளின்றி வழங்குஞ் சொல் இல என்னும் மரபு என்னை, முயற்கோடு எனச் சொல் நிகழுமன்றே; அதனாற் குறிக்கப்பட்ட பொருள் யாங்கது? எனின், அறியாது கடாவினாய், முயல் என்பதற்குப் பொருண்மை காண்டி, கோடு என்பதற்குப் பொருண்மைகாண்டி, இவை இரண்டு பொருளும் தனித்தனி உளவாகலின், இவைதனி மொழிக்கண் பொருள் குறித்து நின்றன; தொடர் மொழியாயுழி, உள்ள பொருளோடு அதன்கண் இல்லாத பொருளை அடுத்தமையான் ஆண்டு இன்றாயிற்று அல்லது, இல்பொருள்மேல் வழக்கின்று என்று கொள்க. அஃதேல், எல்லாச் சொல்லும் பொருள் குறித்து வருமாயின், அசைநிலை, இசைநிறை, ஒரு சொல்லடுக்கு என்பன பொருள் குறித்திலவாலெனின், பொருள் உணர்த்தும் என்னாது குறித்தன என்றமையான், அவையும் சார்ந்த பொருளைக் குறித் தன என்று கொள்க. அன்றியும் எடுத்தோத்துப் பெரும்பான்மை என்று கொள்க. 'இவ்வூரார் எல்லாம் கல்வி உடையர்' என்றவழிக், கல்லாதார் உளராயினும் கற்றார் பலர் என்பது குறித்து நின்றாற் போலக் கொள்க.

இன்னும், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன" என்பதற்குப் பொருள், எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும். எ-று. எனவே, இச்சொல் இப்பொருள் உணர்த்தும் என்னும் உரிமை இல என்றவாறும். என்னை உரிமை இலவாகியவாறு எனின், உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்டதுணையல்லது, இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனப் பொருள் பற்றி வரும் ............மிடுகுறி யென்பது பெறப்பட்டது.

இவ் விடுகுறியான் அடிப்பட்ட சொல்லோடு ஒட்டி மற்றொரு சொற்குப் பெயராகி வருவது காரணக் குறியாம். [க]

**151.** பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்.

இதுவும் சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—சொல்லினாற் குறிக்கப்பட்ட பொருளின் தன்மை ஆராய்தலும், சொல்லின் தன்மை ஆராய்தலும் சொல் தன்னானே ஆகும். எ-று.

உ-ம் :—நிலம் என்பது பொருளின் தன்மை ஆராய்வார்க்கு மண்ணினான் இயன்றதோர் பூதம் என்றாயிற்று. சொல்லின் தன்மை ஆராய்வார்க்குப் பெயர்ச்சொல்லாயிற்று. அதனான் இருபகுதிய சொல் நிலைமை என்றவாறு. [உ]

**152.** தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.

மேற்சொல்லப்பட்ட இரு பகுதியினுட் பொருண்மை நிலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பொருண்மை நிலையாவது இச் சொற்குப் பொருள் இதுவென உணரப் பலபொருளினும் தெரிந்து வேறாகி நிற்றலும், சொல்லப்படு பொருளன்றிச் சொல்லுவான் குறிப்பினாற் பிறிது பொருள் படநிற்றலும் என இருபகுதியை உடைத்து என்று சொல்லுவர். எ-று.

வெளிப்படுநிலை, குறிப்புநிலை எனச் சொற்பொருள் உணர்த்துமாறு இருவகை என்றமையால், இதுவும் சொல் ஆராய்ச்சியாம். அஃது எற்றாற் பெறுதும் எனின், யாதானும் ஒரு சொல்லையும் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனக் குறியிடுவதால், அதன் பொருண்மை உணர வேண்டுதலின் பொருண்மை நிலையும் சொல் இலக்கணம் என்பது உய்த்துணர வைத்தார்.

'தெரிபு வேறு நின்றன' நிலம், நீர், தீ, வளி எனப் பொருள் உணர்த்துவனவும்; உண்டான், தின்றான் எனத் தொழில் உணர்த்துவனவும். குறிப்பிற் றோன்றின—இவன் நெருப்பு, இவன் பசு எனக் குணம் பற்றாமைத் தீமை செய்தான், நன்றிசெய்தான் எனவும்; கொடுமை செய்தாரை வாழ்வாயாக என அப்பொருள் பயவாது பிற பொருள் பயப்பவும் வருவன. [ரு]

**153.** சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே.

சொன்மை நிலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—சொல் என்று சொல்லப் படுவன பெயர்ச் சொல் வினைச்சொல் என இருவகை என்ப ஆசிரியர். எ-று. [சு]

**154.** இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.

இதுவும் அது,

இ-ள்.—இடைச் சொல்லாகக் கிளக்கப் படுவனவும், உரிச் சொல்லாகக் கிளக்கப் படுவனவும் பெயர் வினைகளைச் சார்ந்த இடத்திற் றோன்றும். எ-று.

எனவே, பெயரையும் வினையையும் சாராத வழிக் கூற்று நிகழாது என்றவாறும். இத்துணையும் சொல்லப்பட்டது சொல்லாயிற் பொருள் குறித்து வரும் எனவும்; அது பொருண்மை நிலை, சொன்மைநிலை என இருவகைப் படும் எனவும்; அவற்றுள் பொருண்மை நிலை வெளிப்படுநிலை, குறிப்புநிலை என இருவகைப்

படும் எனவும்; சொன்மைநிலை பெயர், வினை எனச் சிறப்புடைச் சொல் இரண்டும், இடை, உரி எனச் சிறப்பில் சொல் இரண்டும் என நால்வகைப் படும் எனவும்; தனி மொழிக்குப் பொது இலக்கணம் கூறியவாறும். இவற்றுள், பொருண்மைநிலை வழக்கினும், சான்றோர் செய்யுளகத்தும் பயின்று வருதலானும், வழக்குத் தமிழ்நாட்டுப் பிறந்தது தமிழறிவாரை நோக்குதலிலானும், இலக்கணம் இன்றியும் பாகம் உணர்வார் ஆகலானும் எடுத்து ஓதாராயினர். அஃது அற்றாதல் * வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வரா உரிச்சொன் மேன என ஓதிய அதனானுங் கொள்க. சொன்மை நிலை இலக்கணமில்வழி உணர்வரிது ஆதலான் எடுத்து ஓதப்பட்டது. [௫]

**155.** அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கு மோரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே.

நிறுத்த முறையானே பெயர்ச்சொற் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட நான்கு சொல்லுள்ளும் பெயர் என்று சொல்லப் படுபவை ஆராயுங் காலத்து உயர்திணைப் பொருட்கே உரிமையவாகியும், அஃறிணைப்பொருட்கே உரிமையவாகியும், அவ் விரு திணைக்கும் ஒத்த உரிமைய வாகியும் அம் மூன்று வடிவினையுடைய தோன்றுதற்கண். எ-று.

எனவே பெயர்ச் சொல் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் என மூவகைப்படும் என்பதூஉம், அவ்விரு திணைப் பெயர்களையும் உணர்த்தும் என்பதூஉம் பெறுதும். உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும். [௬]

**156.** இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கும்
உரியவை யுரிய பெயர்வயி னான.

இதுவும் பெயர்ச்சொற்கெல்லாம் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

* உரி. ௨.

இ-ள் :—இருதிணையினின்றும் பிரிந்த ஐம்பாற் சொற்கும் பெயர்வயின் உரியவை உரியவாம். எ-று.

இதனாற் சொல்லியது முன் எடுத்து ஓதப்படுகின்ற பெயர்களைப் பால் விரித்து ஓதுகின்றிலம்: பெயர்களுள் அவ்வப் பாற்குரிய பெயரைப் பாலறி கிளவியாகக் கொள்க என்றவாறு. இதனானே பெயர்ச்சொற்கு ஈறு வரையறுக்கப் படாது என்பதூஉம் கூறினாராம். [எ]

157. அவ்வழி,
அவனிவ னுவனென வரூஉம் பெயரும்
அவளிவ ளுவளென வரூஉம் பெயரும்
அவரிவ ருவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னும்
ஆவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே.

நிறுத்த முறையானே உயர்திணைப் பெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட பெயரிடத்து அவன் முதலாகிய சுட்டுப் பெயர் ஒன்பதும், யான் முதலாகிய தன்மைப் பெயர் மூன்றும், யாவன் முதலாகிய வினாவின் பெயர் மூன்றும், ஆய அப்பதினைந்து பெயரும் பால் விளங்க வந்த உயர்திணைப் பெயராம். எ-று.

யான் என்பது ஒருமை உணர நின்றது. [அ]

158. ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த இகர விறுதியும்
நம்மூர்ந்து வரூஉ மிகரவை காரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்

ஆடூஉ மகடூஉ வாயிரு பெயரும்
சுட்டுமுத லாகிய அன்னும் ஆனும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்து மவற்றோ ரன்ன.

இதுவும் அது.

இ-ள் :—ஆண்மை அடுத்த மகன் என்பது முதலாக ஓதப் பட்ட பதினைந்து பெயரும் பால் விளங்க வந்த உயர்திணைப் பெயராம். எ-று.

'ஆண்மை அடுத்த மகன்' என்பது ஆண்மகன். 'பெண்மை அடுத்த மகள்' என்பது பெண்மகள். 'பெண்மை அடுத்த இகர இறுதி' பெண்டாட்டி. இகர இறுதியை யுடையது இறுதி என்றாயிற்று. நம்பி, நங்கை என்பனவற்றிக்கும் ஒக்கும், 'நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரம்' என்பது நம்பி, நங்கை என்பன. 'முறைமை சுட்டா மகனும் மகளும்' என்பது முறைப் பெயரைக் குறியாது உயர்திணைப் பொருட்குப் பெயராகி மகன் மகள் என வரும். மாந்தர், மக்கள் என்னும் பெயராவன மாந்தர் மக்கள் என்னும் பொருட் பன்மை உணர வருவன. 'ஆடூஉ மகடூஉ வாயிரு பெயரும்' என்பது—ஆடூஉ, மகடூஉ என்பன. 'சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் ஆவது' சுட்டெழுத்தை முதலாகவுடைய அன் ஆன் என்னும் சொல்லீறாகி வருவன. அது சினையிற் கூறும் முதலறி கிளவியாகிய பெயர்க்குப் பெயரா யிற்று. அத்தன்மையன் அத்தன்மையான், அன்னன், அனையான் என வருவன. ஏனைச் சுட்டும் ஒட்டிக் கொள்க. இவை உவமை குறியாது முன்னம் சில குணத்தை யடுத்த தன்மையான் எனப் பண்பு குறித்து வரும்.

'அவை முதலாகிய பெண்டென் கிளவி' என்பது சுட்டெழுத்தை முதலாக உடையவாகிப் பெண்மை உணரவரும் சொல். அத்தன்மையள், அத்தன்மையாள், அன்னள், அனையாள் என்பன. 'ஒப்பொடு வரூஉங் கிளவி' உவமிக்கப் படும் பொருளோடு ஒத்துவரும் பெயர். கண்ணன்னன், கண்போல்வான், பொன்னனையான். குரங்கன், பேயன், குரங்கி என்பனவும் அவை.

அஃதேல், அன்னார், அனையார் எனச்சுட்டு முதலாகிய பன்மை உணரவரும் பெயர் கூறாதது என்னையெனின், அவை பெருவழக்கின்மையான் ஈண்டு ஓதிற்றிலராயினும், அன்ன பிறவும் என்பதனாற் கொள்க. [கூ]

**159.** எல்லாரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை யடுத்த மகனென் கிளவியும்
அன்ன வியல என்மனார் புலவர்.

இதுவும் அது.

இ-ள் :—எல்லாரும் என்னும் பெயரும், எல்லீரும் என்னும் பெயரும், பெண்மகன் என்னும் பெயரும் பால் விளங்கவந்த உயர்திணைப் பெயராம். எ-று.

விளையாடு பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்றல் பண்டையோர் வழக்கு. [க௦]

**160.** நிலப்பெயர் குடிப்பெயர் குழூவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் [பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கி னாடியற் பெயரே
இன்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ
டன்றி யனைத்து மவற்றியல் பினவே.

இதுவும் அது.

இ-ள் :—நிலப்பெயர் முதலாக ஓதப்பட்ட அனைத்தும் பால் விளங்க வந்த உயர்திணைப் பெயராம். எ-று.

உ-ம் :—நிலப் பெயராவது இடத்தினாற் பெற்ற பெயர். அது சோணாட்டான், சோணாட்டாள், சோணாட்டார் எனவும் மதுரையான் மதுரையாள், மதுரையார் எனவும் (வருவது.) குடிப் பெயராவது குலத்தினான் ஆகிய பெயர். அந்தணன், அந்தணி, அந்தணர் என்பன. அஃதேல் பாம்பு, நாய், மணி என்பனவும்

அந்தணர்கள் என வருமாலெனின், அவ்வாறு வருவன நூலகத்து ஆள்தல்வேண்டி ஆசிரியன் இட்டதோர் குறி என்று கொள்ளினல்லது பாம்பைப் பிடித்தான் என்னும் பொருட்கண் அந்தணனைப் பிடித்தான் என்றவழிப்பொருள் புலப்படாமையின் அது வழக்கன்று என மறுக்க. *வந்தது கண்டு வராதது முடித்தல் என்பதனான் குடியிற்கு [அருகிய?] பெயராவன சேரன் சோழன் பாண்டியன் என்பன.

குழுவின் பெயராவது பலர் கூடின கூட்டத்தாற் பெற்ற பெயர். அவையத்தார். பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. வினைப் பெயராவது உண்டவன், உண்டவள், உண்டவர் என வரும். உடைப் பெயராவது உடைமையாற் பெற்ற பெயர். அவை நிலமும் பொருளும் கருவியும் பற்றிவரும். குட்டுவன், பூழியன் என்பன குட்ட நாட்டையும், பூழி நாட்டையும் உடையான் என்னும் பொருள்பட வந்தன. முடியான், குழையான், குழையாள் குழையார் என்பன பொருள் பற்றி வந்தன. வேலான், வில்லி என்பன கருவி பற்றி வந்தன. பண்புகொள் பெயராவது பண்பினாற் பெற்ற பெயர். கரியான், நெடியான், நல்லான், தீயான், நல்லாள், நல்லார் எனவரும். பல்லோர்க் குறித்த முறை நிலைப் பெயராவது தாயர், தாய்மார், தந்தையர், தந்தைமார் என்பன.

இது முதலாகிய நான்கு பெயரும் இருதிணைக்கும் பொதுவாகிவருதலின் பல்லோர்க் குறித்த என்றார். அஃதேல், அஃறிணைக்கண்ணும் † "கோடுங்கோற் கோவலர் பின்னின் றுய்ப்ப, இன்னே வருகுவர் தாயர்" என வந்ததாலெனின், ஆண்டு உயர்த்துச் சொல்லுதற்கண் வந்தது. அதற்கு இலக்கணம் "செய்யுண் மருங்கினும்" என்னும் புறநடைச் சூத்திரத்தாற் கொள்ளப்படும். பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயராவது சினையினாற் பன்மை குறித்துவரும் பெயர். கூனர், குருடர் முடவர் என்பன. பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயராவது திணைபற்றிவரும் பன்மைப் பெயர். குறிஞ்சிக் கண்ணியர் குவளை பூண்டு—வெற்பராடும் வெற்புச்சேரிருக்கை என்றவழி உயர்திணைப் பொருளாகிய பன்மை குறித்து வந்தது. வெற்பன்,

* இங்குப் பொருட் பொருத்தம் நோக்கிச், சிதைந்திருந்த சில வரிகளிடைச் சிறு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. † முல்லைப்பாட்டு க௫, க௬

மலையன், நாடன் என ஒருமைகுறித்து வருவன உளவாலெனின், அவை அந்நிலத்துத் தலைமகனைக் குறிக்கில் உடைப் பெயராம். அந்நிலத்துள்ள மாந்தரைக் குறிக்கில் இருதிணைக்கும் பொதுவாம் வெட்சியார், கரந்தையார் என்பனவும் அவை. வெட்சியான், கரந்தையான் என வாராதோ எனின்; அவ்வாறு வழக்கு வரின், அத்திரளின் உள்ளான் என்னும் பொருள்பட வரினல்லது நிரைகோடல், மீட்டல், தடுத்து விடுத்தல் என்பன ஒருவனாற் செய்யப் படாமையானும், வெட்சியாள், கரந்தையாள் எனப் பெண்பால் உணரவரும் வழக்கின்மையானும் திணையாற் பெறும் பெயர் பன்மை குறித்து வருதல் பெரும்பான்மை என்று கொள்க. சிறுபான்மை ஒருமை குறித்துவரின், அன்னபிறவாற் கொள்ளப்படும். கூடிவரு வழக்கி னுடியற் பெயராவது கூடியியலும் வழக்கின் வழங்கும் இயற்பெயர் என்றவாறு. இயற் பெயராவது ஒரு பொருட்கு இடுகுறியாகிய பெயர்: அஃது இருதிணைக்கும் உரித்தாதலின் விரவுப் பெயரென வேறெடுத்து ஓதினார். ஈண்டு அப் பெயருடையார் பலரை ஒரு வினையாற் சொல்லுங் காலைத் தொகுத்துக்கூற வேண்டுதலின் ஈண்டு ஓதப்பட்டது. சாத்தர் என்னும் பெயருடையார் இருவர் மூவர் சேரவந்துழிச் சாத்தான் வந்தான் சாத்தான் வந்தான் எனத் தனித்தனி கூறின் பொருள் வேற்றுமை உணர்த்தாது. ஒரு பொருளை இருகாற் சொன்னாற் போலப் படும். ஆண்டுச் சாத்தன்மார் வந்தார், சாத்திமார் வந்தார், எனக் கூறுதல் வேண்டுதலானும், அப்பொருள் உயர்திணை ஆதலானும் ஈண்டு ஓதப்பட்டது. இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயராவது இத்துணைவர் என எண்ணினான் இயன்ற பெயர். ஒருத்தி, ஒருவன், இருவர், மூவர் என்பன. [கக]

**161.** அன்ன பிறவு முயர்திணை மருங்கிற்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

உயர்திணைப் பெயர் புறநடைவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேல் எடுத்து ஓதப்பட்டன போல்வன பிறவும், உயர்திணைப் பொருளிடத்து ஒருமை பன்மை எனப் பால்விளங்க வரும் எல்லாப் பெயரும் உயர்திணையிடத்த. எ-று.

உ-ம் :—பெண்டிர், பெண்டுகள் என்பனம், அத்தன்மையர், அத்தன்மையார் என்பனம், ஏனாதி, அமைச்சன், படைத்தலைவன் எனச் சிறப்புப் பற்றிவரும் பெயரும், நாயன், நாச்சி எனத் தலைமைபற்றி வரும் பெயரும், அடியான், அடியாள் என இழிபு பற்றி வரும் பெயரும், ஆசிரியன், புலவன் எனக் கல்விபற்றி வரும் பெயரும், குழலள், குழலாள், இடையாள், தோளான் என உறுப்புப் பற்றி வரும் பெயரும், ஆதிரையான் ஓணத்தான் வேனிலான் எனக் காலம் பற்றி வரும் பெயரும், பிறன், பிறள், பிறர், நுமன், நுமள், நுமர், தமன், தமள், தமர் என்பனவும் பிறவும் (ஆய) உயர்திணைப் பொருட்கே உரியவாகி வரும் பெயரெல்லாம் இதுவேயாகக் கொள்க. [கஉ]

**162.** அதுஇது உதுவென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே.

நிறுத்த முறையானே அஃறிணைப் பெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அது முதலாக ஓதப்பட்ட பதினைந்து பெயரும் பாலறிய வந்த அஃறிணைப் பெயராம். எ-று.

உ-ம் :—அது, இது, உது ; அஃது, இஃது, உஃது ; அவை, இவை, உவை; அவ், இவ், உவ் ; யாது; யா; யாவை என வரும். [கங]

**163.** பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் [பெயரோடு
ஒப்பி னாகிய பெயர்நிலை உளப்பட
அப்பா லொன்பதும் அவற்றோ ரன்ன.

இதுவும் அது.

பல்ல, பல, சில என்னும் பெயராவன பல்ல, பல, சில என்பன. உள்ள, இல்ல என்னும் பெயராவன உள்ள, இல்ல என்பன. வினைப் பெயர்க் கிளவியாவது வினையானாகும் பெயர். வந்தது, உழுதது என்பன வினையினான் இப் பொருட்குப் பெயராகி வந்தன. பண்பு கொள் பெயராவது பண்பினைக் கொண்ட பெயர். கரியது, காரி, வெள்ளை எனப் பண்பினைக் கொண்ட பொருட்குப் பெயராயின. இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக் குறிப் பெயராவது இத்துணை என வரையறுத்து உணர்த்தும் எண்ணுக் குறிப் பெயராம். அவை எண்ணப் பட்ட பொருண் மேல் வருவனவும், எண்ணுப் பெயராம்; எண்ணின் பெயரும் எண்ணுப் பெயராம். நீ தந்த காணம் ஆயிரம் என்றவழி, எண்ணப்பட்ட பொருண்மேல் வந்தது. நாலிரண் டெட்டு என்றவழி எண்ணின்மேல் வந்தது. ஒப்பினாகிய பெயர்நிலை என்பது ஒப்புப் பற்றி வருவது. பொன் போல்வது, பொன்னனையது; யானைப்போலி என்பன. அப்பால் ஒன்பதும் அவற்றோரன்ன என்பது அக்கூற்று ஒன்பதும் அஃறிணைப் பாலறி சொல்லாம் என்றவாறு. [கச]

**164.** கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே.

இதுவும் அது.

இ-ள் :—கள் என்னுஞ் சொல்லோடு சிவணிய அவ் அஃறிணைப் பொருண்மேல் வரும் இயற் பெயர் பலவறி சொற்குக் கொள்ளும் இடனுடைய. எ-று.

என்றமையாற் சிவணாத இயற் பெயர் பால் விளங்காது என்றவாறும். ஆக்கள், தெங்குகள் எனவரும். [கரு]

**165.** அன்ன பிறவும் அஃறிணை மருங்கிற்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

அஃறிணைப் பெயர்க்கெல்லாம் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டன போல்வன பிறவுமாகி அஃறிணைப் பொருட்கண் பன்மையும் ஒருமையுமாகிப் பால் விளங்க வந்த எல்லாப் பெயரும் அஃறிணையிடத்த. எ-று.

உ-ம் :—உள்ளது, இல்லது, பிறிது, பிற, அத்தன்மையது, அத்தன்மைய. இவையும் இவை போல்வனவும். [கசு]

**166.** தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே.

மேற் பால் விளங்குவன கூறினர். இனிப் பால் விளங்காத அஃறிணை இயற்பெயர் பாலுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அஃறிணைப் பொருண் மேல் வரும் இயற் பெயர் ஒருமையும், பன்மையும் தெரிநிலை யுடையவாம் வினையொடுவரின். எ-று. அல்லது பால் விளங்கா என்றவாறு.

உயர்திணைப் பொருண்மேல் விரவி வரும் இயற் பெயர் ஒருமையும் பன்மையும் தோன்ற நிற்றலின் வேறோதப்பட்டது. இவை பொருளும், உறுப்பும், பண்பும், தொழிலும், இடமும், காலமும் பற்றி வரும்.

உ-ம் :—ஆ, தெங்கு என்பன பொருள். இலை, பூ, என்பன உறுப்பு. கருமை வட்டம் என்பன பண்பு. உண்டல், ஓடல் என்பன தொழில். அகம், புறம் என்பன இடம். யாண்டு, திங்கள் என்பன காலம். ஆ வந்தது என்றவழி ஒன்று என்பதூஉம், வந்தன என்றவழிப் பல என்பதூஉம் உணர்த்தியவாறும், அவ்விரு ஈற்றுக்கும் பொதுவாகி நின்றவாறும் கண்டு கொள்க, பிறவும் அன்ன. [கஎ]

**167.** இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையிற்
றிரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நிலையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே.

நிறுத்த முறையானே இருதிணைக்கும் உரிய பெயர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயர்திணைப் பெயர்ச் சொல், அஃறிணைப் பெயர்ச் சொல் என இருதிணைச் சொற்கும் ஒத்த உரிமையினின்றும் திரிந்து பொருள் வேறுபடூஉம் எல்லாப் பெயரும் நினையுங் காலைத் தத்தம் மரபின் வினையொடு கூடியல்லது பால் விளங்குந் தன்மை இல. எ-று.

உ-ம் :—பால் எனவே திணையும் அடங்கும். அவையாவன இயற்பெயர் முதலாக முன் எடுத்து ஓதுகின்ற பெயர். அவற்றுள், சாத்தன் என்னும் பெயர் உயர்திணை ஆண் பாற்கும் அஃறிணை ஆண்பாற்கும் இடுகுறியாகி வழங்கு மாதலின், அது வந்தான் என்பதனோடு தொடர்பு பட்டுழி உயர்திணை எனவும், வந்தது என்பதனோடு தொடர்பு பட்டுழி அஃறிணை எனவும் நின்றவாறு கண்டு கொள்க. பிறவுமன்ன. இச்சூத்திரம் எதிரது நோக்கிற்று. [கஅ]

**168.** நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான.

மேலதற்கு ஓர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—தத்தம் மரபினாற் பால் உணர வரூஉம் வினைச் சொல்லன்றி நிகழ் காலத்தை உணர நின்ற பலரை வரைந்த செய்யும் என்னும் முற்றுச் சொல்லானும் உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்து: அப்பால் தெரிய வரும் தொழிலின் கண். எ-று.

நிகழூஉ நின்ற என்பதனைப் பெயரெச்சமாகவும், பால் வரை கிளவி என்பதனை வினைத்தொகை யாகவுங் கொள்க. உம்மை எச்சவும்மை யாகலான், அஃறிணை யொருமை தோன்றலும் உரித்தென்று கொள்க.

உ-ம் :—சாத்தன் யாழெழூஉம், சாத்தி சாந்தரைக்கும் என்ற வழி உயர்திணை என்பது பெறப்பட்டது. சாத்தன் புல்மேயும், சாத்தி புல் மேயும் என்றவழி அஃறிணை என்பது பெறப்பட்டது.

**169.** இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீரே நீயெனக் கிளந்து
சொல்லிய அன்ன பிறவு மாஅங்கு
அன்னவை தோன்றி னவற்றொடுங்
[கொளலே.

**மேற்சொல்லப்பட்ட இருதிணைக்கு முரிய சொல் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—இயற் பெயர் முதலாக எடுத்து ஓதப்பட்டனவும், எடுத்து ஓதப்படாத அத்தன்மைய பிறவும் இருதிணைப் பொருண்மையும் உணரத் தோன்றின், அவ்விருதிணையோடுங் கொள்க. எ-று. ஒரு திணைமேற் கொள்ளற்க என்றவாறாயிற்று.

இயற் பெயராவது ஒரு பொருட்கு இடுகுறியாகி வழங்கும் பெயர். மேற் சினைப் பெயர் கூறுகின்றா ராதலின் இதனை முதற் பெயர் என்று கொள்க. சினைப் பெயராவது உறுப்பின் பெயர். சினைமுதற் பெயராவது சினையையும் முதலையும் உணர்த்தும் பெயர். முறைப் பெயராவது பிறப்பு முறை பற்றி வரும் பெயர். தாம், எல்லாம், நீர் என்பன பன்மை உணர்த்தும் பெயர். தான், நீ என்பன ஒருமை யுணர்த்தும் பெயர். அன்ன பிறவும் ஆவன பிராயம் பற்றி வரும் பெயரும், இடம் பற்றி வரும் பெயரும், தொழில் பற்றி வரும் பெயரும் பிறவும். [௨௦]

**170.** அவற்றுள்
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின.

மேற் சொல்லப்பட்ட பெயர் விரிவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள் இயற் பெயர் நான்கு வகைப் படும், சினைப் பெயர் நான்கு வகைப்படும், சினை

முதற் பெயர் நான்கு வகைப்படும், முறைப் பெயர் இரண்டு வகைப்படும், ஏனைப் பெயர் ஓதிய வாய்பாட்டன. எ-று. [உக]

**171.** அவைதாம்
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென்
றந்நான் கென்ப இயற்பெயர் நிலையே.

நிறுத்த முறையானே இயற்பெயர் நான்கும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட இயற் பெயராது நிலைமை யாவது இருதிணைக்கண்ணும் பெண்மைப் பொருண்மையைக் குறித்த இயற் பெயரும், ஆண்மைப் பொருண்மையைக் குறித்த இயற் பெயரும், பன்மைப் பொருண்மையைக் குறித்த இயற் பெயரும், ஒருமைப் பொருண்மையைக் குறித்த இயற் பெயரும் என அந்நான்கு. எ-று.

பன்மை இயற் பெயர் என்றாராயினும் உயர்திணைப் பன்மை இயற்பெயர், பால் தோன்றலின், அஃதொழித்து ஏனையது கொள்ளப்படும். அவ்வாறாதல் வருகின்ற சூத்திரங்களானும் விளங்கும். இவ்வுரை வருகின்ற சூத்திரங்கட்கும் ஒக்கும்.

உ-ம் :—பெண்மை குறித்த பெயர் சாத்தி. ஆண்மை குறித்த பெயர் சாத்தன். ஒருமை குறித்த பெயர் கோதை. பன்மை குறித்த பெயர் யானை. பிறவும் அன்ன. [உஉ]

**172.** பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச்சினைப்பெயரென்
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே.

சினைப் பெயர் நான்கும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப் பட்ட சினைப் பெயராது நிலைமை யாவது பெண்மைப் பொருண்மைக்கண் வரும் சினைப் பெயர்,

ஆண்மைப் பொருண்மைக்கண் வரும் சினைப் பெயர், பன்மைப் பொருண்மைக்கண் வரும் சினைப் பெயர், ஒருமைப் பொருண்மைக்கண் வரும் சினைப்பெயர் என நான்கு. எ-று.

உ-ம்:—முலை என்பது பெண்மை குறித்து நின்றது. மோவாய் என்பது ஆண்மை குறித்து நின்றது. கை என்பது ஒருமை குறித்து நின்றது. தலை என்பது பன்மை குறித்து நின்றது. [உ௩]

173. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று
அந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

சினைமுதற் பெயர் நான்கும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—பெண்மை சுட்டிய சினை முதற் பெயர் முதலாகிய நான்கும் சினை முதற் பெயர் நான்கு மாவன. எ-று.

ஈண்டுச் சினை முதற் பெயர் என்றமையான் முதலைக் குறித்த பெயரும் சினையைக் குறித்த பெயரும் அன்றி, முதலையும் சினையையும் குறித்த பெயர் என்று கொள்ளப் படும்.

உ-ம்:—முடத்தி என்பது பெண்மையைக் குறித்தது. முடவன் என்பது ஆண்மையைக் குறித்தது. செவியிலி என்பது ஒருமையைக் குறித்தது. தூங்கல் என்பது பன்மை குறித்தது. [உ௪]

174. பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயரென்
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே.

முறைப் பெயர் இரண்டும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—பெண்மைப் பொருண்மையைச் சுட்டிய முறைப் பெயரும், ஆண்மைப் பொருண்மையைச் சுட்டியமுறைப் பெயரும் என இருவகையும் முறைப் பெயர் இரண்டுமாவன. எ-று.

உ-ம் :—தாய் என்பது பெண்மை குறித்தது, தந்தை என்பது ஆண்மை குறித்தது. பிறவுமன்ன. [௨௫]

175 பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கு மொருத்திக்கும் ஒன்றிய நிலையே.

பெண்மைப் பெயர் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பெண்மை குறித்த எல்லாப் பெயரும், அஃறிணைப் பெண்பாலாகிய ஒன்றற்கும், உயர்திணைப் பெண்பாற்கும் ஒத்த நிலைமைய. எ-று.

மேல், நினையுங் காலைத் தத்தம் மரபின்—வினையோ டல்லது பால்தெரி பிலவே (க௮.) என்றமையான், உயர்திணைவினை கொண்டவழி உயர்திணை எனவும், அஃறிணைவினை கொண்டவழி அஃறிணை எனவும் கொள்க. இவ்வுரை வருகின்ற சூத்திரங்கட்கும் ஒக்கும்.

உ-ம் :—சாத்தி வந்தது, முலை எழுந்தது, முடத்தி வந்தது, தாய் வந்தது என்றவழி அஃறிணைப் பொருண்மை உணர்த்தின. சாத்தி வந்தாள், முலை யெழுந்தாள், முடத்தி வந்தாள், தாய் வந்தாள் என்றவழி உயர்திணைப் பொருள் உணர்த்தின. அஃதேல், முலை எழுந்தது எனத் தன் வினையான் வரின் அஃறிணைப் பெயரேயாம் பிற எனின், முலை என்பது இரு திணைப் பொருட்கும் உள்ளதோர் உறுப்பாகலின், ஆண்டுத் திணை தெரியாமற் பொதுப்பட நிற்கும், அது முதல் வினையோடு முடியினல்லது திணை விளங்காது என்க. [௨௬]

176. ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே

ஆண்மைப் பெயர் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஆண்மை குறித்த பெயரெல்லாம் அஃறிணை ஆண் பாலாகிய ஒன்றற்கும், உயர்திணை ஆண்பாலிற்கும் ஒத்த நிலைமைய. எ-று.

உ-ம் :—சாத்தன் வந்தான், மோவாய் எழுந்தான், முடவன் வந்தான், தந்தை வந்தான் என்றவழி உயர்திணை ஆயின.

சாத்தன் வந்தது, முடவன் வந்தது, தந்தை வந்தது எனவும், முடங்குபுற விறலின் மோவா யேற்றை எனவும் அஃறிணைப் பொருண்மை உணர்த்தின. [உஎ]

177. பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவ ரென்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே.

பன்மை குறித்த பெயர் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பன்மை குறித்த பெயர் எல்லாம் அஃறிணை ஒருமை, பன்மைக்கும், உயர்திணை ஆண்பால் பெண்பாற்கும் ஒத்த நிலைமைய. எ-று.

உ-ம் :—யானை வந்தது, தலை முடித்தது, தூங்கல் வந்தது என அஃறிணை ஒருமை ஆயின. யானை வந்தன, தலை முடித்தன, தூங்கல் வந்தன; இவை அஃறிணைப் பன்மை உணர்த்தின. யானை வந்தான், தலை முடித்தான், தூங்கல் வந்தான் என உயர்திணை ஆண்பாலாயின. யானை வந்தாள், தலை முடித்தாள், தூங்கல் வந்தாள் எனப் பெண்பால் ஆயின. [உஅ]

178. ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே.

ஒருமை குறித்த பெயர் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஒருமையைக் குறித்த எல்லாப் பெயரும் அஃறிணை ஒருமைக்கும், உயர்திணை ஆண்பாற்கும் பெண்பாற்கும் ஒத்த நிலைமைய. எ-று.

உ-ம் :—கோதை வந்தது, கையிழந்தது, செவியிலி வந்தது என அஃறிணை ஒருமை உணர்த்தின. கோதை வந்தாள், கையிழந்தாள், செவியிலி வந்தாள் என உயர்திணைப் பெண்பாலாயின. கோதை வந்தான், கையிழந்தான், செவியிலி வந்தான் என உயர்திணை ஆண்பால் உணர்த்தின. கையிழந்தன என அஃறிணைப் பன்மையும் உணர்த்து மாலெனின், அவ்வாறு வருவன சினை வினையுங் காட்டும். திரிபின்றி வரும் உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க. [உகூ]

179. தாமென் கிளவி பன்மைக் குரித்தே.

தாம் என்னும் சொல் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் உரித்து. எ-று.

உ-ம்:—தாம் வந்தார் என உயர்திணை ஆயிற்று. தாம் வந்தன என அஃறிணை ஆயிற்று. [௩௦]

180. தான் என் கிளவி ஒருமைக் குரித்தே.

தான் என்னுஞ் சொல் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்-:—தான் என்னும் சொல் இருதிணைக்கண் ஒருமைக்கு உரித்து, எ-று.

உ-ம்:—தான் வந்தான், தான் வந்தாள் என உயர்திணை ஒருமை உணர்த்திற்று. தான் வந்தது என அஃறிணை ஒருமை உணர்த்திற்று. [௩௧]

181. *எல்லா மென்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே
தன்னு ளுறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்க மில்லை.

எல்லாம் என்னும் சொல் திணை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—எல்லாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மை குறித்த நிலைமைத்து. அஃது உயர்திணைக்கண் உளப்பாட்டுத் தன்மைக்கண் அல்லது, முன்னிலை, படர்க்கையின் ஆகுதலில்லை. எ-று.

உ-ம்:—எல்லாம் வந்தன, எல்லாம் வந்தீர் என்றவழி அஃறிணைப் படர்க்கையினும், முன்னிலையினும் ஆகி வந்தது. எல்லாம் வந்தேம் என்ற வழி, உயர்திணை ஆயிற்று. அஃதேல் நெறிதாழ் இருங்கூந்தல் நின்பெண்டிர் எல்லாம் என உயர்திணைப் படர்க்கையினும், நீஇர் எல்லாம் விளையாடப் போதுமின் என முன்னிலையினும் வருமால் எனின், அவை இலக்கண வழக்கல்ல. நின்பெண்டிர் எல்லாரும் என்னும் சொல் எல்லாம் எனவும், நீங்கள் எல்லீரும் என்பது எல்லாம் எனவும் மரூஉ வழக்காகி வந்தன. மரூஉ வழக்கு நீக்கப்படாது என்பது எழுத்ததிகாரத்து மொழிப் புணர்ச்சி கூறுகின்றுழி, மரூஉமுடிபென

* இதனை இரு சூத்திரமாகக் கொள்வர் ஏனை யுரை யாசிரியர்கள்.

எடுத்தமையாற் கொள்ளப்படும். இலக்கண வழக்காயின் வரும் குற்றம் என்னை யெனின், ஈண்டு விலக்கினமையானும், உயர்திணைக்கண் எல்லாரும், எல்லீரும் என எடுத்தோதினமை யானும், ஆண்டுத் தன்மைப் பெயர் ஓதாமையானும், எழுத்ததிகாரத்துள் எல்லாம் என்னும் பெயர்க்கு அற்றுச் சாரியை விதித்து உயர்திணையாயின் நம்மிடை வரும் என ஆண்டும் உளப்பாட்டுத் தன்மைக் கேற்ற சாரியை வரும் என விதித்தமை யானும், இப்பெயர் உயர்திணைக்கண் உளப்பாட்டுத் தன்மைக்கே உரித்து என்பது இவ் வாசிரியர் கருத்தென்று கொள்க. இதனைச் செய்யுள் மருங்கினும் என்னும் அதிகாரப் புறநடையாற் (கொள்க.) பிறநூல் முடிபு எனத் தழீஇக் கோடலுமாம். [நூஉ]

**182.** நீஇர் நீயென வரூஉங் கிளவி
பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள.

நீஇர், நீ என்னும் பெயர்க்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நீஇர், நீ என்னும் பெயர் திணையும் பாலும் விளங்க நில்லாது இருதிணையையும் உடன் உணர்த்தும் பொருண்மை யுடைய. எ-று.

திணை உணர்த்துவதோர் சொல்லின்மையிற் பால் எனவே திணையும் அடங்கும். [நூநு]

**183.** * அவற்றுள்
நீ என் கிளவி ஒருமைக் குரித்தே
ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நீ என்னும் பெயர் இருதிணைக் கண்ணும் ஒருமை விளக்குதற்கு உரித்து. நீஇர் என்னும் பெயர் பன்மை விளக்குதற்கு உரித்து. எ-று.

உ-ம் :—நீ வந்தாய், நீஇர் வந்தீர் என்றவழிப், பால் விளங்காது ஒருமை பன்மை விளங்கியவாறு கண்டு கொள்க. அன்ன பிறவாற் கொள்ளப்படுவன : முதியான் என்பது பிராயம் பற்றி வரும். அது முதியான் வந்தது, முதியான் வந்தான் என வரும்.

* இதனை இரு சூத்திரமாகக் கொள்வர் ஏனை உரை யாசிரியர்.

சுமையான் என்பது தொழில் பற்றி வந்தது. சுமையான் வந்தது சுமையான் வந்தான் என வரும். பிறவுமன்ன. [ஙச]

**184.** ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கு முரித்தே தெரியுங் காலை.

உயர்திணைப் பொருட்கண் விரவுப் பெயரிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஒருவர் என்று சொல்லப்படுகின்ற பெயர்ச்சொல் உயர்திணைக்கண் ஆண்பாற்கும், பெண்பாற்கும் உரித்து ஆராயுங்காலத்து. எ-று. [ஙரு]

**185.** தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்.

மேலதற்கோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஒருவர் என்னும் பெயரின் தன்மையைக் கருதில், பன்மைவினை கோடற்குப் பொருந்தும். எ-று.

உ-ம் :—ஒருவர் வந்தார். [ஙசு]

**186.** இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்.

பெயரானும் வினையானும் பால் அறியப் படாத சொற்கள் பால் விளங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நீஇர், நீ, ஒருவர் என்று சொல்லப்பட்ட பெயர்கள் இன்னபாற்குரிய என்று அறியவேண்டின் சொல்லுவான் குறிப்பினோடு சேர்த்தி அவற்றின்பின்வரும் சொல்லால் உணர்க. எ-று.

'முன்னம் சேர்த்தி முறையின் உணர்க' என்றமையால், குறிப்பினானும், முறையினானும் உணர்க என்றவாறாகக் கொள்க.

உ-ம் :—* நீயும் தவறிலை என்றவழி, நீ என்பது பெண்பால் உணர நின்றது. § நீயே பிறர்நாடு கொள்ளுங் காலை என்றவழி, ஆண்பால் உணரப்பட்டது. என்போல இன்றுணைப் பிரிந்தாரை உடையையோ நீ என்றவழி, அஃறிணை என்பது உணரப்பட்டது. இவை குறிப்பினான் உணரநின்றன. நீ அரசன், நீ குயத்தி, நீ கடல், வான் என முறைவந்த சொல்லினால், பால் விளங்கின. நீஇர் என்பதற்கும் இவ்வாறே உதாரணம் வந்த

* கலி—ருசு. § புறம்—ருஎ.

வழிக் கண்டுகொள்க. ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுகல் ஆற்ற வழிபடுதல் வல்லுதல் அல்லால் என்றவழி, ஆண்பால் உணர நின்றது. வண்டுசுழல வருவா ரொருவரைக்-கண்டு கலங்கிற் றுயிர் என்பது பெண்பால் உணர நின்றது. இவை குறிப்பினான் உணர நின்றன. ஆயிழையார் ஒருவர், அயில் வேலார் ஒருவர் என்பவை சார்ந்த சொல்லாற் பாலுணரப்பட்டன. பிறவுமன்ன. [நஎ]

**187.** மகடூஉ மருங்கிற் பால்திரி கிளவி
மகடூஉ இயற்கைத் தொழில்வயி னான.

உயர்திணைப் பெண்பாற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மகடூஉ மருங்கில் பால்திரிந்த பெண்மகன் என்னும் சொல் தொழிற் படுங்கால் மகடூஉ இயற்கையாம். எ-று.

உ-ம் :—பெண்மகன் வந்தாள் எனவரும். [நஅ]

**188.** ஆவோ வாகும் பெயருமா ருளவே
ஆயிட னறிதல் செய்யு ளுள்ளே.

இஃது ஒருசார் பெயர்க்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஆகாரம் ஓகாரமாகத் திரியும் பெயரும் உள: அவ்வாறு வரும் சொல் செய்யுளகத்து அறிந்து கொள்க. எ-று. *வில்லோன் காலன கழலே தொடியோள், மெல்லடி மேலவும் சிலம்பே, நல்லோர்யார்கொல் அளியர் தாமே என்றவழி, வில்லான், தொடியாள், நல்லார் என்பன ஓகாரம் பெற்றுவந்தன. உம்மை எச்ச உம்மையாகலான் அகரம் ஓகாரமாகத் திரியும் பெயரும் உள என்றவாறு. கிழவன் கிழவள் என்பன †நாடுகிழவோன், கிழவோடேத்து எனவும் வரும். அஃறிணைப் பொருட்கண்ணும் இவ்வாறு வருவன அறிந்துகொள்க. [நகூ]

**189.** இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான.

ஒருசார் இயற் பெயர்க்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று. எய்தியது விலக்கியதுமாம்.

---

* குறு —எ. † பொருந—உசஅ.

இ-ள் :—இறைச்சிப் பொருள் என்பது செய்யுளுள் உரைக்கப்படுகின்ற பொருட்புறத்தாகிய கருப்பொருள். அஃதாவது மாவும், புள்ளும் முதலாயின. அவற்றின்மேல் இடுகுறியாகி வரும் இயற்பெயர்— அவற்றின்கண் செய்யுளுள் கிளக்கும் இயற்பெயர்ச் சொல்—உயர்திணைப் பொருண்மையைச் சுட்டா : நிலத்து வழித் தோன்றலான. எ-று.

வழியும், மருங்கும் ஒருபொருட்கண் இருசொல் பிரிவின்றி வந்தன. என்பதென் சொன்னவாறெனின், இயற்பெயர் என்பதனை இருதிணைக்கும் பொதுவென ஓதினாராயினும், செய்யுளகத்துக் கருப்பொருள் ஆகி, நிலத்துவழித் தோன்றும் மாவும் புள்ளும், மரமும் முதலாயினவற்றின்மேல் இடுகுறியாகி வரும் இயற்பெயர், அஃறிணைப் பொருளைச் சுட்டுமதல்லது உயர்திணைப் பொருண்மையைச் சுட்டா என எய்தியது விலக்கியவாறு. செய்யுளகத்து இறைச்சிப் பொருட்கண் தோன்றும் இயற்பெயரென ஓதல் வேண்டியது அஃறிணைப் பொருட்கண் சாத்தன் கொற்றன் எனவரும் இயற்பெயர் வழக்கின்கண்......
.......... [ச௰]

**190.** திணையொடு பழகிய பெயரலங் கடையே.

எய்தியது ஒருமருங்கு விலக்குதல் நுதலிற்று.

இ-ள் :—மேல் உயர்திணையைச் சுட்டா என ஓதப்பட்டன அவ்வாறு வருதல், உயர்திணையோடு பழகிப் போந்த பெயர் அல்லாத இடத்து. எ-று.

எனவே பழகிப்போந்த பெயர் இருதிணைக்கும் பொதுவாகி நிற்கும் என்று கொள்க. அவையாவன யானை, சிங்கம், அன்னம் மயில், மாலை என இவ்வாறு வருவன. [சக]

பெயரியல் முடிந்தது.

இவ்வோத்தினுள் சூத்திரம் உட்பட உரையினது அளவு கிரந்த வகையான் முன்னூற்று ஒருபது.

191. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், வினை யியல் என்னும் பெயர்த்து: வினைச் சொல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். நிறுத்த முறையானே பெயர் இலக்கணங் கூறி, அதன்பின் வினையிலக்கணங் கூறவேண்டுதலின், அதன்பிற் கூறப்பட்டது.

இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின், வினைச்சொல் இலக்கணம் பொதுவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வினை என்று சொல்லப்படுவது வேற்றுமை உருபு ஏலாது: காலத்தோடு தோன்றும் ஆராயுங் காலத்து. எ-று.

வினை என்பது தொழில் உணர்த்தும் சொல்லாதலின் அது வேற்றுமை கொண்டு நிற்பதும் ஒருநிலை உண்டு. அந்நிலை ஒழியக், காலத்தோடு பொருந்தி நிற்குமது நம்மால் வினைச்சொல்லென வேண்டப்பட்டது. எ-று.

உ-ம் :—அஃதாவது உண்டலைச் செய்தான் என்பது ஈண்டுத் தின்றான் எனக் காலத்தோடு ஒட்டி நிற்பது. [க]

192. காலந் தாமே மூன்றென மொழிப.

காலத்துக்குத் தொகை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட காலந்தாம் மூன்று என்று சொல்லுவார் ஆசிரியர். எ-று.

அதன் வகை வரும் சூத்திரத்துக் கூறுப. [உ]

193. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை உடைய தோன்ற லாறே.

காலத்திற்கு வகையும் அதற்கு உரியதோர் இலக்கணமும்

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட காலத்தின் பாகுபாடாகிய இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என அம்முக்காலமும் குறிப்பொடும் கொள்ளும் பொருள் நிலைமையை உடைய தோன்று நெறிக்கண். எ-று.

உம்மை எஞ்சி நின்றது. எனவே, காலந் தோற்ற நில்லாது குறித்துக் கொள்ளப் படும் வினைச் சொல்லும் உள என்ற வாறும்.

உ-ம் :—உடையவன் என்பது முன்பு உடையன், இப்போது உடையன், பின்பு உடையன் என மூன்று காலத்திற்கும் வடிவு வேற்றுமைப்பட நில்லாமையின், காலம் குறித்துக் கொள்ளப் பட்டது. [௩]

**194.** குறிப்பினும் வினையினும் நெறிப்படத் [தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ உருபின தோன்ற லாறே.

மேற் கூறப்பட்ட வினையும் வினைக் குறிப்பும் தொகைநிலை வகையாற் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—காலங் குறிக்கப்படும் பொருண்மையினும், தொழிற் பொருண்மையினும் நெறிப்படத் தோன்றிக் காலத்தோடு வரூஉம் வினைச் சொல்எல்லாம் உயர்திணைப் பொருட்கு உரிமைய வாகியும், அஃறிணைப் பொருட்கு உரிமைய வாகியும், அவ்விரு திணைப் பொருட்கும் ஒத்த உரிமையவாகியும் மூன்று வேறுபாட்டான் வரும், புலப்படும் இடத்து. எ-று.

அவற்றுள் உயர்திணையாவன தெரிநிலைவினை, குறிப்புவினை என இருவகைப் படும். அவற்றுள் தெரிநிலை—தன்மைவினை, முன்னிலைவினை, படர்க்கை வினை என மூன்றுவகைப்படும். அவற்றுள் தன்மைவினை உளப்பாட்டுத்தன்மை, தனித்தன்மை என இருவகைப் படும். முன்னிலைவினை ஒருமைவினை, பன்மைவினை என இருவகைப் படும். படர்க்கைவினை ஆடூஉவினை, மகடூஉ வினை, பன்மைவினை என மூவகைப்படும். குறிப்பு வினையும்

அவ்வாறே வரும். அவற்றுள் முன்னிலைவினை இருதிணைக்கும் பொதுவாகலின், அது விரவுவினைக்கண் கூறப்படும். ஏனைய ஈண்டுக் கூறப்படுகின்றன. அஃதேல், இம்மூன்று என்பது எற்றாற் பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். [௪]

**195.** அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற என்னும்
அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே.

நிறுத்தமுறையானே உயர்திணைவினை ஓதுவான் எடுத்துக்கொண்டார்; அவற்றுள். உளப்பாட்டுத் தன்மைவினை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :— அம் முதலாக ஓதப்பட்ட எட்டீற்றினை யுடைய சொல் உயர்திணைப் பொருள் தன்னொடு கூடிய பன்மைவினை உரைக்கும் சொல்லாம். எ-று.

உயர்திணை என்பது 'மூன்றுறக் கிளந்த உயர்திணை யவ்வே' என்பதினின்றும் தந்துரைக்கப்பட்டது. வினை என்பது மேலைச் சூத்திரத்தினின்றும் தந்துரைக்கப்பட்டது. மேற், காலமொடு வரூஉம் வினைச்சொல் என்று ஓதி, ஈண்டுப் பாலுணர்த்தும் சொற்களை ஓதினமையான், வினைச்சொல் நிலைமை மூவகையாம் என்று கொள்ளப்படும்: தொழில் உணர்த்துதலும், காலங்காட்டலும், பால்காட்டலும் என

உ-ம் :— உண்டனம், உண்கின்றனம், உண்பம் என்றவழி, உண் என்பது தொழில் உணர்த்திற்று, டு, கின்று, பு என்பன காலங் காட்டின. அன் சாரியை ஆகிநின்றது. அம் பாலுணர்த்திற்று. பிறவும் இவ்வாறும் என்பது அறிந்து கொள்க. உண்டனம், உண்டாம், உண்டனெம், உண்டேம் இவை இறந்தகாலம் பற்றி வந்தன. உண்கின்றனம், உண்கின்றாம், உண்கின்றனெம், உண்கின்றேம் இவை நிகழ்காலம் பற்றி வந்தன. உண்பம், உண்பாம், உண்பெம், உண்பேம் இவை எதிர்காலம் பற்றி வந்தன. உண்கும், உண்டும், வருதும், சேறும் என்பன எதிர்காலங் குறித்துழி, எதிர்காலத்திற்கு ஏற்கும். நிகழ்காலம் குறித்துழி நிகழ்

காலத்திற்கு ஏற்கும். அம் ஆம் என்பன ஈற்றெழுத்து ஒதினமையான் உடம்பாட்டின் வருதலேயன்றி, மறையினும் வரப்பெறும் என்று கொள்க. உண்ணலம், உண்ணும், உண்ணலெம், உண்ணேம் என வரும். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும். [௫]

**196.** கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ(டு)
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே.

இனித் தன்மை வினை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :-க, ட, த, ற என்னும் அந் நான்கு எழுத்தினையும் ஊர்ந்த குற்றியலுகரத்தோடேகூட என் ஏன் அல் என வரூஉம் ஏழும் தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லாம். எ-று.

தன்வினை உரைக்கும் சொல் என்றது தன்மைச் சொல் என்றது தன்வினையைத் தானே உரைக்கும் சொல் என்று கொள்க.

உ-ம் :—உண்கு, உண்டு, வந்து, சென்று எனவும்; உண்டனென், உண்ணாநின்றனென், உண்குவென்; உண்டேன், உண்கின்றேன், உண்பேன்; உண்பல் எனவும்; உண்ணலென், உண்ணேன் எனவும் வரும். [௬]

**197.** அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

மேற் சொல்லப்பட்டவற்றுள் செய்கு என்பதற்கு ஓர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள் செய்கு என்னும் சொல் வினையோடு முடிந்துழியும், பாலுணர்த்தும் இயற்கையில் திரியாது. எ-று.

உ-ம் :—காண்கு வந்தேன் (எனவரும்). காண்கு யான் எனப் பெயரோடும் முடிதல் இலக்கணம் என்று கொள்க.

அஃதேல், முற்றுச்சொல் பெயர் கொண்டு முடிதல் ஈண்டுப் பொருந்தாதாம் எனின், ஈண்டு முடியினும் என்றதற்குப் பொருள் தொடர்பு படினும் என்றவாறாகக் கொள்க. [எ]

**198.** அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

உயர்திணைப் படர்க்கை வினையுள் ஒருமை வினை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அன் முதலாக ஓதப்பட்ட நான்கும் உயர்திணை ஒருமை உணரவரும் படர்க்கைச் சொல்லாம். எ-று.

உ-ம் :—உண்டனன், உண்கின்றனன், உண்பன்; உண்டான் உண்ணாநின்றான், உண்பான்; உண்ணான் இவை ஆண்பால் உணர வந்தன. உண்டனள், உண்கின்றனள், உண்பள்; உண்டாள், உண்கின்றாள், உண்பாள்; உண்ணாள் இவை பெண்பால் உணர வந்தன. பிறவும் அன்ன. [அ]

**199.** அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அர், ஆர், ப என வரும் மூன்று சொல்லும் உயர்திணைப் படர்க்கைப் பன்மைவினை உணர வரும். எ-று.

*அரு என வந்த உகரம் செய்யுள் விகாரம் என்பதும் ஒன்று. ஒற்றுகிவரும் சொற்கள் உகரம் பெற்று வழங்கப் பெறும் என்பது அறிவித்தற்கு, உடம்பொடு புணர்த்துக் கூறினார் என்பதும் ஒன்று.

உ-ம் :—உண்டனர், உண்ணாநின்றனர், உண்பர்; உண்டார், உண்ணாநின்றார், உண்பார்; உண்ணார்; உண்ப என வரும். [கூ]

**200.** மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப.

மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

* அரு என்பதும் பாடம் போலும். எனினும், ஏட்டில் அர் என்பதே காணப்பட்டது.

இ-ள் :—மார் என்ற வினைச்சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். அது பெயரோடு முடிதலேயன்றி, வினையோடும் முடியும் என்று சொல்லுவார். எ-று.

உ-ம் :—ஆ கொண்மார் வந்தார். இது வினையோடு முடிந்தது. * பாடில் மன்னரைப் பாடன்மார் எமரே இது பெயரோடு முடிந்தது. இதனையும், செய்கு என்பதனையும் வினையெச்சம் என்றதனாற் குற்றம் என்னை எனின், வினைஎச்சம் பால் தோன்றாது: இவை பால் தோன்றலின், முற்று எனல் வேண்டும். [கய]

**201.** பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே.

விரிந்தது தொகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று. மேல், உயர்திணை என்று ஓதாமையான், எஞ்சியது உணர்த்திற்று என்றுமாம்.

இ-ள் :—பன்மையும் ஒருமையுமாகிப் பாலுணர வரும் மூன்று தலையிட்ட இருபதும் முந்துற எடுத்து ஓதப்பட்ட உயர்திணை இடத்த. எ-று.

பெயரெச்சம் மொழி மாறிநின்றது. இவ்வாறு மாறிவருவன உடம்பொடு புணர்த்தலானும் கொள்க. மேல் ஓதப்பட்ட ஈறுகள் உயர்திணை என்பது இச்சூத்திரத்தாற் பெறப்பட்டது. அவை இருபத்துமூன்றுமாவன :—அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும், கு, டு, து, று, என், ஏன், அல், அன், ஆன். அள், ஆள், அர், ஆர், ப, மார் என்பன. [கக]

**202.** அவற்றுள்
பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கிற் றிரிபவை உளவே.

உளப்பாட்டுத் தன்மைக்கண் வருவதோர் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள், உளப்பாட்டுப் பன்மைச் சொல் எண் இயலும் வழித் திரிபவை உண்டு. எ-று.

* புறம்—நஎரு.

உ-ம் :— எண் என்பது இரண்டு மூன்று என்பன. யாம் இருவேம் எனற்பாலது, யாம் இருவர் எனவும் வரும். இன்னும் எண்ணியன் மருங்கின் என்பதற்கு, எண்ணப்பட்ட மருங்கின் எனப் பொருள் உரைக்க உளப்பாட்டுத் தன்மைக்கு ஓதிய எட்டீற்றினும், திரிபவை உள என்றுமாம். வருவோம், உண்போம் என ஓகாரம் பெற்றுவருவன ஏகாரத் திரிபு என்று கொள்க. [கஉ]

**203.** யாஅ ரென்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.

இது ரகரவீற்றுக்கண் வழுவமைத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :— யார் என்னும் வினாப் பொருண்மை உணர்த்துஞ் சொல் அவ்வுயர்திணைக்கண் முப்பாற்கும் உரித்து. எ-று.

யார் என்பது காலங் காட்டாமையின், வினைச்சொல் ஆகாது எனின், வேற்றுமை ஏலாமையான் வினை எனப்படும். அதனானேயன்றே, வினை எனப்படுவது காலமொடு தோன்றும் என்னாது, வேற்றுமை கொள்ளாது எனவும் ஓதல் வேண்டிற்று என்க.

உ-ம் :—அவன் யார், அவள் யார், அவர் யார் என வரும். [கங]

**204** பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆஓ ஆகும் செய்யு ளுள்ளே.

இது படர்க்கை வினைக்கண் வரும் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பால் விளங்குதலை மரபாக உடைய னகாரம், ளகாரம், ரகாரம் ஆகிய மூவீற்றும் ஆகாரம் ஓகாரமாகித் திரியும் செய்யுளகத்து. எ-று.

உ-ம் :— ‡வினவி நிற்றந் தோனே. *நல்லை மன்னே நகூஉப் பெயர்ந் தோளே. சான்றோ ரல்லர் தோழி எனவரும். செய்யுள் ஆகாரமாகி வரப் பெறாதோ எனின், வழக்கிற்கு உரியன செய்யுட்காம் என்பதூஉம் சொல்லாமற் பெறுதும் என்று கொள்க. [கச]

‡ அகம்—சஅ. * அகம்—உசஅ.

**205.** ஆயென் கிளவியும் அவற்றொடு கொள்ளும்.

இது முன்னிலை வினைச்சொற்கு உரியதோர் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :— ஆய் என்னும் முன்னிலை வினைச்சொல்லும் ஓகாரமாகத் திரியும். எ-று.

முன்னிலை வினை ஈண்டுக் கூறிற்றிலராயினும், திரிபு ஒப்புமை நோக்கிப், பருந்துவிழுக்காடு என்னும் சூத்திரக் கிடக்கையான், ஈண்டு ஓதப்பட்டது.

உ-ம்:—*வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப எனவரும் [கரு]

**206.** அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்என் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்.

உயர்திணை வினைக்குறிப்பு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :— ஆறாம் வேற்றுமைக்கண் ஓதிய உடைமை என்னும் பொருண்மையானும், ஏழாம் வேற்றுமைக்கண் ஓதிய நிலப் பொருண்மையானும், ஒன்றோடொன்று உவமையாகி வரும் பொருண்மையானும், ஒன்றன் குணமாகிய பண்பினானும் மேற் பகுக்கப்பட்ட காலம் குறிப்பொடு தோன்றும். எ-று.

என்று என்பது எண்ணுக் குறித்து நின்றது. இதனாற் சொல்லியது இப்பொருண்மை காரணமாக வினைக்குறிப்புத் தோன்றும் என்றவாறு.

உடைமையாவது உடையானும், உடைப்பொருளும் தோன்றவரும். சாத்தனதுடைமை குழை என்பது. இதனுள் உடைப்பொருளை முந்துறக்கிளக்குங்கால், குழையை உடையன் சாத்தன் எனவரும். ஆண்டு உடையன் என்பது பெயரும் வினையுமன்றி நின்றதாயினும், உருபேலாது வினைச்சொற்போல நிற்றலின் வினைக்குறி பெற்றது. நிலத்தினான் வந்தது :—சாத்தன் மாடத்திருந்தான் என்னும் பொருட்கண் சாத்தன் மாடத்

* அகம்—அ௦.

தன் எனவருவது. மாடத்தன் என்றவழி இடமும், உருபும், வினையும் ஒற்றுமைப்பட்டுச் சாத்தன் என்பதற்குப் பயனிலையாகி வினைச்சொல் நீர்மைப்பட்டு வருதலின், அதுவும் வினைக்குறிப்பாயிற்று. ஒப்பு என்பது—இதனை ஒக்கும் இது என்புழி, ஒத்தல் பெயருமன்றி வினையுமன்றி நின்றதாயினும், தந்தையை ஒப்பன் என வினைச்சொற் போல நிற்றலின், அதுவும் வினைக்குறிப்பாயிற்று. பண்பாவது—இவற்கு நிறம் கரிது என்புழி, கருமை என்பது இப்பொருட்குப்பண்பாதலின், இப்பண்பினை உடையானைக் கரியன் என்ப ஆகலான், அது பெயருமன்றி வினையுமன்றி வரினும் வினைச்சொற்போல நிற்றலின், அதுவும் வினைக்குறிப்பாயிற்று. இவை எல்லாம் அவ்வப் பொருள் காரணமாக வந்த சொல்லாயினவாறு கண்டுகொள்க. இவற்றுள், காலம் குறிப்பொடு தோன்றலாவது—இவன் திருவுடையன் என்றவழிச் சொல்வான் குறிப்புத் தொன்று தொட்டுத் திருவுடையன் என்பதாயின், இறந்தகாலங் காட்டும்; இப்பொழுது என்பதாயின், நிகழ்காலங் காட்டும்; இனி என்பதாயின் எதிர்காலங் காட்டும். பிறவும் இவ்வாறு அறிந்து கொள்க. [௧௬]

**207.** அன்மையின் இன்மையின் உண்மையின் வன்
[மையின்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம்.

இதுவும் அது.

இ-ள் :—இப்பொருள் அல்ல என்னும் பொருண்மையானும், இப்பொருள் இல்லை என்னும் பொருண்மையானும், இப்பொருள் உண்டு என்னும் பொருண்மையானும், இது செய்ய வல்லன் என்னும் பொருண்மையானும் வரும் சொல்லும், அத்தன்மைய பிறவுமாகி வரும் சொல்லும், குறிப்பாற் கொள்ளப்படும் எல்லாச் சொல்லும் காலம் குறிப்பான் உணரப்படும். எ-று. இதனாற் சொல்லியது இவை காரணமாகப் பிறந்த சொல்லும் குறிப்பு வினையாம் என்றவாறு.

உ-ம் :—அல்லன், இலன், உளன், வல்லன் எனவரும். அன்ன பிறவாற் கொள்ளப்படுவன இதன் எதிர்மறை வாய்

பாட்டான் வரும். அவன் வல்லான் எனக்கொள்க. பிறவும் அன்ன. "குறிப்பொடு கொள்ளு மென்ன கிளவியும்" என்று ஓதியவதனாற் காலங் குறித்தலே யன்றி, ஈண்டு ஓதப்பட்ட பொருண்மை புலப்பட நில்லாது குறித்துக்கொள்ள நிற்கும் சொல்லும் வினைக் குறிப்பாம் என்றவாறு. சாத்தன் குழையை உடையன் எனக் கூறற்பாலது சாத்தன் குழையன் என்ற வழிக், குழையாகிய பொருளும், உருபும், உடைமை என்னும் சொல்லும் ஒற்றுமைப் பட்டுக் குழையன் என ஒரு சொல்லாகி வருதலின், அதுவும் வினைக் குறிப்பாம் என்று கொள்க. * சூழலன் கோட்டன் என்பனவும் அவை. அஃதேல், இவை வேற்றுமைத் தொகை யாகாதோ எனின், அது உருபு தொக வருதலும், பொருள் தொக வருதலும் என இருவகைத்து. அவற்றுள் உருபு தொகவரின் குழை உடையன் எனல் வேண்டும். பொருள் தொகவரின் குழைச்சாத்தன் எனல் வேண்டும். அவ் விருவாற்றானும் அன்றிக், குழையன் என வினைச்சொல் நீர்மைப்பட்டு வருதலின், வினைக்குறிப்பாயிற்று. இன்னும் 'குறிப்பொடு கொள்ளு மென்ன கிளவியும்' என்றதனாற் பைங்கண்ணன், புன் மயிரன் எனப் பண்பினாகிய சினைமுதற் கிளவியாகி இருதிணைக்கும் பொதுவாகி வரும் வினைக்குறிப்பும் கொள்ளப்படும். [௧௭]

**208.** பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

குறிப்பு வினைச்சொற்கு ஈறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—பன்மையும் ஒருமையும் ஆகிப் பால் விளங்க வந்தன வாகிய மேற்சொல்லப்பட்ட மரபினவாகிக் குறிப்பொடு வரூஉங் காலத்தை யுடைய சொல் உயர்திணைமருங்கின் மேற் சொல்லப் பட்ட சொல்லொடு வேறுபாடில. எ-று.

இவ்வாறு மாட்டெறிந்ததனான் ஆண்டு ஓதிய ஈறே வினைக் குறிப்பிற்கும் ஈறு என்றவாறும். ஏற்புழிக் கோடல் என்பத னான் ஈண்டு ஏற்பன கொள்ளப்படும்.

* முருகு—௨0௬.

உ-ம் :—உடையம், உடையாம், உடையெம், உடையேம் இவை உளப்பாட்டுத் தன்மை. உடையென், உடையேன் இவை தனித்தன்மை. உடையன், உடையான், உடையள், உடையாள், உடையர், உடையார், உடையோன், உடையோள், உடையோர் இவை படர்க்கை. ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. பிறவிற்றினும் ஏற்பன வந்தவழிக் கண்டு கொள்க.

**209.** அ ஆ வஎன வரூஉ மிறுதி
அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

நிறுத்த முறையானே அஃறிணை வினை உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். அவற்றுள், தன்மைக்கண் கூற்று நிகழாமையானும், முன்னிலை விரவு வினையாதலானும், அஃறிணைக்கே யுரித்தாகி வருவது படர்க்கை ஆதலான், அது தெரிநிலை வினை, குறிப்பு வினை என இருவகைப் படுதலின், அவற்றுள், தெரிநிலை வினை உணர்த்துவார் முதற்பட அதற்கண் பலவறிசொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

அஃதற்றாக, கிளியும், பூவையும் தன்வினையான் உரைக்குமாதலின், அஃறிணைக்கண் தன்மைவினை இன்றென்றது என்னையெனின், கிளியும், பூவையும் ஆகிய சாதி எல்லாம் உரையாடும் என்னும் வழக்கின்மையானும், அவ்வகை உரைக்குங்கால் ஒருவர் உரைத்ததைக் கொண்டு உரைக்கும் ஆதலானும், ஒருவன் பாடின பாட்டை நரம்புக் கருவியின்கண் ஓசையும் பொருளும் பட இயக்கியவழிக், கருவியும் உரையாடிற்றுதல் வேண்டுமாகலானும், அவ்வாறு வருவன மக்கள்வினையாதலால் தன்மைவினை யன்றென்க. யான் என்னும் பெயரை விரவுப் பெயர்க்கண் ஓதாது உயர்வினைக்கண் ஓதினமையானும் அஃறிணைக்கண் தன்மை இன்றென்க.

இ-ள் :—அ ஆ வ என்னும் ஈற்றினை உடைய அக்கூற்று மூன்று சொல்லும் அஃறிணைப் படர்க்கைக்கண் பன்மை உணர்த்தும் சொல்லாம். எ-று.

அஃறிணை என்பது வருகின்ற சூத்திரத்தினின்றும் தந்துரைக்கப்பட்டது.

உ-ம் :—உண்டன, உண்கின்றன, உண்பன; உண்ணல; உண்ணு; உண்குவ எனவரும். பிறவுமன்ன. [௧௯]

**210.** ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

அஃறிணைப் படர்க்கைக்கண் ஒருமை உணரும் சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அஃறிணையொன்றனை அறியவரும் படர்க்கை வினைச்சொல் து, று, டு க்களை ஊர்ந்த குற்றியலுகரத்தினை ஈறாக உடைய எ-று.

உ-ம் :—உண்டது, உண்ணாநின்றது, உண்பது, உண்ணாது; கூயிற்று; உண்டு எனவரும். உண்டு என்பது உண்டது என்னும் பொருட்டு. பிறவுமன்ன. [௨௦]

**211.** பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே.

விரிந்தது தொகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேல், பன்மையும் ஒருமையுமாகிப் பால் உணர எடுத்து ஓதப்பட்ட ஆறு ஈற்று வினைச்சொல்லும் அஃறிணையிடத்த. எ-று.

அவையாவன அ, ஆ, வ, து, று, டு என்பன. [௨௧]

**212.** அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவன்என் வினவே.

அஃறிணைக்கு உரியதோர் வினைச்சொல் பாலுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அஃறிணை இடத்து இருபாற் கிளவிக்கும் எவன் என் வினா ஒக்கும் என்று சொல்லுவர். எ-று.

உ-ம் :—பண்டியுள்ளது எவன், பண்டியுள்ளன எவன் என வரும். [௨௨]

**213.** இன்றில வுடைய என்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல என்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்.

அஃறிணை வினைக்குறிப்பாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இன்றென்பது முதலாகச் சொல்லப்பட்ட பத்தும் காலம் குறிப்பொடு கொண்டு நிற்கும். எ-று.

உ-ம் :—இன்று, இல என்பன பொருளின்மை உணர வருவன. அன்று, அல்ல என்பன தாம் குறித்த பொருளை விளக்க வரும். அது வன்று, அவை யல்ல என வரும். பண்பு கொள் கிளவியாவது பண்பினைக் கொண்டு நிற்குஞ் சொல். இது கரிது, இது நெடிது என வருவன. உளவென் கிளவி யாவது பொருளின் உண்மை உணர நிற்பது. அவை உள. இதன் ஒருமை யாகிய உண்டு என்னும் சொல் இருதிணைக்கும் உரித்தாகலின் ஈண்டு ஓதாராயினர். பண்பினாகிய சினைமுதற் கிளவியாவது பண்பும் சினையும் அடுத்து முதலொடு முடிவது. குறுந்தாட்டு, குறுந்தாள எனவரும். ஒப்பொடு வரூஉங் கிளவியாவது ஒன்றனோடு ஒன்று ஒக்கும் என்னும் பொருண்மை குறித்து வருவது. அன்னது, அனையது, அன்ன, அனைய எனவரும். [உ௩.]

**214.** பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

அஃறிணை வினைக் குறிப்பிற்குப் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேல் ஓதிய வாய்பாட்டால், பால் விளங்க வந்தன வாய்ச் சொல்லப்பட்ட மரபினாற், குறிப்பொடு வரூஉம் வினைச் சொல் அஃறிணைத் தெரிநிலை வினையோடு வேறுபாடில. எ-று.

அதற்கு ஓதிய ஈறே இதற்கும் ஈறென்பது பெற்றாம்.

உ-ம்:—உடையது, இன்று, குண்டுகட்டு, குறுந்தாள, பொல்லா எனவரும். 'அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்' என்றதனான், உருபும், பொருளும், வினையும் ஒற்றுமைப்பட்டு வருவனவும், உயர்திணை வினைக்கண் ஓதிய இடமும், வன்மையும் பற்றி வருவனவுங் கொள்க. முதற்று, முதல என்பன உருபும், பொருளும், வினையும் ஒற்றுமைப்பட்டன. மேற்று, மேல; மாடத்தது, மாடத்த என்பன இடம் பற்றி வந்தன. ஓடவற்று, ஓடவல்ல; ஓடவல்லாது, ஓடவல்லா என்பன வன்மைபற்றி வந்தன. பிறவுமன்ன. [உச]

**215.** முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
திரிபுவேறு படூஉம் செய்திய வாகி
இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமைய.

நிறுத்த முறையானே இருதிணைக்கும் உரிய வினை
உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள், முன்னிலை வினை முதலாக எடுத்து ஓதப்பட்ட எண்வகைச் சொல்லும், பிரிந்து பொருள் வேறுபடூஉம் செய்கையவாகிய இருதிணைச் சொற்கும் ஒத்த உரிமையை உடைய என்றவாறு.

உதாரணம் மேற்காட்டுதும். [உரு]

**216.** அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆயென வரூஉ மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்.

முன்னிலை வினைச்சொல் ஒருமை உணர்த்துமாறு
உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள் முன்னிலைக் கிளவிக்கண் இ, ஐ, ஆய் என்று வரும் ஈற்றினை யுடைய மூன்று சொல்லும் உயர்திணை ஆண்பாற்கும், பெண்பாற்கும், அஃறிணை ஒன்றன்பாற்கும் ஒத்த இயல்பினவாகித் தோன்றும். எ-று.

முன்னிலை வினையென்னாது முன்னிலையெனப் பொதுப்பட ஓதினவதனால், அச்சொல் இருவகைப்படும்: முன் நின்றான் தொழில் உணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்தற்கு ஏவல் குறித்து வருவனவுமென.

உ-ம் :—உண்டி, உண்கிற்றி; உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை, உண்பை; உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய், உண்ணாய்; கருத்தி, கரியை, கரியாய் என்பன முன்னின்றான் தொழில் உணர்த்தின. இவற்றுள் ஆய் என்பது மறையினும், ஏவலினும், தொழிலினும் வரும். உண்டி என்பது தொழிலினும் ஏவலினும் வரும். பிறவுமன்ன. அஃதேல், நட, வா, எறி, அறி, ஈ, கொடு, தா, ஏ, வை, போ, கௌ எனவும்; செல், கொள், உண், தின்; கூட்டு எனவும் உயிரீறும் ஒற்றீறுமாகிப் பலவகையான் வருவன எல்லாம் ஓதாது முன்னிலைச்சொல் மூன்றென்றது என்னை யெனின், அவை எல்லாம் ஆய் என்னும் உருபாற் குறைந்து நின்றன. அன்னவாதல் * செய்யா யென்னும் முன்னிலை வினைச்சொல், செய்யென் கிளவி யாகிட னுடைத்தே என்பதனுட் கண்டுகொள்க. [௨௬]

**217** இர் ஈர் மின்என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய § என்மனார் புலவர்.

முன்னிலை வினைச்சொல்லுள் பன்மை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இர் ஈர் மின் என்று சொல்லப்பட்ட மூன்றீற்று வினைச்சொல்லும் உயர்திணைப் பன்மைக் கண்ணும், அஃறிணைப் பன்மைக் கண்ணும் சொல்லோடொக்கும். எ-று.

உ-ம் :—உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்பிர்; உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர்; உண்மின், உண்ணன்மின் எனவரும்.

---

* எச்சவியல்—௫௧. § என்......வர். இப்பகுதிக்கு உரையில்லை.

இவை உணர்த்துமாறு என்னை எனின், இவ்வினைக்குப் பெயரா...... என்பனவற்றிற்கு, § இன்ன பெயரே இவையெனல் வேண்டின், முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல் என விதித்தாராகலான், ஆண்டை விதியுமேற்று, ஈண்டும் சொல்லுவான் குறிப்பின் தொடரவும் பட்டு ................ உணர்ந்து கொ(ள்க). (உண்) டாயோ மகனே, மகளே என்புழி, உயர்திணை உணரப்பட்டது. உண்டாயோ குயிலே என்றவழி, அஃறிணை உணரப்பட்டது. உண்டிரோ மக்காள் என்புழி, ஆண்பன்மை பெண்பன்மை உணர வேண்டின் அதனொடு புணர்ந்த சொல் (லான்) உணர்க. [உஎ]

**218.** எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கு முரிய தோன்ற லாறே.

முன்னிலை யொழிந்த சொற்கள் பாலுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட முன்னிலை ஒழிந்த சொற்கள் * மூன்றிடத்தோடுங்கூடி ஐந்துபாற்குமுரிய, தோன்றுநெறிக்கண். எ-று.

அவற்றுள், சிறப்பு விதியுடைய வியங்கோட்கும், வினையெச்சத்திற்கும், செய்யும், செய்த என்னும் சொற்கும் உதாரணம் தத்தஞ் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும். ஏனைய ஈண்டுக் காட்டப்படும்.

[உ]-ம்:— இன்மை செப்பல் என்பது இல்லை என்னுஞ் சொல். அது யானில்லை, யாமில்லை; நீயில்லை, நீரில்லை; அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவில்லை, அவையில்லை எனவரும். வேறென் கிளவியாவது வேறென்னும் சொல். அது, யான் வேறு, யாம் வேறு; நீ வேறு, நீர் வேறு; அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு எனவரும். வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால், கூட்டு என்பதூஉம், ஆம் என்பதூஉம் கொள்க. யான் கூட்டு, நீ கூட்டு; யாமும், நீயாம் என மூன்றிடத்துக் கண்ணும் ஒட்டுக. செய்ம்மன என்பது, யான் செய்ம்மன, நீ செய்ம்மன, அவன் செய்ம்மன

§ பெயரியல்—௩எ. * சூ—உரு.

என எல்லாப் பாலோடும் ஒட்டுக. இது இக்காலத்துச், செய்வது செய்வன, செய்பவை, செய்யுமவை என வழங்கும்போலும். [உஅ]

**219.** அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி.

எய்தியது ஒருமருங்கு விலக்குதலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள் வியங்கோட் சொல் முன்னிலையும் தன்மையுமாகிய இடத்து நிலைபெறாது. எ-று.

எனவே, படர்க்கை ஐந்து பாற்கண்ணும் வரும் என்றவாறாம். வியங்கோள் என்பது யாதோ எனின், செய்க என்னும் பொருட்கண்ணும், தவிர்க என்னும் பொருட்கண்ணும், வேண்டிக்கோடற் பொருட்கண்ணும் வருவது. அஃதாவது வாழ், உண், தவிர் என்னும் ஏவல் குறித்த சொற்கள், தன்மைப் பெயர்க்கண்ணும், படர்க்கைப் பெயர்க்கண்ணும் ஏலாது முன்னிலை ஒருமைப் பெயர்க்கண், நீவாழ், நீயுண், நீ தவிர் என ஏற்றலின், ஆண்டுப் பாலுணர்த்துஞ் சொல்லோடு ஒரு நிகரன வாகி முன்னிலை வினையுள் அடங்கின. அப் பொருட்கண், தன்மை கூறும் வழி, யான் வாழ்வல், உண்பல், தவிர்வல் எனக் கூற வேண்டலின் அவை தன்மை வினையுள் அடங்கின. இனிப் படர்க்கைக்கண் வருங்கால், அவன் வாழ்க, உண்க, தவிர்க எனக் ககரம் கடையார்த்துக் கூறவேண்டுதலின், அவ்வாறு வருஞ் சொல், பாலுணர்த்தாமையின் வியங்கோள் என வேறு குறி பெற்றது. அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க என ஐந்து பாற்கும் உரித்தாகி வந்தவாறு கண்டு கொள்க.

நீ வாழ்க, உண்க எனவும் வருமாலெனின், அவை அக்ககரம் பெறுக்காலும் பொருள் இனிது விளக்குதலின் அவ்வாறு வருவன மரூஉ வழக்கென்று கொள்க. கடாவுக பாகநின் கால்வல் நெடுந்தேர் எனச் செய்யுளகத்து வந்ததாலெனின், நீ கடாவுக என வாராது, பாகா கடாவுக என வருதலின், அது படர்க்கைப் பெயர் விளியேற்றவழி வந்த தென்க. * என்முதற் பிழைத்தது கெடுக வென்னுயுள் எனத் தன்மைக்கண் வந்ததாலெனின், ஆண்டுக்

* சிலப்-வழக்—எள.

கெடுக எனப்பட்டது ஆயுளாதலின் அதன்மேல் வந்த தென்க. இனி, அவ்வியங்கோட் பொருட்கிளவி ஈறு திரிந்து வந்து அப் பொருள் படுதலுங் கொள்க. $ வாழிய வென்னுஞ் ¶ செய்யென் கிளவி—யிறுதி யகரங் கெடுதலு முரித்தே என்றமையான் வாழ்க என்பது வாழி, வாழிய, வாழியர் எனவும்; * செப்பும் வினவும் வழாஅ லோம்பல் என்றமையான், ஓம்புக என்பது அல் ஈறாகி வருதலுங் கொள்க. § மகனெனல் மக்கட் பதடியெனல்' என்றமையான் உடம்பாட்டினும், மறையினும் அல்லீறாகி வருதலுங் கொள்க.

† ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை—யாஅது மென்னு மவர் என்பது பல்லோர் படர்க்கை யாதலின், வேண்டும் என்னும் முற்றுச் சொற் கொண்டு முடியாமையின், ஆக்கங் கருதுவார் இவ்வாறு செய்தல் வேண்டுமென வேண்டிக் கோடற் பொருட்கண் வியங்கோ ளீறு திரிந்தது.

திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந் துலகேத்த வேதிநாட் டுறைபவர். (கலி-பாலை-௨கூ.)

என்றவழி, ஏதிநாட்டுறைவார் அருளுவாராக என வேண்டிக் கோடற் பொருண்மைக்கண் ஈறு திரிந்தது. பிறவுமன்ன. [உகூ]

**220.** பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா.

இதுவும் எய்தியதொருமருங்கு மறுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—பலரை உணர்த்தும் படர்க்கையும், முன்னிலையும், தன்மையுமாகிய மூன்றிடமும் நிகழ்காலங் குறித்த செய்யும் என்னுங் கிளவியொடு பொருந்தா. எ-று.

ஈண்டும் இவ்வாறோதி, முன்னும் ‡ அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய—செய்யும் செய்த என்னுஞ் சொல்லே எனவும் ஓதினமையாற், செய்யும் என்பது முற்றும், பெயரெச்சமும் என

$ எழுத்-உயிர்மய—கூ. ¶ செய், செய—வினையுரைப்பாடங்கள்.
* கிளவி-கங. § குறள்—உ௦-கூ. † வினைத்தூய்மை—ரு.
‡ வினையியல்—ருஎ.

இருவகைப் படுமென்று கொள்க. அது முற்றுயுழித் தன்மையினும், முன்னிலையினும் உயர்திணைப் படர்க்கைப் பன்மையினும் வாராது, வினைப்பாலின்கண்ணே வரும் என்றவாறும். அவனுண்ணும், அவளுண்ணும், அது உண்ணும், அவை உண்ணும் என வரும். ஈண்டு நிகழ்காலங்குறித்த தென்னை, எதிர்காலங் குறித்து வாராதோ எனின், எதிர் காலத்துக்கண் வருவது கால மயக்கமாகக் கொள்க. முற்றுச் சொல் சேரக் கூறுகின்றாராகலின் இச்சூத்திரம் ஈண்டோதப்பட்டது. [ந.0]

**221.** செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி.

வினையெச்ச மரபாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—செய்து என்பது முதலாகச் செயற்கு என்பதீறாக ஓதப்பட்ட ஒன்பதுவாய்பாடும் வினையெச்சச் சொல்லாம்.

வினையெச்சமாவது மற்றொரு வினைச்சொல்லோடல்லது முற்றுப் பெறாது நிற்கும். வினைச் சொல்லாவது பாலுணர்த்தாது காலங் காட்டி நிற்கும். செய்து என்பது இறந்த காலங் காட்டும். செய்யூ என்பது இறந்தகாலமும் நிகழ்காலமும் காட்டும். * செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும் என எழுத்ததிகாரத் தோதுதலின், அவ்வாய்பாடும் இப்பொருட்டாகி வருதலின் அதுவுங்கொள்க. செய்பு என்பது மூன்று காலமுங் காட்டும். செய்தென என்பது இறந்த காலப் பொருட்டாயினும் விரைவு குறித்தலானும், திரிந்து முடிதலானும் பொருள் வேறுபாடு உடைத்தாதலான் வேறோதப் பட்டது. செய்யியர் என்பது எதிர் காலங் காட்டும், செய்யிய என்பது வாய்பாடு வேற்றுமையுடைத்தாதலான் பொருள் நோக்காது சொல் நோக்கிக் கூறப் பட்டது. செயின் என்பது எதிர் காலம் பற்றி வரினும் பொருள் வேறுபாடுடைத்தாதலான் வேறோதப்பட்டது. செய என்பது மூன்று காலத்திற்கும் பொதுவாகிப் பொருள் வேறுபாடு உடைத்து. செயற்கு என்பது எதிர்கால வாய்பாட்டு வேற்றுமை குறித்து ஓதப்பட்டது. உதாரணம் வருகின்ற சூத்திரங்களுட் காட்டுதும். [ந.க]

* உயிர் மயங்கியல்—உ0.

**222.** பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே.

இதுவும் வினையெச்ச வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பின் முதலாக ஓதப்பட்டனவும், அத்தன்மையாகிய மரபினை காலங் குறித்து வரும் எல்லாச் சொல்லும் வினையெச்ச இயல்பின. எ-று.

எனவே, மேற் சொல்லப்பட்டவற்றோடு ஒரு நீர்மைய அல்ல என்பது பெறப்பட்டது. அன்ன மரபிற் கொள்ளப்படுவன ஆல், பான், உம், இனி, அணி என வருவனவும், பிறவும். இவற்றிற்கு உதாரணம் முன்னர்க் (சூ. ௩௫.) காட்டுதும். [௩௨]

**223.** அவற்றுள்
முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.

நிறுத்த முறையானே முந்துற்ற மூன்றிற்கும் முடிபுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப் பட்டவற்றுள் முந்துற்ற மூன்றும் அவ்வினைக்குக் கருத்தாவாகிய பொருளின் வினையை முடிபாக உடைய. எ-று.

உ-ம் :—உண்டு வந்தான்—இது செய்தென் எச்சம். * படு மகன் கிடக்கை காணூஉ-வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. (இஃது) இறந்த காலங் குறித்த செய்யூ என்னும் வினையெச்சம். நிலம்புடையூஉ வெழுதரும் வலம்படு குஞ்சரம்—இது நிகழ்காலம் குறித்த செய்யூ என்னும் வினையெச்சம். § வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்—இது செய்யா என்னும் வினையெச்சம். † புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த என்பது இறந்த காலங் குறித்த செய்பு என்னும் வினையெச்சம். ‡ வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர என்பது நிகழ்காலங் குறித்த செய்பு என்னும் வினையெச்சம். உண்பு வந்தான்—இது எதிர்காலங் குறித்த செய்பு என்னும் வினையெச்சம். மூன்றிடத் தைந்து பாலோடும் ஒட்டிக்கொள்க. [௩௩]

* புறம்-௨௭௮. § நாலடி, கடவுள் வாழ்த்து. † புறம்-௩௩. ‡ கலி-௧௬.

**224.** அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிச் *
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர்.

எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று. வழுவமைதியுமாம்.

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட மூன்று சொல்லும் சினைவினையாகித் தோன்றி, அச் சினைவினையோடு முடியாது, முதல்வினையோடு முடியினும், அச் சினைவினையான் முடிந்ததனோடு ஒக்கும். எ-று.

உ-ம்:—கையிற்று வீழ்ந்தது, கையிறாஉ வீழ்ந்தது, கையிறுபு வீழ்ந்தது எனற்பாலன கையிற்று வீழ்ந்தான், கையிறாஉ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் என வீழப்பட்டது கையாயினும், அதனோடு முடியாது அதன் முதல்வினையோடு முடியினும் குற்றமில என்றவாறு.

உய்த்துணரவைத்தல் என்னுந் தந்திர உத்தியால், வினையெச்சத்திற்கு முடிபாகி வரும் சினைவினை (முதலோடு) முடிதலேயன்றித் தனிவருஞ் சினைவினையும் முதலோடும் முடியுமென்று கொள்க. கையிற்றான், கண் கெட்டான் எனவரும். [௨௪]

**225.** ஏனை யெச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானும்
தாமியல் மருங்கின் முடியு மென்ப.

ஏனை யெச்சங்கட்கு முடிபுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வினையெச்சங்களுள் முந்துற்ற மூன்றுமல்லாதன வினைமுதல் வினையானும், அவ்விடத்துப் பொருந்தும் பிறவினையானும் தாம் நடக்கும் மருங்கினான் முடியும். எ-று.

உ-ம்:—மழைபெய்தெனப் புகழ்பெற்றது, மழைபெய்யியர் எழுந்தது, மழை பெய்யிய எழுந்தது. மழை பெய்யிற் புகழ் பெறும். மழை பெய்யப் புகழ் பெற்றது என்பது இறந்காலம். வாழச் செய்த நல்வினை யல்லா, தாழுங் காலைப் புணைபிறி

* தோன்றில்—ஏனையவுரைப்பாடம்.

தில்லை—இது வாழாநிற்க வென நிகழ்காலங் குறித்தது. மழை பெய்ய எழுந்தது—எதிர்காலம். மழை பெயற்கெழுந்தது. இவை வினைமுதல் வினையான் முடிந்தன.

மழை பெய்தென மரங் குழைத்தது. மழை பெய்யியர் மாதவர் அருளினர். மழை பெய்யிய மாதவரருளினர். மழை பெய்யிற் குளம் நிறையும். மழை பெய்யக் குளம் நிறைந்தது—இது இறந்த காலம். மழை பெய்ய வந்தான், இது நிகழுங்காலம். மழை பெய்யப் பலிகொடுத்தும், இது எதிர்காலம். மழை பெயற்கு அறஞ் செய்தும். இவை பிற வினையான் முடிந்தன. தானுண்டபின் வந்தான், தானுண்ணுமுன் வந்தான். தானுண்டக் கால் வரும். தானுண்டக்கடைவரும்—இஃது இறுதி என்னும் காலங்குறித்து நின்றது. தானுண்டவழி வரும், இதுவும் அது. தானுண்டவிடத்துவரும், இஃது உண்டக்கால் என்பது குறித் தது. இவை தன்வினை. பிறன் உண்டபின் வரும். பிறனுண்ணு முன்வரும். பிறனுண்டக்கால் வரும். பிறனுண்டக்கடைவரும். பிறனுண்டவழி வரும். பிறனுண்டவிடத்து வரும். இவை பிறவினை. இவைபெயராதற்கும் ஏற்று நிற்றலின், அந்நிலையின்றித் தொழில் நிகழுங்காலத்தைக் குறித்து வரின் வினையெச்சமாம் என்பதனாற் காலங்கண்ணிய என்று ஓதினார். (அன்னமரபினாற் கொள்ளப்) படுவன:— * அற்றா லளவறிந் துண்க. $ அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம். † நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே. ‡ கூற்றமற் குறித்ததன் மேற் செல்லும் ¶ கூற்றமை நோக்கிக் குறிப்பறிவான். செவ்வன் றிரிகிற்பான். § விருந்தின்றி உண்ட பகலும் ‖ நாளன்று போகிப் புள்ளிடை தட்ப. இனிக்கொண்டா(ன்) அணி வந்தான். பிறவும் இவ்வாறு கொள்க. [௩௫]

**226.** பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே.

விளையெச்சம் அடுக்கி வருவழி வருவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

* குறள்-கூசாக. † கலி, குறி-௩. $ நான்மணி-உ௯ ‡ கலி-க.
¶ குறள்-எ0க. § திரிகடுகம்-௪௪. ‖ புறம்-௧உ௪.

இ-ள் :—வினையெச்சச்சொற்றும் சொற்கடோறும் முற்றுப் பெறாது பலவாற்றானும் அடுக்கிவரினும், இறுதி நின்றது முடிய ஏனையவும் பொருண்முடிவு பெற்றனவாம். எ-று.

உ-ம் :—உண்டு தின்று ஓடி வந்தான். உண்டு பருகிக் கூத்திற் புக்கு வந்தான் என வரும். பிறவுமன்ன. [௩௬]

**227.** நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
அவ்வறு பொருட்கு மோரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே.

செய்யும், செய்த என்னும் சொற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நிலப்பெயரும், பொருட்பெயரும், காலப்பெயரும், கருவிப்பெயரும், வினைமுதற் பெயரும், வினைப்பெயருமாகிய அவ்வாறு பெயர்க்கும் ஒத்த உரிமைய: செய்யும், செய்த என்னும் சொற்கள். எ-று.

இவற்றோடு முடியு(ம் எனவே,) இவை பெயரை எச்சமாக உடையவாதலாற் பெயரெச்சமெனக் குறியும் பெறும். இவையும் பால்காட்டா என்றுணர்க. இவை § எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி என்பதின் அடங்காவோ எனின், ஆண்டு வினைமுதல் தானே மூன்றிடத்து ஐந்து பாலு மாகி வரும். இவை அவ்வாறு அன்றிச் செயப்படுபொருளோடும், செயலோடும், கருவியோடும், இடத்தோடும், காலத்தோடும், வினைமுதலோடும் ஒத்த இயைபினவாகி முற்றுப் பெறுதலின் அடங்காவென்க. உதாரணம் வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும். [௩௭]

**228.** அவற்றொடு வருவழிச் * செய்யும் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே.

எய்தியதன்மேல் சிறப்புவிதி வகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—செய்யும் என்னும் சொல் நிலம் முதலாகிய பொருளொடு வருவழி, முற்பட வரையப்பட்ட பல்லோர் படர்க்கையும்

§ சூ—உ அ. * செய்யுமென் கிளவி—எனையுரைப்பாடம்.

முன்னிலையும், தன்மையும் ஆகிய மூன்று வேறுபாட்டினும் உரித்து. எ-று.

உ-ம் :—நிலம்—உண்ணுமில், உண்ட இல். பொருள்—உண்ணுஞ் சோறு, உண்ட சோறு. காலம்—உண்ணும் காலம் உண்ட பொழுது. கருவி—உண்ணுங் கலம், உண்ட கலம். வினை—உண்ணும் ஊண், உண்ட ஊண். வினைமுதல் மூன்றிடத்து ஐந்து பாலுமாகி ஒன்பது வகைப்படும். உண்ணும் யான், யாம்; நீ, நீஇர்; அவன், அவள், அவர், அது அவை என வரும். செய்த என்பதும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. வந்தது கண்டு வராதது முடித்தல் என்பதனால், கருவி என்பதனால் மூன்றாவதற்கு ஓதிய காரணமும், ஏதுவும் கொள்க. நிலம் பூத்த மலர்மிசை என்றவழி நிலம் பொலிவு பெற்ற மலர் என்று பொலிதற்கு ஏதுவின்கண் வந்தது. யானை கொடுக்கும் பார்ப்பான் எனவும், ஒலித்த கூலி எனவும் நான்காவதற்கு ஓதிய கொள்வதனோடும், பயனோடும் வருமாலெனில், கொடுக்கும் பார்ப்பான் என்றவழிக் கொடைத்தொழில் பார்ப்பான் மேலேறுதலின், யானை கொடுப்பக் கொள்ளும் பார்ப்பான் எனப் பொருள் உரைக்க வேண்டுதலின், அது வினைமுதலாம். ஒலித்த கூலி என்றவழி, கூலியாவது பயனாதலின் அதற்குப் பொருள் உரைக்குங்கால் ஒலித்தற்குக்கூலி என உரைக்கவேண்டுதலின், ஆண்டு அதற்கென்பது புலப்படாது நின்றதல்லது கூலி யென்பதனோடு பொருத்த மின்றே......................யிற்றை மரூஉ வென்று கொள்ளப்படும். அஃதற்றாக, வினையெச்சம் பெயரெச்சம் என்பன தனிமொழி ஆதலின்றி, வினையோடும் பெயரோடும் முடிதலான், அவற்றைத் தனிமொழி கூறுகின்ற வழிக் கூறல் *வேண்டாம் எனின், ஈண்டுச் செய்து, செய்யூ எனவும், செய்யும், செய்த எனவும் தனிமொழி இலக்கணமே கூறிற்றென்க. அன்றியும் முடிக்குஞ் சொல்லும் ஈண்டு ஓதப் பட்டதாயினும், உண்டுவந்தான் என்றவழிச் சாத்தன் என்று ஒரு பெயரோ டல்லது முற்றுப் பெறுமையானும், உண்டசாத்தன் என்றவழி, வந்தான் என ஒரு வினையோ டல்லது முற்றுப் பெறுமையானும் இவை தனிமொழிப் பகுதி யெனி னல்லது வாக்கியமாகி முற்றி நிற்குந் தொடர்மொழியாகா வென்க. [௩அ]

* 'வேண்டும்' என்பது பிரதியில் உள்ளது.

**229.** பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.

இருவகை யெச்சத்திற்கும் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பெயரெச்ச வினைச்சொல்லும், வினையெச்ச வினைசொல்லும் எதிர் மறுத்து மொழியினும் தத்தம் பொருணிலைமையிற் றிரியா. எ-று.

உ-ம் :—உண்ணாச் சாத்தன், உண்ணாத சாத்தன், எறியா வேல் என்பன செய்யும், செய்த என்னும் இரண்டினும் வரும் (மறை.) பிறவுமன்ன. உண்ணாது வந்தான், மழை பெய்யாமையின் மரம் வறந்தன. இவை வினையெச்சமறை. பிறவுமன்ன. பெயரெஞ்சு கிளவியும் * எதிர்மறுத்து வரும் என்றோதி, முன் எதிர்மறை ஓதாதது என்னை எனின், பெயரெச்சமும் வினையெச்சமும் ஓதுகின்றுழி உடம்பட்ட சொல்லான் ஓதுதலின், எதிர்மறை ஓதல் வேண்ட.....................ச் சொற் கிற்றெழுத் தோதின் அவைதாமே மறுத்த வாய்பாட்டிற்கும் ஈறாதலின் ஓதல் வேண்டாவாயின. அஃதற்றாதல் அ, ஆ, வ என்னும் (சூ-கக.) சூத்திரத்தானும் அறிக. [நுக]

**230.** தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்.

இதுவும் இருவகை எச்சத்திற்கும் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :--பெயரெச்சமும், வினையெச்சமும் தம்மை முடிக்கும் சொல்லோடு சிவணுங் குறிப்பினை யுடைய யாதானும் ஒரு சொல் லாயினும் இடை நிற்றலை நீக்கார் ஆசிரியர். எ-று.

உ-ம் :—கொல்லுங் காட்டுள் யானை, கொன்ற காட்டுள் யானை இவை பெயரெச்ச இடைக் கிடப்பு. இவற்றுள் இடைக் கிடந்த சொல் யானை என்பதனோடு சிவணுதலின் அமைக்கப் பட்டது. பிறவுமன்ன. உழுது ஏரொடு வந்தான், உழ ஏரொடு வந்தான்—இவை வினையெச்ச இடைக்கிடப்பு. இவற்றுள் இடைக் கிடந்தசொல் முடிக்குஞ் சொல்லொடு சிவணுதல் அமைதியா

* 'வினை யெஞ்சு கிளவியும்' என்பது விடுபட்டிருத்தல் வேண்டும்.

யிற்று. பிறவுமன்ன. இனிச் சிவணுதன :-உண்ட சாத்தன் தன்கை என்பது உண்ட என்பதற்குத் தன்கையை முடிபாகக் குறித்தானு யிற் சிவணுதாயிற்று. வினையெச்சத்துட் சிவணுதன வந்தவழிக் கண்டு கொள்க. [சo]

**231.** அவற்றுள்
செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கும்
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை யுகரம்
அவ்விட மறிதல் என்மனார் புலவர்.

செய்யும் என்னுஞ் சொல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள், செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கும், உம்மையாற் செய்யும் என்னும் முற்றுச் சொற்கும் ஈற்றுமிசை யுகரம் மெய்யோடுங் கெடும். அது கெடுமிடம் அறிந்து கொள்க. எ-று.

வாம் புரவி வழுதி என வரும். † இது பெயரெச்சம். * அம்பலூரு மவனொடு மொழிமே. இது முற்றுச்சொல். மெய்யோடுங் கெடும் என்ற உம்மையால் மெய்யொழியவுங் கெடும் என்று கொள்க. சார னாடவென் னேழியுங் கலுழ்மே எனவரும். பிறவுமன்ன. [சக]

**232.** செய்தெ னெச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்.

ஒருசார் வினையெச்சத்திற்கு வருங் கால மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—செய்தென் எச்சத்துக்கண் வரும் இறந்தகாலம் எதிர்காலத்தைப் பொருந்து மிடனுடைத்து. எ-று.

என்றது, இறந்த காலத்தாற் கூறப்படும் வினையது நிகழ்ந்தும் இயைத லன்றி, நிகழாத முன்னும் அவ்வாய்பாட்டான் வரப் பெறும் என்றவாறும். நாளை உழுது வருவன்; இனித் தவம் செய்து சுவர்க்கம் புகும் எனவரும். [சஉ]

---

† ஈங்குச் சில சொற்கள் பொருட்டொடர் பின்றிக் காணப்பட்டன.

* குறுந்—ருக.

**233.** முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல்
[வேண்டும்.

இதுவுமது.

இ-ள் :—யாதானும் ஒருமுறைமையினையுடைய வினைச்சொல்லும் மூன்று காலமுந் தோன்றும் இயற்கைக்கண், நிகழுங் காலத்துப் பொதுநிலைப் பொதுச் சொல்லாற் கிளத்தல் வேண்டும். எ-று.

வினைச் சொல் எல்லாங் காலங் காட்டுதலின், காலங் காட்டாத பொதுப்பட்ட வினையை நிகழ்காலத்துக்கண் எல்லாப் பாற்கும் பொதுவாகி வரும் செய்யும் என்னும் சொல்லாற் சொல்லுக என்றவாறாயிற்று. ........................................ பாணுக, அகம்புக்கான், அவனது வாயிற்கண் நின்றானை யாது செய்கிறான் என வினயவழி, அவன் செய்கின்ற உண்டற் காலம் உணராமையின் உண்டான் எனவுமாகாது, உண்பான் எனவுமாகாது, ஆயிடை..........................கொள்க. [சங]

**234.** வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு * தோன்றல்
விரைந்த பொருள என்மனார் புலவர்.

இதுவுமது.

இ-ள் :—வருங் காலத்தும் நிகழ் காலத்தும் வரும் வினைச் சொல்லாகிய சொல், இறந்தகாலத்துக் குறிப்பொடு தோன்றல் விரைந்த பொருள் என்மனார் புலவர். எ-று.

ஒருவனை உண்ணாயோ, போதாயோ என்றவழி, உண்ணாதவனும் உண்டேன், போந்தேன் என்னும்; உண்கின்றானும் அவ்வாறு சொல்லும். இவ்வாறு விரைவு குறித்து நின்றவாறு கண்டு கொள்க. ஒரும், ஆங்கும் அசைகள். [சச]

---

* கிளத்தல்—என உரைப்பாடம்.

235. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

ஒருசார் வினைச்சொற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மிக்கது என்பது ஒன்றி னொன்று மிக்கது என்னும் பொருண்மை. அதன் மருங்கின் வினைச்சொல் சுட்டலாவது அது பெயராகி நிற்கும் நிலைமையைச் சுட்டாது வினையாகி நிற்கும் நிலைமையைச் சுட்டி நிற்றல். அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவியாவது அப் பொருட்கண் மிகுதலாகித் தொழிலைக் குறியாது அதன் இயல்பாகிய மிகுதியைக் குறித்த பாலுணர வருஞ்சொல். செய்வதில்வழி என்பது அப்பாலுணர வருஞ் சொல்லின்கண் கருத்தாவை உணர்த்தும் ஈற்றெழுத்து இல்வழி என்றவாறு. நிகழுங் காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டாகும் என்பது நிகழுங் காலத்து உருபு பெறப் புலப்படும் பொருளை உடைத்து. எ-று.

ஒரு பொருளின் ஒரு பொருள் மிக்கது என்னும் பொருட்கண் வரும் மிக்கது என்னும் வினைச்சொல்லைக் குறித்து மிகுந்த பண்புணர வரும் பாலுணர்த்தாத சொல் செய்யும் என்னும் சொல்லினான் வரின், அஃது அப்பொருளை இனிது விளக்கும். மிக்கது என்பது ஒருகாலங் குறித்துவரின் தொழில் குறித்ததாம். இயல்பு குறித்ததாயின் பண்பு குறித்ததாம். ஆற்றில் நீர் மிக்கதென்றவழி, மிகுதல் இயல்பன்மையில் தொழில் குறித்ததாம். சுவர்க்கம் மிக்கது என்றவழி எக்காலத்தும் ஒக்குமாதலின் பண்பு குறித்ததாம். பூமியிற் சுவர்க்கம் மிகும் என வரும். யாற்றுநீர் மிக்கது என்னும் பொருட்கண் மிகும் என்றதனாற் குற்றம் என்னையெனின், அவ்வாறு கூறின் இறந்த காலம் தோன்றாதாம். வந்தது கண்டு வராதது முடித்தல் என்பதனால் உயர்வு, தாழ்வு, குறைவு என்பனவும் இந்நிலைமைய என்று கொள்க. இச்சூத்திரத்தாற் பயன் ஒருசார் வினைச்சொற்கள் தொழிலிற்கும், பண்பிற்கும் பொதுவாகி நிற்கும் என்பதறிவித்தல். [சரு]

**236.** இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி
இருவயி னிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

இது ஒருவினை இரு பொருட் படுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இதனைச் செயல்வேண்டும் என்னும் வினைச் சொல் இரண்டிடத்தும் நிலைபெற்ற பொருளை யுடைத்து: சொல்லுவான் கண்ணும், பிறன் கண்ணும். எ-று.

உ-ம் :—நீ உண்ணல் வேண்டும் என்றவழி, நீ உண்பாயாகல் வேண்டும் எனத் தான் வேண்டிக் கோடற் பொருண்மை சொல்லுவான்கண் நிலைபெற்றது. சாத்தன் உண்ணல் வேண்டும் என்றவழி, உண்டலைப் பிறன் விரும்பும் எனப் பிறன்கண் நிலைபெற்றது. [சசு]

**237.** வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு முடைத்தே.

இதுவுமது.

இ-ள் :—வற்புறுத்தற் பொருண்மைக்கண் வினாவுடை வினைச்சொல் எதிர்மறுத்துப் பொருள் உணர்த்துதற்கு உரிமை யாதலு முடைத்து. எ-று.

உ-ம் :—யான் வைதேனா, யான் வைதேனோ என்பன வினாப் பொருண்மைப்படுதலன்றி வைகிலேன் என எதிர்மறைப் பொருளும் பட்டவாறு கண்டுகொள்க. [சஎ]

**238.** வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை.

கால வழுவமைதி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எதிர் காலத்து நிகழும் வினைச் சொல் இறந்த காலத்தானும் நிகழ் காலத்தானும் பொருள் விளங்கத் தோன்றும்: ஓர் இயற்கையையும், ஒரு பொருளினது தெளிவையும் கிளக்கும் காலத்து. எ-று.

உ-ம்:—ஆறலை கள்வர் இயங்குவதோர் காட்டிடைப்போகலுற்றானை, இவ்விடத்தைப் போகுவையாயின் கூறை கோட்படுவை எனற்பாலான், பட்டாய் எனவும், படாநின்றாய் எனவுங் கூறும். இது இயற்கை. சென்றது சென்றது வாழ்நாள் செறுத்துடன் வந்தது வந்தது கூற்று. (நாலடி-௪). வாழ்நாள் செல்லாநின்றது எனற்பாலது சென்றது எனவும், கூற்று வரும் எனற்பாலது வந்தது எனவும் நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்த காலத்தான் வந்தன. வாழ்நாள் செல்லுதலும் கூற்று வருதலும் ஒருதலையாகலின், இவை தெளிவு பற்றி வந்தன. நிகழ்காலத்தான் வருவன வந்தவழிக் கண்டுகொள்க. [௪௮]

**239.** செயப்படு பொருளைச் செய்தது போலத்
* தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே.

இது வினைச் சொற்கள் தம்முள் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—செயப்படு பொருளைச் செய்யப்பட்டதெனக் கூறாது கருத்தாவைக் கூறுமாறு போலத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கியல் மரபு. எ-று. மரூஉ வழக்கு என்றவாறு.

உ-ம்:—சோறடப்பட்டது, திண்ணை மெழுகப்பட்டது எனற்பாலன சோறட்டது, திண்ணை மெழுகிற்று எனவரும். உம்மையாற் கருவியைக் கருத்தாவாக்கலுங் கொள்க. (வாள்) வெட்டிற்று, சுரிகை குத்திற்று எனவரும். [௪௧]

**240.** இறப்பே எதிர்வே யாயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி.

காலமயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மயங்குதற்குரிய மொழிக்கண் இறந்தகாலமும் எதிர் காலமும் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு காலமும் ஒப்பத் தோன்றும். எ-று.

உ-ம்:—உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே என்றவழி, என்றார் எனற்பாலது என்மனார் என வந்தது. பிறவுமன்ன. [௫௦]

* தொழிற் படுத்தடக்கலும்-ஏட்டில் கண்டது.

**241.** ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.

இதுவுமது.

இ-ள் :—இறப்பும் எதிர்வும் தம்முள் மயங்குதலன்றி அவற்றோடு நிகழ்காலமும் மயங்கப்பெறும். எ-று.

உ-ம் :—யாம் விளையாடுங் கா என்றவழி முன்பு விளையாடுங் கா, இன்று விளையாடுங் கா, நாளை விளையாடுங் கா என மூன்று காலத்துக்கண்ணும் வந்தவாறு கண்டு கொள்க. [ருக]

அஃதேல், வினைச்சொற்கள்—முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் என மூவகைப்படும். அவற்றுட் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத்தன்மைய என்று எடுத்தோதி, முற்றுச்சொல்லாவது இத்தன்மையது என்று ஓதிற்றிலர், அதற்கு இலக்கணம் யாங்குப் பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனாற் பெற்றதென்னை எனின், அஃது எமக்குப் புலனாயிற் றன்று. அஃதேல், வினையிலக்கணம் அறிந்தேனுங்காலம் முற்றிலக்கணமும் அறிதல் வேண்டும் அன்றே. அதனை ஆண்டுக்கூறியவாறு ஈண்டுரைத்தல் வேண்டும் எனின், உரைக்குமாறு :—

**242.** இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
* மூவிடத் தான வினையினுங் குறிப்பினும்
மெய்ம்மை யானு § மீரிரண் டாகும்
அவ்வா றென்ப முற்றியல் மொழியே.

முற்றுச் சொற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என வினைச் சொற்குச் சிறப்புடைத்தாகிய மூன்று காலத்தானும், தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடத்தானும், தொழிலானும் குறிப்பானும் பொருளானும் முற்று இயலும் மொழிவகை நிலைமையான் இருபத்துநான்கு. எ-று.

---

* அம்மூவிடத்தான் § இவ்விரண்டு-சேனாவரையம்.

காலம் என்பதன்கண் உருபு தொக்கு நின்றது. இடம் என்பதன்கண் உம் எஞ்சி நின்றது. அவையாவன :— தன்மைக்கண் எட்டும், முன்னிலைக்கண் எட்டும், படர்க்கைக்கண் எட்டும் (ஆம்.) ஒருமையும் பன்மையும் எனத் தமிழ் நடை இருவகைப் படுதலின் தன்மைக்கண் வரும் எட்டும் ஒருமை உணர்த்துவன நான்கும், பன்மை உணர்த்துவன நான்கும் என இருவகைப் படும்.

உ-ம் :- உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன், கரியேன் இவை மூன்று காலமும், வினைக்குறிப்பும்பற்றி ஒருமைக்கண் வந்தன. உண்டனம், உண்ணாநின்றனம், உண்குவம், கரியம் என்பன அவ்வாறு பன்மைப் பொருண்மைக்கண் வந்தன. முன்னிலைக் கண் எட்டும் இருவகைப்படும். உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை, கரியை இவை ஒருமைபற்றி வந்தன. உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவீர், கரியீர் இவை நான்கும் பன்மை பற்றி வந்தன. படர்க்கைக்கண் எட்டும் இருவகைப்படும். அவற்றுள் ஒருவனை உணர்த்துவதும், ஒருத்தியை உணர்த்துவதும், ஒன்றனை உணர்த்துவதும், ஒருமையென அடங்கும். பலரை உணர்த்துவதும், பலவற்றை உணர்த்துவதும் பன்மையென அடங்கும். உண்டனன், உண்ணாநின்றனன், உண்பன், கரியன் எனவும், உண்டனள், உண்ணாநின்றனள், உண்பள், கரியள் எனவும், உண்டது, உண்ணாநின்றது, உண்பது, கரியது எனவும் இவை பொருண்முகத்தான் ஒருமை யாதலின், மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றி நான்காய் அடங்கின. உண்டனர், உண்ணாநின்றனர், உண்குவர், கரியர் எனவும், உண்டன, உண்ணாநின்ற, உண்ப, கரிய எனவும் இவை பொருள் முகத்தாற் பன்மையின் அடங்கின. வினையெச்சமும், பெயரெச்சமும், தொழிலும் காலமும் உணர்த்தினல்லது, இடமும் பாலும் உணர்த்தா என்பதூஉம், முற்றுச் சொல் தொழிலும் காலமும் இடமும் பாலும் உணர்த்தும் என்பதூஉம் கண்டுகொள்க. [௫௨]

**243.** எவ்வயின் வினையும் அவ்வயின் நிலையும்.

மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—தொழிலும் காலமும் இடமும் பாலும் உணரவரும் வினைச்சொலன்றி, மூன்றிடத்திற்கும் பொதுவாகி வரும் வினைச் சொல்லும் முற்றும் நிலைமையைப் பெறும் எ-று.

அவையாவன :—வியங்கோள், இன்மை செப்பல், வேறென் கிளவி, செய்ம்மன, பெயரெச்சமல்லாத செய்யும் என்னுஞ் சொல். [ருக]

**244.** அவைதாம்
தத்தங் கிளவி யடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே.

முற்றுச்சொல் தொடர்ந்தியலுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட முற்றுச் சொற்களுள் தத்தமக்கு ஏற்ற வினைச்சொல் அடுக்கி வரினும், உம்மையான், அடுக்காது வரினும் எவ்வழியானும் பெயர் முடிபினையுடைய. எ-று. என்பது முற்றுச் சொல் பெயரோடல்லது தொடரவும் படாது என்றவாறாயிற்று.

உ-ம் :—உண்டான் சாத்தன், நல்லன் அரசன் இவை தனி வந்தன. உண்டான், தின்றான், ஓடினான் பாடினான்சாத்தன்; நல்லன், அறிவுடையன், செவ்வியன் சான்றோர் மகன்; இவை வினையும் வினைக்குறிப்பும் அடுக்கிவந்தன.

தத்தங் கிளவி என்றதனான் ஒருகாலத்திற் கேற்ற வினையே அடுக்குவது என்று கொள்க. எத்திறத்தானும் என்றமையால் சாத்தன் உண்டான்; அரசன் நல்லன் எனவும்; சாத்தன் உண்டான், தின்றான், ஓடினான்; அரசன் வென்றி உடையன், செவ்வியன் எனவும் வரும்.

இவை எழுவாயும் பயனிலையும் ஆகாவோ எனின், எழுவாய்த் தொடரோடு முற்றுத் தொடரிடை வேறுபாடின்மை வேற்றுமை யோத்தினுட் கூறப்பட்டது. அன்றியும், பெயர் முந்துற்றதனை எழுவாய்த்தொடர் என்றும், வினைமுந்துற்றதனை முற்றுத்தொடர் என்றும் வழங்கினும் அமையும். இவை மூன்று சூத்திரமும் ஈண்டைத் தொடர்புபட்டுக் கிடந்த இதனை, உரை யெழுதுவார், பிரிநிலை வினையென்னுஞ் சூத்திரத்துட் சொல்லப்

பட்ட பெயரெச்ச வினையெச்சம் என்பவற்றை ஈண்டு ஓதப்பட்ட பெயரெச்ச வினையெச்சமாகக் கருதி, ஆண்டுச் சேரவைத்தார் என்பாரும் உளர்.

அற்றாக, வினைச்சொல்— பெயரெச்சம், வினையெச்சம், முற்றென மூவகைப்பட்டதாயின், வினையெச்சமும் முற்றும் அடுக்கி வருமாறு * கூறாதது என்னையெனின், பெயரெச்ச வடுக்கு வினையெச்சம் போல் முன்ன(ர்)முடிய முடியாமையின் கூறாராயினர். சிறுபான்மை வருவன செய்யுண் மருங்கினும் என்னும் அதிகாரப் புறநடையாற் கொள்ளப்படும். [௫௪]

வினையியல் முடிந்தது.

இவ்வோத்தினுட் சூத்திரம் உட்பட உரையினதளவு கிரந்த வகையால் நானூற்றறுபது.

* 'கூறிப் பெயரெச்சம் அடுக்கி வரல்' என்பது விடுபட்டிருத்தல் வேண்டும்.

## எ. இடையியல்.

**245.** இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், இடைச்சொல் ஓத்து என்னும் பெயர்த்து: இடைச்சொல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். இது பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றுதலின் அவற்றின் பின் கூறப்பட்டது.

“ இடையெனப் படுப............தமக்கியல் பிலவே ” என்பது இடைச்சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இடையென்று சொல்லப்படுவன பெயரோடு கூடியும் வினையோடு கூடியும் வழக்குப் பெற்றியலுமல்லது தமக்கென வழக்கில, எ-று.

என்றது, மேல் அதிகரிக்கப்பட்ட சொல் நான்கினுள் இடைச் சொல்லாவது பெயரும், வினையும் போலத் தனித்தனி பொருள் உணர உச்சரிக்கப்படாது: பெயர் வினைகளைச் சார்ந்து புலப்படும். எ-று.

பெயரும் வினையும் இடமாக நின்று பொருள் உணர்த்துதலின் இடைச்சொல்லாயிற்று. மேற் பெயரியலுள்ளும் அவற்றுவழி மருங்கிற் றோன்றும் (சூ-ரு) என ஓதி, ஈண்டும் இவ்வாறு கூறுதல், கூறியது கூறலாம் பிற எனின், ஆண்டுத் தோற்றுவாய் செய்தார் ஈண்டிலக்கணங் கூறினார் என்க. ‘பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும்’ என்றதனால், பொருள் உணர்த்தும்வழிப், பெயர்ப் பொருண்மை உணர்த்தியும், வினைப் பொருண்மை உணர்த்தியும் வருமதல்லது வேறு பொருள் இலவென்றுமாம். [க]

**246.** அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்

இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை.

இடைச்சொல் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—"அவைதாம் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுநவும்" என்பது மேற் சொல்லப்பட்ட இடைச்சொற்கடாம் ஒரு சொல் புணர்ந்தியலும்வழி, அப்பொருள்நிலைக்குதவியாகி வருவனவும் என்றவாறு. பொருள்நிலைக்கு உதவலாவது அல்வழிப் பொருட்கு உரியன இவை, வேற்றுமைப் பொருட்கு உரியன இவையென வருதல். அவையாவன இன்னே, அற்றே என்பன முதலாயின. அவை சாரியை யன்றோ எனின், அவை இடைச்சொல் எனவும் ஒரு குறி பெறும் என்றவாறு. 'வினை செயல் மருங்கிற் காலமொடு வருநவும்' என்றது வினைச்சொல் முடிவுபெறுமிடத்துக் காலங் காட்டுஞ் சொல்லோடு பால் காட்டும் சொல்லும் என்றவாறு. அவையாவன உண்டனம், உண்டாம், உண்ணாநின்றனம், உண்கின்றனம், உண்பம், உண்குவம் என்புழி, இறந்தகாலங்குறித்த குறிப்போடு, நிகழ்காலங் குறித்த நின்று, கின்று என்பனவும், எதிர்காலங் குறித்த பு, கு என்பனவும், அம் ஆம் எனப் பால்காட்டுவனவும், இவ்வாறு வருவன பிறவும் (ஆம்.) 'வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்' என்பது அவ்வேற்றுமைப் பொருளிடத்து உருபாகி நிற்குஞ் சொற்களும் என்றவாறு. அவையாவன ஐ, ஒடு, கு முதலிய. இவையும் இடைச்சொல் எனக் குறிபெற்றன. 'அசைநிலைக் கிளவியாகி வருநவும்' என்பது பொருள்படநில்லாது அசைநிலை யாகி நிற்பனவும் எ-று. 'இசைநிறைக்கிளவி யாகிவருநவும்' என்பது அசைநிலைக் கிளவி போலப் பிரிந்து நில்லாது, ஒரு சொல்லோடு ஒற்றுமைப்பட்டு இசைநிறைத்தற் பொருட்டாகி நிற்பனவும் எ-று. 'தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்' என்பது தத்தங் குறிப்பினாற் பொருள் உணர்த்துவனவும் என்றவாறு. 'ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்' என்பது குறிப்பினால் வருதலின்றிப் பொருத்தம் இல்லாத விடத்துப் பொருள் உணர்த்

துவனவும் என்றவாறு. 'அப்பண்பினவே நுவலுங்காலை' என்பது அவ்வியல்பினையுடைய: சொல்லுங் காலத்து. எ-று.

தத்தங் குறிப்பின் என்பதற்குச் சார்ந்த சொல்லின் குறிப்பினான் எனவும், ஒப்பில்வழி என்பதனை ஒரு சொல்லோடு பொருத்த மின்றித் தனி வந்துழி எனவும் பொருள் உரைப்பினும் அமையும். அஃது அற்றாக, ஒப்பில்வழி என்பதற்கு ஒக்கும் என்னுஞ் சொல் வாராத உவம உருபெனப் பொருள் உரைப்பவாலெனின், $ஒப்பினும் பண்பினுமென்—றப்பாற் காலங் குறிப்போடு தோன்றும் என்றமையானும், போல, அன்ன ஏய்ப்ப, உறழ என்பன சாத்தன் 'புலிபோலும் எனவும், புலி போலப் பாய்ந்தான் எனவும், புலி போன்ற சாத்தன், 'புலிபோலுஞ் சாத்தன் எனவும், இவ்வாறு பிறவும், முற்றும், வினையெச்சமும், 'பெயரெச்சமுமாகி வருதலினானும் அவை யெல்லாம் வினைக்குறிப்பென்று கொள்க. அவற்றுள், 'புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுந' எழுத்ததிகாரத்துக் கூறப்பட்டன. 'வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந' வேற்றுமை யோத்தினுட் கூறப்பட்டன. ஏனை நான்கும் ஈண்டு ஓதப்படுகின்றன. [உ]

**247.** அவைதாம்
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை யெல்லாம் உரிய வென்ப.

இதுவும் இடைச்சொற்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட இடைச்சொற்றாம் மொழியை முன்னும் பின்னும் அடுத்து வருதலும், தத்தம் ஈறு திரிந்து வருதலும், பிறிதோர் இடைச்சொல் ஆண்டு அடுத்து வருதலும் ஆகிய அத்தன்மைய எல்லாம் உரிய. எ-று.

உ-ம் :—அதுமன், கேண்மியா என்பன மொழி முதல்* வந்தன. கொன்னூர், ஓ ஓ கொடியை என்பன மொழிப் பின்

$ வினை. சூ. கசா.

* இங்குக் கூறும் முதல், பின் என்பன இடம் பற்றியன.

வந்தன. மன்னைச் சொல் (சூ-ச) என்றவழி ஈறுதிரிந்தது. $வரு (க) தி (ல்) லம்ம என்பது பிறிது அவண் நின்றது. பிற வுமன்ன. [ரு]

**248.** கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.

ஈண்டு உரைக்கப்படுகின்ற இடைச்சொல் நான்கும் பொருள் புணர் இடைச்சொல்லும், பொருள் புணரா இடைச்சொல்லும் என இருவகைப்படும். அவற்றுள்,

பொருள் புணர் இடைச்சொல் லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—கழிந்தது என்னும் பொருண்மையும், ஆம் என்னும் பொருண்மையும், எஞ்சிய இசையான் உணரும் பொருண்மையும் உணரவரும்: மன் என்னுஞ் சொல். எ-று. மன் மன்னை என நின்றது.

உ-ம்:—சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே (புறம்-உரு௫) என்புழி, மன் கழிந்தது என்னும் பொருள்பட நின்றது. §'புதுமலர் கஞல வின்று பெயரி, னதுமனெம் பரிசி லாவியர் கோவே.' இதனுள் மன் என்பது ஆம் என்பது குறித்து நின்றது. கூரிய தோர் வாண் மன் என்றவழித், திடமின்று என்றானும், வெட்டில் லார் உளராயின் என்றானும் ஒழிந்த சொல்லினான் உணரும் பொருள் பட்டது. [ச]

**249.** விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

இதுவும் அது.

இ-ள் :—விழைவுப் பொருளையும், காலப்பொருளையும், ஒழியிசைப் பொருளையும் உணரவரும்: தில் என்னுஞ் சொல். எ-று.

உ-ம் :—*"அரிவையைப் பெறுகதில் லம்ம யானே." இது விழைவு பற்றி வந்தது. ¶"பெருங்காட்டுப் பண்ணிய கருங் கோட்டு ஈமம், நமக்கரி தாகுக தில்ல எமக்கெம், பெருந்தோட்

$ அகம்—உஎசு. § புறம். கசுஎ. * குறுந்—கசு. ¶ புறம். உசசு.

கணவன் மாய்ந்தென வரும்பிற, வெள்ளித மூவிழ்ந்த தாமரை, கள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே." இதனுள் ஈமம் புகுதல் நமக்கு அரிதாருக, எமக்...........................க்காலத்துப் பொய்கையோடு ஒக்கும் என்றமையாற் காலங் குறித்தது. ‡"வருகதில் லம்மவெஞ் சேரிசேர." வந்தாலிவ்வாறு செய்வன் என்னும் ஒழியிசை குறித்து நின்றது. [ரு]

**250.** அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

இதுவும் அது.

இ-ள் :—அச்சப் பொருண்மையும், பயனின் றென்னும் பொருண்மையும், காலப் பொருண்மையும், பெரிதென்னும் பொருண்மையும் பற்றி வரும்: கோன் என்னுஞ் சொல். எ-று.

உ-ம் :—கோன் முனை யிரவூர் போல (குறுந்-கூக.) என்பது அச்ச முணர நின்றது. கோன்னே கழிந்தன் றிளமையும் (நாலடி-ருரு) என்புழிப் பயனின்மை புணர நின்றது. கோன் வரல் வாடை என்றவழிக், காலத்து வருகின்ற வாடை எனக் கால முணர நின்றது. கோன்னூர் துஞ்சினும் (குறுந்-கூஅ) என்றவழிப், பெருமையுணர நின்றது. இம்மூன்று சொல்லும் பெயர் வினையை யொட்டி வாராது தனிவந்து குறிப்பில் வழியாற் பொருளுணர்த்தினமையான், ஒப்பில் வழியாற் பொருள் செய்தன. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து கொள்க. [சு]

**251.** எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்
றப்பால் எட்டே உம்மைச் சொல்லே.

இதுவும் அது.

இ-ள் :—எச்சம் முதலாகச் சொல்லப்பட்ட எண்வகைப் பொருளும் உணர வரும் : உம்மைச் சொல். எ-று.

உ-ம் :—எச்சம் இறந்தது தழீஇயதும், எதிரது தழீஇயதும் என இருவகைப்படும். சாத்தனும் வந்தான் என்றவழி, முன்

‡ அகம்—உஎசு.

னொருவன்வரவு குறித்தானாயின் இறந்தது தழீஇயதாம். பின்னொருவன் வரவு குறித்தானாயின் எதிரது தழீஇயதாம். ஏனையொழிந்த பொருளைக் குறித்தமையின் எச்சமாயிற்று. சிறப்பு என்பது மிகுதி. அஃது உயர்பான் மிகுதலும், இழிபான் மிகுதலும் என இருவகைப்படும். * அக்காரம், யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமே, தேவரே தின்னினும் வேம்பு என்றவழி, யாவர் என்றது இழிபு குறித்து நின்றது. தேவர் என்பது உயர்வு குறித்து நின்றது. ஐயம் என்பது ஐயப்பட்ட பொருண்மை குறித்து வருவது. ஏனல் காவ லிவளு மல்லள், மான்வழி வருகுந னிவனு மல்லன், அரந்தங் கண்ணி யிவனொடிவளிடை என்றவழிக், காரணம் பிறிதாகல் வேண்டும் என்னும் ஐயங் குறித்து நின்றது.

எதிர்மறையாவது யாதானும் ஒரு தொழிலை எதிர்மறுத்துத் தொழிற்கண் வரும். சாத்தன் வருதற்கு முரியன் என்றவழி, வாராமைக்கும் உரியன் எனவரும். முற்றென்பது மற்றொரு பொருளை நோக்காது நிற்கும். தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் எனவரும். முழுதும் உணர்ந்தார் என்பதும் அது.

எண் என்பது பலபொருளை எண்ணுதல் குறித்து வரும். † மண்டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும் எனவரும். தெரிநிலை என்பது ஒரு பொருளை ஐயப்படுதலுந் துணிதலும் இன்றி, ஆராயும் நிலைமைக்கண் வரும். § ஐதேய்ந் தன்று பிறையு மன்று, மைதீர்ந் தன்று மதியு மன்று என வரும். ஆக்கம் உம்மையடுத்த சொற்பொருண்மேல் ஆகும் நிலைமையைக் குறித்து வரும். வாழும் வாழ்வு, உண்ணுமூண் எனத் தொழிலினது ஆக்கங் குறித்து நின்றவாறு கண்டு கொள்க. இது பெயரெச்ச வினைச்சொலன்றோ எனின், ஆம். அதன்கண்ணும் இடைச்சொல் என்க. அதனானேயன்றே ‡ உம் முந்தாகு மிடனுமா ருண்டே என்னும் இலக்கணத்தால், ¶ நெல் லரியு மிருந் தொழுவர் என்னும் பாட்டினுள், செஞ்ஞா யிற்று வெயின் முனையிற், றெண்கடற் றிரைமிசைப் பாயும் எனற்பாலது பாயுந்து என வந்தது. இவ்விலக்கணம் வினையியலுள் ஓதாமையால் பெயரெச்ச உம் இடைச்சொல் என்று கொள்ளப்படும். பாயும்

* நாலடி. ககஉ. † புறம் உ. § கலி. ருரு. ‡ இடை. சூ. சங. ¶ புறம். உச.

புனல் என்பது பாய்புனல் எனத் தொக்குழி, வேற்றுமைப் பொருட்கண் உருபு, பெயர் நிற்பத் தொக்கவாறு போல, வினை நிற்ப உருபு தொகுதலானும், செய்யும் என்பது வினையும் உருபு மாகிய இரு நிலைமைத்து என்று கொள்க. செய்யும் என்னும் முற்றுச் சொல்லின்கண் உம் எவ்வாறு வந்ததெனின், அது மற்றொரு பொருளைக் குறித்து நில்லாமையின் ஈண்டு இடமின்றென்க. முற்றி நிற்றலின் முற்றும்மை யெனினும் இழுக்காது. ஆக்கவும்மை என்பதற்கு நெடியனும் வலியனும் ஆயினான் என உதாரணங் காட்டுபவாலெனின், அஃது எண்ணும்மை என்க. தனிவரின் எச்சவும்மையாம். [எ]

**252.** பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே.

இதுவும் அது.

இ-ள்:—பிரிநிலை முதலாக ஓதப்பட்ட ஆறிடமும் என்று சொல்லுவார்: ஓகாரமாகிய இடைச்சொல் பொருள் உணர்த்துமிடம். எ-று.

உ-ம்:—பிரிநிலையாவது பிறபொருளினின்றும் பிரித்தமை தோன்ற வருவது. *கானங் காரெனக் கூறினும், யானோ தேறேனவர் பொய்வழங் கலரே. அவரோ வாரார் எனவரும். எல்லாரும் தேறினும் யான் தேறேன், எல்லாரும் வரினும் அவர் வாரார் எனப் பிரிநிலைப் பொருண்மை தோன்றியவாறு கண்டுகொள்க. வினா என்பது வினாவுதற் பொருண்மேல்வரும். அதுவோ? உண்டாயோ? எனவரும். எதிர்மறையாவது தன்னாற் சொல்லப்பட்ட பொருளின் மாறுபட்டு வருவது. உண்ணேனோ, வாரேனோ என்றவழி உண்பல், வருவல் என்னும் பொருள் பட்டன. ஒழியிசையாவது தன்னாற் சொல்லப்பட்ட பொருளன்றி மற்றொரு பொருளுங் கொள்ள நிற்பது. செய்கையோ செய்தான் என்றவழிப், பின்பும் இவ்வாறு செய்திலன் என்னும் பொருளுங் குறித்து நின்றவாறு கண்டுகொள்க. தெரிநிலை என்பது ஒருபொருளை ஆராயும் நிலைமைக்கண் வருவது.

* குறுந்—உக.

திருமகளோ அல்லள், (அர)மகளோ வல்லள், இவள் யாராகும் எனவரும்.

சிறப்பென்பது பொருளி..................குறித்து நிற்கும், கானக நாடனை நீயோஒ பெரும எனவரும். அஃதேல் எழுத்ததிகாரத்து ¶ஓகாரவீற்றுள் ஐயமென்றும் ஓர் ஓகாரம் ஓதினாராலெனின், அது தெரிநிலைக்கண் அடங்கும் என்பதுஉமொன்று. வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால், ஆண்டு மாறுகொள் எச்சமும், வினாவும், ஐயமும் என ஓதப்பட்டவற்றுள் வாராததுங் கொள்ளப்படும். ஒருவனோ, ஒருத்தியோ தோன்றுகின்றார் எனவரும். [அ]

253. தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே.

இ-ள் :—தேற்றம் முதலாக ஐந்து பகுதிய ஏகார இடைச்சொல். எ-று.

உ-ம் :-அவனேஎ செய்தான் என்பது துணிவு குறித்தவழித், தேற்றேகாரமாம். ஈண்டு அளபெடை வரும். வினாக்குறித்தவழி, வினாவேகாரமாம். யானே வந்தேன் என்றவழிப், பிறர் கூடவின்றியே எனப் பொருள் படுதலிற் பிரிநிலையேகாரமாம். எண் எண்ணுக் குறித்து வரும். சொல்லே குறிப்பே ஆயிரண்டெச்சம்..................ஈற்றசை என்பது சொல்லின் இறுதிக்கண் அசைநிலையாகி நிற்பது. * கடல்போற் றோன்றல காடிறந் தோரே எனவரும். அஃதேல், எழுத்ததிகாரத்து §மாறுகோள் எச்சமும்..................என ஏகார ஈறுஓதினார். (அம்மாறுகோள்) எச்சம் ஈண்டு ஓதாதது என்னை யெனின், ‡ வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல், எதிர்மறுத்து உணர்த்துதற் குரிமையுமுடைத்து என்றாராகலின் அது வினாவினுள் அடங்கும்; அன்றியும் வந்தது கண்டு வராதது முடித்தல் என்பதனானுங் கொள்க. யான் வைதேனே என்றவழி வைதிலேன் என்னும் எதிர்மறைப் பொருள்.................................................. இவைமூன்று சொல்லும் பெயரோடு ஒட்டுப்பட்டு நின்று தத்தங்

¶ சூ —உகூ0. * அகம்—க. § சூ. உஎரு. ‡ வினை சூ. சஎ.

குறிப்பினாற் பொருள் உணர்த்தின. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து கொள்க. [௯]

254. வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி.

இதுவும் அது.

இ-ள்:—வினை முதலாகப் பெயரீறாகச் சொல்லப்பட்ட ஆறு சொல்லினைக் குறித்த நிலைமைத்து: என என்னுஞ் சொல். எ-று.

உ-ம்:—கொள்ளெனக் கொடுத்தான் என்பது வினை குறித்து நின்றது. ¶போள்ளென வாங்கே புறம் வேரார் என்பது விரைய என்னுங் குறிப்பு உணர நின்றது, † கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின் என்பது இசைப்பொருண்மை குறித்து நின்றது. கன்முகை யருவி கண்ணெனப் பருகி என்பது பண்பு குறித்து நின்றது. பாழெனக், காலெனப், பாகென, ஒன்றென, இரண்டென என்புழி எண்ணுக் குறித்து நின்றது.

§நாளென ஒன்றுபோற் காட்டி என்றவழிப், பெயர் குறித்தது. எழுத்ததிகாரத்துள் ‡என என்னெச்சமென ஓதுதலான் இவையெல்லாம் வினையெச்சப் பொருண்மை யுணரவும், பெயரெச்சப் பொருண்மை யுணரவும் வரும் என்று கொள்க. ஊரெனப்படுவது உறையூர் எனச் சிறப்புப் பற்றியும் வருமாலெனின், அது பெயர்ப்பொருளின் பாகுபாடாதலிற் பெயரென அடங்கும். [௰]

255. என்றென் கிளவியும் அதனோ ரற்றே.

இதுவுமது.

இ-ள் :—என்று என்னுமிடைச் சொல்லும் மேற் சொல்லப்பட்ட அறுவகைப் பொருண்மையுங் குறித்து நிற்கும். எ-று.

உ-ம் : --கொள்ளென்று கொடுத்தான். துண்ணென்று வந்தது. ஒல்லென் றொலித்தது. பச்சென்று கிடந்தது. நிலனென்று நீரென்று. சினத்தைப் பொருளென்று கொண்டவன் என வரும்.

---

¶ குறள். ௬அ௭. † கலி. ௫ § குறள். ௩௩௪. ‡ சூ.—௨௦௪.

இது மாட்டேற்று வகையான் எச்ச வாய்பாட்டதென்று கொள்க. இச்சொற்களானும் செய்யும் என்பதன்கண் உம் இடைச் சொல்லாயினவாறு கண்டு கொள்க. [கக]

**256.** விழைவின் தில்லை தன்னிடத் தியலும்.

இத்துணையும் பலபொருள் குறித்த இடைச் சொல் ஓதி, இனி ஒரு பொருள் குறித்த இடைச் சொல் ஓதுகின்றாராக லின், மேற்சொல்லப்பட்டவற்றுள் ஒரு சொற்குப் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—விழைவுப் பொருட்கண் வரும் தில்லைச்சொல் சொல்லுவான்மாட்டே நிகழும். எ-று.

உதாரணம் மேற்காட்டப்பட்டது. [கஉ]

**257.** தெளிவின் ஏவும் சிறப்பின் ஓவும்
அளபின் எடுத்த இசைய என்ப.

இதுவுமது.

இ-ள் :—தேற்றேகாரமும், சிறப்பின்வரும் ஓகாரமும் அளபெடை பெற்று வரும் என்று சொல்லுவர். எ-று.

உதாரணம் மேற்காட்டப்பட்டது. [கங]

**258.** மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்.

ஒரு பொருளைக் குறித்த இடைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மற்று என்னுமிடைச்சொல் ஒருவினையை மாற்று தற் பொருட்கண்ணும், அசைநிலையாகியும் வரும். எ-று.

உ-ம்:—*மற்றறிவா நல்வினை யாமிளையம் என்றவழி மற்று என்பது பின்பு அறிவாம் என அக்காலத்துச் செய்கின்ற வினையை மாற்றி நின்றது. $ மற்றடிகள் கண்டருளிச் செய்க மலரடிக்கீழ் என்றவழி அசைநிலை யாயிற்று. [கச]

* நாலடி. கக. $ சீவக. கஅஎங.

**259.** எற்றென் கிளவி இறந்த பொருட்டே.

இதுவுமது.

இ-ள் :—எற்று என்னும் சொல் கழிந்தது என்னும் பொருண்மை யுடைத்து. எ-று.

உ-ம் :—எற்றே னுடம்பி னெழினலம் எனவரும். [கரு]

**260.** மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே.

இதுவுமது.

இ-ள் :—மற்றையது என்னுஞ் சொல் சுட்டி நின்ற பொருள் ஒழிய அதற்கினமாகிய பொருளைக்குறித்து நிற்கும். எ-று.

அது என்பது எவ்வாறு வந்தது எனின், மேல் வினை மாற்று என்றார், இது பொருண்மை மாற்று என்பதனை விளக்குதற்கு அது என்பதனைக் கூட்டியுரைத்தார். அது என்பது பெயராதலின், *ஒருபாற்கிளவி எனைப்பாற் கண்ணும்-வருவதாமே வழக்கென மொழிப என்பதனான் ஐந்துபாற்கண்ணும் கொள்க. அவ்வாறு கொள்ளவே, மற்றை என்பது இடைச்சொல்லாகி நின்று பிறபொருளுணர்த்தியவாறு கண்டுகொள்க.

இனங்குறித்து என்றமையாற், சுட்டப்பட்ட பொருட்கு இனமாகிய பொருளையே குறிக்கும். ஆடை கொணர்ந்தவழி, மற்றையதோ எனிற், கொணர்ந்ததொழியப் பிறிதுமோராடையைச் சுட்டியவாறு கண்டு கொள்க. ஒரு வினைசெய்வார் இருவருள்வழி, ஒருவனைக்கண்டவன் மற்றையவனோ என்றவழி, அதுவும் இனங்குறித்தது. பிறவுமன்ன. [கசா]

**261.** மன்றவென் கிளவி தேற்றம் செய்யும்.

இதுவுமது.

இ-ள் :—மன்ற என்னுஞ் சொல் தேற்றப் பொருண்மையை உணர்த்தும். எ-று.

---

* பொருளியல். உஅ.

உ-ம்—*கட்வு ளாயினு மாக--மடவை மன்ற வாழிய முருகே என்ற வழிக், கடவுளாயினும் மடவை எனத் தேற்றப் பொருண் மை காட்டிற்று. [௧௭]

**262.** தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே.

இதுவுமது.

இ-ள் :—தஞ்சம் என்பது எளிமை என்னும் பொருண் மையை உடைத்து.

உ-ம் :—$முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம் என்பது எளி தென்பது குறித்து நின்றது. [௧௮]

**263.** அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகும் இயற்கைத் தென்ப.

இதுவுமது.

இ-ள் :—அந்தில் என்பது ஆங்கு என்னும் பொருண்மை பெற்றும், அசைநிலையாகியும் வரும். எ-று.

உ-ம் :—†வருமே சேயிழை யந்திற்-கொழுநற் காணிய என்பது ஆங்கென்னும் பொருளுணர்த்திற்று.

அந்திற் கச்சினன் கழலினன் (அகம். ௭௬) என்புழி, அசை நிலையாயிற்று. [௧௯]

**264.** கொல்லே ஐயம்.

இதுவுமது.

இ-ள் :—கோல் என்பது ஐயங் குறித்து வரும். எ-று.

உ-ம் :—அதுகோல் தோழி காம நோயே என்றவழி, ஐயங் காட்டிற்று. [௨௦]

**265.** எல்லே இலக்கம்.

இதுவுமது.

இ-ள் .— எல் என்பது இலங்குதல் குறித்து வரும். எ-று.

* நற்றிணை. ௩௪. $ புறம். ௭௩. † குறுந். ௨௯௩.

உ-ம் :—'எல்வளை'-(புறம். உச) இலங்குவளை. இது உரிச்சொல்லன்றோ எனின், அது குறைச்சொல்லாகி நிற்கும். இது குறையின்றி நிற்றலின், இடைச்சொல்லாயிற்று. [உக]

**266.** § இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே
அசை நிலைக் கிளவி ஆகுவழி யறிதல்.

அசைநிலை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—இயற் பெயர் முன்னர் வரும் ஆர் என்னும் இடைச்சொல் ஒருமைப் பொருண்மேல் வரினும், பலர்க்குரித்தாகிய எழுத்தினையுடைய வினையொடு முற்றுப் பெறும்: அது அசைநிலைக்கிளவி ஆகுமிடனறிந்து கொள்க. எ-று.

வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால், பிறபெயர்க்கண்ணும் ஏற்பன கொள்க.

"பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே" என்ற உம்மை எச்சமாகலான், ஒருமையான் வரவும் பெறும் என்றவாறு.

இதனானே, இடைச்சொற்பற்றிவரும் பால் வழுவும், திணை வழுவும் அமைத்தவாறாயிற்று.

உ-ம் :—சாத்தனார், சாத்தியார், நம்பியார், நங்கையார், முடவனார், முடத்தியார், தாயார், தந்தையார், கிளியார், மயிலார் என்பன ஒருமையுணர நின்றனவாயினும், வினையோடு வருங்கால் வந்தார் எனவரும். நம்பியார் வந்தார், நங்கையார் வந்தார் என இவ்வாறு வருதற்கேற்பனவுங்கொள்க. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியுள் அடங்காதோ எனின், ஆண்டு உரைத்த விடையே ஈண்டும் உரைக்க.

ஆர் என்பது இடைச்சொல்லாயின், இப்பெயருடையார் பலர் வந்துழிக் கூறுமாறு என்னை யெனின், அதனானே யன்றே மார் என்பது வேறு எடுத்தோதல் வேண்டியது. †"எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே" என்புழி, ஆர் அசைநிலையாயிற்று. [உஉ]

---

§ இச்சூத்திரத்தை இரு சூத்திரமாகக்கொள்வர் ஏனை உரையாளர்கள்.

† மொழிமரபு. உஅ.

267. † ஏவுங் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண் டாகு மியற்கைய வென்ப.

அசைநிலையும் இசை நிறையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஏ என்னும் சொல்லும், குரை என்னும் சொல்லும் இசை நிறைத்தலாகியும், அசை நிலையாகியும் வரும் அவ்விரண்டு நிலைமையும் உடைய. எ-று.

ஈண்டு ஏ என்றமையான் ஓரெழுத்தொரு மொழியாகிய உயிரெழுத்தே கொள்ளப்படும். முன் கூறப்பட்ட ஏகாரம் மொழிக்கு ஈறாகிவருதலின், உயிர்மெய்யென்று கொள்ளப்படும்.

இசை நிறையாவது இசை நிறைத்தற்பொருட்டு ஒருசொல்லோடு ஒட்டிவரும் அசை நிலையாவது தனிவரும். ஏ ஏ இவளொருத்தி பேடியோ வென்றார் என்றவழி, ஏ என்பது இசைநிறையாயிற்று. ஏ தெளிந்தேம்யாம் என்பது அசைநிலையாயிற்று. அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே (புறம். ரு) சேர்ந்த சினையிளங் குரைய வாயினும் என்பன இசைநிறை. நல்குரவென்னு மிடும்பையுட் பல்குரைத் துன்பங்கள் சென்று படும். (குறள்-௧௦௪௫.) இது அசைநிலை. [உ௩]

268. மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

அசைநிலை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மா என்னுஞ் சொல் வியங்கோட்கண் அசைநிலையாகி வரும். எ-று.

உ-ம் :—உப்பின்று—புற்கை யுண்கமா கொற்கை யோனே. ஓர்மாதோழிபவாதேமணிக்குரல் என வரும். [உ௪]

269. மியாயிக மோமதி இகுஞ்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்.

இதுவுமது.

இ-ள் :—இவை ஆறு சொல்லும் முன்னிலை வினைச்சொற்கண் அசைநிலையாகி வரும். எ-று.

---

† ஏயுங் என்பது ஏனை உரைப்பாடங்கள். சூ. ௩௭ காண்க.

உ-ம்:—கேண்மியா. தண்டுறை யூர கண்டிக. காமஞ் செப் பாது கண்டது மொழிமோ. [குறு. உ] சென்மதி பெரும. மெல்லம் புலம்ப கண்டிகும். காப்பும் பூண்டிசிற் கடையும் போகல் (அகம். எ) எனவரும். இவை கேள், காண், மொழி, செல், (காண்) பூண் என்னும் பொருட்கண் ஆய் என்பது திரிந்து வந்தன. [உரு]

**270.** அவற்றுள்
இகுமுஞ் சின்னும் ஏனை யிடத்தொடு
தகுநிலை யுடைய என்மனார் புலவர்.

எய்திய தன்மேற் சிறப்பு விதி வகுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள் இகுமும், சின்னும் தன்மையினும், படர்க்கையினும் வருதல் தகுநிலை யுடைத் தென்று சொல்லுவர். எ-று.

உ-ம்:—"கண்டிகு மல்லமோ யாமே." (ஐங்குறு-கஉக) "கண்ணும் படுமோ வென்றிசின் யானே" (நற்-சுக) இவை கண்டேம், என்றேன் என்னும் பொருட்கண் வந்தன. "புகழ்ந் திகு மல்லரோ பெரிதே-பாடல் சான்ற விறல்வேந் தனும்மே". "வெற்புடைய வாண் கடந்து துப்புறுவர் புறம் பெற்றிசினே." "யாரஃ தறிந்திசி னோரே". (குறுந்-கஅ) எனப் பால் காட் டும் எழுத்தோடு அடுத்துவருதலுங் கொள்க. [உசு]

**271.** அம்மகேட் பிக்கும்.

இதுவும் அசைநிலைச்சொல் பொருள் படுமோறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—அம்ம என்னும் சொல் அசைநிலை யாகலேயன்றிக் கேள் என்னும் பொருளும் படும். எ-று.

உ-ம்:— அம்ம வாழி தோழி' (ஐங்-நக) என்றவழிக் கேள் என்னும் பொருள் குறித்து நின்றது உண்டா லம்மவிவ் வுலகம்' (புறம்-கஅஉ) எனபது அசைநிலையாகி வந்தது. அசைநிலை என் பது எற்றாற் பெறுது மெனின், மேல் "அம்மஎன்னும் அசைச் சொல் நீட்டம்" (விளிமரபு-நரு) என்பதனாற் பெறுதும். [உஎ]

**272.** ஆங்க உரையசை.

அசைநிலை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஆங்க என்னுஞ்சொல் உரையிடத்து அசைநிலையாம். எ-று.

உ-ம் :—" ஆங்கக் குயிலு மயிலுங் காட்டி " எனவரும். [உஅ]

**273.** ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்.

இதுவுமது.

இ-ள் :—ஒப்புக் குறியாத போல் என்னும் சொல்லும் உரையசையாம். எ-று.

உ-ம் :—அவர் வந்தார் போலும். இதனுள் வந்தார் எனத் துணிந்தவழி வருதலின், அசையாயிற்று. [உகூ]

**274.** யாகா,

பிறபிறக் கரோபோ மாதென வரூஉம்
ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி.

இதுவுமது.

இ-ள் :—யா முதலாகச் சொல்லப்பட்ட ஏழு சொல்லும் அசைநிலைக் கிளவியாம். எ-று.

உ-ம் :—யா—" தோழியா சுவர்க்கம் போக்கிங்கென் " கா—" புறநிழற் பட்டாளோ வவளிவட் காண்டிகா " பிற—தான் பிற—வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி. (புறம்-கசஎ) பிறக்கு—" நசைபிறக் கொழிய ". அரோ—" நோதக, விருங் குயி லாலுமரோ. (கலி ௩௩) போ—" பிரியின் வாழா தென் போ தெய்ய ". மாது—" விளிந்தன்று மாதவத் தெளிந்த வென்னெஞ்சே. (நற்-கஎஅ) எனவரும். [௩௦]

**275** ஆக ஆகல் என்ப தென்னும்
ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை.

இதுவுமது.

இ-ள் :—இவ்வ மூன்று சொல்லும் பிரிவின்றி வரின் அசை நிலையாம். எ-று. இரட்டித்து வருமிடத்து அசை நிலையாம் என்றவாறு.

உ-ம் :—ஆக ஆக, ஆகல் ஆகல், என்பதென்பது என வரும். [நூக

**276.** ஈரள பிசைக்கும் இறுதியில் உயிரே
ஆயியல் நிலையுங் காலத் தானும்
அளபெடை நிலையுங் காலத்தானும்
அளபெடை யின்றித் தனிவருங் காலையும்
உளவென மொழிப் பொருள்வேறு படுதல்
குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்
[றும்.

ஒருசார் இடைச்சொற் பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இரண்டு மாத்திரை யாகி யொலிக்கும் உயிர்களுள் இறுதியாகிய ஔகாரம் அல்லாத உயிர்கள் மேற்கூறியவாறு போல இரட்டித்து வருங் காலத்தினும், அளபெடை பெற்று வருங் காலத்தினும், தனிவருங் காலத்தினும் பொருள் வேறு படுதல் உள என்று சொல்லுவர் ஆசிரியர். அவை ஒரு பொருள் உணர்த்தும் வழி, ஓசையானும், குறிப்பானும் பொருள் உணர்த்தும். எ-று.

உ-ம் :—அவையாவன :—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, என்பன. ஒருவன் தகுதியல்லாத செய்த வழியும், அரியன செய்த வழியும், ஆ, ஆ என்ப. வியப்புள வழியும், துன்பமுள வழியும் ஆ, ஆ என்ப. தமக்கு இயைபில்லாத ஒன்றை ஒருவன் சொன்னவழி, அதனை மறுப்பார் ஆ என்ப. ஈ என்றவழி அரு வருத்தலை உணர்த்தும். ஊ உ இசையை உணர்த்தும். "ஏ ஏ இஃதொத்தன்" (கலி-சூஉ) என்றவழி, இகழ்ச்சியை யுணர்த்தும். "ஏ ஏ என இறைஞ்சி யோளே" என்ற வழி, நாணக்குறித்து நின்றது. ஐ ஐ என்ற வழி, இசைவை உணர்த்தும். "ஓ ஓ உவமை உறழ்வின்றி ஒத்ததே" என்றவழி, மிகுதியை உணர்த்தும்.

ஓ என்றவழி இசைவையும், இரக்கத்தையும் உணர்த்தும். ஓ ஓ என்பது விலக்குதலை உணர்த்தும். பிறவும் இவ்வாறு இரட்டித்தும், அளபெடுத்தும், தனி வந்தும் பொருள் வேறுபடுவன வந்தவழிக் கண்டு கொள்க. அஃதேல், ஏவுங் குறையும் என ஓதவேண்டியதென்னை? அதுவும் இதனுள் அடங்குமாலெனின், ஆண்டுப் பொருளுணர்த்தா நிலையைக் கூறினார். ஈண்டுப் பொருளுணர்த்துவன நிலைமை கூறினார் என்க. [௩௨]

**277.** நன்றீற் றேவும் அன்றீற் றேவும்
அந்தீற் றோவும் அன்னீற் றோவும்
அன்ன பிறவும் குறிப்பொடுங் கொள்ளும்.

ஏகார ஓகாரங்கட்கு எய்தியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—நன்று, அன்று என்பவற்றின்கண் வரும் ஏகாரமும், அந்து, அன் என்பவற்றின்கண் வரும் ஓகாரமும், அத்தன்மைய பிறவும் மேற்கூறியவாற்றானன்றிக் குறிப்புப் பொருளோடும் ஏற்கும். எ-று. உம்மை இறந்தது தழீஇயிற்று.

உ-ம்:—சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யறைப பறையினை—நன்றேகாண் [வர்
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழு
செத்தாரைச் சாவார் சுமந்து. (நாலடி.-உச)

இதனுள் நன்றே காண் என்பது தீதே காண் என்னுங் குறிப்புணர்த்திற்று. "நின்............ன்றே திருமுக்குடையர்" என்றவழி அ(ன்றேயெ)ன்பது அல்லாமையைக் குறியாது முக்குடையானையே சுட்டி நின்று அவன் கேட்பது பயனாக வந்தது. "பொன்னே கொடுத்தும்" (நாலடி.—கசுஉ) என்பதனுள், அன்னோ என்பது அருள் குறித்து நின்றது. *"வெந்திறற் கூற்றம் பெரும்பேது றுப்ப—அந்தோ வளியென் வந்தனென் மன்ற" என்றவழி, அந்தோ என்பது கேடு குறித்து நின்றது. அன்ன பிறவுமாவன வந்தவழிக் கண்டு கொள்க. [௩௩]

**278.** எச்ச வும்மையும் எதிர்மறை உம்மையும்
தத்தமுள் மயங்கும் உடனிலை இலவே.

---

* புறம்-உ௩அ.

உம்மைக்குரியதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எச்ச உம்மையும், எதிர்மறை உம்மையும் தத்தமுள் மயங்கும் உடனிலை இல. எ-று.

உ-ம் :—சாத்தனும் வந்தான் என்றவழிக் கொற்றனும் வரும் என்றுதல், வந்தான் என்றுதல் கூறுதலன்றி, வாரான் என்னற்க. ஒரு தொழிலே கூறல்வேண்டும் என்றவாறு. [௩௪]

279. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.

எச்ச உம்மைக்கண் வழூஉக்காத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எஞ்சு பொருட்கிளவி, உம்மையில் சொல்லாயின், உம்மை, வருகின்ற சொல்லோடு கிளக்க. எ-று.

உ-ம் :—சாத்தனும் வந்தான், கொற்றனும் வரும் என்றற்பாலதன்கண் ஓர் உம்மைவரில், சாத்தன் வந்தான், கொற்றனும் வரும் என்க. [௩௫]

280. முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்
எச்சக் கிளவி உரித்தும் ஆகும்.

இஃது உம்மைக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—முற்றும்மைத் தொகைச்சொற் பொருண்மைக்கண் எச்சப் பொருண்மையும் உரித்து. எ-று.

ஈண்டுத் தொகை என்றது எண்ணின் தொகை.

உ-ம் :—நின்கையிற் காணம் பத்துங் கொடால்-என்றவழிச் சில கொடுக்க என்றவாறும். இது மறுத்த வாய்பாட்டானல்லது வாராது. [௩௬]

281. ஈற்றுநின் றிசைக்கும் ஏயென் இறுதி
கூற்றுவயின் ஓரள பாகலும் உரித்தே.

ஏகாரத்திற்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—செய்யுள் இறுதிக்கண் நின்று ஒலிக்கும் ஏகாரம் சொல்லுமிடத்து ஒருமாத்திரையாகி நிற்கவும் பெறும். எ-று.

உ-ம் :—கடல்போ * ரேன்றல் காடிறந் தோரே. (அகம்—க)
இது ஒரு மாத்திரையாகி நிற்கும். [௩௭]

232. உம்மை எண்ணும் எனவென் எண்ணும்
தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.

எண்ணின்கட் படுவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உம்மையான் எண்ணப்பட்ட எண்ணும், எனவான் எண்ணப்பட்ட, எண்ணும் தம்மிடத்துத் தொகைபெறுதல் நியமம் இல. எ-று.

உ-ம் :—முத்தும், பவழமும் கொணர்ந்தான். நன்றெனத் தீதென நின்றது. முத்தும், பவழமும், பொன்னும் மூன்றுங் கொணர்ந்தான். நன்றெனத் தீதென இரண்டுமாகி நின்றது என இருபாற்றானும் வரும். [௩௮]

233. எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்
எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர்.

இதுவும் அது: ஏகாரத்திற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எண்ணுக் குறித்த ஏகாரம் சொற்றொறுங் கொள்ளாது ஒருவழிக் கொளினும் எண்ணுக் குறித்து நடக்கும். எ-று.

உ-ம் :—தோற்றம் இசையே நாற்றஞ் சுவையே, உறலோ டாங்கைம் புலனென மொழிப என்புழி, இடையிட்டு வந்தும் எண்ணுக் குறித்தது. [௩௯]

234. உம்மை தொக்க எனாவென் கிளவியும்
ஆவீ றாகிய என்றென் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன.

எண்ணின்கண் வருவன சில இடைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உம்மை தொக்க எனவின் திரிபாகிய எனா என்னுஞ் சொல்லும், ஆவீறாகிய என்றா என்னும் சொல்லும் எண்ணின்கட் பட்டன. எ-று. எனவும் என்பது எனா எனவும், என்று என்பது என்றா எனவும், வரும்.

* தோன்றல்--பாடபேதம்.

உ-ம் :—வளிநடந் தன்ன வாஅய்ச்செல் லிவுளியொடு—கொடிநுடங்கு மிசைய தேரின ரெனாஅக்—கடல்கண் டன்ன வொண்படைத் தானையொடு—மலைமாறு மலைக்கும் களிற்றின ரெனாஅ (புறம்—ககூஎ) என்பதனுள் எனவும். என்பது எனா என்றுவந்து எண்ணுக் குறித்தவாறு கண்டுகொள்க. ஒப்பு முருபும் வெறுப்பு மென்றா, கற்பு மேரு மெழிலு மென்றா. (பொருளியல்-ருங) என்பதனுள் என்று என்பது ஆவொடு கூடி. எண்ணுக் குறித்தவாறு கண்டுகொள்க. [சய]

**285.** அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குறி மரபிற் செவ்வெண் இறுதியும்
ஏயி னாகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினும் தொகையின் றியலா.

எண்ணுதற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :-மேற் சொல்லப்பட்ட (எனா) என்று என்பனவற்றான் வரும் எண்ணிறுதியும், பெயர்க்குரி மரபி...........னலெண்ணப் படும் செவ்வெண் இறுதியும், ஏகாரத்தான் எண்ணப்பட்ட எண்ணின் முடிவும் யாதானும் ஒரு நெறியான் வரினும் தொகை யின்றி வழங்கா. எ-று.

உ-ம்:—''மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ-யாத்த சீரே யடியாப் பெனாஅ.........ஆறுதலை யிட்ட வந்நா லைந்தும்'' (செய்யுளியல்—க.) எனவும்; ''அவைதாம், பெயர்ச்சொல் லென்றா வினைச் சொல்லென்றா, இரண்டன் பாலா கியங்குமன் பயின்றே'' எனவும்; ''படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும், உடையான் அரசருள் ஏறு'' (குறள்—ஙஅக) எனவும், ''தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே, ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே'' (சூ—கூ) எனவும் எண் தொகைபெற்றவாறு கண்டு கொள்க. 'கண்கால் புறமகம்' என்னும் சூத்திரத்துள் (வேற்று மையியல்—உ௦) எனவும் ; ''ஒப்பு முருவும்'' (பொருளியல்-ருங) என்னுஞ் சூத்திரத்துள் என்றவும் ; '' * நிலப்பெயர் குடிப்பெயர்'' என்னும் சூத்திரத்துள் ஏகாரமும் தொகை பெற்றிலவாலெனில், அவை, 'அன்ன பிறவும்' எனவும், 'கிளவியெல்லாம்' எனவும்,

* பெயரியல். கக.

'அனைத்தும்' எனவும் தொகைப் பொருண்மை தோன்ற வந்தன. 'செல்ல லின்ன லின்னா மையே' (உரியியல்—எ) என்பதன்கண் தொகை பெற்றின்றாலெனின், யாவயின் வரூஉம் என்றமையால், தொகையின்றி வரினும், அப்பொருளுரைக்குங்கால், தொகையின்றி இயலா எனக்கொள்க. உடம்பொடு புணர்த்தல் என்பதனான் எண்ணேகாரம் இடையிட்டு வருதலேயன்றி, எனாவும், என்றாவும் இடையிட்டு வருதலுங் கொள்க. [சக]

**286.** உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார்.

எண்ணும்மைக்கு உரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—உம்மையான் எண்ணப்பட்ட பொருளின்கண் வரும் உருபாகிய உம்மை ஓரிடத்துத் தொகுதலும் நீக்கார். எ-று.

எனவே, சொற்றொறும் உம்மை கொடாக்காலும் உம்மை எண்ணாகும் என்றவாறாம்.

உ-ம்:—"இயங்குபடை யரவ மெரிபரந் தெடுத்தல், வயங்க லெய்திய பெருமை யானும், கொடுத்த லெய்திய கொடைமை யானும்" (புறத்திணை—அ) என உம்மை ஓரோவழித் தொக்கு நின்றது. இவ்விலக்கணம் எண்ணும்மைக்கே யுரித்து. [சஉ]

**287.** உம்முந் தாகும் இடனுமா ருண்டே.

இதுவும் அது.

இ-ள்:—உம் என்பது உந்து என விரிந்து நிற்கவும் பெறும் இடமும் உண்டு. எ-று.

உ-ம்:—"நெல்லரியு மிருந்தொழுவர், செஞ்ஞாயிற்று வெயின்முனையிற், றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து, திண்டிமில் வன்பரதவர், வெப்புடையமட்டுண்டு, தண்குரவைச்சீர் தூங்குந்து, தூவற் கலித்த தேம்பாய் புன்னை, மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர், எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து, வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல், முண்டகக் கோதை யொண்டொடி மகளிர், இரும்பனையின் குரும்பைநீரும், பூங்கரும்பின் றீஞ்சாறும், ஓங்குமணற் குவவுத்தாழைத், தீநீரோ டுடன்விராய், முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயுந், தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய"

(புறம்-உச) என்றவழி உம் உந்தாயிற்று. எண்ணும்மை அதிகாரப்பட்டு வருதலான், இவ்வாறு வருவது, ஓர் பொருண் மேல் உம்மை அடுக்கியவழி என்று கொள்க. ஈண்டு எண்ணும்மை யாங்கதெனின், ஒரு பொருண்மேல் பல வினைச்சொல் வருதலின், அவை ஒரு முகத்தான் எண்ணப்பட்டவாம். [சரு]

288. வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா
நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே.

இதுவும் அது.

இ-ள் :---மேற் சொல்லப்பட்ட எண்ணின் வேறுபா டெல்லாம் வினையோடு நிற்பினும் எண்ணுநிலை திரியா; ஆண்டு அவற்றவற் றியல்பு ஆராய்தல் வேண்டும். எ-று.

எனவே ஒரு முடிபுடையவல்ல: தொகை பெற்றும் பெறாதும் வரும் என்றவாறும்.

உ-ம் :-"வளிநடந் தன்ன வாஅய்ச்செல் லிவுளி யொடு, கொடி நுடங்கு மிசைய தேரின ரெனாஅக், கடல்கண் டன்ன வொண் படைத் தானையொடு, மலைமாறு மலைக்குங் களிற்றின ரெனாஅ, உருமுரன் றன்ன வுட்குவரு முரசமொடு, செருமேம் படூஉம் வென்றிய ரெனாஅ, மன்கெழு தானை யொண்பூண் வேந்தர், வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே." (புறம்-ககள) என்புழி, வினைக்குறிப்பெண்ணிவந்து தொகைபெறாது நின்றது. "நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும், பேணாமை பேதை தொழில்." (குறள்---அ௩௩) இதுவும் தொகைபெறாது வந்தது. தொகைபெற்று வந்தன வந்தவழிக் கண்டுகொள்க. [சச]

239. என்றும் எனவும் ஒடுவும் தோன்றி
ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே.

இதுவும் எண்ணின்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :---என்றும், எனவும், ஒடுவும் எண்ணினுட் பிரிந்து ஒருவழித் தோன்றி எல்லாப் பெயரொடும் ஒன்றும் நெறி யுடைய எ-று.

இதனானே ஒடு என ஓரிடைச்சொல் கூறியவாறு மாயிற்று.

உ-ம்:—"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொ லென், றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே" (எச்சவியல்-க) எனவும். "யாகா, பிறபிறக் கரோபோ மாதென வரூஉம், ஆயேழ் சொல்லும் (சூ-௩௦) எனவும், "பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும், இருடீர வெண்ணிச் செயல் (குறள்-௬௭௫) எனவும் இவை ஒரோவழிப் பிரிந்துநின்று எல்லாப் பெய ரோடும் ஒன்றிமுடிந்தவாறு கண்டு கொள்க. வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால் என்னும் என்னுஞ்சொல்லும் இவ்வாறு வருமெனக் கொள்க. "மியாயிக மோமதி யிகுஞ்சின் என்னும், ஆவயி னாறும் முன்னிலை யசைச்சொல்" (சூ-௨௬) என்றவழி 'என்னும்' எனவும் வந்தது. எண்ணினுட் பிரிந்தெனப் பொதுப்படக் கூறினமையான் எல்லா எண்ணொடும் வரப்பெறும் என்று கொள்க. "சொல்லெனப் படுப பெயரே வினையென், றாயிரண் டென்ப வறிந்திசி னோரே" (பெயரியல்—௪) ஏகார எண்ணின் கண் வந்தது. பிறவும் பிற எண்ணோடு வருமாறு வந்தவழிக் கண்டுகொள்க. [௨௫]

**290.** அவ்வச் சொல்லிற் கவைபவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல வாயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே.

எடுத்தோதப்பட்ட இடைச்சொற் கெல்லாம் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட இடைச் சொற்களெல்லாம் தனித்தனியே இதற்கு இது பொருளென எடுத்து உணர்த்தப் பட்டவாயினும், வினையோடும், பெயரோடும் குறிக்கப் புலப்பட்டு மற்றொரு வேறுபாட்டனவாகி வரினும், அவ் வேறுபாடு ஆராய்ந்து அதுவும் அதற்கு இலக்கணமாகக் கொள்க. எ-று.

உ-ம்:—"ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்தல், தத்த மரபிற் றோன்றுமன் பொருளே." என்றவழி, மன் அசைநிலை யாயிற்று. "உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி, யிறப்ப நிழற்பயந் தாஅங்-கறப்பயனுந்-தான்சிறி தாயினும் தக்கார்கைப்

பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்." (நாலடி —௩அ) என்பதனுள், உம் இசைநிறை யாயிற்று. "கான்கெழு நாடர் படர்ந்தோர்க்குக் கண்ணும் படுமோ என்றிசின் யானே" என்ற வழி, உம் அசைநிலை யாயிற்று. "தேவரே தின்னினும் வேம்பு" (நாலடி--ககஉ) என்றவழிச், சிறப்புக் குறித்து நின்றது. மழைக் குறிகண்டு மழைபெய்யும் போலும் என்றவழிப், போலும் என்றது ஐயங் குறித்து நின்றது. "தேவாதி தேவனவன் சேவடி. சேர்து மன்றே." (சிந்தா-க.) என்றவழி அன்றே என்பது முழுதும் அசைநிலையாயிற்று. "சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே." (அகம்- ) என்றவழி, ஏகாரம் ஈற்றசையாயிற்று. "குரை கழல்" என்றவழிக், குரை என்பது ஒலிப் பொருண்மை உணர்த்திற்று. பிறவும் இவ்வாறு வருவன வெல்லாம் இதுவே ஓத்தாகக்கொள்க. [௪௬]

291. கிளந்த வல்ல * அன்ன பிறவும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

இது இடைச் சொற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எடுத்தோதப்பட்ட இடைச்சொலன்றி அத்தன்மைய பிறவும் இசைநிறை யசைநிலையாகி வரு.........பொருள் படுமாறும் அறிந்துகொள்க. எ-று.

உ-ம் :—அவற்றுட் சில வருமாறு 'குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே.' (முருகா-உகஎ) என்றவழிக், குன்று தொறு என்பது குன்று பல என்னும் பொருண்மை உணர நின்றது. 'சிறிது தவிர்ந் தீக மாளநின் பரிசிலர்.' (மயிலை-ப-ம்-உ௬௬.) என்றவழி, மாள என்பது அசைநிலை யாயிற்று. 'பிரியின் வாழா தென்போ தெய்ய' (ஐங்குறு-) என்றவழி, தெய்ய என்பது அசைநிலை யாயிற்று. 'எனவாங் கொள்ளழற் பிறந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே.' என்றவழி, எனவும், ஆங்கும் அசைநிலையாயின. "அஞ்சுவ தோரு மறனே ஒருவனை, வஞ்சிப்ப தோரு மவா" (குறள்-௩௬௬) என்றவழி, ஓரும் என்பது அசைநிலை யாயிற்று. 'சொல்லீ யத்தை நின் வெகுளி' என்றவழி, அத்தை அசைநிலை யாயிற்று. "அரும்பெற லுலக நிறைய—விருந்து பெற்றனராற் பொலிகநின் புகழே"

* வேறுபிற தோன்றினும்—சேனாவரையம்.

(புறம்-சுஉ) என்றவழி, ஆல் அசைநிலை யாயிற்று. 'தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டு மூன்றுங், கடிநிலை யிலவே பொருள் வயினான, (வேற்றுமைமயங்-க௦) என்றவழி, ஆன அசைநிலை யாயிற்று. 'செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்-கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே' (கலி-எ.) என்றவழி, யாழ அசைநிலை யாயிற்று. பிறவும் அன்ன. [சஎ]

## இடைச்சொல் ஒத்து முடிந்தது.

இவ்வோத்தினுட் சூத்திர முட்பட உரையினதளவு கிரந்த வகையான் முந்நூற்று நாற்பது.

**292.** உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் [தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உரிச்சொல் ஓத்து என்னும் பெயர்த்து: உரிச்சொல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர்.

உரிச்சொல் என்பது யாதோ எனின், ஒரு வாய்பாட்டாற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாகி வருவது. அதனானேயன்றே, ஒருசோற் பலபோருட் குரிமை தோன்றினும், பலசோல் ஒருபோருட் குரிமை தோன்றினும் என ஓதுவாராயினர். எழுத்ததிகாரத்துள் இதனைக் * குறைச்சோற் கிளவி என்று ஓதினமையால், வடநூலாசிரியர் தாது என்று குறியிட்ட சொற்களே இவையென்று கொள்ளப்படும்: அவையும் குறைச் சொல்லாதலான். அஃதேல், தொழிற் பொருண்மை உணர்த்துவன எல்லாம் இதனுள் ஓதினரோ எனின், வெளிப்படு சோல்லே கிளத்தல் வேண்டா, வேளிப்பட வாரா உரிச்சோல் மேன (சூ-உ.) என்றாராகலின், வழக்கின்கட் பயிற்சி இல்லாத சொற்கள் ஈண்டு எடுத்து ஓதப்படுகின்றன என்க.

தொழிலாவது வினையுங் குறிப்புமாதலின், அவ்விரு சொற்கும் அங்கமா...........ண்டுக் கூறப்படுகின்றன. இதன் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின், உரிச்சோற் கேல்லாம் உரிய தோர் போது இலக்கணமும், அவற்றிற்குப் யோருந்துந் திறனும் உணர்த்துதல் நுதலிற்று.

* எ௰உ-ரு

இ-ள் :—"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை" என்பது உரிச்சொல் ஆகிய சொல்லை விரித்து உரைக்குங் காலத்து-எ-று. "இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி" என்பது சொல்லானும், குறிப்பானும், பண்பானும் புலப்பட எ-று. சொல்லாற் புலப்பட்டது உறு என்பது, இதனின் அஃதுறும் என்றவழி, மிகும் என்னும் பொருள் புலப்பட்டது. குறிப்பாற் புலப்பட்டது—கறுத்தான் என்பது. ஒருவன்மாட்டுக் கருமை யாகிய நிறத்தைக் குறியாது, அவனது வெகுட்சியைக் குறித்த லிற் குறிப்பாயிற்று. பண்பாற் புலப்பட்டது—வெகுளிக்குக் கண்சிவக்கும் என்(பது.) கண்ணின் சிவப்பு அது சிவத்தற்குக் காரணமாகிய வெகுட்சியின்மேல் வந்தது. இவையிற்றை வட நூலாசிரியர் கௌணம்.................................................. ....................பொருள்படுவழிச் சொல்லானும், குறிப்பானும், குணத்தானும் பொருள்படூஉம் என்பதூஉம், ஈண்டுக் கூறப்படு கின்ற உரிச்சொல் இம் மூவகையானும் பொருள் வேறுபடும் என்பதூஉம் கூறியவாறும். 'பெயரினும் வினையினும் மெய்தடு மாறி' என்பது உரிச்சொல்லாகிய உருபு பெயரின்கண்ணும் வினையின்கண்ணும் தடுமாறி எ-று. அவை தடுமாறுங்கால் பெயர் வினைகளைச் சார்ந்தும், அவற்றிற்கு அங்கமாகியும் வரும். 'உறுவளி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. 'உறக் கொண்டான்' என்பது வினையைச் சார்ந்து வந்தது. 'உறுவன்' என்றவழிப் பெயர்க்கு அங்கமாயிற்று. 'உற்றான்' என்றவழி வினைக்கு அங்கமாயிற்று. 'ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும், பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்' என்பது ஒரு சொல் பல பொருட்கு உரித்தாகித் தோன்றினும், பல சொல் ஒரு பொருட்கு உரித்தாகித் தோன்றினும் எ-று. ஒருசொல் ஒருபொருட் குரித்தாகி வருதல் சொல்லாமன் முடிந்ததாம். 'பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்-தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்' என்பது உரிச்சொற்கள் தத்தம் மரபினாற் சென்று நிற்குமிடத்து, வழக்கின்கட் பயின்று நடவாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்தி. எ-று. பயிலாத சொல்லாவன:—உறு, தவ, நனி. பயின்ற சொல்லாவன மிகுதல், உட்கு, உயர்வு என்பன. சேர்த்துதலாவது இச்சொற்கள் இச் சொல்லின் பொருள்படும் எனக் கூட்டுதல். 'எச்சொல்லாயினும்

பொருள்வேறுகிளத்தல்' என்பது யாதானும் ஒரு சொல்லாயினும் பொருள் வேறுபடுத்திக் காட்டுக. எ-று.

தோன்றித் தமோறி என்னும் செய்தென் எச்சம் உரிமை தோன்றினும் என்னும் செயின் எச்சத்தினேடு ஒன்றிக், கிளக்க என்னும் வியங்கோளோடு முடிந்தது. உரிச்சொற் கிளவியை விரித்துரைக்குங் காலத்துச், சொல்லானும், குறிப்பானும், பண்பானும் பொருள் புலப்பட்டுப், பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் உருபு தடுமாறி, ஒருசொற் பலபொருட்கு உரிமையாகித் தோன்றினும், பலசொல் லொருபொருட்கு உரிமையாகித் தோன்றினும் தத்தம் மரபிற் சென்று நிற்குமிடத்துப், பயிலாத சொற்களைப் பயின்ற சொல்லோடு சேர்த்தி, யாதானுமொரு சொல்லாயினும் பொருள் வேறுபடுத்து உரைக்க: அறிவோர் என்றவாறு. [க]

**293.** வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.

ஈண்டு ஓதுகின்ற உரிச்சோல் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வழக்கின்கண் எல்லாரானும் அறியப்பட்ட சொல் ஈண்டு எடுத்து ஓதவேண்டா. அறியப்படாத உரிச்சொன்மேல: வருகின்ற சூத்திரங்கள். எ-று.

உ-ம் :—வெளிப்படு சொல்லாவன உண்டல் என்பதற்கு அயிறல், மிசைதல் எனவும்; உறங்குதல் என்பதற்குத் துஞ்சல் எனவும்; இணைவிழைச்சு என்பதற்குப் புணர்தல், கலத்தல், கூடல் எனவும்; அச்சம் என்பதற்கு வெரூஉதல் எனவும் இவ்வாறு வருவன. (இனி) வெளிப்படவழங்காதன கூறப்படுகின்றன. [உ]

**294.** * உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப.

---

* அவைதாம்—சேனவரையம்.

இது உரிச்சொற்களிற் சில சொற்பொருள் உணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இக்கருத்து வருகின்ற சூத்திரங் கட்கும் ஒக்கும்.

இ-ள் :—உறு, தவ, நனி என்று சொல்லப்பட்ட மூன்று சொல்லும் மிகுதி என்னும் சொல்லான் அறியப்படும் பொருளை உணர்த்தும். எ-று.

உ-ம் :—'உறுபுனல் தந்துல கூட்டி' (நாலடி-கஅரு); 'ஈயாது வீயும் உயிர்தவப் பலவே' (புறம்—உருரு); 'வந்துநனி வருந்தினை வாழிய † நெஞ்சே' (அகம்—கக); இவை மிகுதி உணர்த்திய வாறு கண்டு கொள்க. [ரு]

**295.** § உருவுட் காகும்.

இ-ள் :—உரு என்னும் சொல் உட்கு என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—'உருகெழு கடவுள்'—உட்குமிக்க கடவுள் என்றவாறு. [சு]

**296.** புரையுயர் பாகும்.

இ-ள் :—புரை என்பது உயர்வு என்னும் பொருள்படும். எ-று.

உ-ம் :—'புரைய மன்ற புரையோர் கேண்மை.' (நற்-க) [ரு]

**297.** குருவும் கெழுவும் நிறனா கும்மே.

இ-ள் :—குரு என்பதூஉம், கெழு என்பதூஉம் நிறம் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'குருமணித் தாலி.' 'செங்கேழ் மென்கொடி.' (அகம்—அ0). கெழு என்பது கேழ் எனவும் வரும். [சு]

**298.** செல்லல் இன்னல் இன்னா மையே.

---

† வாழியென்—வேறுபாடம்.

§ அடுத்த சூத்திரத்தையும் இதனோடு சேர்த்துரைப்பர்-ஏனையுரையாளர்கள்.

இ-ள் :—செல்லல் என்னும் சொல்லும், இன்னல் என்னும் சொல்லும் இன்னாமைப் பொருளில் வரும். எ-று.

உ-ம் :—† 'மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்'. 'வெயில்புறந் தரூஉம் இன்ன லியக்கத்து'. (மலைபடு—நஎச.) [எ]

**299.** மல்லல் வளனே.

இ-ள் :—மல்லல் என்னும் சொல் வளப்பம் என்னும் பொருள் தரும். எ-று.

உ-ம் :—'மல்லல் மால்வரை'. (அகம்—ருஉ) [அ]

**300.** ஏபெற் றாகும்.

இ-ள் :—ஏ என்னும் சொல் பெற்றுதல் என்னும் பொருள் படும். எ-று.

உ-ம் :—'ஏக லடுக்கம்'. (நற்றிணை—ககசு.) பெற்றுதல் என்பது இக்காலம் பற்றுதல் எனவரும். [கூ]

**301.** *உகப்பே உயர்தல்.

இ-ள் :—உகப்பு என்னும் சொல் உயர்தல் என்னும் பொருள் படும். எ-று.

உ-ம் :—'விசும்புகந் தாடாது'. [க0]

**302.** உவப்பே உவகை.

இ-ள் :—உவப்பு என்னும் சொல் உவகை என்னும் பொருள் படும். எ-று.

உ-ம் :—'உவந்துவந் தார்வ நெஞ்சமொடு.' (அகம்-நரு) [கக]

**303.** பயப்பே பயனும்.

இ-ள் :—பயப்பு என்னும் சொல் பயன் என்னும் பொருள் படும். எ-று.

உ-ம் :—'பயவாக் களரனையர் கல்லா தவர்.' (குறள்-சOசு) [கஉ]

---

† அகம்-உஉ. * இதனையும் அடுத்த சூத்திரத்தினையும் ஒன்றாகக் கொள்வர்—எனை யுரையாளர்கள்.

**304.** பசப்பு நிறனுகும்.

இ-ள் :--பசப்பு என்னும் சொல் நிறத்தை உணர்த்தும். எ-று.

உ-ம் :--'மையில் வாண்முகம் பசப்பூரும்மே'. (கலி-எ) [கஉ]

**305.** இயைபே புணர்ச்சி.

இ-ள் :—இயைபு என்னும் சொல் புணர்தல் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'இயைந் தொழுகும்.' [கச]

**306.** இசைப்பிசை யாகும்.

இ-ள் :—இசைப்பு என்னும் சொல் இசைத்தல் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'யாழிசையூப் புக்கு,' 'இசைத்தலு முரிய,' 'வாயி லிசை' என ஒலிப்பொருட்கண் வந்தன. [கரு]

**307.** அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி.

இ-ள் :—அலமரல் என்னும் சொல்லும், தெருமரல் என்னும் சொல்லும் சுழலல் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'அலமர லாயம்' (ஐங்-கூச); 'தெருமரலுள்ளமோ டன்னை துஞ்சாள்.' [கசு]

**308.** மழவும் குழவும் இளமைப் பொருள.

இ-ள் :—மழ என்னும் சொல்லும் குழ என்னும் சொல்லும் இளமை என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'மழகளிறு' (புறம்-ங௮); 'குழக்கன்று' (நாலடி-க0க). [கஎ]

**309.** சீர்த்தி மிகுபுகழ்.

இ-ள் :—சீர்த்தி என்னும் சொல் மிகுபுகழ் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'வயக்கஞ் சால் சீர்த்தி.' [கஅ]

**310.** மாலை இயல்பே.

இ-ள் :—மாலை என்னும் சொல் இயல்பு என்னும் பொருள் படும். எ-று.

உ-ம் :—'குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்' (கலி-கூ). [கசு]

**311.** கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.

இ-ள் :—கூர்ப்பு என்பதூஉம், கழிவு என்பதூஉம் முன்புள்ளதன்கண் மிகுதியைக் குறித்து வரும். எ-று.

உ-ம் :—' துனிகூ ரெவ்வமொடு' (சிறுபாண்-ருக); 'கழிகண்ணோட்டம்' (பதிற்-உஉ). [உ0]

**312.** கதழ்வும் துனைவும் விரைவின் பொருளே.

இ-ள் :—கதழ்வு என்னும் சொல்லும், துனைவு என்னும் சொல்லும் விரைவு என்பதன் பொருள்படும். எ-று. கதழ், துனை என்னும் சொற்களை இனிது விளக்குதற்(குப்) பெயராக்கி ஓதினார். மேற் சொல்லப்பட்ட வற்றினும், இனி வருவனவற்றினும் குறைச் சொல்லாகி இவ்வாறு வருவன அறிந்துகொள்க.

உ-ம் :—'கதழ்பரி நெடுங்தேர்' (நற்றிணை-உ0ரு); 'துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்.' [உக]

**313.** அதிர்வும் விதிர்(ப்பு)ம் நடுக்கம் செய்யும்.

இ-ள் :—அதிர்வு என்பதூஉம், விதிர்வு என்பதுஉம் நடுக்கம் என்பதன் பொருள் உணர்த்தும். எ-று.

உ-ம் :—'எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை, அதிர வருவதோர் நோய்' (குறள்-சஉகூ); 'விதிர்ப்புற வறியா வேமக் காப்பினை' (புறம்-உ0). [உஉ]

**314.** வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள.

இ-ள் :—வார்தல் என்னும் சொல்லும், போகல் என்னும் சொல்லும், ஒழுகல் என்னும் சொல்லும் நேர்பு என்பதன்

பொருண்மையும், நெடுமை என்பதன் பொருண்மையும் உணர்த்தும். எ-று.

உ-ம் :—'வார்ந்திலங்கு வையெயிற்று' (குறு-கச); 'போகு கொடிமருங்குல்' இவைநேர்மை. 'வார்கையிற் றெழூகை' (அகம்-களரு); $'வெள்வேல் வலத்தரொடு காருடைபோகி.' 'மால்வரை யொழுகிய வாழை' (சிறுபாண்-உக). இவை நெடுமை. [உரு]

**315.** தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.

இ-ள் :—தீர்தல் என்னும் சொல்லும், தீர்த்தல் என்னும் சொல்லும் விடுதல் என்னும் பொருள்படும். எ-று.

உ-ம்:—'துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை' (நற்றிணை-கOஅ) இது தன்வினை. நோய் தீர்த்தான் என்றவழிப் பிறவினை-விடுத்தான் எனப்படும். இவ்வேறுபாட்டான் இரண்டாக ஓதினர்.

**316.** கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு.

இ-ள் :—கெடவரல் என்னும் சொல்லும், பண்ணை என்னும் சொல்லும் விளையாட்டு என்பதின் பொருள்படும். எ-று.

உ-ம் :—'கெடவர லாயம்'. 'பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்.' (மெய்ப்பாட்டியல்-க) [உகு]

**317.** தடவும் கயவும் நளியும் பெருமை.

இ-ள் :—தட என்னும் சொல்லும், கய என்னும் சொல்லும், நளி என்னும் சொல்லும் பெருமை என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'தடக்கை' (புறம்-ருகூச). 'கயவாய்.' (அகம்-ககஅ) 'நளிமலை' (புறம்-கருO.) [உசா]

**318.** * அவற்றுள்
தடவென் கிளவி கோட்டமும் செய்யும்
கயவென் கிளவி மென்மையும் செய்யும்
நளியென் கிளவி செறிவும் ஆகும்.

இ-ள்:—மேற் சொன்னவற்றுள், தட என்னும் சொல் கோடுதல் என்பதன் பொருண்மையும், கய என்னுஞ் சொல்

---

$ பதிற்-கரு—காண்க.

* இதனை மூன்று சூத்திரங்களாகக் கொள்வர் ஏனையுரையாளர்கள்.

மென்மை என்பதன் பொருண்மையும், நளிதல் என்பது செறிதல் என்பதன் பொருண்மையும் படும். எ-று.

உ-ம்:—'தடமருப் பெருமை' (நற்-கஉ௦.); 'கயந்தலைக் குழவி'; 'நளியிருள்'. [உஎ]

**319.** பழுது பயனின்றே.

இ-ள்:—பழுது என்னும் சொல் பயனின்மை உணர்த்தும். எ-று.

உ-ம்:—"பழுது கழி¶ நாள்" [உஅ]

**320.** சாயல் மென்மை.

இ-ள்:—சாயல் என்னும் சொல் மென்மை என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம்:—'சாயன் மயில்'. [உகூ]

**321.** முழுதென் கிளவி எஞ்சாப் பொருட்டே.

இ-ள்:—முழுது என்னும் சொல் ஒழியாமையை உணர்த்தும். எ-று.

உ-ம்:—'உலகமுழு தாண்ட'. [௩௦]

**322.** வம்பு நிலை யின்மை.

இ-ள்:—வம்பு என்னும் சொல் நிலையின்மையை உணர்த்தும். எ-று.

உ-ம்:—'வம்பமாரி' (குறுந்-௬௬). [௩க]

**323.** மாதர் காதல்.

இ-ள்:—மாதர் என்னும் சொல் காதல் என்னும் சொல்லின் பொருள்படும். எ-று.

உ-ம்:—'மாதர் நோக்கு.' [௩உ]

**324.** நம்பும் மேவும் நசையா குமே.

இ-ள்:—நம்பு என்னும் சொல்லும், மேவு என்னும் சொல்லும் நசை என்பதன் பொருள்படும். எ-று.

¶ வாழ் நாள்—ஏனையுரைப் பாடங்கள்.

உ-ம்:—'நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி' (அகம்-ககூஅ) 'பேரிசை நவிர மேஎ யுறையும்.' (மலைபடு-அஉ) [ந ந]

**325.** ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்.

இ-ள்:—ஓய்தல் என்னும் சொல்லும், ஆய்தல் என்னும் சொல்லும், நிழத்தல் என்னும் சொல்லும், சாஅய் என்னும் சொல்லும் ஆகிய அந்நான்கு சொல்லும் ஒரு பொருட்குள்ள... ..........நுணுக்கத்தைக் காட்டும். எ-று.

உ-ம்:—'வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு' (கலி-எ); 'பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை' (கலி-கூசு); 'நிழத்த யானை மேய்புலம் படர' (மது-நOந); 'கயலற லெதிரக் கடும்புனற் சாஅய்' (நெடுநல்-கஅ.) [ந ச]

**326.** புலம்பே தனிமை.

இ-ள்:—புலம்பு என்னும் சொல் தனிமை என்னும் பொருள்படும். எ-று.

உ-ம்:—'புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி.' (அகம்-எ)

**327.** துவன்று நிறைவாகும்.

இ-ள்:—துவன்று என்பது நிறைவு என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம்:—" ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்" (நற்-கஎO.) [ந சு]

**328.** முரஞ்சல் முதிர்வே.

இ-ள்:—முரஞ்சல் என்னுஞ் சொல் முதிர்வு என்னும் பொருள்படும். எ-று.

உ-ம்:—" கோடுபல முரஞ்சிய கோளி யாலம்". [ந எ]

**329.** வெம்மை வேண்டல்.

இ-ள்:—வெம்மை என்னும் சொல் வேண்டல் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம்:—" நீ வெய்யோளோடு." [ந அ]

**330.** பொற்பே பொலிவு.

இ-ள் :—பொற்பு என்னும் சொல் பொலிவு என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'பெருவரை யடுக்கம் பொற்ப' (நற்-ருச.) [ருக].

**331.** வறிது சிறிதாகும்.

இ-ள் :—வறிது என்னும் சொல் சிறிது என்பதன் பொருளாகும். எ-று.

உ-ம் :—'வறிதுநெறி யொரீஇ.' [சo]

**332.** ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்.

இ-ள் :—ஏற்றமென்னும் சொல் நினைவு, துணிவு என்பவற்றின் பொருள்படும். எ-று.

உ-ம் :—'கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி' (குறுந்-கசரு.) இது நினைவு. *'ஏற்றென் றிரங்குவ செய்யற்க.' இது துணிவு. [சக]

**333.** பிணையும் பேணும் பெட்பின் பொருள.

இ-ள் :—பிணை என்னுஞ் சொல்லும், பேண் என்னும் சொல்லும் பெட்பு என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—'அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்'; 'அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்'; (புறம்-கரு.) [சஉ]

**334.** பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்.

இ-ள் :—பணை என்னும் சொல் பிழைத்தல் என்பதன் பொருளும், பெருப்பு என்பதன் பொருளும் படும். எ-று.

உ-ம் :—'பணைத்துவீழ் பகழி.' இது பிழைப்பு. 'பணைத் தோள்'. (அகம்-க) (இது) பெருமை. [சங]

**335.** படரே உள்ளல் செலவும் ஆகும்.

இ-ள் :—படர் என்பது நினைத்தல் என்பதன் பொருளும், செலவு என்பதன் பொருளும் படும். எ-று.

---

* குறள்-ருருரு—காண்க.

உ-ம் :—'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி.' (புறம்-சஎ) இது நினைவு. 'கறவை கன்றுவயிற் படர்.' (குறுந்-கoஅ) இது செலவு. [சச]

**336.** பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள.

இ-ள் :—பையுள் என்னும் சொல்லும், சிறுமை என்னும் சொல்லும் நோய் என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :-'பையுண் மாலை.' (குறு-ககரு.); 'சிறுமை யுறுபவோ செய்பறி யலரே.' (நற்-க.) [சரு]

**337.** எய்யா மையே யறியா மையே.

இ-ள் :—எய்யாமை என்னும் சொல் அறியாமை என்னும் பொருள் படும். எ-று.

உ-ம் :—'எய்யா மையலை நீயும் வருந்துதி'. (குறிஞ்சி-அ.)

**338.** நன்று பெரிதாகும்.

இ-ள் :—நன்று என்பது பெரிது என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—'நன்று மரிதுற் றனையாற் பெரும.' (அகம்-கo.)

**339.** தாவே வலியும் வருத்தமு மாகும்.

இ-ள் :—தாவு என்னும் சொல் வலி என்பதன் பொருண்மையும், வருத்தம் என்பதன் பொருண்மையும் படும். எ-று.

உ-ம் :—'தாவி னன்பொன் றைஇய பாவை'. (அகம்-உகஉ.) இது வலி. 'கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றென'. (குறு-சுகூ.) இது வருத்தம். (சஅ)

**340.** தெவுக்கொளற் பொருட்டே.

இ-ள் :—தெவு என்னும் சொல் கொள்ளுதல் என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—'நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்'. (மது-அகூ.) [சகூ]

**341.** தெவ்வுப் பகையாகும்.

இ-ள் :—தெவ்வு என்னும் சொல் பகை என்னும் பொருள் படும். எ-று.

உ-ம் :—"தெவ்வுப் புலம்". [௫0]

**342.** விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே.

இ-ள் :—விறப்பு என்னும் சொல்லும், உறப்பு என்னும் சொல்லும், வெறுப்பு என்னும் சொல்லும் செறிவு என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—"விறந்த காப்போ டுண்ணின்று வலியுறுத்தும்'. 'உறந்த விஞ்சி.' 'வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்' (புறம்-௫௩.) [௫௧]

**343.** அவற்றுள்
விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்.

இ-ள் :—அவற்றுள் விறப்பு என்னும் சொல் வெரூஉதல் என்பதன் (பொருளும்) படும். எ-று.

உ-ம் :—"அவலெறி புலக்கைப் பாடுவிறந் தயல" (பெரும்பாண்-௨௨௬.) [௫௨]

**344.** கம்பலை சும்மை கலியே யழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள.

இ-ள் :—கம்பலை என்னும் சொல்லும், சும்மை என்னும் சொல்லும், கலி என்னும் சொல்லும், அழுங்கல் என்னும் சொல்லும் இவை நான்கு சொல்லும் அரவம் என்னும் பொருளை யுடைய. எ-று.

உ-ம் :—"கம்பலை மூதூர்" (புறம்-௫௪); 'ஒருபெருஞ் சும்மையொடு'; 'கலிகொ ளாயம்' (அகம்-௧௧); 'உயவுபுணர்ந் தன்றிவ் வழுங்க லூரே' (நற்-௨௧௩.). [௫௩]

**345.** அவற்றுள்
அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள், அழுங்கல் என்னும் சொல் இரக்கம் என்பதன் பொருண்மையும், கேடு என்பதன் பொருண்மையும் படும், எ-று.

உ-ம்:—'மகவீழ்ந் தழுங்கிய'—(இது) இரக்கம். 'குணனழுங் கக் குற்ற முழைநின்று கூறும்' (நாலடி.-௩௫௩) —இது கேடு.

**346.** கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும்.

இ-ள் :—கழும் என்பது மயக்கம் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—'கழுமிய ஞாட்பின்' (களவழி-௧௧). [௫௫]

**347.** செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்.

இ-ள் .—செழு என்பது வளன் என்பதன் பொருளும் கொழுப்பு என்பதன் பொருளும் படும். எ-று.

உ-ம்: —'செழும்பல் குன்றம்'—இதுவளம். 'செழுந்தடி'—இது கொழுப்பு.' [௫௬]

**348.** § விழுமம்
சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்.

இ-ள் :—விழுமம் என்பது சீர்மை யென்பதன் பொருளும், சிறப்பு என்பதன் பொருளும், இடும்பை என்பதன பொருளும் படும். எ-று.

உ-ம் :—'விழுமியோர்-காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.' (நாலடி.-௧௫௯)—இது சீர்மை. 'வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து' (புறம்-௨௭) .—இது சிறப்பு. 'நின்னுறு விழுமங் களைந் தோன்' (அகம்-௧௭0)—இது இடும்பை. [௫௭]

**349.** கருவி தொகுதி.

இ-ள் :—கருவி யென்னுஞ் சொல் தொகுதி யென்னும் பொருள் படும், எ-று.

உ-ம் :—'கருவி வானம்' (புறம்-௧௫௯). [௫௮]

§ விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் என்பது ஏனையுரை களின் பாடம்.

**350.** கமம்நிறைந் தியலும்.

இ-ள்:—கமம் என்னுஞ் சொல் நிறைந்து என்பதனோடு இயலும். எ-று.

உ-ம்:—'கமஞ்சூல் மாமழை' (அகம்-௪௩.) (குறு-௧௫௮) (முருகா-௭). [௩௪௯]

**351.** அரியே ஐம்மை.

இ-ள்:—அரி யென்னுஞ் சொல் ஐது என்னும் பொருண்மை படும். எ-று.

உ-ம்:— அரிமயிர் திரண்முன்கை' (புறம்-௧௧.) [௩௫௦]

**352.** கவவகத் திடுமே.

இ-ள்:—கவவு என்னுஞ் சொல் அகத்திடுதல் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம்:— கழூஉ விளங்காரம் கவைஇயமார்பே.' (புறம்-௧௯)

**353.** துவைத்தலும் சிலைத்தலும் *இரங்கலும் இயம்பலும்
இசைப்பொருட் கிளவி யென்மனார் புலவர்.

இ-ள்:—துவைத்தல் என்னுஞ் சொல்லும், சிலைத்தல் என்னுஞ் சொல்லும், இரங்கல் என்னுஞ் சொல்லும், இயம்பல் என்னுஞ் சொல்லும் ஓசைப் பொருண்மையுடைய சொல். எ-று.

உ-ம்:—'வரிவளை துவைப்ப' 'ஆமா நல்லேறு சிலைப்ப' (முருகு-௨௧௫). 'ஏறிரங் கிருளிடை' (கலி-௪௬). 'கடிமரந் தடியு மோசை தன்னூர்-நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப' (புறம்-௩௬.) [௩௫௨]

**354.** அவற்றுள்
இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள் இரங்கல் என்பது கழிந்தது என்னும் பொருளையும் உடைத்தாகும். எ-று.

உ-ம்:—'செய்திரங் காவினை' (புறம்-௧௦.) [௩௫௩]

---

* இயம்பலும் இரங்கலும் என்பது ஏனை உரையாளர் பாடம்.

**355.** இலம்பா டொற்கம் ஆயி ரண்டும் வறுமை.

இ-ள் :—இலம்பாடு என்னுஞ் சொல்லும், ஒற்கம் என்னுஞ் சொல்லும் வறுமை யென்னுஞ் சொல்லின் பொருள்படும். எ-று.

உ-ம்:—இலம்படு புலவர் ஏற்றகைந் நிறைய (மலைபடு-௫௭௬). ஒக்க லொற்கஞ் சோலிய (புறம்-௩௨௭). [௬௪]

**356.** ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.

இ-ள் :—ஞெமிர்தல் என்னுஞ் சொல்லும், பாய்தல் என்னுஞ் சொல்லும் பரத்தல் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—திருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து (நெடுநல்-௯௦). பாய்புனல். [௬௫]

**357.** கவர்புவிருப் பாகும்.

இ-ள் :—கவர்பு என்னுஞ் சொல் விருப்பு என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—கவர் நடைப்புரவி (அகம்-௧௩௦). [௬௬]

**358.** சேரே திரட்சி.

இ-ள் :—சேர் என்னுஞ் சொல் திரட்சி யென்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—சேர்ந்துசெறி குறங்கு (நற்-௧௭௦.) [௬௭]

**359.** வியலென் கிளவி யகலப் பொருட்டே.

இ-ள்: —வியல் என்னுஞ் சொல் அகலம் என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—வியலுலகம். [௬௮]

**360.** பேஎ நாம் உருமென வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள.

இ-ள் :—பேஎ என்னுஞ் சொல்லும், நாம் என்னுஞ் சொல்லும், உரும் என்னுஞ் சொல்லுமாகிய அம்முறைமையை யுடைய மூன்று சொல்லும் அச்சப் பொருண்மையை உடைய. எ-று.

உ-ம் :—மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள் (குறுந்-அஎ). * நாம நல்லராக் கதுவியாங்கு. $ உருமில் சுற்றமோ டிருந்தோற் குறுகி (பெரும்-சசஎ), [சாகூ]

**361.** *வயவலி யாகும்.*

இ-ள் :—வயவென்னுஞ் சொல் வலியென்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—வயக்களிறு. [எ0]

**362** *வாள்ஒளி யாகும்.*

இ-ள் :—வாள் என்னுஞ் சொல் ஒளி யென்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—வாணுதல். (முருகு-சு). [எக]

**363.** *துயவென் கிளவி அறிவின் றிரிபே.*

இ-ள் :—துயவு என்னுஞ் சொல் அறிவின் திரிபாகிய பொருள் படும். எ-று.

உ-ம் :—துயவுற்றேம் யாமாக. [எஉ]

**364.** *உயாவே யுயங்கல்.*

இ-ள் :—உயா என்னுஞ் சொல் உயங்கல் என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம் :—பருந்திருந் துயாவிளி பயிற்றும். (அகம்-கசு) [எங]

**365.** *உசாவே சூழ்ச்சி.*

இ-ள் :—உசா என்பது சூழ்ச்சி என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—யானுனெ னுசாவுகோ வைய சிறிது. [எச]

**366.** *வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.*

இ-ள் :—வயா என்னுஞ் சொல் வேட்கைப் பெருக்கத்தினை யுணர்த்தும். எ-று.

---

* நாம நல்லார் எனப் பல உரைகளுள்ளும் காணப்படும் இதனைப் பண்டிதர் திரு. அ. கோபாலையரவர்கள் கூர்ந்து ஆய்ந்து, நாம நல்லரா என விருத்தல் வேண்டும் என்றனர். இது சாலவும் பொருத்த முடையதே.

$ உருப்பில் சுற்றம்.—பத்துப்பாட்டு அச்சுப்பிரதி.

உ-ம் :—..........................மண்டு கவேயா நாகுபோல் நோக்கி. வயா என்றது கன்றின்மேற் காதல் குறித்து நின்றது.

**367.** கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.

இ-ள் :—கறுப்பு என்பதும் சிவப்பு என்பதும் வெகுளி என்பதன் பொருளையுடைய. எ-று.

உ-ம் :—நிற்கறுத் தோரருங் கடிமுனை யாமைபோல். நீசிவந் திறுத்த நீரழி பாக்கம் [பதிற்-கரு.) [எசு]

**368.** நிறத்துரு வுணர்த்தற்கும் உரிய வென்ப.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருட்கண் வருதலன்றி, நிறத்துரு உணர்த்தற்கும் உரிய. எ-று.

உ-ம் :—கறுத்த காயா. சிவந்த காந்தள் (பதிற்-கரு). [எஎ]

**369.** நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை.

இ-ள் :—நொசிவு என்பதூஉம், நுழைவு என்பதூஉம், நுணங்கு என்பதூஉம், நுண்மை என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—நொசி மருங்குல். நுழைநூற் கலிங்கம் (மலைபடு-ருசுக): நுணங்கிய கேள்வியர் (குறள்-சகக). [எஅ]

**370.** புனிறென் கிளவியீன் றணி(மை)ப் பொருட்டே.

இ-ள் .—புனிறு என்பது ஈன்றணித்தென்னும் பொருட்டில் நிற்கும். எ-று.

உ-ம் :—புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி (அகம்-ருசு.) [எகூ]

**371.** நனவே களனும் அகலமுஞ் செய்யும்.

இ-ள் :—நனவென்பது களன் என்னும் பொருண்மையும், அகலம் என்பதன் பொருண்மையும் உணர்த்தும். எ-று.

உ-ம் :—நனவுப்புகு விறலியிற் றோன்றும் நாடன் (அகம்-அஉ). இது களம். நனந்தலை யுலகம் (பதிற்-சுரு). இது அகலம்.

**372.** மதவே மடனும் வலியும் ஆகும்.

இ-ள் :—மத என்னுஞ் சொல் மடம் என்பதன் பொருண்மையும், வலியென்பதன் பொருண்மையும் உணர்த்தும். எ-று.

உ-ம் :—பதவுமேய (லருந்திய) மதவுடை நல்லான் (அகம்-கச-காண்க). இது மடம். கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு (அகம்-நகூ). இதுவலி. [அக]

**373.** மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட மத என்னும் சொல் மிகுதி என்பதன் பொருளும், வனப்பு என்பதன் பொருளும் படும். எ-று.

உ-ம் :—பொருநா கிளம்பாண்டி-றேருறச் செம்மாந் ததுபோன் மதையினள். இது மிகுதி. மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே (அகம்-கரு0). இது வனப்பு. [அஉ]

**374.** புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.

இ-ள் :—யாணர் என்னும் சொல் புதியதுபடுதல் என்னும் பொருண்மையை உடைத்து. எ-று.

உ-ம் :—வித்தோடு சென்ற வட்டி பற்பல, மீனொடு பெயரும் யாண ரூர (நற்-உக0)--நாடொறும் புதியது படுகின்ற வூர். [அந]

**375.** அமர்தல் மேவல்.

இ-ள் :—அமர்தல் என்பது மேவல் என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம்:—அகனமர்ந்து செய்யா ளுறையும் (குறள்-அச.) [அச]

**376.** யாணுக் கவினும்.

இ-ள் :—* யாணு என்னுஞ் சொல் கவின் என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம் :—யாணு விசும்பி னமர ருளப்பட—பேணிப் பேரி தேனைப் பேட்டபின்—அழகிய விசும்பு என்றவாறு. [அரு]

* ஏட்டுப் பிரதியில் ஆணு என்றுளது.

**377.** பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.

இ-ள்:—பரவலும், பழிச்சலும் வாழ்த்தலின் பொருள்படும். எ-று.

உ-ம் :—கடவுட் பரவிக் கைதொழுஉப் பழிச்சி. [அசு]

**378.** கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்றேற் றுயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.

இ-ள் :—கடி என்னும் சொல் வரைவு முதலாக முன்றேற் றீறாக ஓதப்பட்ட பத்துச் சொல்லினும் தெளியத் தோன்றும் பொருளை யுடைத்து. எ-று.

உ-ம் :—கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம், முடிந் தாலும் பீழை தரும். (குறள்-௬௫௮) இது வரைவு. கடுநுனைப் பகழி. இது கூர்மை. கடி என்னும் சொற்றானே கடு எனத் திரிந்து வந்தது. கடியின்..............உள் கள்வன்போல். இது காவல். கடியுண் கடவுட் கிட்ட சிறுகுரல்-அறியா துண்ட மஞ்ஞை. (குறு-௧0௫). இது புதிதுண்ட கடவுள். கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண். இது விரைவு. கடும்பகல் (அகம்-௧௪௮). இது விளக் கம். கடுங்கா லொற்றலின். (பதிற்-உ௫). இது மிகுதி. கடிகாவற் பூச்சூடினன். இது சிறப்பு. கடும் பாம்பு வழங்குந் தெரு. (இது) அச்சம். கடுஞ்சூ டருகுவ னினக்கே (அகம்-௧௧0)—நீ தெளியு மாறு சூளுறுகின்றேன். இது முன்றேற்று. [அஎ]

**379.** ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட கடி என்னுஞ் சொல் ஐயப் பொருண்மையும், கரித்தற் பொருண்மையும் ஆகலும் ஆம். எ-று.

உ-ம் :—போற்றின் அரியவை போற்றல் கடேத்தபின், தேற்ற தல் யார்க்கும் அரிது. (குறள்-௬௯௩). இது ஐயம். கடிமிளகு தின்ற கல்லா மந்தி. இது கரிப்பு. [அஅ]

**380.** ஐவியப் பாகும்.

இ-ள்:—ஐ என்பது வியப்பு என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம்:—ஐயென விம்மி யவற்கது கூறிய, பொய்யில் புகழோன்..............கைகூப்பி-வியப்பென விம்மி. [அகூ]

**381.** முனைவுமுனி வாகும்.

இ-ள்:—முனைவு என்பது முனிதல் என்பதன் பொருள் படும். எ-று.

உ-ம்:—சேற்றுநில முனைஇய செங்கட் காரான் (அகம்-௪௬). [௬௦]

**382.** வையே கூர்மை.

இ-ள்:—வை என்னும் சொல் கூர்மை யென்பதன் பொருள் படும். எ-று.

உ-ம்:— வைந்நுனைப் பகழி (முல்லை-௭௩). [௬௧]

**383.** எறுழ்வலி யாகும்.

இ-ள்:—எறுழ் என்பது வலி என்பதன் பொருள்படும். எ-று.

உ-ம்:-*போரேறுழ்த் திணிதோள். (பெரும்பாண்-௬௩.) [௬௨]

**384.** மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை (நாடி)
ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே.

எடுத்து ஓதப்பட்ட உரிச்சோல் எல்லாவற்றிற்கும் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றிற்கும் முன்னும் பின்னும் வந்த மொழியை யறிந்து, அதற்கேற்கப் பொருளுரைக்க. எ-று.

உதாரணம் மேற் காட்டப்பட்டன. [௬௩]

* பரோரேறுழ்த் திணிதோள்—பத்துப்பாட்டு அச்சுப்பிரதி.

**385.** கூறிய கிளவிப் பொருணிலை யல்லது
வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே.

இதுவும் அது.

இ-ள் :—மேல் ஓதப்பட்ட உரிச்சொற்கு ஓதப்பட்ட பொருணிலை யல்லது, பிறபொருள் தோன்றினும், சொல்லப்பட்டனவற்றோடு ஒரு நிகரனவாகக் கொள்க: எ-று.

உ-ம் :—பேஎநாமுங் தாழ்நீர்ப் பனிச்சுனை என்றவழிப் பேஎ என்பது மிகுதி குறித்து நின்றது. பொய்கை துவன்ற புனிறுதீர் பனுவல் என்றவழிப், புனிறு என்பது புதுமையின்கண் வந்தது. தூவற் கலித்த தேம்பாய் புன்னை என்றவழிக், கலித்தல் தழைப்பின்கண் வந்தது. அடர்போ னவிரேய்க்கு மவ்வரி வாட என்றவழி, அரி என்பது நிறத்தின்கண் வந்தது. பிறவும் இவ்வாறு வருவன அறிந்துகொள்க. [கூச]

**386.** பொருட்குப்பொருள் தெரியின் அதுவரம் பின்றே.

உரிச்சொற்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பொருட்குப் பொருள்தெரியின் எல்லையின்று. எ-று.

அஃதாவது உறு என்பதற்குப் பொருள் மிகுதி யென்றால், மிகுதி யென்பதற்குப் பொருள் யாதெனில், அதற்கும் ஒரு வாய்பாட்டாற் பொருளுரைப்பின், அதற்குப் பொருள் யாதெனப் பின்னும் வினவும்; அவ்வாறு வினவ, அவ்வாராய்ச்சி முற்றுப் பெறாதாம். அதனால், வினவுவானும் அவ்வாறு வினவற்க: செப்புவானும் அவ்வாறு செப்பற்க என்றவாறு.

வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால், இவ்வாராய்ச்சி பெயர்ச்சொற்கும் ஒக்குமென்று கொள்க. அஃதேல், அப்பொருண்மை புணராதான் அதனை யுணருமாறு என்னை யெனின், அது வருகின்ற சூத்திரத்தான் விளங்கும் என்க. [கூரு]

**387.** பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்.

இஃது ஆசிரியன்கட் கிடந்ததோர் இயல்புணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் .—பொருட்குப் பொருள் வினவிய மாணுக்கன் அவ்வாறு வினவானும்: அவன் கொள்ளுமாறு அஃதுணர்த்தவல்லனுயின். எ-று.

என்றது, ஈண்டுப் பயின்றவாக எடுத்தோதப்பட்ட சொற்களைப் பயிலாதாற்கு அவன் பயின்றவாய்பாட்டான் உணர்த்துக; உணர்த்தவே, பொருட்குப்பொருள் ஆராய்தலில்லை என்றவாறு.

அஃதேல், * உறுதவ நனிஎன வரூஉம் மூன்றும்-மிகுதி செய்யும்பொருளஎன்ப என்பதனுற்பயனின்றும்: அஃதறியாதாற்குப் பிறவாய்பாட்டாற் பொருளுணர்த்த வேண்டுதலி னெனின், அதற்கு விடை வருகின்ற சூத்திரத்தான் அடங்கும். [கூசா]

**388.** உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே.

மாணுக்கர்க்கு உரியதோ ரியல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உணர்ச்சி என்பது உணர்வு. வாயில் என்பது புலன். அஃதாவது உணரப்படுவது. உணர்வோர் வலித்து என்பது உணர்வோரது வலிமையுடைத்து. எ-று.

என்றது, பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி உணர்த்துகின்றவழி, பயின்றவாக ஓதப்பட்டன, யாதும் அறியாதாரை நோக்கின அல்ல; உணர்வினுன் உணரப்படுவன வுணர்வாரை நோக்கிக் கூறப்பட்ட என்றவாறு. எனவே மேற்கூறிய கடா விடை பெற்றதாம். [கூஎ]

**389.** மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு.

உரிச்சோற்கு உரியதோரிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனுற் பெயர்ச்சொற்கு உரிய இலக்கணமும் உணர்த்திற்றென்று கொள்ளப்படும்.

இ-ள் :—இச் சொற்குப் பொருள் இதுவென நியமித்தற்குக் காரணம் விளங்கத் தோன்ரு. எ-று.

---

* சூ ரு.

எனவே, காரணமுளதென்பதூஉம், அது புலனாகாதென்பதூஉம் கூறியவாறும். என்னை புலனாகாமை எனின், மிகுதல் என்பதற்குப் பொருளாவது முன்பு நின்ற நிலையிற் பெரிதாதல்; அப்பொருண்மையைச் சேரக் காட்டுதற்குக் காரணம் உரைப்பரிதாதலான். அஃதேல், காரணமுள போலக் கூறியவதனாற் பயனென்னையெனின், பொருண்மேற் சொன்னிகழ்தல் தொன்றுதொட்டு நின்றதாதலின், உலகினுள் மிக்காரெல்லாம் காரணமின்றி வழங்குபவோ என்னும் ஐயங்குறித்துக் கூறினார். அஃதேல், இன்னவெழுத்து இப்பொருள்படும் எனவும், இத்தன்மைத்து எனவும், இப்பயன் தரும் எனவும் மற்றை நூலகத்தும், பிறாண்டும் உரைக்கப்படுமாகலான், காரணம் உரைப்பரிது என்பது குற்றமெனின், அதற்கு விடை வருகின்ற சூத்திரத்தான் விளங்கும். [௯௮]

**390.** எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே.

எல்லாச் சொற்கும் உரியதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—ஒரு சொற்கு அங்கமாகிய எழுத்துப் பிரிந்து நின்று பொருள்பட ஒலித்தல் இத் தமிழகத்தில் இல்லை. எ-று.

எனவே, மேல் எழுந்த கடா விடைபெற்றதாம். பொருட்குப் பொருள்தெரிதல் என்பது முதலாக இத்துணையும், கூறப்பட்ட உரிச்சொற் பொருளுணர்த்துமாறும். [௯௯]

**391.** அன்ன பிறவும் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை ஆணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்.

இஃது உரிச்சொற் கெல்லாம் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—'அன்னபிறவும்......எல்லாம்' என்பது ஈண்டு ஓதப்பட்டனவல்லாத அத்தன்மைய பிறவுமாகிப் பல்லாற்றானும் பரந்துவரும் உரிச்சொல் எல்லாம். எ-று, 'பொருட்குறை............

இன்மையின்' என்பது பொருட் குறை படாமற் கூட்ட வழக்கி யன்ற மருங்கின் இத்துணையென வரையறுக்கு நிலைமை தமக்கு இல்லையாகலான். எ-று. இதனானே எடுத்தோதல் அரிதாயிற்று. 'வழிநனி கடைப்பிடித்து' என்பது சான்றோர் செய்யுட்கண் வந்த நெறியை மிகவுங் கடைப்பிடித்து. எ-று. ('ஓம்படை ஆணையில்' என்பது)—ஓம்படை என்பது பாதுகாவல். ஆணை என்பது விதி; பாதுகாத்தலாக எடுத்தோதப்பட்ட புறனடைச் சூத்திரவிதியினால். எ-று. அஃதாவது 'முன்னும் பின்னும் வருபவை நாடி, ஒத்தமொழியாற் புணர்த்தல்' என மேற் கூறப்பட்டது. 'கிளந்தவற்றியலான்' என்பது பொருளுணர்த்துதற்குக் கருவியாகக் கூறப்பட்ட சொல்லானும், குறிப்பானும், பண்பானும். எ-று. 'பாங்குற உணர்தல் என்மனார் புலவர்' என்பது பாங்குபட அறிக என்று சொல்லுவர் புலவர். எ-று.

இதன்பொழிப்பு :—எடுத்தோதப்படாத உரிச்சொல்லெல்லாம் ஈண்டுப் பொருட்குறைபடாமல் எடுத்தோதக் கருதின், அவை எல்லையிலவாதலான், அவை செய்யுளகத்து வழங்கிய நெறியைக் கடைப்பிடித்து, நாம் அதிகாரப் புறனடையாகச் சொன்ன 'முன்னும் பின்னும் வருபவை நாடி, ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்' என்னும் விதியி.......................ங் குறிப்பானும் பண்பானும் பொருள்படுமாறு அறிந்துகொள்க. எ-று.

"க (ம) ழுருவின கனலிலையன கழிமடலின கைதை" என்றவழிக், கனலென்பது நெருக்கம் குறித்து நின்றது, *'ஒல்லும் வகையான் அறவினை யோவாதே' என்றவழி, ஒல்லென்பது செயற்படும் என்பது குறித்து நின்றது. 'மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தோர்' என்றவழி, மன்னென்பது.............. ....................."இரும்பிடித் தொகுதியொடு பெரும் கயம் படியா" என்றவழி, இருமை யென்பது பெருமை குறித்து நின்றது. 'அஞ்செங்குவளைக்.....................' என்பது அழகு குறித்து நின்றது. "வானமூர்ந்த வயங்கொளி மண்டிலம்-நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு," என்றவழி, வயங்கென்பதூஉம், அவிரென்பதூஉம்........................றன.

* குறள்-நங.

அம்மென்பது நுணுக்கங் குறித்தது. உருப்பென்பது வெம்மை குறித்தது. *'ஊரவர் கவ்வை எருவாக' என்றவழி, கவ்வை யென்பது அலர் குறித்து நின்றது. †'பொருளானு மெல்லற மென்றீயா திவறும்' என்றவழி, இவறென்பது லோபம் குறித்தது. "பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர் போல்" என்றவழிப், பீடென்றது பெருமை குறித்து நின்றது. 'நொறிலியற் புரவி (யதிபர் கோமா)ன்' என்றவழி, நொறில் என்பது நடக்கத்தின்கண் வந்தது. 'நொறிலியற் புரவி கழற்காலினை யோன்' என்றவழி, நொறிலென்பது விரைவின் கண் வந்தது. 'கவரி மா(னினங் கல்லென்று)தெவிட்ட' என்றவழித், தெவிட்ட என்பது அடையவென்பது குறித்து நின்றது. 'களிறு வழங்கதர் கானத் தல்கி' என்றவழி, அல்குதல் தங்குதற்கண் வந்தது. 'நெடும் பெருங் குன்றத் தமன்ற காந்த(ள்') என்றவழி, அமல்தல் நெருங்குதற்கண் வந்தது, 'மலைநாறிய வியன்ஞாலத்து (மது-ச) என்றவழி, நாற்ற மென்பது தோற்றங் குறித்து நின்றது. 'நாட்டகாட்டகத் தறுகாற் பறவை' என்றவழி, நாடுதல் ஆராய்தற்கண் வந்தது. 'தணக்குங்காற் கலும்பானுக் கண்ணெனவும் உளவன்றோ' (கலி-உரு) என்றவழித், தணத்தல் நீக்கங் குறித்து நின்றது. 'குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின் நரலை யிவர்வுறீஇ' என்றவழி, நரலை குற்றங் குறித்தது. இவர்தலென்பது பரத்தல் குறித்தது. 'வந்தாற் செத்தோய் என வாங்கே யெடுத்தன்ன' என்றவழிச், செத்தென்பது குறிப் புணர்த்திற்று. பிறவும் அன்ன. [கoo]

உரிச்சொல் லோத்து முடிந்தது.

இவ் வோத்தினுட் சூத்திரமுட்பட உரையினதளவு கிரந்த வகையான் இருநூற்றெண்பது.

* குறள்-கககஎ. † குறள்-கoo௨.

**392.** இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொ
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே. [லென்

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், எச்சவியல் என்னும் பெயர்த்து: கிளவியாக்கம் முதலாக உரிச்சொல்லோத்து ஈறாகக் கிடந்த எட்டோத்தினுள்ளும் உணர்த்தாத பொருளை ஈண்டுணர்த்துதலாற் பெற்ற பெயர்.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ஒருவகையாற் செய்யுட்குரிய சொல்லின் பாகுபாடுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும் எனவரும் நால்வகைத்து, செய்யுளாக்குதற்குரிய சொல். எ-று.

அவையாமாறு தத்தம் சிறப்புச் சூத்திரத்தான் உணரப்படும். [க]

**393.** அவற்றுள், இயற்சொற் றாமே,
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.

நிறுத்த முறையானே இயற்சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—இயற் சொல்லாவனதாம், செந்தமிழ் நாட்டு வழக்கோடு பொருந்தித் தம்பொருள் வழாமல் இசைக்குஞ் சொற்கள். எ-று.

செந்தமிழ் நாடாவது:—வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்ப. இவ்வாறு உரைத்தற்கு ஓர் இலக்கணங் காணாமையாலும், வையை யாற்றின் தெற்காகிய கொற்கையும், கருவூரின் மேற்காகிய கொடுங்கோளூரும், மருத யாற்றின் வடக்காகிய காஞ்சியும் தமிழ்திரி நிலமாதல் வேண்டுமாதலானும், அஃது உரையன்று என்பார் உரைக்குமாறு:—

* வடவேங்கடந், தென்குமரி,
ஆயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து,
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி

என்றமையானும், இதனுள் தமிழ் கூறும் நல்லுலக மென விசேடித்தமையானும், கிழக்கும் மேற்கும் எல்லைகூறாது தெற்கெல்லை கூறிய வதனாற் குமரியின் தெற்காகிய நாடுகளை யொழித்து வேங்கடமலையின் தெற்கும், குமரியின் வடக்கும், குணகடலின் மேற்கும், குடகடலின் கிழக்கு மாகிய நிலம் செந்தமிழ் நில மென்றுரைப்ப.

அந்நிலத்து வழக்கொடு சிவணித் தம்பொருள் வழாமல் இசைக்குஞ் சொல்லாவன:—சோறு, கூழ், மலை, மரம், உண்டான், தின்றான், ஓடினான், பாடினான் என்னுந் தொடக்கத்தன.

இவை அந்நிலத்துப் பட்ட எல்லா நாட்டினும் ஒக்க வியறலின் இயற்சொல்லாயின. இவற்றைச் செஞ்சொல் எனினும் அமையும். [உ]

394. ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி.

திரிசொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—ஒருபொருள் குறித்த வேறு வேறு சொல்லாகியும், வேறு வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் அவ்விரு பகுதியதென்ப திரிசொல். எ-று.

எனவே, இயற்சொல்லா னுணர்த்தப்படும் பொருண்மேல் வேறுபட்ட வாய்பாட்டான் வருவன திரிசொல்லாகும் என்றவாறும். அஃதேல், உரிச்சொல்லோ டிதனிடை வேறுபாடு என்னையெனின், உரிச்சொல் குறைச் சொல்லாகிவரும். திரிசொல் முழுச்சொல்லாகி வரும் என்க.

* தொல், எழுந்து, பாயிரம்

இதனை, இயற்சொல்லைச் சாரவைத்ததனாற் செந்தமிழ் நாட்டுப்பட்ட தேயந்தோறும் தாம் அறிகுறியிட்டாண்ட சொல்லென்று கொள்க.

அவையாவன :—மலை யென்பதற்குக் குன்று, வரை யெனவும், குளம் என்பதற்கு ஏழி, பாழி எனவும், வயல் என்பதற்குச் செய், செறு எனவும் வருவன. இவை யொருபொருள் குறித்தன.

அரங்கம் என்பது யாற்றிடைக் குறையையும், ஆடுமிடத்தையும், இல்லின்கண் ஒருபக்கத்தினையும் உணர்த்தும். துருத்தி என்பது யாற்றிடைக் குறையையும், தோற்கருவியையும் உணர்த்தும். ஆழி யென்பது கடலையும், நேமியையும், வட்டத்தையும் உணர்த்தும். இவை வேறு வேறு பொருள் குறித்தன. இவ்வாறு திரிந்து வருதலிற் றிரிசொல்லாயிற்று. [ரு]

395. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

திசைச் சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரு நிலத்துமுள்ளார் தத்தங் குறிப்பினையுடைய : திசைச் சொல்லாகிய சொல். எ-று.

பன்னிரு நிலமாவன :-வையையாற்றின்........ நாடு, ஒளிநாடு, தென் பாண்டிநாடு, கருங்குட்டநாடு, குட நாடு, பன்றி நாடு, கற்காநாடு, * சீதை நாடு, பூழி நாடு, மலாடு, அருவா நாடு, அருவா வடதலை என்ப, § இவை செந்தமிழ் நாட்டகத்த. செந்தமிழ் † நாடென்றமையால், பிறநாடாகல் வேண்டுமென்பார் உதாரணங்காட்டுமாறு:—"கன்னித் தென்கரைக் கடற் பழந்தீபம், கொல்லங் கூபகஞ் சிங்கள மென்னும், எல்லையின் புறத்தவும் கன்னடம் வடுகம், கலிங்கம் தெலிங்கம் கொங்கணம் துளுவம்,

* சீதை நாடு, இளம்பூரணம்.

§ இங்ஙனம் கூறுவோர் இளம்பூரணர்; இதனுட்காணப் பெறாத மற்றொரு நாட்டின் பெயர் பொங்கர் நாடு என்பது இளம்பூரணம்.

§ இக்கொள்கையினை நச்சினார்க்கினியர் மேற்கொண்டு இவ்வாசிரியர் காட்டிய காட்டினையே எடுத்துக்காட்டுவர்.

† சேர்ந்த என்பது விடுபட்டது போலும்.

குடகம் குன்றகம் என்பன குடபா லிருபுறச் சையத்துடனுறைபு கூறுந் தமிழ்திரி நிலங்களும், முடியுடையவ ரிடுநிலவாட்சியின் அரசு மேம்பட்ட குறுநிலக் குடிமிகள் பதின்மரும் முடனிருப் பிருவருமாகிய பன்னிருவர் அரசரும் படைத்த பன்னிரு தேயத் தினும், தமிழ்ச் சொல்லாதற்கு விருப்புடையன'' என்றமை யானும் ''தமிழ் கூறு நல்லுலகத்து, வழக்குஞ்செய்யுளுமாயிரு முதலின், எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி'' என நிறுத் துப் பின்னுஞ் ''செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு'' என ஓதிய வதனாற் சிவணிய நிலமாவது எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமெனவேண்டுதலானும், பன்னிரு நிலமாவன :—குமரி யாற்றின் தென்கரைப் பட்ட பழந்தீபமும் கொல்லமும் கூபகமும் சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமுந் துளுவமுங் குடகமுங் குன்றகமும், கிழக்குப்பட்ட கருநடமும் வடுகும் தெலிங்கும் கலிங்கமும் என்று கொள்ளப் படும்.

இவற்றுள், கூபகமுங் கொல்லமுங்கடல்கொள்ளப்படுதலின், குமரியாற்றின் வடகரையைக் கொல்லமெனக் குடியேறினர் போலும். பஞ்சத்திராவிடமெனவும் வடநாட்டார் உரைப்ப வாகலான், அவையைந்தும் வேங்கடத்தின் தெற்காதலுங் கூடாமை யுணர்க.

அந்நிலத்து வழங்குஞ் சொல்லாகிச் * செஞ்சொல்லின் வேறுபட்டுச் சான்றோர் செய்யுளகத்து வருவன நீக்கப்படா. எ-று.

குடாவடியுளியம் என்றவழிக், குடா என்பது குடகத்தார் பிள்ளைகட்கு இட்ட பெயர். அந்தோ என்பது சிங்களவர் ஐயோ என்பதற்கிட்டபெயர். யான் தற்கரைய வருது என்றவழிக், கரைதல் என்பது கருநாடர் விளிப்பொருளுணரக் கூறுவது. செப்பு என்பது வடுகர் சொல்லுதற்குப் பெயராக வழங்குவது. பாண்டில் என்பது தெலிங்கர் பசுவிற்கும் எருத்திற்கும் பெயராக வழங்குவது. கோக்கு என்பது துளுவர் மாவுக்குப் பெயராக வழங்குவது. பிறவும் இவ்வாறு வருவன பலவற்றையும் வந்த வழிக்கண்டு கொள்க. [சு]

* செஞ்சொல்— இயற்சொல். (எச். க-கு.)

**396.** வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

வடசொற்கிளவி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வடசொல்லாகிய சொல்லாவது வடமொழிக்கே யுரியவாகிய எழுத்தை நீக்கித் தமிழ்மொழிக் குரிய எழுத் தொடு புணர்ந்த சொல்லாகும். எ-று.

எல்லா நாட்டிற்கும் பொதுவாயினும், வடநாட்டிற் பயில வழங்குதலின் வடசொல் ஆயிற்று. வடசொல்லென்றதனால் தேய வழக்காகிய பாகதச் சொல்லாகி வந்தனவுங் கொள்க.

வடமொழியாவன :—வாரி, மணி, குங்குமம் என்னுந் தொடக்கத்தன. வட்டம், சட்டம், பட்டினம் என்பன பாகதம். பிறவும் அன்ன. [ரு]

**397.** சிதைந்தன வரினும் இயைந்தவை வரையார்.

மேல்தற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—(எழுத்தொடு பொருந்திய சொல்லே யன்றிச்) சிதைந்த சொற்கள் வரினும், தமிழ்வழக்கிற்குப் பொருந்தினவை நீக்கப்படா. எ-று.

அவையாவன :—கந்தம், (தச)நான்கு, சாகரம், சத்திரம், முத்து, பவளம் எனவரும். பாகதச் சிதைவாகி வருவனவுங் கொள்க.

இவை நான்கு சொல்லினும், இயற்சொல் பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லுமாகி வரும். திரிசொல்லுந், திசைச்சொல்லும் பெரும்பான்மை பெய ரும், சிறுபான்மை வினையுமாகிவரும். வடசொல் பெயரா யல்லது வாராது. * [சா]

---

* இளம்பூரணம் :—பெயர், வினை, இடை, உரி எனப்பட்ட நான்கு சொல்லுமே இயற் சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப் பட்டன, பிற இல்லை. (எச். க-சு. உரை.)

சேனாவரையம் :—'பெயர் வினை இடை யுரி என்பன இயற் சொற் பாகுபாடு.' 'திரிசொல் பெயராயல்லது வாராது.' 'திசைச் சொல்லுள் வினைச் சொல்லும் உளவேனும், செய்யுட் குரித்தாய் வருவது பெயர்ச்

398. *அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை*
*வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி [மெலித்தலும்*
*விரிக்கும்வழி விரித்தலுந் தொகுக்கும்வழித் [தொகுத்தலும்*
*நீட்டும்வழி நீட்டலுங் குறுக்கும்வழிக் [குறுக்கலும்*
*நாட்டல் வலிய என்மனார் புலவர்.*

மேற்சொல்லப்பட்ட நால்வகைச் சொல்லும் செய்யுளகத்து விகாரப்படுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—*அந்நாற்சொல்லும்* ஆவன:—இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும். எ-று. *தொடுக்குங் காலை* யென்பது ஒன்றோடொன்று தொடர்புபடச் செய்யுளாக்குங் காலத்து. எ-று. *வலிக்கும்வழி வலித்த* லென்பது மெல்லெழுத்தினை வல்லெழுத்தாகத் தொடுக்கவேண்டும்வழி வல்லெழுத்தாகத் தொடுத்தல். *மெலிக்கும்வழிமெலித்தல்* என்பது வல்லெழுத்தினை மெல்லெழுத்தாகத் தொடுக்க வேண்டும்வழி மெல்லெழுத்தாகத் தொடுத்தல். *விரிக்கும்வழி விரித்தல்* என்பது பொருளுணர்த்துஞ் சொல்லின்மேல் ஒன்றும் இரண்டும் எழுத்து விரிக்கவேண்டும் வழி விரித்துத் தொடுத்தல். *தொகுக்கும் வழித் தொகுத்தல்* என்பது பொருளுணர்த்துஞ் சொல்லின் கண் ஒன்றும் இரண்டும் எழுத்துத்தொகுத்துத் தொடுக்கவேண்டும் வழித் தொகுத்துத் தொடுத்தல். *நீட்டும்வழி நீட்ட*லென்பது குற்றெழுத்தாகி நின்று பொருள் படுஞ் சொல்லை நெட்டெழுத்தாகத் தொடுக்கவேண்டும்வழி நெட்டெழுத்தாகத் தொடுத்தல். *குறுக்கும் வழிக் குறுக்க*லாவது நெட்டெழுத்தாகி நின்று

---

சொல்லே.' வடசொல்லுள்ளும் பெயரல்லன செய்யுட்குரியவாய் வாரா. (எச். ௧-சூ. உரை.)

**நச்சினார்க்கினியம்** :—இயல்பாகிய சொல் முற்கூறிய நால்வகைச் சொல்லேயாய்ச் செய்யுட் குரித்தாம். அவ்வியற்சொல் திரிசொல்லாங் கால், பெரும்பான்மை பெயராகவும், சிறுபான்மை வினைத்திரிசொல்லாகவும் (திரியும்.) திசைச்சொல்லும், வடசொல்லும் பெரும்பான்மைபெயர்ப் பெயராயுஞ்சிறுபான்மைதொழிற் பெயராயும் (வரும்.) (எச். ௧-சூ. உரை.)

பொருள்படுஞ் சொற்களைக் குற்றெழுத்தாகத் தொடுக்கவேண்டும் வழிக் குற்றெழுத்தாகத் தொடுத்தல். நாட்டல் வலிய என்மனார் புலவர் என்பது இவ்வாறாகச் செய்யுட்கண் வைத்தல் வலியுடைய வென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. குற்றமில என்றவாறு.

விகாரப்படாமற் றொடுத்தல் சொல்லாமல் முடிந்ததாம்.

உம் :—" தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉங் காலந் தோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை " (எழுத்-கஙச.)

என்றவழி, முந்தை என்பது முத்தையென வல்லெழுத்தாயிற்று. "தண்டை யினக்கிளி கடிவோள்" என்பதனுள் தட்டை எனற்பாலது தண்டையென மெல்லெழுத்தாயிற்று. * "தண்ணந்துறைவர் தகவிலர்" என்றவழித், தண்என்பது (தண்ணம்) என விரிந்து நின்றது. $"வேண்டார் வணக்கி விறல்மதி ரூன் கோடல்" என்றவழி, வேண்டாதாரை யென்பது வேண்டார் எனத்தொக்கு நின்றது. தொகுத்தலென்பது சுருக்குதல். அஃதேல், அத் தூ என்பது இவ்விலக்கணத்தால் தொகுக. ஐ என்பது "உருபு தொக வருதல்" என அடங்காதோ எனின், ஐகாரம் † "உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்" என ஓதப்படுதலின், அஃது உயர்திணைக்கண் தொகாது நிற்க வேண்டும். ஆயினும், செய்யுளின்பம் வேண்டித் தொகப் பெறு மென்பது இவ்விலக்கணத்தாற் கொள்ளப்படும். ¶ "பாசிழையாகம் பசப்பித்தான்" என்றவழி, பச்சிழை எனற்பாலது பாசிழை என நீண்டு நின்றது. "திருத்தார்நன் றென்றேன் தியேன்" இதனுள், தீயேன் என்பது தியேன் எனக் குறுகி நின்றது. அந்நாற் சொல்லும் இவ்வாறு விகாரப்படும் என்றமையான், ஒரு மொழிக்கண்ணே இவை வருவனவென உணர்க. [எ]

399. நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்
றெனநான் கென்ப பொருள்புணர் இயல்பே.

செய்யுளகத்துப் பொருளுணரச் சொற்றேடுக்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

*, $ மயிலை நா—பக்கம் எகூ-காண்க. ¶ பாசிலை—இளம்பூரணம்.
† எழுத்—கருஎ.

இ-ள் :—நிரனிறையும், சுண்ணமும், அடிமறியும், மொழி மாற்றும் என நான்கென்று சொலலுப பொருள் புணருமென மொழிபுணர்க்கும் இயல். எ-று.

செய்யுளகத்துத் திரிந்து பொருள்படுஞ்சொல் எடுத்தோதினர்: வழக்கின்கண் இயல்பாகிச், செய்யுட்கண்ணும் இயல்பாகி நடக்கும் பொருள்கள் ஓதவேண்டாமையின். அவையாமாறு தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும். [அ]

400. அவற்றுள், நிரனிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.

நிரனிறை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள், நிரனிறையாவது வினையானும், பெயரானும் ஆராயப் புலப்படுஞ் சொற்களைச்சேர நிறுத்தி, அவற்றிற்கு முடிபாகவருஞ் சொற்களைச் சேர நிறுத்துதல். எ-று.

*"அடல்வே லமர் நோக்கி நின்முகங் கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்
கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்
தடமதியம் ஆமென்று தாம்."

என்பதனுள் உடலும், ஓடும், ஊழ்மலரும், பார்க்கும் என்னும் வினை-கடல், இருள், ஆம்பல், பாம்பு என்பனவற்றோடு கடல் உடலும், இருளோடும், ஆம்பல் மலரும், பாம்பு பார்க்கும் என அடைவே முடிந்தவாறு கண்டுகொள்க.

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி" என்றவழி, கொடி, குவளை, கொட்டை என்னும் பெயர் நுசுப்பு, உண்கண், மேனி என்னும் பெயரோடு கொடி நுசுப்பு, குவளைக்

---

* 'உடலு மிருந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்
கடலிரு ளாம்பல்பாம் பென்ற—கெடலருஞ்சீர்த்
திங்கள் திருமுகமாச் செத்து.' என்பது எனை உரையாசிரியர்கள் காட்டிய மேற்கோள்.

கண், கொட்டைமேனி என அடைவே முடிந்தவாறு காண்க. வினையும் வினையுமாக வருவன உளவேல், வந்தவழிக் கண்டு கொள்க.† நினையத்தோன்றி என்றமையால் விளங்கவில்லாது, நி(னையுங்க)ாற்றோன்றுமாறாக மயங்கி வருவனவுங் கொள்க. 'களிறுங் கந்தும் போல நளிகடற், கூம்புங் கலனுந் தோன்றும்' (மயிலை-பக்கம்-உ௮உ) என்றவழி, களிற்றிற்குக் கூம்பும், கந்திற்குக் கலனும் உவமை யன்மையின், களிறுபோலுங்கலம், கந்து போலுங்கூம்பு எனவும் மயங்கி வந்தவாறு கண்டு கொள்க. [௬]

**401.** சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த ஈரடி யெண்சீர்
ஒட்டுவழி யறிந்து துணித்தன ரியற்றல்.

சுண்ணமாகிய பொருள்கோள் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—சுண்ணமாவதுதான் அளவடியான் அமைந்த ஈரடிக்கண் எண் சீரும் ஒரோவொரு சீராகத்துணித்து(ப் படி மியல்பு அ)றிந்து கூட்டிப் பொருளுரைக்க. எ-று.

பட்டாங் கென்பது இயல்பு. அது மிகுதலுங் குறைதலு மில்லாத அளவென்று பொருளாயிற்று.

" சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

இதனுட் சுரைமிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை முயற்கு நீத்து எனத்துணித்து ஒட்டப், பொருள் விளங்கிய வாறு கண்டு கொள்க. இது நாற்சீர்க்கண்ணே துணித்து ஒட்டி(யது.)

" தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவேமே
வங்கத்துச் சென்றார் வரின்."

† 'மாசு போகவும் காய்பசி நீங்கவும், கடிபுனல் மூழ்கி யடிசில் கை தொட்டு'—வினை நிரனிறை என்பது சேனாவரையம்.

இதன்பொருள் :— அஞ்சனத்தன்ன பைங்கூந்தல்! மாமை பொருந்தின மேனிமேல் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழிமுட்டை யுடைத்தாலொத்த பசலே, வங்கத்துச் சென்றார் வரீல், தணிவேம். (எ-று.) இதனுள் எண் சீருள் ஒட்டிவந்தது. எண்சீரென வரையறுத்தமையால் அதன்மேற் சென்று ஒட்டா தென்க. [௪0]

**402.** அடிமறிச் செய்தி யடிநிலே திரிந்து
சீர்நிலே திரியாது தடுமா றும்மே.

அடிமறியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அடிமறியென்பதன் செய்தி சீர்நிலே திரியாது அடிநிலேமை திரிந்து தடுமாறும். எ-று.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
சார னாட நீவர லாறே
வார லெனினே யானஞ் சுவலே."

இது, சாரல்நாட! நீ வருகின்ற நெறி சூரல்பம்பிய சிறுகான்யாறு, சூரர மகளிர் வருத்தஞ் செய்வார், வாராதொழி யென யான் அஞ்சாநின்றேன் என அடி(மறிப் பொருள்) கோளுணர்த்தியவாறு கண்டுகொள்க.

அஃதேல், இதனே யாப்பிலக்கணத்துள் ஆராய்தல் வேண்டும், சொல்நிலே திரியாமையா லெனின், இது தொடர்மொழித் திரிபாகலான் ஈண்டுக் கூறப்பட்டதென்க. [௧௧]

**403.** * பொருடெரி மருங்கின்
ஈற்றடி யிறுசீர் எருத்துவயிற் றிரியுந்
தோற்றமும் வரையார் அடிமறி யான.

மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

---

* இச்சூத்திரம் பொருடெரி மருங்கின் ஈற்றடியிறுசீர், எருத்துவயிற் றிரியுந் தோற்றமும் வரையார் எனக் காணப்பட்டது. ஏனையுரை நூல்களேயும் இவ்வுரையில் இவ்வாறு வருவதும் அடிமறி என்றவாறும் என்னும் பகுதியையும் நோக்கி அடிமறியான என்பது சேர்த்தெழுதப் பட்டுள்ளது.

இ-ள் :—பொருள் ஆராயும் வழி ஈற்றடிக்கண் வரும் இறுதிச் சீர் ஈற்றயலடிக்கண் திரிந்து பொருள்படும் நிலைமையும் நீக்கார். எ-று.

இவ்வாறு வருவதும் அடிமறி என்றவாறும். உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க. [கஉ]

**404.** மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்.

மொழிமாற்று உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மொழிமாற்றினது இயல்பு சொல் நின்ற நிலையை மாற்றி, முன்னும் பின்னும் பொருள் இயைய ஏற்கும்வழிக் கொளுவுதல். எ-று.

மேல், அடிமறி மொழிமாற்றென ஓதினமை யானும், சுண்ண மொழிமாற்று ஈரடி எண்சீரென ஓதுதலானும், ஈண்டுச் சொன்னிலை மாற்றியெனப் பொதுப்பட வோதினமை யானும் ஓரடிக்கண் நின்ற சொல்லை அவ்வடிக்கண்ணும் †முன்பாயினும் பின்பாயினும் ஆகும்வழிக் கொளுவப்பெறும். எ-று.

*"பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்று தலையிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே."

என்றவழி, மூன்று தலையிட்ட அந்நாலைந்தென ஓரடிக்கண் மொழிமாற்றி நின்றது. "ஆலத்து மேல குவளை குளத்துள வாலி னெடிய குரங்கு" என்றவழி, குரங்கு ஆலத்துமேல எனப் பிற அடிக்கண் மொழிமாறி நின்றது. பிறவும் அன்ன.

அஃதேல் பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனவும் ஒரு சாராசிரியர் உரைப்பவால் எனின், அவற்றுள் யாற்றொழுக்கும்,

* தொல், சொல், வினை நக-ரு.

† 'பிறவடிக்கண்ணும்' என்பது விடுபட்டது போலும்.

அளைமறிபாப்புப்பொருள்கோளும் திரிவின்றிப் பொருள்படுதலின் இயல்பாம். கொண்டுகூட்டு, சுண்ணமொழிமாற்றுள் அடங்கும். பூட்டுவிற் பொருள்கோள் மொழிமாற்றுள் அடங்கும். தாப்பிசைப் பொருள்கோட்கண் முன்னொரு சொல் வருவிக்க வேண்டுதலின், இது 'பிரிநிலை வினை' (சூ-௩௦) என்னுஞ் சூத்திரத்துள் அடங்கும். [௧௩]

**405.** த ந நு எ எனும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.

ஒட்டுப்பெயர்க்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—த, ந, நு, எ, என்னும் அவை முதலாகியவும், கிளைமை நுதலிய பெயரும் பொருள் நிலையாற் பிரிக்க நினைக்கின் பிரிந்து பொருள்படா. ஒட்டிநின்றே பொருள்படும். எ-று. ஆகியவும் என்னும் உம்மை தொக்கு நின்றது.

த, ந, நு, எ, என்னும் அவை முதலாகியவாவன:-தான், தாம், நாம், யாம், யான், நீ, நீர், நீயிர் என மூன்றிடத்துப் பெயர்களும் ஆறாம்வேற்றுமைக் கிழமைப்பொருள் குறித்து, முன்னிலை குறுகியும் திரிந்தும் வந்து, கிழமைப் பொருளுணர்த்துஞ் சொல்லின் ஈற்றெழுத்தோடு ஒட்டி நின்றன. தமன், தமள், தமர், தமது, தம எனப் படர்க்கையிலும், நுமன், நுமள், நுமர், நுமது, நும என முன்னிலையினும், நமன், நமள், நமர், நமது, நம; எமன், எமள், எமர், எமது, எம எனத் தன்மையினும் வரும். கிளைநுதற் பெயராவன:-இம்மூன்றிடத்தும் ஒட்டுப்பட்ட பெயர்கள், ஆறும் வேற்றுமை முறைமையைக் குறித்து மேற்சொல்லியவாற்றான் தந்தை, நுந்தை, எந்தை எனவும்; தாய், ஞாய், யாய் எனவும்; தம்முன், நும்முன், எம்முன் எனவும்; தம்பி, நும்பி, எம்பி எனவும்; முதல்வனையும், ஈன்றாளையும், முன்பிறந்தானையும், பின் பிறந்தானையும் உணர்த்தும். பன்மைச்சொற்களெல்லாம் பொருள் முகத்தாற் றம்மையும் பிறரையும் உணர்த்தினும் ஏனையபோலப் பிரிக்கப்படா; ஒட்டி நின்றே பொருள்படும். (எ-று.) வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால், காரணப்பெயராகிவரும் தொழிற்பெயரும், உடையபெயரும், பண்புப்பெயர் முதலாயினவும் பிரிப்பப் பிரியா

வென்று கொள்க. பிறன், பிறள், பிறர் என்பவோவெனின், அவை ஒட்டுப்பெயரல்ல என்க. [கச]

**406.** வேற்றுமைத் தொகையே யுவமைத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே யன்மொழித் தொகை யென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

**தொகைச் சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—வேற்றுமைப்பொருள் குறித்த தொகையும், உவமப்பொருள் குறித்த தொகையும், வினைத்தொழில் குறித்த தொகையும், பண்பு குறித்த தொகையும், உம்மைத் தொகை செய்யுந் தொகையும், அல்பொருள் குறித்த தொகையும் என அறுவகைப் படும் தொகைச்சொல்லது நிலைமை. எ-று.

* தொகைச்சொல்லாவது பொருளுணர்த்துஞ் சொல்லாயினும், தொழிலுணர்த்துஞ் சொல்லாயினும் இரண்டு சொல் விட்டிசைத்து நில்லாது ஒட்டி நிற்பது. இஃது ஒட்டுப் பெயர் என்னுங் குறியும் பெறும். உதாரணம் வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும். [கரு]

---

* இத்தொகைச்சொல் பற்றி இளம்பூரணர் கொள்கை இதனின் வேறுபடும். இவ்வாசிரியர் கொள்கையினைச் சேனாவரையரும், இளம்பூரணர் கொள்கையினை நச்சினார்க்கினியரும் மேற்கொண்டு எழுதுவர்.

சேனாவரையம்:—வேற்றுமை யுருபும், உவமவுருபும், உம்மையும், வினைச்சொல்லீறும், பண்புச்சொல்லீறும் தொகுதலிற் றொகையாயின என்பாரும், அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முள் இயைதலிற் றொகையாயின என்பாரும் என இருதிறத்தர் ஆசிரியர்.

நச்சினார்க்கினியம் :—வேற்றுமை யுருபும், உவமவுருபும், உம்மும், வினைச்சொல்லீறும், பண்புணர்த்தும் ஈறும், இத் தொகைச்சொற்கள் அல்லாததோர் சொல்லுந் தொக்கு நிற்றலிற் றொகைச்சொல்லென்பதே அவர் (ஆசிரியர் தொல்காப்பியனார்) கருத்தாயிற்று.

இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.

**407.** அவற்றுள்,
வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.

**வேற்றுமைத் தொகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—வேற்றுமை யியல்புடையன வேற்றுமைத் தொகை. எ-று.

வேற்றுமையியல என்றதனான், வேற்றுமைகட்கு ஓதிய செயப்படுபொருள் முதலாக இடம் ஈறாக வரும் பொருண்மைக்கண் தொகுஞ்சொல் வேற்றுமைத் தொகையாம் என்று கொள்க. முதல் வேற்றுமை பெயர்ப் பயனிலை கொள்வழியும் விட்டிசைத்தே நிற்றலானும், எட்டாவது விரிந்து நிற்றலானும், இவையிற்றை யொழித்து ஏனைய தொகுமென்று கொள்க. ஏகாரம் தேற்றேகாரம்.

அவை தொகுமாறு :—படையைப் பிடித்தகை, குழையை யுடைய காது, குதிரையைப் பூட்டப்பட்ட தேர்; தாயொடு கூட மூவர்; கடிசூத்திரத்திற்கு வைத்த பொன்; வரையினின்றும் வீழாநின்ற அருவி; யானையது கோடு; குன்றத்துக்கண் வாழாநின்ற கூகை என்பன-படைக்கை, குழைக்காது, குதிரைத்தேர், தாய்மூவர், கடிசூத்திரப்பொன், வரையருவி, யானைக்கோடு, குன்றக்கூகை எனத் தொகும். நிலத்தைக் கடந்தான், வாளால் வெட்டினான், கொலைக்கு உடம்பட்டான், வரையினின்றும் பாய்ந்தான், குன்றத்துக்கண் இருந்தான் என்றவழி, இறுதி நின்ற ..............ல் தொழிலுணர்த்தாது அது செய்தார்க்குப் பெயராகி வந்துழி, நிலங்கடந்தான், வாள் வெட்டினான், கொலையுடம்பட்டான், வரைபாய்ந்தான், குன்றத்திருந்தான் என இரண்டு பெயரும் ஒட்டி ஒரு சொல்லாகிவரும். கள்ளையுண்டல், வாளால் வெட்டல், கொலைக்குடம்படுதல், வரையினின்றும் பாய்தல்,

¶ இச்சூத்திரமட்டும் ஈங்குக்காணப்பட்டது. இச்சூத்திரமும், இதன் உரையும் உரு. ஆம் சூத்திரத்தின் பின் காணப்படுகின்றன.

மாடத்துக்கண்ணிருத்தல் என்பன-கள்ளுண்டல், வாள்வெட்டல், கொலையுடம்படுதல், வரைபாய்தல், மாடத்திருத்தல் எனத் தொகும்.

அஃதேல், இவ்வாறு வருவன உருபு தொகை என அடங்காவோ வெனின், ஆண்டு அவ்வேற்றுமைகட்கு ஓதிய வாய்பாட்டால், தொழிலோடும், பெயரோடும் முடிவுழி, உருபு மாத்திரம் தொக்கு இரண்டு சொல்லாகி நிற்கும்; ஈண்டு ஒரு சொல்லாகி வரும். ஆறாவதன்கண்வரும்தொகை உருபுதொகையும், பொருட்டொகையும் என வேறுபாடின்றால் எனின், ஆண்டும் வேறுபாடு உள. மாக்கோடு என்றவழி ஒட்டுப்பட்டுப் பொருட்டொகையாகி நின்றது. மாத்தின் கோடு என்றவழி, உருபு தொகையாகி இரண்டு சொல்லாகி நின்றது. இவை சொல்நோக்கான் உணர்க. "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" என்றதனான் அவ்வேற்றுமை மொழிமாறி நிற்குமாகலின், அத்தொகைச்சொல் மொழிமாறி நின்று ஒட்டுப்படுதலுங் கொள்க. மலையதிடை, மலையதகம் என்பன இடைமலை, அகமலை எனவும் வரும். பிறவும் அன்ன.

அஃது அற்றாக; * உலக முவப்ப..................வாணுதல் கணவன் என்பது பல சொல்லாகி வந்து கணவன் என்பதனோடு முடிந்து கிடத்தலான், இரண்டு சொல் ஒரு தொகையாம் என்றல் பொருந்தாதால் எனின், எவ்வாறு வரினும் இரண்டு சொல்லாகி வந்தல்லது ஒட்டுப்படாதென்று கொள்க. அஃதாயவாறு என்னையெனின், பூத்தொடை போலக்கொள்க. அஃது இரண்டாயவாறு என்னையெனின், முற்பட இரண்டு பூவை எடுத்து ஒன்றாகக் கட்டும். அதன்பின் அவ்விரண்டும் ஒன்றாகி நின்ற தொடையோடேகூடப் பின்னும் ஒரு பூவையெடுத்துக் கட்டும். அதன்பின் அம்மூன்று பூவும் ஒன்றாகக் கட்டப்பட்ட தொடையொடே பின்னும் ஒரு பூவை எடுத்துக்கட்டும். அவ்வாறு கட்டப்பட்ட தொடைகளைப் பின்னும் இரண்டொன்றாக் கோத்து ஒன்றாக்கும். இவ்வாறே எல்லாப்பூவும் இரண்டொன்றாக இணைத்தாம். சொற்றொடையும் ஒட்டுப்படுங்கால் அவ்வாறு வருமென்று கொள்க.

* திருமுருகாற்றுப்படை (க-சு).

உலகமென்பது உலகத்துள்ளார்க்குப் பெயராகி உவப்ப என்னும் செயவென்னெச்சத்தோடு முடிந்தது. வலனுக என்னும் எச்சத்துக்கண் ஆகவென்பது செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. தொக்குநின்ற காலத்தும் அதற்கு இயல்பு முற்பட்ட நிலைமை யென்றுகொள்க. என்போலவெனின், வாலுஞ்செவியும் இழந்த ஞமலியைப் பின்னும் ஞமலியென்றே வழங்கினாற்போல. உவப்ப வலனுக என்னும் செயவென்னெச்சமும், ஏர்பு என நிகழ்காலங் குறித்த செயவென்னெச்சமும் திரிதரு வென்னும் பெயரெச்சத்தோடு முடிந்தன. பலரா லென்னும் மூன்றும் வேற்றுமைப் பெயர் உருபு தொக வருதல் என்னும் இலக்கணத்தால் தொக்குப் பலரெனநின்றது. அது புகழப்பட்ட என்பதற்கு அடையாகி நின்றது. அடையெனி னும் விசேடணம் எனினும் ஒக்கும். புகழப்பட்ட வென்னும் பெயரெச்சம், உண்சோறென்றாற்போலப் பொருண்மேல் வந்து வினைத்தொகையாகிப், புகழ்ஞாயிறென ஒட்டி ஒரு சொல்லாகி நின்றது. ஞாயிற்றை யென்னும் உருபு தொக்கு நின்றது. கடலின்கண்ணென்னும் உருபு தொக்கு நின்றது. கண்டாங்கு என்பது கண்டாற்போலும் என்னும் உவமப் பொருள்உணர நின்றது. இத்துணையும் உணர்த்தப்பட்டது உதய ஞாயிறுபோல என்னும் பொருண்மை. ‡ ஓவற என்பது-ஓவு ஒழிவு, அற என்பது இல்லையாக என்னுஞ் செய வெனச்சவாய்பாடு. அதற்கு ஓவு என்பது அடையாகி நின்றது. அறவென்பது இமைக்கும் என்னும் பெயரெச்சத்தோடு முடிந் தது. சேணின்கண் என்பது சேண் என உருபு தொக்கு நின் றது. அது விளங்கும் என்பதற்கு அடையாகிநின்றது. அவிர் என்பது விளக்கத்தின் மிகுதியைக் குறித்து வந்து ஒளியென் னும் பெயரோடு வினைத்தொகையாகி, அவிரொளியென ஒரு சொல்லாயிற்று. அது விளங்கு என்பதனோடு ஒட்டி வினைத் தொகையாகி, விளங்கவிரொளி யென ஒரு சொல்நீர்மைப்பட் டது. அஃது இமைக்கும் என்னும் பெயரெச்சத்திற்கு முடிபா யிற்று. உலகம் என்பது முதலாக இத்துணையுங் கூறப்பட்டது

‡ ஓவற = ஒழிவற : பத்துப்பாட்டு இரண்டாம் பதிப்பில் காணப் பெறும் திருமுருகாற்றுப் படையின் வேறுரை. ஓ வென்பது ஓரெழுத் தொருமொழியாகிய தொழிற்பெயர் (பத்து—நச்).

ஞாயிறு போல் விளங்கும் ஒளியென ஒளிக்கு அடை கூறுதலான், அவ்வொளியோடே எல்லாச் சொல்லும் முற்றி நின்றன. உறுநரை யென்பது உறுநர் என உருபு தொக்கு நின்றது. தாங்கிய என்பது பெயரெச்சம். அதற்கு உறுநர் என்பது அடையாகி நின்றது. * மதன் என்பது வலி. அது மத என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்து நின்றது. மதனை என்னும் ஐகாரம் தொக்கு நின்றது. $ நோன்மை பொறை. திருவடியடைவார் பலராதலின், அவரெல்லாரையும் பொறுக்க வல்லதாளென்னும் பொருண்மைத்தாகி, நோன்றாளென வேற்றுமைத் தொகையாகி ஒருசொன்னீர்மைப்பட்டது. அது மதனுடை நோன்றாள் என அடையடுத்து உறுநர்த்தாங்கிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. செறுநரை என்பது செறுநர் என உருபு தொக்கு நின்றது. தேய்த்த என்பது பெயரெச்சம். அதற்குச் செறுநர் என்பது அடையாகி நின்றது. † செல் என்பது மழை. உறழ்தல் என்பது ஒத்தல். அது தடக்கை என்பதற்கு உவம நிலையின் அடையாகி நின்று, செல்லுறழ் தடக்கையென்று ஒருசொன்னீர்மைப்பட்டது. அது தேய்த்த என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. மறு என்பது குற்றம். இல் என்பது இல்லாமை. குற்றமில் கற்பெனக் கற்பிற்கு அடையாயிற்று. வாள் என்பது ஒளி. அது ஒளிநுதல் என அடையடுத்து நின்றது. சினையிற்கூறு முதலறி கிளவியாகி அதனை யுடையாட்குப் பெயராகி நின்றது. அது மறுவில் கற்பின் வாணுதல் எனப் பண்புத் தொகையாகி ஒரு சொன்னடையாயிற்று. அது கணவன் என்னும் பெயரோடு கிழமைப் பொருட்டாகிய ஆறும் வேற்றுமைத் தொகையாகி, மறுவில் கற்பின் வாணுதல் கணவன் என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகிய ஒரு பெயராயிற்று. அது செல்லுறழ் தடக்கைக் கணவனென இரண்டாம் வேற்றுமைத் தொகையாகி ஒருசொன்னீர்மைப்பட்டது. அது மதனுடை நோன்றாள் என்பதனோடும் அவ்வாறே ஒட்டி நோன்றாட்டடக்கைக் கண

---

* மதன் = அறியாமை (நச்) அழகு—வேறுரை.

$ நோன்றாள்-வலியினை யுடையதாள் (நச்).

† மேகம் (வேறுரை) இடி (நச்).

வன் என ஒருசொன்னடை யாயிற்று. அது சேண்விளங் கவிரொளி என்பதனோடும் அவ்வாறே யொட்டிச் சேண்விளங் கவிரொளி நோன்றாட்டடக்கைக் கணவன் என ஒருசொன் னடையாயிற்று. இவ்வாறு சொன்னிலைமை யுணர்க. இரண்டு சொல்லே தொகையாகியவாறு கண்டுகொள்க. § எல்லாத் தொகையும் ஒருசொன் னடைய, என்றோதினமையானும் ஆசி ரியன் கருத்திதுவென்று கொள்க. [கசு]

408. உவமத் தொகையே யுவம வியல.

உவமத்தொகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உவம இயல்புடையன உவமத் தொகையாம். எ-று.

உவமையாவது தொழிலான் ஆதல், பயனான் ஆதல், வடி வினான் ஆதல், வண்ணத்தினான் ஆதல் இதுபோலும் இது என ஒன்றோடொன்று உவமை கூறவருவது. அவ்வுவமையும், உவ மிக்கப்படும் பொருளும் விட்டிசைத்து நில்லாது செறிய நிற்பது உவமைத் தொகையாம். எ-று.

புலியன்ன பாய்த்துள், மழையன்ன வண்கை, துடியன்ன இடை, பொன்னன்ன மேனி என்பன புலிப்பாய்த்துள், மழை வண்கை, துடியிடை, பொன்மேனி எனவரும். பிறவும் அன்ன. இவை விரியுங் காலத்து, புலியை யொக்கும் பாய்த்துள், மழையை யொக்கும் வண்கை எனவும் விரித்தலானும், காப்பினோப்பின் என இரண்டாவதன்கண் ஒப்பாதலானும் உவமைத்தொகை யென்ப தொன்றில்லை, இவையும் வேற்றுமைத் தொகையாம் எனின், ஒக்கும். மழையன்ன வண்கை யென்றவழி, இரண்டாமுருபு விரியாமலும் தானின்று உவமிக்கப்படும் பொருளைக் காட்டுதலின், இவ்வாறு வருஞ் சொற்களை நோக்கி உவமத் தொகை யென்றார். அதனானேயன்றே, உவம இயல்புடையன உவமத் தொகையென ஓதுவாராயினர். இன்னும், உவம வியல உவமத் தொகை யென்றதனான் உவமையும், உவமிக்கப்படும் பொருளும் மாறிநிற்ற லும் கொள்க. முகத்தாமரை, கைம்மாரி எனவரும். இவை உரு பகம் அன்றோ வெனின், உருபகத் தொகையென் றோதாமை யானும், பண்புத்தொகையுள் அடங்காமையானும் உவமையுள்

§ தொல். எச். சூத். உ௩.

அடங்கும். இத்தொகையை வேற்றுமைத் தொகையொடு சேர ஓதியவதனான், அதனோடு இதற்கு ஒற்றுமை யுண்டென்று கொள்க. [கஎ]

**409.** வினையின் றொகுதி காலத் தியலும்.

வினைத்தொகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வினையின் தொகுதி காலச்சொல்லோடே நடக்கும். எ-று.

வினைச்சொல்லாவது தொழிலுங், காலமும், பாலும் உணர்த்தலின், பாலுணர்த்துஞ் சொல் முற்றுச் சொல்லாகி நின்று தொகைநிலை யாகாமையானும், பால் காட்டாத வினையெச்சம், பெயரெச்சம் என்னும் இரண்டினுள்ளும், வினையெச்சம் முற்று வினைச்சொல்லோ டல்லது முடியாமை யானும், ஈண்டுத்தொகுவதும் விரிவதும் பெயரெச்சம் என்றுகொள்க. அது தொகுங் காலத்துக் காலப்பொருளையுணர்த்துஞ் சொல்லே தொகுவதும் விரிவதும் என்று கொள்க. தொழிலும், பொருளும் விட்டிசைத்து நில்லாது ஒற்றுமைப் பட்டதனை வினைத்தொகை யென்றார். கொல்லும் யானை, கொன்ற யானை ; உண்ணும் நீர், உண்டநீர் ; அரியும் வாள், அரிந்தவாள் ; செல்லும் இடம், சென்ற விடம் ; உண்ணும் பொழுது, உண்டபொழுது ; கொல்லுங் கொலை, கொன்ற கொலை என்பன கொல்யானை, உண்ணீர், அரிவாள், செல்லிடம், உண்பொழுது, கொல் கொலை எனத்தொகும். பிறவும் அன்ன. [கஅ]

**410** வண்ணத்தின் வடிவின் அளவிற் * சுவையின்
அன்ன பிறவும் அதன்குணம் நுதலி
யின்ன திதுவென வரூஉ மியற்கை
யென்ன கிளவியும் பண்பின் றொகையே.

பண்புத் தொகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வண்ணம், வடிவு, அளவு, சுவை யென்பனவற்றினும், அத்தன்மைய பிற(வினு) மாகிய, ஒரு பொருளினது குணத்

* சுவையினென்று-சேனா-பாடபேதம்.

கருதி இன்னது இது என ஒன்றை யொன்று விசேடித்து வரும் இயல்பினையுடைய எல்லாச் சொல்லினும் பண்புத் தொகை யாம். எ-று.

கரியது குதிரை, †வட்டப்பலகை, நெடியது கோல், தியது கரும்பு என்பன கருங்குதிரை, வட்டப்பலகை, நெடுங்கோல், தீங்கரும்பு எனத் தொகும். அன்னபிறவும் என்றதனுன், தண்ணீர், வெந்நீர் என்பன முதலாயின கொள்க. அஃதேல் இவை, கரிய குதிரை, நெடியகோல் எனப் பெயரெச்ச வாய்பாட்டானும், பண்பு பற்றி வருஞ்சொல் வினைக்குறிப்பாகி முடிதலானும் வினைத் தொகையுள் அடங்குமெனின், பண்புத் தொகை யொருவாய் பாட்டான் விரிககப்படாதென்பது எழுத்ததிகாரத்துட் கூறுதலிற் பெயரெச்ச வாய்பாடும் வரும்வினைக்குறிப்பாத லானேயன்றே, வினைத்தொகையோடு சேர ஓதுவாராயிற்று என உணர்க. § கருமையை யுடை ய குதிரையென வேற்றுமைத் தொகையாயும் அடங்குமால் எனின், இன்னதிதுவென ஒன்றையொன்று விசேடித்து வருதல் வேண்டும். அவ்வாறு வருங்கால் வேற்றுமைத் தொகையாகாதென்க. வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை என்பன தம்மியல் ஒருபுடை ஒப்புமையுடையவாதலிற், பாணினியார் தற்புருட சமாசம் என்று குறியிட்டார். இனி, "இன்ன திதுவென வருஉ மியற்கை என்ன கிளவியும்" என்றதனுற், பண்புபற்றி வருதலே யன்றிப், பெயர்க்குள் ஒன்றையொன்று விசேடித்துவந்து ஒட்டுப்படினும், பண்புத்தொகையாம் என்று கொள்க. வாணிகச் சாத்தன், சாரைப்பாம்பு எனவரும். ஆயன் சாத்தன், ஆசிரிய நல்லந்துவன் என எழுவாயும், பயனிலையுமாகி வருதலின்றி, ஒட்டுப்படாத நிலைமையவாயினும், முதற் பெயர் விசேடண மாகி வரின், அதுவும் பண்புத் தொகையாமென்று கொள்க. [கக]

**411.** இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே.

† வட்டமானது பலகை-இளம்பூரணம்.

§ ஈங்கு ஏதோ பிழைபாடுளதுபோலும்.

உம்மைத்தொகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இருபெயர் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகையும் உம்மைத்தொகை. எ-று.

உ-ம் :—இருபெயராவது பொருட்பெயரும், தொழிற்பெயரும். அவையாவன :--கபிலன், பரணன்; ஆடல், பாடல். பலபெயராவது பன்மை குறித்த பெயர். அவை பார்ப்பார், சான்றோர் என்பன. மேற்சொல்லப்பட்டன ஒருமை குறித்தலின், இது வேறோதப்பட்டது. அளவின் பெயராவது அளக்கப்பட்ட பொருளைக் குறியாது அளவுதன்னைக் குறித்து நிற்பது. அவை உழக்கு, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்பன. கூப்பிடு, காதம் என்பனவும் (அதுவே.) எண்ணியற் பெயராவதுஎண்ணினாற் பொருள் குறித்தியலும் பெயர். அவையாவன பதின்மர், ஐவர் என்பன. நிறைப்பெயர்க் கிளவி என்பது நிறுக்கப்பட்ட பொருளைக் குறியாது நிறையின் பெயராகி வருவது. அவை குன்றி ......................கால், அரை, கழஞ்சு என்பன. எண்ணின் பெயராவது எண்ணப்பட்ட பொருளைக் குறியாது, எண் தன்னைக் குறித்து நிற்பது. அவை ஒன்று, இரண்டு, பத்து, நூறு (என்பன.) அவ்வறு கிளவியும் கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே என்பது அறுவகைப்பட்ட பெயரையுங் குறித்த நிலைமைத்து உம்மைத் தொகை என்றவாறு.

வரையறை யோதாமையால், இரண்டும், பலவும் வரப்பெறும் என்று கொள்க. கபிலனும், பரணனும் வந்தார் எனற்பாலது கபில பரணர் வந்தார் எனவரும். ஆடலும், பாடலும் தவிர்ந்தார் என்பது ஆடல் பாடல் தவிர்ந்தார் எனவரும். பார்ப்பாரும், சான்றாரும் வந்தார் எனற்பாலது பார்ப்பார் சான்றார் வந்தார் எனவரும். தூணியும், பதக்கும் குறையும் எனற்பாலது தூணிப்பதக்குக் குறையும் எனவரும். பதின்மரும், ஐவரும் போயினார் எனற்பாலது பதினைவர் போயினார் எனவரும். கழஞ்சும், அரையுங் குறையும் எனற்பாலது கழஞ்சரை குறையும் எனவரும். பத்தும்இரண்டுங் குறையும் எனற்பாலது பன்னிரண்டு குறையும் எனவரும். [உ0]

இனி, புலிவிற்கெண்டை, அந்தணரரசர்வணிகர், தூணிப்பதக்கு முந்நாழி, மாகாணியரைக்காணி, நூற்று முப்பத்து மூன்று எனவும் வரும். பிறவும் அன்ன.

ஏற்புழிக் கோடல் என்பதனான் எண்ணும்மை(யே) ஈண்டுத் தொகுவதென்று கொள்க.

இடைச்சொல் ஓத்தினுள்ளும் உம்மை தொகும் என்றாராலெனின், ஆண்டு விரிந்துநின்ற சொல்லின்கண் உம்மை தொகவும் பெறுமென்றார். ஈண்டு ஒட்டிநிற்கும் (சொற்கு) இலக்கணங் கூறினாரென்க. [உ௦]

**412.** பண்பு தொகவரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.

அன்மொழித்தொகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பண்பு தொகவரும் பெயர்க்கண்ணும், உம்மை தொக்க பெயர்க்கண்ணும், வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் இறுதி..............அன்மொழித் தொகை. எ-று.

அல்லாத மொழி தொகுதலின், அன்மொழித் தொகையாயிற்று. இம்மூவகைத் தொகையினும் ஈற்று நின்றியலும் என்றதனான், முன்னும் பின்னும் என்ற இரண்டினும் உணரப்படு பொருண்மை யுடைத்து அன்மொழித் தொகை என்று கொள்க.

உ-ம் :—*"கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல, தில்லை நிலக்குப் பொறை" என்றவழிக், கடுங்கோல் என்பது அஃதுடைய அரசர்க்குப் பெயராகி வருதலின், அன்மொழித்தொகையாயிற்று. கோலிற்கு அடையாகின்ற கடுமையும் அரசன் மேல் ஏறியவாறு கண்டுகொள்க. இது பண்பு (பற்றி) வந்தது.

(தகர ஞாழல் என்ப) தும்மைத் தொகை. இவையிற்றை யுறுப்பாக அமைக்கப்பட்ட சாந்தினையும் தகர ஞாழல் என்பவாகலின், அன்மொழித் தொகையாயிற்று. தூணிப்பதக்கு என அளவிற்குப் பெயராதலின்றி, அளக்கப்படும் பொருளுக்குப்

* குறள்-௫௭௦.

பெயராகியவழி, அன்மொழித் தொகையாம். இவை யிரண்டு சொல்லும் அன்மொழித்தொகைமேல் ஏறியவாறு கண்டு கொள்க. இஃது உம்மைபற்றி வந்தது. பொற்றொடி என்பது வேற்றுமைத் தொகை. அதனையுடையாட்குப் பெயராகியவழி அன்மொழித்தொகையா.......................தொடிக்கு அடை யாகி.......................பொன், தொடியை யுடையாளது செல் வத்தைக் காட்டுதலின்,..................இவ்விரண்டு சொல்லும் அதனையுடையாளைக் குறித்தவாறும் அறிந்துகொள்க.

துடியிடை எனவும், (தாழ்குழலெ)னவும் உவமைத்தொகைப் புறத்தும், வினைத்தொகைப் புறத்தும் அன்மொழித் தொகை வருமாலெனின், துடி என்பதூஉம், தாழ் என்பதூஉம் இடை, குழல் என்பவற்றிற்கு அடையாகி வரினல்லது, அவற்றை யுடையாட்குப் பெயராகுங்கால், இறுதி நின்ற பெயர்ப் பொருண் மைவந்து ஏனைய வாராமையின், ஆகுபெயரெனினல்லது அன் மொழித்தொகை யாகாதெனக் கொள்க. அதனானே யன்றே இருபெயரொட்டும் என ஆகுபெயர்க்கண் எடுத்தோதுவாராயி(னர்) என உணர்க. [உக]

413. அவைதாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
என நான் கென்ப பொருணிலை மரபே.

மேற் சொல்லப்பட்ட பொருள் நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட தொகைச்சொற்கள்தாம் முன்மொழிக்கண் (பொருள்நிற்றலும்), பின்மொழிக்கண் பொருள்நிற்றலும், இருமொழிமேலும் பொருள் நிற்றலும், அத் தொகைமேற் பொருள்நில்லாது பிறமொழிக்கண் பொருள்நிற் றலும் என நால்வகைப்படும்: பொருள் நிற்குமாறு. எ-று.

அவைதாம் என எல்லாப் பொருளுஞ் சுட்டுதலான், அவற் றுள் இவ்விலக்கணம் அவ்வத்தொகைக் கேற்றவழிக் கொள்ளப் படும்.

உ-ம் :—மாம்பழந் தின்றான் என்றவழித், தின்னப்பட்டது பழமாதலின், அத்தொகைச்சொன் முன்மொழிக்கண் பொருள் நின்றது.

"இடைமுலைக் கிடந்து நடுங்க லானிர்" என்றவழிக் கிடக்கப் பட்டது முலையிடை யாதலின், பின்மொழிக்கண் பொருள் நின்றது. குதிரைத் தேரோடிற்று என்றவழி, குதிரை யோடத் தேரு மோடுதலின், இருமொழிமேலும் பொருள் நின்றது. பொற்றொடி வந்தாள் என்றவழிப், பொற்றொடியை அணிந்தாள் மேற் பொருள் நிற்றலின், அம்மொழியால் வந்த மொழிமேற் பொருள் நின்றது. இவை நான்கும் வேற்றுமைத்தொகை. ஏனைத்தொகைக்கண்ணும் பொருள் நிற்குமாறு ஏற்பனவற்றுட் கண்டுகொள்க. [உஉ]

## 414. எல்லாத் தொகையும் ஒருசொன் னடைய.

**தொகைச் சொற்கெல்லாம் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—அறுவகைத் தொகைச்சொல்லும் ஒரு சொல் நடைய. எ-று.

என்பது என்சொன்னவாறோவெனின், இரண்டு சொல்லாகி ஒட்டுப்பட்ட பெயர் பிரிந்து நில்லாது ஒருபெயர் மாத்திரமாகி நிற்கும் என்றவாறு.

உ-ம் :—யானைக்கோடு கிடந்தது, துடியிடை நன்று, கொல்யானை யோடிற்று, கருங்குதிரை வந்தது, கழஞ்சரை நிறைந்தது, பொற்றொடி வந்தாள் என எழுவாயும், பயனிலையுமாகியும்; யானைக்கோட்டை, துடியிடையை, கொல்யானையை, கருங் குதிரையை, ......................கழஞ்சரையை, பொற்றொடியை என உருபேற்றும் ஒரு சொன்னடையவாகி வந்தவாறு கண்டு கொள்க. [உ௩]

## 415. உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
## பலசொன் னடைத்தென மொழிமனார் புலவர்.

**எய்திய தொருமருங்கு மறுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—உம்மைத் தொகையுள், உயர்திணைப் பொருண்மேல் வரும் உம்மைத்தொகை பல சொன்னடைத்தாகித் தொடரவும் பெறும். எ-று.

உ-ம் :—கபில பரணர் வந்தார்.

அஃதேல், ஒட்டுப்பெயர் ஒரு சொன்னடைத்து என்றல் அமையாது, பல சொன்னடைத்தாகியுஞ் சில சொல் வருதலின் எனின், ஆண்டும் ஒரு சொன்னடைத்தென்பதே கருத்து. ஒருவர் என்பது பன்மை வினைகொண்டு முடிந்தாற் போல, உயர்திணை ஒட்டுப்பெயர் பன்மை வினைகொண்டு முடியுமெனச் சொன் முடிவு நோக்கிக் கூறினாரென்க. [உ௪]

416. வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன என்னுங் குறிப்புரை யாகும்.

ஒருசார் சொற்களுக்குக் குறியிடுதல் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வாராமரபினவற்றை வருமாகக் கூறுதலும், என்னா மரபினவற்றை என்றனவாகக் கூறுதலும், அத்தன்மைய பிறவு மெல்லாம் அவற்றவற்றியல்பினான், இத்தன்மைய என்னுங் குறிப்புரையாகும். எ-று.

வாரா மரபின என்றதனாற் செலவு, வரவு எனக்கொள்ளப் படும். என்னாமரபின என்றதனான் நினைத்தலும், சொல்லுதலும் கொள்ளப்படும். அன்னவை யென்றதனாற் காணாமரபின, கேளா மரபின என்பன கொள்ளப்படும். இவ்வாறு சொல்லுதல் குற்ற மாயினும், சொல்லுவான் குறிப்பு வேறாதலிற் குறிப்பு மொழியா யிற்று. இதனானே சில சொற்களுக்குக் குறிப்பு மொழியெனவும் குறியிட்டார்......

உ-ம் :—அம்மலை வந்து இதனொடு பொருதிற்று. மலை வருதலின்மையின், அதுவும் இதுவும் ஒன்றிக்கிடந்தது என்னும் பொருண்மை குறித்து இவ்வாறு சொல்லப்பட்டது. "சென் றதுகொல் மீண்டதுகொல் செவ்வி பெறுந்துணையும், நின்றது

கொல் நேர்மருங்கிற் கையூன்றி—முன்றில், முழங்கும் கடா யானை மொய்ம்மலர்த்தார் மாற்றம், உழந்தபின் சென்றவெ னெஞ்சு." இதனுள் வந்தன எல்லாங் குறிப்பு மொழியென்று கொள்க.

*'அன்னச்சேவலன்னச்சேவல்' என்னும் பாட்டினுள் 'இரும் பிசிராந்தை யடியுறையெனின்' என்பது அன்னச்சேவலைக் குறித்துக் கூறுதலிற், சொல்லா மரபின சொல்லுமாகவந்த குறிப்பு மொழி. 'நீலமுண்டதுகில்' நீலம்பற்றினதுகில் என்னும் பொருண்மை குறித்து உண்டதாகக் கூறப்பட்டது. பிறவுமன்ன.

**417.** இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்த [லென்
றவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே.

ஒரு பொருண்மேல் ஒரு..............வருவழி வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஒருசொ(ல்லா)னடுக்கி வருஞ் சொல் இசை நிறை யாகி யடுக்குதல், அசைநிலையாகி யடுக்குதல், பொருளொடு புணர்ந்து வருதல் என மூவகையென்ப ஆசிரியர். எ-று.

ஒரு சொல்லடுக்கு எனப் பொதுவாக ஓதினமையாற் பெயர் முதலாகிய நான்கு சொல்லும் அடுக்கப் பெறும் என்று கொள்க.

உ-ம் :—'துறக்குவ னல்லன்.................................ளிருடோன்றிய' இதனுள் மூன்றுற்ற சொற்பொருள் உணர்த் திற்று. ஏனைய இசைநிறைக்கண் வந்தன.

இசைநிறையாவது பாட்டுக்குறித்து வரும். அசைநிலை யுளின்பங் குறித்து வரும். §"குறங்கென, மால்வரை யொழுகிய வாழை வாழைப், பூவெனப் பொலிந்த வோதி" என்றவழி, வாழை என்னுஞ் சொல்லிரண்டனுள் ஒன்று அசைநிலையா யிற்று. ‡"நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந் தொன்றின வொன்றின வல்லே செயிற் செய்க." (என்றவழி,) நின்றன பலவாதலின் அடுக்கிவந்த சொல்லும் பொருள் குறித்து நின்றது. பிறவுமன்ன. [உ௬]

---

* புறம்-௬௭. § சிறுபாண்-௨௦. ‡ நாலடி-௪.

418. இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்.

இசையடுக்கிற்கு வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இசைப் பொருட்கண் அடுக்கிவருஞ் சொல்லிற்கு எல்லை நான்கு. எ-று.

உ-ம் :—"ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும், விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்கும், குளக்கொட்டிப் பூவி னிறம்." இதனுள் ஒக்கும் என்னும் சொல் இசை நிறைக்கண் நான்கு வரம்பாகி வந்தவாறு கண்டுகொள்க. [உஎ]

419. விரைசொல் அடுக்கே மூன்றுவரம் பாகும்.

குறிப்புப் பொருள் உணர்த்தும் ஒருசொல்லடுக்கிற்கு வரையறை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—விரைவு(ப்) பொருண்மை குறித்த ஒருசொல்லடுக்கிற்கு எல்லை மூன்றாகும்.

உ-ம் :—பாம்பு பாம்பு பாம்பு, தீ தீ தீ இவற்றுள் மூன்றுற்றன பொருள் உணர்த்தின. ஏனைய பொருளிலவாயினும், விரைதல் என்பது குறித்தலிற், பொருளொடு புணர்ந்த அடுக்காயின.

இசை நிறைக்கும், பொருளொடு புணர்தற்கும் எல்லை கூறி, அசைநிலையடுக்கிற்கு எல்லை கூறாமையின், அஃது இரண்டல்லது வரப்பெறாதென்று கொள்க. [உஅ]

420. கண்டீர் என்றா கேட்டீர் என்றா
சென்ற தென்றா போயிற் றென்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி யிசைக்குங் கிளவி என்ப.

இதுவும் ஒருசார் அசைநிலை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—கண்டீர் என்பது முதலாக ஓதப்பட்ட சொற்கள் வினாப்பொருள் உணர்த்துஞ் சொல்லொடு கூடிநின்றவழி, அப்பொருணிலையிசைக்கும் சொல்லாம். எ-று.

எனவே சொற்களோடு கூடாதவழி அசைநிலையா மென்றவாறும்.

உ-ம் ;—வினைவொடு கூடுதலாவது :—கண்டீரோ கண்டீரோ என..............கண்டீரென்ப..................

இனி, அவை அசைநிலை(யாக) வருமாறு :—"படையிடுவான் மற்கண்டீர், காமன் படையுடும் பாலொடுகோட்டம் புகின்" என்பதனுள், கண்டீர் என்பது அசைநிலை யாயிற்று. ஏனையவற்றிற்கு (உதாரணம் வ)ந்துழிக் கண்டு கொள்க. [உகூ]

**421.** கேட்டை என்று நின்றை என்று
காத்தை என்று கண்டை என்று
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே.

இதுவும் அது.

இ-ள் :—இந்நான்கு சொல்லும் முன்னிலை வினைச் சொல்லல்வழி, அசை நிலையாகும். எ-று.

உ-ம் :—"மோரொடுவந் தாடகைகண் மையாரொடுஞ் சொல்லி யானன........." ......வழிக் கண்டை என்பது அசைநிலை யாயிற்று. ஏனையவும் வந்தவழிக் கண்டுகொள்க. [ங௦]

***422.** பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி.

எச்சக் கிளவியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—நெறிப்படத்தோன்றும் எஞ்சுபொருள் உணர்த்துங் கிளவி: பிரிநிலை முதலாக இசையீறாக ஓதப்பட்ட பத்தும். எ-று.

எஞ்சுபொருட்கிளவியாவது சொல்லாதொழிந்த பொருளை இனிது விளக்குஞ் சொல். நெறிப்படத் தோன்றுதலாவது வாக்கியமாகிய தொடர் மொழிக்கண் முன்னும் பின்னும் நின்ற

* இங்கே இருத்தற்குரிய இறப்பின் நிகழ்வின், எவ்வயின் வினையும், அவைதாம் தத்தம் கிளவி என்னுஞ் சூத்திரங்களை, இவ்வுரையாசிரியர் இயைபு பற்றி வினையியல் ஈற்றில் (ருஉ, ருங, ருச-ஆம் சூத்திரங்களாக) வைத்து உரைசெய்திருக்கின்றனர்.

சொல்லை நெறிப்படுத்தற்கு ஆண்டுத் தோன்றுதல். அது புலப்பட நில்லாமையின் எச்சமாயிற்று. பிரிநிலை எச்சமாவது பல பொருளில் ஒன்று பிரிந்தவழிப் பிரிக்கப்பட்ட பொருண்மையுந் தோன்ற நிற்பது. வினையெச்சமாவது ஒரு வினைச்சொல் எஞ்சி நிற்பது. பெயரெச்சமாவது ஒரு பெயர் எஞ்சி நிற்பது. அஃதேல், வினையெச்சம் பெயரெச்சம் என்பன வினையியலுள் ஓதப்பட்டனவலவோ எனின், ஆண்டு ஓதப்பட்டன பெயரையும், வினையையும் ஒட்டி நின்றியலும். ஈண்டையன அன்னவல்லவாமாறு காரணத்தால் விளங்கும். ஒழியிசை யெச்சமாவது சொல்லப்பட்ட பொருளை யொழியச், சொல்லாதொழிந்து நின்ற பொருளுந் தோன்ற நிற்பது. எதிர்மறை யெச்சமாவது ஒரு பொருளைக் கூறியவழி, அதனின் மாறுபட்ட பொருண்மையும் அதனானே உணரநிற்பது. உம்மையெச்சமாவது உம்மை கொடுக்கவேண்டும் வழி, அஃது எஞ்சி நிற்றல். என என்னெச்சமாவது எனவென்று சொல்ல வேண்டும்வழி, அச்சொல்லெஞ்சி நிற்பது. சொல்லெச்சமாவது ஒருசொல்லினான் ஒருபொருளை விதந்தோதியவழி, அவ்விதப்பினானே பிறிதுபொருளைக் கொள்ளுமாறு நிற்பது. குறிப்பெச்சமாவது சொற்பொருளின்றிச், சொல்லுவான் குறித்த பொருள் எஞ்சி நிற்பது. இசையெச்சமாவது ஒரு சொ.........ருளன்றிப் பிறிதுமொரு பொருளை இசைக்குமாறு வருவது. இவையெல்லாம் வழக்கினும், செய்யுளினும் வந்து பொருளை விளக்குதலின் எடுத்தோதினர்.

உதாரணம் தத்தம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும். [௯௧]

**423.** *அவற்றுள்*
*பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின.*

பிரிநிலையெச்சம் முற்றப்பெறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற் சொல்லப்பட்டவற்றுள், பிரிநிலையாகிய எச்சம் அதன்கணின்றும் பிரிக்கப்பட்ட பொருளொடு தொடர்ந்து முடிவு பெறும். எ-று.

உ-ம்:—இவன் கல்வியுடையன் என்றவழிச், சொல்லுவான் இவ் அவையத்தாருள் எனக் கருதினானாயின், இவ் அவையத்தாருள் என்பது எஞ்சி நின்று பிரிநிலை யெச்சமாயிற்று. இவட்

குக் கண்ணழகிது என்றவழி, மற்றுள்ள உறுப்புக்களின் என்பது எஞ்சிநின்றது. இவை, பிரிக்கப்பட்ட பொருளொடு தொடர்பு பட்டு முற்றுப்பெற்றவெனக் கொள்க. [௬௨]

**424.** வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்று முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே.

வினையெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வினையெச்சமாகவுடைய சொல்லிற்கு வினையும், வினைக்குறிப்பும் நினையத் தோன்றிய முடிபாகும். ஆண்டு, வினைக் குறிப்பு ஆக்கச் சொல்லோடு அடுத்துவரும். எ-று.

நினையத்தோன்றும் என்றதனான், ஆராயத் தோன்றுமென்று கொள்க. எனவே, வினையியலுட் கூறிய வினையெச்சம் ஆராய் தல் வேண்டாமையின், அஃதன்றென்று கொள்ளப்படும்.

உ-ம் :—* "அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார், வழுக்கியுங் கேடீன் பது." என்பதனுள், கேடுபயத்தற்கு அழுக் காறு தானே யமையும், பகைவர் கெடுக்குதல் தப்பியும்......... வேண்டுதலின், வரும் என்பது எஞ்சிநின்றது. $ "அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்-பெற்றான் பொருள்வைப் புழி" என்பதற் குப் பொருள் அற்றாது குணங்களை......செய்ய ஒருவன் தான் தேடினபொருள் வைத்தற்கு இடம் பெற்றான் ஆம் என உரைக்க வேண்டுதலின், ஆமென்னும் வினைக்குறிப்பு எஞ்சிநின்றது. [௬௩]

**425.** பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.

பெயரெச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பெயரெச்சமாகவுடைய சொல் பெயரொடு முடிவு பெறும். எ-று.

உ-ம் :—† "துறக்குவ னல்லன் றுறக்குவனல்லன், தொடர் வரை வெற்பன் றுறக்குவனல்லன், றொடர்பு ளினையவை தோன் றின்," என்றவழி, அவன் தொடர்பு என வேண்டுதலின், அவன் எனவெஞ்சி நின்றது. ‡ "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே"

---

* குறள்-க௬௫. $ குறள்-உ௨௬. † கலி-௪௧. மிகவுஞ் சிதைந்து காணப்பட்டது. பக்கம்-உ௪௧ காண்க. ‡ கிளவி-௬-க.

என்பதனுள், என்மனார் ஆசிரியர் எனவேண்டுதலின், ஆசிரியர் (என்னும்) பெயர் எஞ்சி நின்றது. "மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே-அரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்-பெருந்தோ ளுணுகிய நுசுப்பிற்-கல்கெழு கானவர் நல்குறு மகளே." (குறு-எக) இதனுள் எனக்கென வேண்டுதலின், ........எஞ்சி நின்றது. [௩௪]

## 426. ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின.

ஒழியிசை எச்சத்திற்கு முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஒழிந்த சொல்லை எச்சமாக உடையது அவ்வச் சொல்லினும் பொருள் முடிவுபெறும். எ-று.

உ-ம் :—இவர் கல்வியாற் குறைவிலர் என்றவழி, ஒழுக்கத்தாற் குறையுடையர் என்றுதல், பொருளாற் குறையுடையர் என்றுதல் ஒரு பொருள் குறித்தவழி, அப்பொருள்பட்டவாறும், அதனானே, அச்சொல் முற்றுப்பெற்றவாறுங் கண்டு கொள்க. [௩௫]

## 427. எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின.

எதிர்மறையெச்சம் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எதிர்மறைப் பொருண்மையை எச்சமாகவுடையது அவ்வெதிர்மறைப் பொருண்முடிவு பெறும். எ-று.

உ-ம் :—"இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்—கண்ணிறை நீர்கொண் டனள்." (குறள்-மணக்-கங௨) என்பதனுள், மறுபிறப்புப் பிரிவேம் என நினைத்துக் கண்ணிறை நீர்கொண்டனள் எனப்பொருளுரைக்கவேண்டுதலின், எதிர்மறை, எஞ்சிநின்றதன் எதிர்மறைப்பொருளொடு முடிந்தவாறு கண்டுகொள்க. [௩௬]

## 428 உம்மை எச்சம் இருவீற் றானும்
## தன்வினை ஒன்றிய முடிபா கும்மே.

உம்மையெச்சம் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உம்மையாகிய எச்சம் இரண்டு வேறுபாட்டின் கண்ணும் தன்வினையொடு பொருந்திய முடிபாகும். எ-று.

இருவீறுவன :—முன்னிற் சொல்லும், பின்னிற் சொல்லும். தன் வினையாவன :—இரண்டு சொல்லின்கண்ணும் உடன்பாடாகியும், மறையாகியும் வரும் தொழிலுங் காலமும் ஒத்த வினைச்சொல். அது உம்மைக்கேற்ற வினையாதலின் தன்வினையென்றார். ஒன்றிய முடிபாவது அவ்வினையொடும் பொருந்திய முடிபாகும் என்றவாறு. ஏனை யெச்சம்போலத் தான்வந்து முடிதலேயன்றித், தான்வந்தாலும் சார்ந்த வினையொடு கூடியல்லது பொருட்கு முடிபாகாது என்றவாறு.

உ-ம் :—சாத்தனும் வந்தான், கொற்றனும் வந்தான் எனற்பாலன—சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான் எனவரின், ஆண்டு, உம்மை எஞ்சிநின்றதென்க. இருவீற்றும் என்ற உம்மையாற் றனிவரினும் என்றுகொள்க. "வதுவை வந்த வன்பறழ்க்குமரி யிருதோ டோழர்பற்ற" என்றவழி, இருதோளும் என்னும் உம்மை எஞ்சிநின்றது. இடைச்சொல் லோத்தினுள் "உம்மை எண்ணி னுருபுதொகல் வரையார்" எனவும், இவ்வோத்தினுள் "உம்மைத் தொகை" எனவும், ஈண்டு உம்மை யெச்சம் எனவுங் கூறினாராதலின், அவற்றின் வேறுபாடு புலப்பட்டின்றாலெனின், பல பொருளை யெண்ணி ஒரு வினையான் முடிக்கும்வழிச், சொற்றொறும் உம்மை கொடுத்து, இடைநின்ற ஒன்றானும் இரண்டானும் சொல்லின்கண் உம்மை கொடாதவழி, உம்மை யெண்ணுகுமோ ஆகாதோ வென நின்ற ஐயங்கொளற்குரித்து; ஆண்டு "உம்மை யெண்ணின் உருபுதொகல் வரையார்" என்று ஓதுதலின், உம்மை ஆண்டுத் தொக்கதென்க. இரண்டானும், பலவானும் பெயரை யடுக்கி, ஒரு சொற்போல ஒருவினையான் முடிக்கும்வழி, உம்மைத் தொகையென்க. தனித்தனி வினைகொண்டு உம்மை பிரிந்துநின்றே பொருள்படும் சொற்கள் செய்யுளகத்து எஞ்சிநிற்கின்றதனை எஞ்சிற்றென்க. அஃதற்றாகக், காலமும் வினையும் ஒத்தல்வேண்டும் என்றதென்னை? சாத்தன் வந்தான், கொற்றன் வரும் எனவும், காலமும் வினையும் ஒவ்வாமையும் வருமாலெனின், அவை உம்மை யெஞ்சிய சொல்லன்மை வருகின்ற சூத்திரத்தான் விளங்கும். [௩௭]

**429.** தன்மேற் செஞ்சொல் வருஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமும்

இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான.

**மேற் சொல்லப்பட்ட உம்மைப்பொருட்கண் வரும் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள் :—உம்மைப் பொருட்கண் உம்மை கொடாது செஞ்சொல்லாகிவரின், அவற்றுள் நிகழ்காலத்தொடு எதிர்காலமும், இறந்தகாலத்தொடு எதிர்காலமும் மயங்குதல் நீக்கார் : முறை பிறழாமல் நிற்கும்வழி. எ-று.

உ-ம் :—சாத்தன் வாராநின்றான், கொற்றன் வருவன், போம் ; சாத்தன் வந்தான், கொற்றன் வருவன், போம் என இவையும் உம்மை கொடாமற் பொருள்பட்ட வாறும், காலமுந் தொழிலும் மயங்கியவாறும் கண்டுகொள்க. அஃதேல், சாத்தனும் வாரா நின்றான், கொற்றனும் வருவன் என உம்மை கொடுத்தும் வழக்கு நிகழுமாலெனின், உம்மை கொடுக்கின்றது பொருள் வேற்றுமை உணர்தற்கன்றே ; அது கொடாக்காலும் பொருள் விளங்குமாயின், கொடுத்ததனாற் பயனின்றென்க. இவ்வாறு செய்யுளகத்துவரின், இசைநிறைத்தற் பொருட்டு வந்ததென்க. [நஅ]

430. எனவென் னெச்சம் வினையொடு முடிமே.

எனவென் எச்சமுடிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எனவென்று சொல்லப்பட்ட எச்சம் வினையொடு முடியும். எ-று. உம்மையாற் பெயரொடும் முடியுமென்று கொள்க. முடிதலாவது அவற்றைச் சார்ந்துநின்று பொருளை உணர்த்துதல். முடிதல் எனினும், தொடர்த லெனினும் ஒக்கும்.

உ-ம் :—* "வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமா லிந்நின்ற, வாடன் முதியாள் வயிற்றிடங்—கூடார், பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா, இரும்புலி சேர்ந்த விடம்" என்பதனுள் இரும்புலி சேர்ந்த விடமென வியப்பாமா லெனப் பொருளுரைக்க வேண்டுதலின், என என்பது எஞ்சிநின்ற வியப்பென்பதனோடு தொடர்ந்தது............. †'பிரிநிலை வினையே' என்னுஞ் சூத்திரத்துள், 'குறிப்பே யிசையே யாயீ ரைந்தும்' என்றவழிக்,

* புறப்பொ-வெண்-வஞ்சி—கரு. † சூ-நக.

குறிப்பே, இசையே யென வீரைந்துமெனப் பொருளுரைக்க வேண்டுதலின், என என்பது எஞ்சிநின்றது, ஈரைந் தென்னும் பெயரோடு முடிந்தது. [நகூ]

**431.** எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலவென மொழிப.

சொல்லெச்சத்திற்கும், குறிப்பெச்சத்திற்கும், இசை யெச்சத்திற்கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :— மேலதிகரிக்கப்பட்ட பத்தினுள்ளும் முடிவு சொல்லாது ஒழிந்த மூன்று சொல்லும் வந்து முடிக்கும் சொற்களை எஞ்சிநிற்ற வில. எ-று.

எனவே, முந்துற்ற ஏழு சொல்லும் வந்து முடிக்கும் சொற்களையுடைய என்பதூஉம், இவை நின்றவாற்றாற் பொருள் வேறுபடூஉம் என்பதூஉங் கூறியவாறும் என்றவாறு. இதன் பொருள் வருகின்ற சூத்திரத்தான் விளங்கும். [சந]

**432.** அவைதாம்
தத்தங் குறிப்பின் எச்சம் செப்பும்.

இதுவும் அது.

இ-ள் :—மேற் சொல்லப்பட்ட மூன்று சொல்லும் வந்த...... சொல்லையுடைய வல்லவாயினும், தத்தங் குறிப்பினான் எஞ்சிய பொருண்மையை உணர்த்தும். எ-று.

உதாரணம் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும். [சக]

**433.** சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்ல தெஞ்சுதல் இன்றே.

சொல்லெச்சம் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—சொல் என்னும் எச்சம் அச்சொல்லாவதற்கு முன்னும் பின்னும் மற்றொரு சொல் எஞ்சிநிற்ற விலது. எ-று.

எனவே, அச்சொல்லினானே உய்த்துணர்ந்து கொள்ளப் பிறிதொரு பொருள் வரும் என்றவாறும்.

உ-ம் :—* 'நெடும் புனலுள் வெல்லு முதலை யடும்புனலி னீங்கி னதனைப் பிற' † "காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா வேலாண் முகத்த களிறு." என்றவழித், தமது நிலத்தில் எளியவர் நின்றாலும் பிறரது நிலத்தில் வலியாரும் எளியராவர் என்னும் பொருண்மை இச்சொற்றானே யுணர்த்தலிற் சொல்லெச்சமாயிற்று. [௪௨]

## 434. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.

இனிக் குறிப்பெச்சம் உணர்த்தற்பாலது. அது 'தெரிபு வேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும், இருபாற்றென்ப பொருண்மை நிலையே' எனப் பெயரியலுள் § ஓதுதலால், அதன்கண் சில சொற்களை மரபு வழு வமைக்க வேண்டுதலின், அவை யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவைக்களத்து வழக்கமல்லாத சொல்லை மறைத்துப் பிறவாய்பாட்டான் மொழிக. எ-று.

உ-ம் :—மறைத்துச் சொல்லுதல் இருவகைப்படும். மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக் கூறுதலுமென. மங்கல மரபினாற் கூறுவது :—செத்தாரைத் துஞ்சினாரென்றும், ஓலையைத் திருமுகம் என்றுங்கூறுதல். இவை அவைக்களத்துப் பட்டாங்குக் கூறிற் குற்றம்பயக்குமாதலின், அவ்வாறு கூறினார் என்க இடக்கரடக்கிக் கூறுதல் கண்கழீஇ வருதும், கால்மேல் நீர் பெய்தும் எனப் பிறவாய்பாட்டான் வரும் பொருண்மையை மறைத்துச் சொல்லுதல். இவை வேறொன்றைக் குறித்துக் கூறுதலிற், குறிப்பெச்சமாயின. [௪௩]

## 435. மறைக்குங் காலை மரீஇய தொராஅல்.

மேல்தற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவை யல்லாத சொற்களைச் சொல்லுங்கால், அவ்வக்காலத்து (மருவிப் போந்த) சொல்லை மறையாதொழிக. எ-று.

உ-ம் :—மருவிப் போந்தன :—ஆப்பி, கோமூத்திரம் என்றாற் போல்வன. [௪௪]

---

* குறள்-௪௯௫. கடும்புனல்-எட்டிற்காணப்படுவது. † குறள்-௫௦௦.
§ சூ-௩.

436 * ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய
அவற்றுள்,
ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே
தாவென் கிளவி ஒப்போன் கூற்றே
கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே.

இதுவும் ஒருசார் குறிப்பெச்சம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஈ, தா, கொடு என்னுஞ் சொற்கள் ஒருபறவையின் பெயரும், தொழிற் பொருண்மையும், கொடுமையுமாதலன்றி, இரப்போன் கூற்றாதலும் உரிய. அவற்றுள், ஈ என்பது இழிந்தோன் கூற்று என்பதூஉம், தா என்பது ஒப்போன் கூற்று என்பதூஉம், கொடு என்பது உயர்ந்தோன் கூற்று என்பதூஉம் உணர்த்தும். எ-று.

இச் சொற்கடம்மானே இழிந்தான், ஒப்பான், மிக்கான் என்னும் பொருண்மை, எஞ்சிநிற்றலிற் குறிப்பெச்சமாயிற்று.

437. கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்
றன்னிடத் தியலும் என்மனார் புலவர்.

மேலதற்கோர் வழுவமைதி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மேற் சொல்லப்பட்டவற்றுள், கொடு என்னுஞ் சொல் படர்க்கையாயினும், தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பினாற் றன்னிடத்தியலும் என்று சொல்லுவர் புலவர். எ-று.

தன்னைப் பிறன்போற்கூறுங் குறிப்பெச்சமாயிற்று. இச் சூத்திரத்தானும் குறிப்பெச்சம் அதிகாரப்பட்டவாறு கண்டு கொள்க. [சச]

438. பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்

* இவற்றை நான்கு சூத்திரங்களாகக் கொள்வர் எனை உரையாசிரியர்கள்.

தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்தும் கடப்பா டிலவே.

அதிகார முறையான் இசையெச்சமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பெயர்நிலைக் கிளவிகளினாகுஞ் சொல்லும், திசைநிலைக் கிளவிகளினாகுஞ் சொல்லும், பழமைத்தாகி நெறிப்பட வருஞ் சொல்லினாகுஞ் சொல்லும், பொருணிலை மயக்கினாகுஞ் சொல்லும், மந்திரப் பொருள்வயினாகுஞ் சொல்லும் அவ்வனைத்தும் இச்சொற்கு இம்முறைமைய வென்னும் நியமம் இல. எ-று.

எனவே, தன்பொருள் ஒழியப் பிறிது பொருள்படும் என்றவாறும். ஒருசொல் இரண்டுபொருள்பட நின்றவழி, ஒரு பொருளை யுணர்த்தும் இசை எஞ்சி நிற்குமன்றே. அஃது இசையெச்சமாவது என்று கொள்க. ஆகுஞ்சொல் என்றமையான், ஏற்பன கொள்ளப்படும்.

இசையெச்சம் ஐந்துவகையென்பது போந்தது. அவற்றுள், பெயர்நிலைக் கிளவியினாகுவன :—வேங்கை என்பது ஒருமரத்திற்குப் பெயராயினும், புலிக்கும் பெயராயிற்று. அதுவுமன்றிக் கைவேம் என்னும் பொருளும் பட்டது. இவ்வாறு ஒரு சொல்லினானே பிறிதுபொருள் உணரின், அதை யுணர்த்தும் ஓசை (எஞ்சிநி)ன்றதென்க.

இது பலபொருளொருசொல் அன்றோ எனின், ஆம்; பலபொருட்கண் ஒருசொல்வருதற்கு இலக்கணம் ஈண்டு உணர்த்துகின்றது. என்னை உணர்த்தியவாறு எனின், வேங்கை என்னுஞ் சொல், புலிப்பொருண்மை யுணர்த்தி.........................ரு ஓசை எஞ்சிநின்றதெனினல்லது விடைபெறாதாம். அதனானே இலக்கண முணர்த்தியவாறு அறிந்து கொள்க.

'திசைநிலைக் கிளவியி னாகுநவும்' என்பது செந்தமிழ் நாட்டு வழங்குஞ்சொல் திசைச் சொல்லாகியவழிப் பொருள் வேறுபடுதல். கரை என்பது வரம்பிற்குப் பெயராயினும், கருநாடர் விளித்தற்கண் வழங்குப.

தொன்னெறிமொழி யென்றதனுன் முந்து(ம்) வழக்காகித் தொடர்வு பட்டுச் செய்யுளகத்தும், பாவழக்கினும் வருந்தொடர் மொழி என்று கொள்ளப்படும். 'குன்றேறுமா' என்றவழி, குன்று, ஏறு, ஆ, மா எனவும் படும்; குன்றின்கண் ஏறுகின்ற ஆமா எனவும் படும்; குன்றின்கண் ஏறு மா எனவும் படும். இவ்வாறு வரும் பொருட்கெல்லாம் இத்தொடர்மொழி தானே சொல்லாகி இதன்கண் இசை வேறுபட்டுப் பொருள் வேறுணர்த்தலின், அப்பொருண்மைகளை யுணர்த்தும் இசை எஞ்சிநின்றது. "காதற் கொழுநனைப் பிரிந்தல ரெய்தா-மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னொடும்" என்றவழி, இச்சொல்லெல்லாம் குருக்கத்திக்கும் அடையாகி மாதவி என்னும் ஒரு பெண்பாற்கும் அடையாகிப் பொருள் வேறுபடுதலின், இசை யெச்சமாயிற்று. இது தனிமொழியாகிய பெயர்நிலைக் கிளவியின் அடங்காமையின், தொடர்மொழி யென்று வேறோதினார்.

மெய்ந்நிலை மயக்கமாவது பொருணிலைமை மயக்கங் கூறுதல். $"குருகுகரு வுயிர்ப்ப, ஒருதனி யோங்கிய திருமணிக் காஞ்சி" என்றவழிக், குருகு என்பது மாதவியென்னுங் கொடிக்கும் பெயராதலின், அப்பெயருடையதனைக் குருகு என்றார். காஞ்சி என்பது மேகலைக்குப் பெயராதலின், அது மணிக்காஞ்சி என்றொட்டி மணிமேகலை யென்பாள்மேல் வந்தது. இவ்வாறு பொருணிலை மயங்க வருவனவும் இசையெச்சமாம் என்றவாறு. மந்திரம் என்பது பிறரறியாமல் தம்முள்ளார் அறிய மறைத்துக்கூறுஞ் சொல். அதன்கண் ஆகுவன, உலகினுள் வழங்குகின்ற பொருட்குத் தாம் அறிகுறியிட்டு ஆண்டுவருங் குழூவின்வந்த குறிநிலை வழக்கு. அது வெளிப்பட்ட சொல்லால் உணரும் பொருட்கு மறைத்துப் பெயரிடுதலும், எழுத்திற்குப் பிறபெயரிட்டு வழங்குதலும் என இருவகைப்படும். இவையும் பொருள் வேறுபடுத்தி வழங்குதலின் இசை யெச்சமாயின. அவற்றுள், பொருட்கு வேறு பெயரிட்டன:—*வண்ணக்கர் காணத்தை நீலம் என்றலும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும் முதலாயின. எழுத்திற்கு வேறு பெயரிட்டு வழங்குமாறு:—"மண்ணைச்சுமந்த வன்றனும் வரதராசன் மகன்றனும், எண்ணிய வாகா விமூன்று

$ மணி-காதை-௩அ, வரி-௫௫, ௫௬. * மயிலை-௩௫௦-ஆம் பக்கம் பார்க்க.

மிரண்டு மரமும் ஓர்யாறும், திண்ண மறிய வல்லார்க்குச் சிவக தியைப் பெறலாமே.'' இதனுள் மண்ணைச் சுமந்தவன்-ந, வரதரா சன்மகன்-ம, வரகாலி மூன்று-சி, இரண்டுமரம்-வா, ஓர்யாறு-ய எனக்கூற, நமசிவாய எனப் பொருளாயிற்று. பிறவும் அன்ன.

**439.** செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே.

இது வினைச்சொற்கு உரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—செய்யாய் என்னும் ஆய் ஈற்று முன்னிலை வினைச் சொல், செய் என்னும் ஏவல் குறித்த வினைச்சொல்லுமாகி வரும். எ-று.

உ-ம் :—நீ எம் இல்லத்து உண்ணாய் என்றவழி, உண்ணுமை யைக் குறித்தலே யன்றி, உண்க என்பதும் குறித்தவாறு கண்டு கொள்க. இவ்வாறு வருவதும் இசையெச்சம். இன்னும் இச்சூத்திரத்திற்குப் பொருள் செய்யாய் என்னும் வினைச்சொல் செய் எனக் குறைந்து நிற்கவும் பெறும் என்றவாறு. உண்ணாய் என்பது உண் என வரும். [சஅ]

**440.** முன்னிலை முன்னர் ஈயு மேயும்
* முன்னிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இதுவும் முன்னிலை வினைச்சொற்கு உரிய வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—முன்னிலை வினைச்சொற்கண் ஈகாரமும்-மகரமூர்ந்த-ஏகாரமும் முன்னிலை மரபினையுடைய மெய்யை ஊர்ந்துவரும். எ-று.

முன்னிலை மரபின் மெய்யாவன உண், தின் என்னுஞ் சொற் கண் ஈற்றெழுத்தோடும் பால்காட்டும் எழுத்தினைப் புணர்க்க இடையேவரும் மெய்யெழுத்து.

உ-ம் :—''சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ (அகம்-சசு.) ''அட்டி லோலை தொட்டனை நின்மே'' (நற்றிணை-ந00.) ''இன்று துறைவி யரும்படர் களைமே'' எனவரும். இ, ஐ, ஆய் அன்றி இவையுஞ் சிறுபான்மை வருமெனக் கொள்க. [சக]

---

* அந்நிலை எனை உரைப்பாடங்கள். † புறம்-கசரு.

**441.** கடிசொல் லில்லைக் காலத்துப் படினே.

இது வினைச்சொற்கண் வருவதோர் வழுவமைதி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தான் வந்தில எனக் கடியப்படா: வினைச்சொற்கள் காலத்தொடு பொருந்தின். எ-று.

காலமாவது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். காலப் பொருண்மை மயங்காமல் வரின், ஈறு திரியினும் அமைக என்ற வாறு.

உ-ம்:—"மறம்பாடிய பாடினியும்மே, பேருடைய விழுக் கழஞ்சிற், சீருடைய விழைபெற் றிசினே, இழைபெற்ற பாடினிக் குக், குரல்புணர்சீர் கொளைவல்பாண் மகனும்மே, எனவாங்கு, ஒள்ளழற் புரந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே." (புறம். கக.) என்பதனுட் படர்க்கைவினைச்சொல் ஈறுதிரிந்து நின்றது காலப்பொருண்மை வழுவாமையின், குற்றமின்று யிற்று.

*"ஆரமரலரத் தாக்கித்தேரோ, டவர்ப்புறங் காணேனாயிற் சிறந்த, பேரம ருண்க ணிவளினும் பிரிக" எனவும், †"முறை திரிந்து, மெலிகோல் செய்தே னாகுக" எனவும் தன்மைக்கண் எதிர் காலங் குறித்த வஞ்சினம் வியங்கோள் வாய்பாட்டான் வந்தன.

‡"பகலே பலருங் காண நாண்விட், டகல்வயற் படப்பை யவ னூர் வினவிச், சென்மோ வாழி தோழி பன்னாட், கருவிவானம் பெய்யாதாயினும், அருவி யார்க்கும் கழைபயி னனந்தலை, வான் றோய் மாமலைக் கிழவனைச், சான்றோ யல்லை யென்றனம் வரற்கே" என்றவழிச் செல்வேமோ எனற்பாலது சென்மொ என வந்தது. பிறவுமன்ன.

இச்சூத்திரத்திற்குப் பிறவாற்றாற் பொருளுரைப்பவாலெ னின், வினைச் சொற்றிரிபு அதிகாரப்பட்டு வருதலானும், 'காலத் துப்படினே என்றமையானும் பிறவாற்றா னுரைப்பது பொருளன் றென்க. [௫௦]

*, † புறம்-எக. ‡ நற்-௩௫௫-காண்க.

## 442. குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்.

குறைச் சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—யாதானுமொரு சொல்லைக் குறைக்கவேண்டுவழிக், குறைக்க வேண்டுமிடமறிந்து குறைக்க. எ-று.

அது தலைக்குறைத்தலும், இடைக்குறைத்தலும் கடைக் குறைத்தலும் என மூவகைப்படும்.

உ-ம்:—'மரையிதழ் புரையு மஞ்செஞ்சீறடி' என்றவழித், தாமரை யென்பது தலைக்குறைந்து நின்றது. *'அகலிருவிசும்பி னூஅல் (என்றவழி) ஆரல் என்பது இடைக் குறைந்து நின்றது. 'நீலுண்டுகிலிகை.' என்றவழி, நீலம் என்பது கடைக் குறைந்து நின்றது. தொகுக்குவழித்தொகுத்தல் என்பதனோடு இதனிடை வேறுபாடென்னை யெனின், ஆண்டுவிரிந்துநின்றசொற்றொகுக்க வேண்டுவழித் தொகுமாறு கூறினர். ஈண்டு, இயற்கையிற் குறைதலிற் குறைச்சொல்லென்றார். [௫௧]

## 443. குறைந்தன வாயினும் நிறைப்பெய ரியல.

மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—குறைச்சொற்கிளவி குறைந்து நின்றனவாயினும், பொருள் வேறுபடா நிறைந்த பெயரியல. எ-று.

உதாரணம் மேற்காட்டப்பட்டது.

இவ்விதி மேல் விகாரப்பட்ட சொற்கும் ஒக்கும் என்று கொள்க. [௫௨]

## 444. இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.

இடைச்சொற்கண் எஞ்சி நின்றதோர் பொருளுணர்ச்சி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—இடைச் சொற்கள் எல்லாம் வேற்றுமைச் சொல் லாம். எ-று. என்பது என் சொன்னவாறோவெனின், பெயரும், வினையும் போலப் பொருளை நேர்காட்டாது, ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் வேற்றுமை யுருபுபோல, வேறுபட்ட

---

* மலைபடு-௧௦௦.

பொருளைக்குறித்து நிற்றலின், இடைச்சொல்லும் பொருள் வேறு படுக்குஞ் சொல் எனப்படும்; பொருளுணர்த்துஞ் சொல்லெனப் படா. மன் என்பது கழிவினும், ஆக்கத்தினும், ஒழியிசையினும் வந்தவழித், தானிடைப்பெற்று நிலைமொழியின் வேறுபட்ட பொருளைக் குறித்து நின்றதல்லது, அப்பொருட்கு வாசகமன்றி நின்றமை கண்டு கொள்க. பிறவுமன்ன. [௫௩]

## 445. உரிச்சொன் மருங்கினும் உரியவை உரிய.

உரிச்சொல் மருங்கினும் இடைநின்று பொருளுணர்த்துஞ் சொல்லுள என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உரிச்சொல்லிடத்தும் வேற்றுமை யுருபுபோல அப்பொருள் வேறுபடுத்தற்குரியவை உரியவாம். எ-று.

அது நனி என்பது உறவும், தவவும்போல மிகுதி குறித்து வரினும், உறுவன, தவவன, எனப்பொருளுணரவாராது, இடைச் சொற் போலக் குறிப்பினான் மிகுதி புணர்த்துதலின், இதுவும் பொருள் வேறுபடுக்குஞ் சொல்லாயினல்லது, பொருளுணர வாராமை கண்டுகொள்க. பிறவும் அன்ன. [௫௪]

## 446. வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.

வினையெச்சத்திற்குரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். வினையெச்சச்சொல்லும் வேறுவேறாகிய பல இலக் கணத்தையுடைய. எ-று. வேறுகுறிய என்னாது பல்குறிய என்றது சொல்லானும், பொருளானும் வேறுபடும் என்பது அறிவித்தற்கெனக் கொள்க. சொல்லான் வேறுபடுதலாவது பொதுவகையான் எடுத்து ஓதிய செய்து, செய்யூ என்பன, உகா ஊகார ஈறாகி வருதலேயன்றிப், பிறவீற்றானும் வருதலும், எச்சச் சொல்லாகிவரற்பாலது முற்றுச்சொல்லாகி வருதலும். பொரு ளான் வேறுபடுதலாவது ஒருவாய்பாட்டான் உணரும் பொருளை மற்றொருவாய்பாட்டாற் கூறுதலும், எல்லா வினையெச்சமும் பிரித்துநோக்குவார்க்குப் பெரும்பான்மையும் வேற்றுமைப் பொருளாகித் தோற்றுதலும். அவையாமாறு :—செய்தெ னெச்சத்துக்கண் ஓடி, போய் எனவும், செய்யூ என்பதன்கட் செய்யாமெயனவும் வருவன ஈறுவேறுபட்டு வந்தன.

* 'மோயினள் உயிர்த்தகாலை' எனவும், "ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி" எனவும் கண்ணியன் வில்லன் வரு மெனவும் (வரும்) இவை வினையெச்சமுற்றாகி வந்தன. இவற்றுள், மோந்து என்பது மோயினளெனவும், கொய்ய வென்பது கொய்குவமெனவும், கண்ணியணிந்து வில்லையேந்தி யென்பன கண்ணியன் வில்லன் எனவும் முற்றுவாய்பாட்டான் வரினு மெச்சப்பொருண்மைத்தாகலின் வினையெச்சமெனப்பட்டன.

அஃதேல், முற்றென்பதொன்றில்லையால், முற்றும் எச்சப் பொருண்மைத்தாகவருதலின்? எனின், அஃதாமிடனு மாகாத விடனும் அறிதல் வேண்டுமென்பது வருகின்ற சூத்திரத்தான் விளங்கும். † "ஊறற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய-யாவரி நீழற் றுஞ்சும்" என்றவழி உண்டென்பது வினைமுதல் வினை யொடு முடியாமையின், உண்ணுவெனத் திரித்தல் வேண்டிற்று. இங்கிரான ஈறுதிரிந்தன. மருந்துண்டு நோய்தீர்ந்தான், மழை பெய்ய மரங்குழைத்தது என்பனவற்றைப் பிரித்துநோக்க, மருந் துண்டலான், மழைபெய்தலான் என வேற்றுமைப்பொருள்பட் டன. அஃதேல், இவை வேற்றுமை மயங்கியலுட் கூறப்பட்டன வன்றோவெனின், ஆண்டு வேற்றுமைப்பொருள் வினைச்சொல் லானும் விளங்குமென அதன் இலக்கணங்கூறினார், ஈண்டு வினை யெச்சம் வேற்றுமைப்பொருள்படுமென்று இதன் இலக்கணங் கூறினாரென்க. வினையெஞ்சு கிளவியுமென்ற உம்மை இறந்தது தழீஇற்று. [௫௫]

## 447. உரையிடத் தியலும் உடனிலை யறிதல்.

மேலதற்கோர் புறனடை யுணர்த்துத னுதலிற்று.

இ-ள். உரையென்பது தொடர்மொழி. முற்றுச்சொல் எச்ச மாகிவருதலும், வினையெச்சமீறுதிரிதலும், தொடர்மொழிக்கண் முடிக்கும் சொல்லொடு கூடிநின்ற நிலைமையை யறிந்துகொள்க. எ-று.

"மோயின ளுயிர்த்தகாலை" என்றவழி, உயிர்த்தலென்னும் வினையொடு நிற்றலின் மோயினளென்ப தெச்சமாயிற்று. அல்

* அகம் ௫. † குறு உ௩உ.

லாதவழி முற்றாயே நிற்கும். ஞாயிறு பட்டுவந்தான் என்றவழி, வந்தான் என்பதற்குப் பட்டென்பதில்லாமையிற் பட எனத்திரித்தல் வேண்டிற்று. பிறவு மன்ன. [௫௬]

448. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே
இன்ன வென்னுஞ் சொன்முறை யான.

மனக்கருத்தினாற் பொருளுணருமிட முணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். சொல்லினானன்றி இத்தன்மையவென்னுஞ் சொல்லினது தொடர்ச்சிக்கண் மனக்குறிப்பினாற் பொருளுணரப்படும் சொல்லும் உள. எ-று.

உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. "தொடி நோக்கி மென்றோளு நோக்கி அடிநோக்கி—யஃதாண் டவள்செய் தது" * என்றவழி, இருப்போமாயின், வளை கழன்று தோள்மெலியுமெனக் கருதி, நடக்க வல்லீராகல் வேண்டுமென அடியை நோக்கினாளாதலான், உடன்போதற்குக் கருதினாளென் இப்பொருளெல்லாம் அவள் குறிப்பினானுணர நின்றவாறு கண்டுகொள்க.

இது சொல்லினானுணராமையான் எடுத்தோதல் வேண்டிற்று. பிறவும் இந்நிகரன அறிந்துகொள்க. [௫௭]

449. ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்.

செப்புவழு வமைத்தலை நுதலிற்று.

இ-ள். ஒருபொருள்மேல் இரண்டுசொற் பிரிவின்றிவரின் நீக்கப்படா. எ-று.

"உயர்ந்தோங்கு பெருமலை", "உச்சி மீமிசை"†, "நிலத்து வழி மருங்கிற் றோன்றலான" என்பன "பிரிவில" என்றதனான் ஒட்டிநிற்றல் வேண்டும். [௫௮]

450. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனு மாருண்டே.

ஒருமைப்பெயர் பன்மைப்பொருளுணர்த்துமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* குறள். ௧௨௭௯. † மணி. ௨௨. ‡ பெய. ௬௰.

இ ள். ஒருமைகுறித்த பெயர்ச்சொல் பன்மைக்காகும் இடனுமுண்டு. எ-று.

"புலைய னெறிந்த பூசற் றண்ணுமை—ஏவ லிளையர் தாய் வயிறு கரிப்ப" (அகம். கூகூ) என்றவழித் தாயரெனல் வேண்டு மாயினும், தாய் என்பது பன்மைகுறித்து நின்றது. [ருகூ]

451. முன்னிலைச் சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இஃது ஒருமைப் பன்மை மயக்க*முணர்த்துதல் நுதலிற்று.

இ—ள். முன்னிலையைக் குறித்த ஒருமைச்சொல் பன்மையொடு முடியினும் நீக்கப்படாது அதனை ஆற்றுப்படுக்கும்வழி பாதுகாத்துக்கூறுக. எ-று.

ஆற்றுப்படைமருங்கிற் போற்றல்வேண்டும் எனவே, அஃதல்லாதவழிப் போற்றாமையுங் கூறப்படுமாயிற்று. ஆற்றுப்படை மருங்கிற் போற்றலாவது:— பெரும்பாணாற்றுள், "புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண" (உஉ) என அண்மைவிளியேற்று முன்னிலைக்குறித்து நின்ற ஒருமைப்பெயர், "நீயிரும், பல்வேற் றிரையற் படர்குவிராயின்" (கூஎ) எனப் பன்மை யொடு முடிந்தது.

கூத்தராற்றுப்படையுள், "கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ" (ருய) என அண்மைவிளியேற்று முன்னிலை குறித்து நின்ற ஒருமைப்பெயர் "நீயிரும் நன்னற்படர்ந்தகொள்கையொடு, உள்ளினிர்சேறிராயின்" (கூரு) எனப் பன்மையொடு முடிந்தது. இவ்வாறு வருங்காற் கூத்தரும் பாணரும் விறலியருமாகி யாண்டுச் செல்வார் பலராபுழியே வரப்பெறுவதென்றும்; தனியொருவனாயின் மயங்கப்பெறாதென்றுங்கொள்க.

இனி, ஆற்றுப்படை யல்லாதவழிப் பலரில் வழியும் மயங்கப் பெறும்.

"குறிப்பேவல் செயன்மாலைக் கொளநடை யந்தணிர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
என்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னா ரிருவரைக் காணிரோ பெரும!" (பாலை-கூ) எனவும்,
மறப்பரு காத லிவளீண் டொழிய
இறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைய(பாலை-உ) எனவும்,
"என்னீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்னீர வல்ல நெடுந்தகாய்" (பாலை-கூ) எனவும் வரும்.
பிறவுமன்ன. [கூ௰]

452. செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியி னூனெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.

இவ்வதிகாரத்துளோதப்பட்ட எல்லாச் சோற்கும்
புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். செய்புளிடத்தும் வழக்கிடத்தும் பொருளுணாச் சொல்லப்பட்ட சொற்களெல்லாம் ஈண்டு ஒதிய இலக்கணத்தான் முற்றுப்பெற்றிலவாயினும், பலவகைப்பட்ட ஆசிரியமத விகற்பத்தான் வருமிலக்கணத்திற் பிழையாமல் யாதானுமொரு சொல்லாயினும் பாகுபடுத்துணருமாறு வகுத்துக்காட்டி யுணர்த்துக, நூலுணர்ந்தோர். எ. று.

பிறநூன் முடிபினான் முடியினும் இலக்கணப் பிழைப்பின்றாம். எ. று.

"கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்ப்ப'
இன்னே வருவ தாயர்" (முல்லைப்பாட்டு கரு. கசு)

என்றவழி ஒன்றனைக்கூறும் பன்மைக்கிளவியினடங்காமையின் இதற்கிலக்கணம் வேறு வேண்டிற்று.

"வளியிடை வழங்கா வானஞ் சூடி
மண்டிணி கிடக்கை" (புறம். ௩௫)

என்றவழியும், நெடிய வலிய ஆளெனவும் பெயரெச்சம் அடுக்கி வந்தது.

"நெல்லரியுமிருந்தொழுவர்" (புறம். உ௪) என்னும் புறப் பாட்டு முற்றுப்பெற் றடுக்கிவந்தது.

"ஒன்னுதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொனற
வெண்வேலான் குன்றின்மேல்" (கலி. உ௭) என்ற வழியும் அடுக்கிவந்தது.

வினைத்தொகைப்புறத்தும் உவமத்தொகைப்புறத்தும் பொருளொற்றுமைப்படாது அன்மொழித்தொகையாகிச் சான்றோர் செய்யுளகத்துவரின் இச்சூத்திரமிடமாக அமைத்துக்கொள்க. "நின்ன கண்ணியு மார்பிடைந் தன்றே" என்பது நின்னுடையவென்னும் பொருண்மைக்கண் ஒட்டி, அவ்வாய்பாடு குறித்து நின்றது. பிறவும் எடுத்தோதிய இலக்கணத்து மாறுபட்டு வருவனவுளவேல் இச்சூத்திரத்தா னமைத்துக்கொள்க. [௬௧]

* ஆக நானூற்று முப்பது.

ஒன்பதாவது எச்சவியல் முடிந்தது.

இவ்வோத்தினுட் சூத்திரமுட்பட்ட உரையினதளவு கிரந்த வகையான் அறுநூற்றிருபது.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் ஒருவகையான் முடிந்தது.

தெய்வச் சிலையார் எழுதின விருத்தி முடிந்தது

* மேலும், இரண்டாவது ஏட்டில் இவவரி முதலாகவுள்ளன. முடிவில், ஆறுமுகம், குருவாழ்க, ஹரஓம், குருப்பியோ நம: என்பன எழுதப்பெற்றுள.

௨

# சேர்க்கை.

இரண்டாவது ஏட்டினுல் எய்திய திருத்தங்கள், இரண்டாவது ஏட்டிற்கண்ட வேறுபாடுகள், அச்சுப்பதிப்பின் மேற்கோள் விளக்கங்கள், பிழை திருத்தங்கள் முதலியவை.

உ

# சேர்க்கை.

இரண்டாவது ஏட்டினால் எய்திய திருத்தங்கள், இரண்டாவது ஏட்டிற்கண்ட வேறுபாடுகள், அச்சுப்பதிப்பின் மேற்கோள் விளக்கங்கள், பிழை திருத்தங்கள் முதலியவை.

குறிப்பு:—*இச்சேர்க்கையிற்காணும் வரி அல்லது வரிகளின் குறிப்புக்கள், அச்சுப்பதிப்பிலுள்ள அவ்வவ்வரிகளிற் காணும் சிற்சில சொற்களை முன்னும் பின்னும் அடையாளமாகக் கொண்டு, அவ்வவ்விடத்து, இவ்விரண்டாவதேடு எங்ஙனம் தோன்றல் திரிதல் கெடுதல் முதலிய வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டுவனவாகும்.*

*அவ்வவ்வரிக் குறிப்பின் முடிவிற்காணும் முற்றுப்புள்ளிகள் அவ்வக்குறிப்பின் முடிவையே காட்டுவனவாகும்; தொடர்ந்து வரும் பொருள் முடிவின் அடையாளங்கள் அல்ல.*

பக்கம். ௫௩

63 சூ. 5-வரி. *உளன் சாத்தன், செல்க சாத்தன், வந்தான் சாத்தான்.* 6. *வணிகன் சாத்தான்.*

64 22. பல்பொருட்கேற்பின் நல்லது கோடல் என்பதனால். (*மரபியல்* 110.) *இது 'ஏற்புழிக்கோடல்' எனவும் கூறப்படும் என்பது அம்மரபியற் சூத்திர உரை.*)

௫௪

65 7. *பயனிலையொடு நிற்றல்.* 11. *என்பது இச்செப்பின்கண்.* 13. *பயனிலை வெளிப்பட்டு யான்.* 19. *படைத்தலைவன் என்றவழி.* 21. [*பி. ௩௭. தி. ௩௪*], 25—26. *பொருள் வெளிப்படத் தோன்றிப் பயனிலை கோடல் செவ்விதெனவே வெளிப்படத் தோன்றாத பெயர்.*

௫௫

2. *வினைந்தான் என்பதற்குக் குயவனொடு முடிக்க, இடைகிடந்த குடத்தை,* 25. *எழுவாயாகிய பெயரின் மேலே.*

67 31. *அஃது இத்தன்மையதென.*

ருசு

9. கூறலின் இதனாற் காலம் தோன்றுமை. 22—23. மற்றொரு பொருட்பெயரொடு ஒட்டிப் பொருண்மேல் வருவன. 21, 25. [பி. கருத்துள்வழி. தி. கருத்துள்வழிப்.] 26. தெரிநிலைவினை யொட்டுப்பெயரல்லாதன.

ருஎ

68 4—5. ஐ என்று குறிபெற்ற வேற்றுமைச்சொல். 5. ஒரு பெயர்க்கண்வரினும். 11. என்பது. அஃதாவது தொழிலையுண்டாக்கும். 17. என முதனிலை எட்டென்றுராதலின். 17. [பி. எட்டென்றுதாலின். தி. எட்டென்றுராதலின்].

69 24. பழிப்பினேன்று. 24. [பி. ஒப்பிற். தி. ஒப்பிற்].

ருஅ

2. இதுவும் இரண்டாம் வேற்றுமைப்பொருள். 9. உணர்த்தும். ஏனையவும் தொழிலும்—. 13. செயப்படுபொருள் காரண காரியம் தோன்ற. 14. இருவகைப்படும் என்பதறிவித்தற்கு. 17. ஈண்டு ஓதப்பட்டனவெல்லாம். 19—20. காக்கப்படும் பொருண்மேல் வந்தது. காவலை. 22–23. அணிகலன். ஆரத்தைப்பூணும், நூலையிழைக்கும் எனவும் ஆம். கிளியை— 24—25. இழக்கும். அறத்தைக் காதலிக்கும். 25. [பி. வெகுளும். தி. வெகுளும்]. 30—31. கன்றும். கருணையை நோக்கும். கள்ளரையஞ்சும்.

ருகூ

2. உடையன், கல்வியையுடையயன், காலையுடையயன் எனவும் ஆரும். 5–6. செயப்படுபொருளேயன்றி. 7. பொருளினதுஉறுப்பின்மேலும் பொருள் நிகழும் இடத்தின் மேலும் வருவன கொள்க.

சுஎ

78 4. [பி. வினைசெய். தி. வினைசெ.] 16. ஆயின், பொரநின்றவிடத்து. 17. குறித்தாளுயின் பொர நின்ற காலத்துவந்தான். 18—19. ஆலின்கட் கிடந்தது. 20. குரங்கு என இவ்வாறு. 21—22. அன்ன. இனி, அப் பொருண்மைக் கண்ணுருபு. 22—23. [பி. காட்டுவன, தி. காட்டுவன]

[இச்சூத்திரத்தின் அடிக்குறிப்பு வேண்டற்பாற்றன்று.]

௬௰௫

79 2. இதுவும் ஏழாம் வேற்றுமை. 5. வேற்றுமைப் பாலன. எ-று. 11—12. புறத்தொடு என்பன தனித்து. 12—13. அகழ்ந்தான். மாடத்துழை இருந்தான். 15—16. என்றாற் போல, சேறற்றொழிற்கு அரசன். 19. ஊரையடுத்தல் ஆகிய. 20—21. [பி. ஆதாரமாகின்றது. தி. ஆதாரமாகி நின்றது.] 23. புக்கான். எயிற்புறம். [பி. தோன்ற. தி. தோன்றி.] 30. [பி. குறுமுயால்: தி. குறுமுயல்:] 31—32. மனை அயல்வந்தான்: மனை.

௬௰௬

2. [பி. திசைக்கூறு. தி. திசைக்கூற்று.] 12. பால், வாய், முதல். 16. ஈற்றினின்றியலும்.

80 22—23. பொருளைப்பொருந்தி ஒலிக்கும். 27. [பி. இவை யாவன:- தி. அவையாவன:-] 30—31. இவ்வேற்றுமை யின் இறுதிப்பெயர் முதற்பெயரோடு ஒட்டிநிற்றலின்.

௭௰

6. தாயோடு கூட மூவர். 11. அருவி, நீங்கா நின்ற அருவி எனவும்; 23—24. நின்றபொருளொடு முடிபுழி. 27. இரண்டாவது வேற்றுமை ஒத்து. 29. குறிப்பு:- இவ்வேட்டில், முப்பது என்பதன்பின் "ஆகக்கிரந்தம் எண்ணூற்றுத்தொண்ணூறு" என்பது உளது.

௭௧

மூன்றாவது வேற்றுமை மயங்கியல்.

81 10. செய்யப்படுபொருளை. (பிறுண்டும் இங்ஙனமே வந் துள்ளது.) 13. ஏழாம்வேற்றுமையாவதும் உடைத்து. எ—று. 18–19. தோன்றுது இடமே தோன்றுதலின் ஏழா வதற்கும் உரித்தாயிற்று. ஒரு பொருள்—.

82 24. நிற்கும் பெயர்க்கு. 28. குத்தப்படும் பொருளு மாகி. 29. இரண்டற்கும் ஒத்த இயல்பின(தா)யிற்று.

௭௨

2—3. கண்ணின்கண்ணும் குத்தப்படும் ஆகலின என்க. 4. ஆயினும் ஏற்கும் வினையே.

84 21. இதுவும் அது. இரண்டாவதும்—. 23. முதலுஞ் சினையும் பொருளும் சோப்பெறுஞ் சொற்கு.

எங

85 10–11. கோட்டது நுனியைக் குறைத்தான். கோட்டை நுனிக்கட் குறைத்தான். கோட்டை நுனியைக் குறைத்தான்.

86 17-19. வேறுபடாவற்றைச் சொல்லுந்திறம் பண்டுவழங்கிய பக்கத்து மருவிய மரபு. எ-று. [பி. போல்ச். தி. போலச்] 20. குறித்தவழியோடாதென்றவாறும். 22–24. குப்பையைச் சிதறினுன் குப்பையது தலையைச் சிதறினுன். குப்பையைத் தலைக்கட் சிதறினுன். 28. [பி. உயிர். தி. உயர்.]

எச

87 2. இ-ள் :—ஒரு பொருட்கண் ஒருவினை பற்றிவரும். 11. அரசரோடு இருந்தார்.

88 27. எடுத்தோதப்பட்டன ஆக்கம்.

எரு

2. ஆக்கமொடு புணர்ந்த ஏதுவென. 6. ஏதுப்பொருள் படுதலின்றி, அமைத்தனை—

89 16—17. ஓதப்பட்ட நோக்கப் பொருண்மையின்கண் நோக்குதல். 23—24. புன்சொல் உரைப்பானை நீலம் பொறுக்கின்று(?) பொறையாகிய—

எசு

90 2. இரண்டு பொருட்கண் தடுமாறி. 3—4. நீக்கப்படாது. பொருள். 9. சூத்திரத்தாற் கூறுப.

91 11. வேற்றுமை தெரிய உணரு மோரே. 14. [பி. முறையினுல். தி. உரையினுல்.] 14. வேறுபாடறிவதன் இயல்பு—

92 20. தோகைவருங் காலை. 25. நீக்குதல் இல. எ-று. 29—30. வாழ்மின் என்றவழிப் போற்றப்படுவான் தான் என்னும்.

எஎ

93 6. ஆருவதும் விரித்தற்கு. 8—9 தேவர்க்கோக்கின(?) பலி என விரித்தலேயன்றித் தேவரது பலி எனவும் விரியும்.

94 18—19. இனிக் கள்ளரான் அஞ்சும் ; கள்ளர்க்கஞ்சும் ; கள்ளர் மாட்டஞ்சும் எனவரினும் அவை— 20. ஏதுவாகின.

95 26. அது என்னும் உருபு. 27. [பி. மகன. தி. மகன்.]

எ௯

96 6—7. எ-று. உறையாப் பொருட்கண் வாராது என்றவாறும்.
8. உறைபொருட்கண். 9–10. யானை எனவும் வரும்.
97 15. புறநடை. 21—22. எடுத்து ஓதல் அரிதாகலான்
ஈண்டு. 29—30 ஒரு வேற்றுமைக்குரிய பொருளே ஏனை
வேற்றுமைக் கண்ணும் மயங்குமாறு கூறப்பட்டது.

எகூ

98 19. என்றமையான் வழுவமைதி கூறியவாறும். 21–22.
'யாஞ்சிறிதும்-எங்கோல்வளை' 31. இது மூன்றுவது அடுக்கி.

௮ய

6. நான்காவது அடுக்கிவந்து. 8. வீரப்புலியனின். 11.
வெற்பனிற் றீர்ந்துளதோ · வேந்து. (குறிப்பு: 12—13.
'தீர்ந்து என்பதனோடு முடிந்தது' என்பதன்பின் கீழ்வரும்
செய்யுளும், உரையும் உள்ளன.)
"தென்னனது செங்கோற் செழியனது தென்பாண்டி
மன்னனது மான்றேர் வழுதியது—கன்னித்
துறைவனது தோலாப்போர் மாறனது தொல்லை
அறைகடனீர் வேலி யகம்."— இதனுள் ஆறுவது · பல
அடுக்கிவந்து அறைகடனீர் வேலி என்பதனோடு முடிந்தது.
22—23. சான்றோர்க்குக் கொடுக்கும் எனவும். 24.
நல்லாரது, தீயாரது என்றது கொள்ளும். 25. அறை
யிலே கிடக்கும் எனவும். 26. [பி. ஒருபு. தி. ஒருருபு].

௮க

2. [பி. ஒடும். தி. ஒடுவும்.]
99 12. எற்புடைப்பொருளே. 13. குடத்தைத் திகிரியால் அரங்
கின்கண். 14. எனவும், சாத்தன் ஆடையை.
100 20. இதுவும் பல உருபு தொடர்ந்து. 23. வேறு வேறு
வினையேற்று. 25. வழங்கிய நெறிப்பக்கத்தன. 28—29.
வழங்கிய வழிப்பக்கம் என்றமையான் எற்கும்—. 30. கூறல்
வேண்டா.

௮உ

7—8. நிற்பது: அஃதன்னதன்றி. 22. தொடர்ச்சியாகிய
பொருள். 23—24. வேறுபாடிலவாயினு மோசை வேற்
றுமையான். 32—33. பெயர்த்தாகலானும், சாத்தன்.

அரு

2—3. போல்வதல்லது உருபுபெற்ற தென்றல் அமையா தென்க.

101 (ஐந்தாவது வரியின்கீழ்) மேலதற்கோர் புறநடையுணர்த்து தல் நுதலிற்று. இ-ள். இரண்டாவதும் ஏழாவதும் அல் லாத பொருட்கண் வரும் உருபு தொடர்மொழியீற்றின் கண் தொகா. எ-று. 'உய்த்துக்கொண்டுணர்த்தல்' என்னும் தந்திரவுத்தியான் (6-வது வரி) உருபேற்ற சொல்லும்—
13. குன்றத்து என்பன. என்னை ?

102 20. மயங்குதலன்றிப் பிற.

அசு

8. பொருண்மை முகத்தான். 9. இவ்வாறும் வரப்பெறும்.

103 14. வேற்றுமைச் சொற்கள் தத்தமாபிற் பொருணிலையை.

104 22. அவ்வோடுஞ் சிவணும். 23—24. சிலவற்றிற்குரிய தோர் திரிபு உணர்த்துதல். 26. அவ்வொடும் சிவணும்.

105 30. குவ்வும் ஐயும் இலவேன மொழிப:

அரு

4—5. மூன்றுருபு சிவணும் என்பதூஉம், அஃறிணைக்கண்.
குறிப்பு:—பரிபாடலகத்து (9) என்பதுமுதல் 'உயர்திணை யாம்' (12) என்பதுவரை யுள்ளவை இவ்வேட்டில் இல்லை.

106 20. தீர்த்துமொழி கிளவியும். 22. மரபிற் றேன்ற லாறே.
26. ஆகித்தோன்றும். எ-று. 27—28. யானைக்கோடு வெள்ளிது.

அசா

4. சொல். காணத்தாற்கொண்ட அரிசியென்பது காணத் திற்குக் கொண்ட அரிசி— 6—7. பொருந்திய சொல்லின் கண்ணும் என்றவாறு. 9. பெயர்ச்சொற்கிளவியும் என் பது. 16—17. பண்பின் ஆக்கம் என்பது பண்பினுன் ஆகுஞ் சொல் என்றவாறு. 20. எனவும் வரும். 23. தீர்த்து மொழி கிளவி யென்பது. 25. கிளவரி நாணல். 27. இந் நிகரனவெல்லாம் வந்தவை அமைத்துக் கொள்க.

அள

107 2. எனை உருபிற்குரிய. 12. பொழுதோடென மூன்றுவத னோடு மயங்கிற்று.

108 25—26. பொருளும் செய்தலாகிய தொழிலும்.

அஅ

15. படை மாத்தினின்றும் வாங்குதல் நீக்கம் ஆகலின் அஃது அத்தொழில். 16—17. தொழிற்கு உறுப்பன்மையால். 18. கிழமை செய்வான்மாட்டே. 19. முதற்காரகம் கருவியின் அடங்கும்.

109 29. இன்மையின் அப்பொருண்மை.

அகூ

110 7. அனைமரபினவே. 8. ஆகுபெயர் இலக்கணம். 11. ஒன்றதாகி வருவது. 14. அத்தன்மையவாகிய. 17. என்பதும் எஞ்சி. 25—26. நயமில் ஒருகை. எந்திள வனமுலை இறைநெறித் ததூஉம். (மணி. 18-69.) என்பனவும் அவை. 28—30. வேளார்காணி என்பது வேளார்காணியிற் பிறந்த ஆடையை அப்பெயரான் வழங்குபெயராதலின் ஆகுபெயராயிற்று. 30—31. யாழது கேட்டான் என்பதும் அது யாழிற் பிறந்த இசையையும் யாழ் என்றமையால்.

கூ0

3-4. என்றவழி அந்நீலத்தையுடைய மணியை நீலம் என்பதாக வழங்குதலின் ஆகுபெயராயிற்று. 6. [பி. பொருளே. தி. பொருளே.] 7—8. அணிகலத்தைப் பொன். 9. தன்மேற் காட்டி. 12. [பி. எண்பதன்கண். தி. என்பதன்கண்.] 12. இரண்டாவதனைவிரிக்க இயன்றதனை. 19. மற்றொரு பொருட்குப் பெயராகி. 23—24. அன்றே எனின் ஆகுபெயராவது ஒட்டுப்பட்ட பெயரோடு ஒற்றுமைப்பட்டுவரும். அன்மொழித் தொகையாவது. 25. அன்மொழித்தொகை என்றதனாலும். 27. "பெயர் வயினாலும் வேற்றுமை தொக்க பெயர்வயினானும்— ஈற்று நின்று—".

கூக

3. [பி. பெயராயிற்று. தி. பெயராயின.] 7. நின்றவவனால் (நின்று, அவனால் என்றிருக்கவேண்டும் போலும்) 9. அனைமரபின.

111 25—26. சுட்டலும் என அவ்வியல்பினை யுடையவாம். 27. [பி. வேண்டும். தி. வேண்டும். எ-று.]

கூஉ

5. என்பது வேண்டியவாறு சொல்லப்பட்டது. வேற்றுமை-

112 17. கொள்ளும் இடம் உள. 19. தம்பொருள் விளங்கும். 20. குறியன்றி அளக்கப்பட்ட. 21—22. வேற்றுமைப் பொருளான் ஆகுபெயராம். 23. [பி. நாழி, தி. நாழி] 25. என்னும் நிறையினதளவாகிய. 26–27. இந்நிலம் ஒருமா. இம்மனை முக்கோல் என்பனவும். 27—28. அஃதேல், இவ் வெருகு ஒன்று என.

கூஙு

113 9. வருவனவும் எடுத்தோதிய. 11–13. திரு என்பன வடிவு பற்றியும். பசு கழுதை என்பன குணம் பற்றியும், புலி சிங்கம என்பன தொழில்— 24. என்றவழித் தொடியென்பது; ஆகுபெயராயிற்று. 26. சூத்திரமுட்பட்ட உரையினது. 26. [பி. ஓத்துனுள். தி. ஓத்தினுள்.]

குறிப்பு:—கிரந்தவகையான் முந்நூறு என்பதன்பின் 'ஆகக் கிரந்தம் ஆயிரத்து நூற்றுத்தொண்ணூறு' என்பதுள்ளது.

கூச

## நாலாவது விளிமரபு.

114 2. விளியேனப்படுவ.... 4. என்பது சூத்திரம். இவ் வோத்து. 5—6. முறையானே எழுவேற்றுமையும், அவற் றது மயக்கமும். 13. பிரிந்துவாராது. 16. என்றதனுல் இவ்வேற்றுமை. 17. வரும் என்றவாறு.

115 21. மேற்சொல்லப்பட்ட.

கூரு

116 2. குறிப்பு:—இச்சூத்திரத்தின் முதலிலுள்ள 'அவற்றுள்' என்னும் சொற்சீரடி இவ்வேட்டில் இல்லை. 6. உயிரீறாக விளியேற்கும்.

117 16. [பி. ஈறறுப். தி. ஈற்றுப்] 18. ஈகாரமாகித்திரிந்தும். 21—22. நங்கை நங்காய், தந்தை தந்தாய் என விளியேற்கும்.

118 23. ஏவொடு. 25. ஒகார ஈற்றுப்பெயர். 28. குற்றிய லுகரமே ஈறுகுவது. எ-று.

கூசா

119 4. ஐயந்தீர்த்தலை நுதலிற்று.

120 8. இறுதிப்பெயர். 13. செய்தியையுடைய.

121 19. ஐகார வீறுமுறைப்பெயர். 23. அன்னை என்பது அன்னாய். 24. எனவும் வரும். உம்மை....

122 26. இருதிணைக்கண்ணும்வரும். 29. நோக்கிற்கிடந்ததெனக்கொள்க.

கூஎ

3. பெயரும் அஃறிணைப்பெயரும். 5. பெறுதலின் அது ஒழித்து ஏனைய. 7. அண்ணல் கூறு; கடவுள் வாழி; தும்பி கூறு. 9. மாக்களும் என்பது அண்மை....

123 11. விளிகோள்பெயரே. 12—14. உயர்திணைப்பெயருள் என்பதன்பின் 'புள்ளியிறுதி விளி கொள்ளும் பெயர் வகுத்து உரைத்து உணர்த்துதல் நுதலிற்று. இ-ள்:—உயர்திணை மருங்கிற்' என்பது சேர்த்துப், 'புள்ளியிறுதி விளி கொள்ளும் பெயர்' எனத் தொடர்ந்து கொள்க.

124 23—24. எ-று. அவையாவன:—யாம், நாம், எல்லாரும், எல்லீரும், தாம் என்பன.

125 28. [பி. உணாத்துதல். தி. உணர்த்துதல்.]

கூஅ

127 18—19. ஈற்றுப்பெயர் இயல்பாகி விளியேற்கும். 20. [பி. கோமான். தி. சேரமான்.]

128 24. ஆனீற்றுப்பெயர்க்கண் வருவதோர்.

கூகூ

5—6. வரும். ஈண்டு விளிவயினான. 7. முன்னிலை வினையாகிய. 7. அஃதன்று இது. 8—9. உளவென்பதூஉம்.

129 11. [பி. பண்ப. தி. பண்பு]

130 20. னகாரஈற்று அளபெடைப்பெயர்.

131 26. ஏவோடு.

ரா

3. 'ஒப்பக்கூறல்' என்பதனால். 4. ஏவொடு வரவும் பெறும் என்று கொள்க. 7—8 வரும். 'தன்னின முடித்தல்' என்பதனால் பெயர்க்கண்ணும் ஏவொடு. 9. 'கூந்தன்மா கொன்று' 10. 'புல்லியஞான் றுண்டாயில்.' 12. எனவும் கோன் என்பது கோனே எனவும் வரும்.

132 19. ஈற்றுப்பெயருள் விளி.

133 25. ரகாவீற்றுப்பெயர் விளியேற்குமாறு. 27. ஈற்றுப் பெயர்கள்.

௱௧

2. கூத்தர், உடையார் என்பன.

135 15. பண்புப்பெயர் விளி.

௱௨

137 4. முதலாகிய ரகாவீற்றுப்பெயர்.

138 11. [பி. நும்மின். தி. இ-ள்:—நும்மின்] 11. வினாவின் பெயராவது. 12. அது யாவர் என்பது.

140 27. உ-ம்:—பெம்மாள், கோமாள் என்பன.

௱௩

142 16. ஈற்று முறைப்பெயர். 17. ஈற்று முறைப்பெயர். 18. எனவரும். 'ஒப்பக்கூறல்' என்பதனால்.

143 27—28. அத்தன்மையள், யாவள் என்பன.

௱௪

144 5. ஈற்று அளபெடை. 6. அளபெடைப்பெயர்போல.

145 குறிப்பு:—இச்சூத்திரமும், உரையும் இவ்வேட்டில் இல்லை.

146 25—26. உடையவாகிய அஃறிணை. 27. வருதல் விளங்கு நிலையுடைய. 28. இத்துணை இலக்கம் இல.

௱௫

2–3. அஃறிணைப் பொருள் உயர்திணைபோல. 4–5. ஒருகாலம் பற்றி விளிக்கப்படும் என்பதூஉம். 6. குயிலே, யாமே(?) எனவரும். 8. அரிமான் அரிமா(அ)ன் எனவும். 8–9. உயர் திணையான் வருவன சிறுபான்மை.

147 14. உரியதோர் இலக்கணம் உணர்த்துதல்.

15. விளி எற்றற்குள எனப்பட்ட. 16. ஓதிய அளவினா னன்றி மாத்திரை. 21. அளபிறந்தன.

148 26. நம்முறைப் பெயரொடு. 31. சொல் முறைப்பெய ரொடும்.

௱௬

2. வந்தது கண்டு.

149 8. விளியொடு கொளலே. 9. எஞ்சியது உணர்த்துதல். 10. முதலாகிய பொருண்மை. 12. பிறவும் வினைக்குறிப்பு

நீர்மையன்றிப் பெயராகிவரின் விளியேற்றலின்மை. 16. எனவருவன விளி எலா. 19. என்றவழி யகரவீறு விளி. 28. கொண்டதென உணர்க.

குறிப்பு :— 28. ஆக கசஅ. 29. நான்காவது விளி வேற்றுமை முடிந்தது. 30–31. ஆம் வரிகள் இவ்வேட்டிற் காணப்படவில்லை.

௱எ.

ஐந்தாவது பெயரியல்.

150 3–4. பெயரியல் பென்னும் 4. பெயரியல்பு உணர்த்தினமை யால். 6. கூறி அத்தொடர்மொழி. 8. பெயர்ச்சொற் கிளந்ததாகலின் இவ்வோத்து. 10. இதனுள் முற்சூத்திரம். 14. பொருளைக்குறித்தன. 15—16. சொல் இலவென்ற வாறும் ஆம். என்னை? 17. யாங்கது அது எனின். 18. என்பதற்கும் பொருளுண்மை காண்டி. 19. என்பதற்கும் பொருண்மை காண்டி. 22–24 அடுத்தமையான் ஆண்டி ருயிற்று அல்லது இல்பொருள்மேல் வழக்கின்றெனமறுக் கொள்க(?) 28—29. அன்றியும் எடுத்தோத்துப் பெரும் பான்மை பற்றி யென்றும் கொள்க. 30. என்றவழிக் கல்லாதாரும் சிலர் உளராயினும்.

௱அ

9–10. பாடைக்கும் ஒப்பமுடிந்ததோர் இலக்கணம். 10–11. என்க. எனவே பொருள்பற்றிவரும் பெயரெல்லாம் இடுகுறி. 12—13. மற்றொரு பொருட்குப் பெயராகி.

151 22. பெயர்ச்சொல் என்றுயிற்று.

152 26. இருபகுதியினும் பொருண்மை. 30. சொற்படு பொருளன்றி. [பி. குறிபபிறைற். தி. குறிப்பிறைற்.]

௱கூ

6–7. உரிச்சொல் எனக்குறியிடுங்கால் அதன் பொருண்மை உணர்த்த வேண்டுதலின் பொருண்மை. 12—14. குணம் பற்றியும்; தீமை செய்தாரை நன்று செய்தீர் எனவும் கொடுமைசெய்தாரை வாழ்வீராக எனவும் அப்பொருள்.

153 16. சொல்லெனப்படுவ. 20. என் அவ்விருவகையஎன்ப.

கககம

154 7. தமிழ்நாட்டுப்பிறந்து தமிழறிவாரை. 10. [பி. வரா. தி. வாரா.]

155 27. திணைப்பொருளையும் உணர்த்தும்.

ககக

156 4. சொல்லியது நாம் முன் எடுத்து ஓதப்படுகின்ற. 7—8. என்பது கூறினருமாம்.

158 28. குறிப்பு:—இச்சூத்திரத்தின் உரை இவ்வேட்டில் இல்லை, விசேடவுரைமட்டில் உளது.

ககஉ

14. என்றுபிற்று. இவ்வுரை நம்பி, 14. [பி. என்பனவற்றிக்கும். தி. என்பனவற்றிற்கும்.] 19. மக்கள் எனப் பொருட்பன்மை. 25. எனைச்சுட்டொடும் ஒட்டிக்கொள்க. 26. குணத்தையடுத்து, அத்தன்மையான் என. 31–32. பொருளோடு அடுத்துவரும் பெயர். 33. குரங்கன் குரங்கி என்பனவும்.

ககங

3—4. பெருவழக்கின அன்மையான் ஈண்டு.

160 24. ஒன்றியனைத்தும். 29. குறிப்பு:—இவ்வரி முதலாக பக். 114. வரி 8 முடிய, இவ்வேடு மாறுபட்டுள்ளது. "அது சோழநாட்டான் எனவும் மதுரையான், மதுரையாள் எனவும் வரும். குடிப்பெயராவது குடியினுைய பெயர். அவை யாவன—சேரலன், பாண்டியன், சோழன் என்பன. இன்னும் 'வந்தது கண்டு வாராதது முடித்தல்' என்பதனல் குலத்தினுகிய பெயரும் கொள்க. அந்தணன், அந்தணி, அந்தணர் என்பன. அஃதேல், பாம்பு, நாய், மணி என்பனவும் அந்தணர் அரசர் என வருமாலெனின் அவ்வாறு வருவன அந்நாலகத்து ஆடல்வேண்டி ஆசிரியன் இட்டதோர் குறி என்று கொள்ளினல்லது பாம்பைப் பிடித்தான் என்னும் பொருட்கண் அந்தணனைப் பிடித்தானென்றவழி அப்பொருள் புலப்படாமையின், அதுவழக்கன்றெனமறுக்க."

கககச

10. பெயர், பலர், அவையத்தார் என்பன. பிறவும். 14. என்பன சுட்டை நாட்டையும். 32. 'குவளைப்பூண்டு.' 35. உயர்திணைப்பெயராகிப் பன்மை.

ககரு

3. தலைமகனைக் குறிக்கினும் அடைப்பெயராம். 8. நிரை கோடல், நிரைமீட்டல், எடுத்து விடுத்தல். 9. [பி. காந்தை யாள். தி கரந்தையாள்.] 19. ஓதப்பட்டது. சாத்தன் என்னும்.

161 34. உயர்திணை அடுத்து. எ-று.

கககூ

2. [பி. என்பனம். தி. என்பனவும்] 3. [பி. என்பனம். தி. என்பனவும்.] 5. அடியாள், அடியார் என. 7. இடை யாள், தோளாள் என. 11. பிறவும் உயர்திணை. 12. இதுவே ஒத்தாகக் கொள்க.

162 17. யாது யா(அ)யாவை என்னும்—ஆவயின் மூன்றே டப்பதி னைந்தும்.

ககள

163 6. வினையினும் பொருட்கு. 12. படும்பொருண்மேல். 18—19. ஒன்பது பெயரும் அஃறிணை.

ககஅ

165 3. பொருட்பன்மையும். 23—24. உணர்த்தியவாறும் இவ்விரு ஈற்றுக்கும்.

ககக௯

167 4—6. பெயரும் ஆராயுங் காலத்துத் தத்தமக்கேற்ற வினை யோடே கூடியல்லது பால்விளங்குதல் இல. எ-று.

168 19—20. வரூஉம்வினைச்சொல்லானன்றி நிகழ்காலத்தை. 24. பெயரெச்சமாகவும் பலர்வரை.

கஉக

171 15. என அந்நான்கும். எ-று.

கஉஉ

172 4. என நான்கும். எ-று.

173 16. நான்கும் சினைமுதற்பெயராவன. எ-று.

கஉரு

175 11–12. என்றமையான் இவைபும் உயர்திணை கொண்டவழி. 19—20. அஃறிணைப்பொருளேயாம், பிற. 22. தெரியாமற் பொதுப்பட்டுநிற்கும்.

176 26. திணை உணர்த்துமாறு உணர்த்துதல்.

கஉச

2—3. எனவும், குன்றியன்னகண்ண குருஉமயிர் பின்றாள் வெள்ளேலி மோவா யேற்றை ; முடங்குபுற விறவின் மோவா யேற்றை எனவும்.

177 8. திணை உணர்த்துமாறு உணர்த்துதல். 17. என உயர்திணைப் பெண்பால் ஆயின.

கஉரு

179 3. திணை உணர்த்துமாறு உணர்த்துதல்.

180 8. திணை உணர்த்துமாறு உணர்த்தல். 9. சொல் இருதிணைக்கண்ணும் ஒருமை.

181 24. முன்னிலையினும் வந்தது. 27. நீர் எல்லாம் விளையாடப் போதுமின். 27. [பி. நீஇர். தி. நீயிர்.]

கஉசா

2. எடுத்தோதினமையாற் கொள்ளப்படும். 4—5. எடுத்தோதி ஆண்டுத்தன்மை— 6. [பி. அற்றுச். தி. வற்றுச்]. 9. இப்பெயர்உயர்திணைக்கண்ணும் உளப்பாட்டுத்தன்மை. 11—12. புறநடையாற் பிறநூல்.

182 13, 15, 17. [பி. நீஇர். தி. நீயிர்.] 17—18. விளங்கநில்லா இருதிணையையும்.

183 27, 29. [பி. நீஇர். தி. நீயிர்.] 30. [பி. ஒருமை. தி. ஒருமைப்]

கஉஎ

2—3. சுமையன் என்பது தொழில்பற்றி வந்தது. சுமையன் வந்தது ; சுமையன் வந்தான் எனவரும்.

186 19, 31. [பி. நீஇர். தி. நீயிர்.] 23—24. என்றமையான் குறிப்பினானும் உணர்க என்றவாறாகக்கொள்க. 25. நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்-போதர விட்ட நுமருந் தவறிலர் என்றவழி. 27. எம்போல இன்றுணைப்பிரிந்தாரை. 30. நீ கடல் என்பன மூன்றுறைவந்த.

கஅ௭

2—3. சார்ந்தொழுகல் ஆற்றி வழிபடுதல்.

188 16. ஆயிட னுதல் செய்யு ளுள்ளே. 20. வரும் இடம் செய்யுளகத்து. 22. " தாமே யாரியர் " என்றவழி. 25. நாடு கிழவோனே.

கஅகூ

189 3. பொருட்புறத்ததாகிய. 4—7. புள்ளும் மாவும் முதலாயின. அதன்கட் செய்புளுட் கிளக்கும் இயற்பெயர்ச் சொல் உயர்திணைப்பொருண்மையைச்சுட்டா, நிலத்துவழித் தென்றலான். எ-று.

13. அஃறிணைப் பொருண்மை சுட்டுமதல்லது. 14. எய்தியது விலக்கியவாறுயிற்று. 16—17. அஃறிணைப் பொருட்குச் சாத்தன். 17. எனவரும் இயற்பெயரே வழக்கின்கண் என்பதூஉம் செய்புட்கண் பொருட்பெயராகிய நிலத்துவழித்தோன்றும் பெயரே கூறுதல் வேண்டுமென்பதூஉ மறிவித்தற்கெனக்கொள்க. அவையாவன: மான், மரை, முயல், நாரை, அன்றில், புன்னை, ஞாழல் என்பன. [சவ]

குறிப்பு :—இவ்வியல் முடிவில் கீழ்வருமாறு உள்ளது.

ஆக-கஅகூ. ஐந்தாவது பெயரியல் முடிந்தது. இவ்வோத்தி னுட் சூத்திரம் உட்பட்ட உரையினதளவு கிரந்தவகையான் நூறு.

கசு௦

ஆறுவது வினையியல்.

191 17—18. என்பது. ஈண்டு ஓதுகின்றது உண்டான் எனக் காலத்தோடு ஒட்ட நிற்பது.

கசுக

193 6. உம்மை எச்சவும்மை. எனவே. 8. [பி. உடையவன். தி. உடையன்.]

194 24—25. உரிமையவாகி அம் மூன்று வேறுபாட்டனவாம். புலப்படுமிடத்து. 26. அவற்றுள் உயர்திணைவினை—தெரிநிலைவினை. 27. அவற்றுள் தெரிநிலைவினை—தன்மைவினை.

கசுஉ

195 4. அஃதேதல் இடம் மூன்று என்பது. 10. உயர்திணை வினை உணர்த்துவான். 13—14. எட்டுமூற்றினையுமுடைய

சொல் உயர்திணைப் பொருட்கட்டன்றொடு கூடிய. 24. உண்பது தொழில் உணர்த்திற்று. 27. [பி. உன்டனெம். தி. உண்டனெம்.] [பி. உன்டேம். தி. உண்டேம்] 28. உண்கின்றனம், உண்கிறும், உண்கின்றும். 31. [பி. உன்பன. தி. என்பன.]

கரு௩

196 11. [பி. இனித்தன்மை, தி. தனித்தன்மை] 14. எழுஈறும் தன்வினை.

197 30. காண்கு வந்தேன். காண்கு யாஎன்.

கருச

2—4 அஃதேதல் முற்றுச்சொல் பெயர்கொண்டு முடிதல் யாண்டுப்பெற்றும் எனின், முன் முற்றுச்சொல்லிலக்கணம் கூறுகின்றுழி, அவைதாம், தத்தம் கிளவி யடுக்குந வரினும்-எத்திறத் தானும் பெயர்முடி பினவே. [சூத். 244.] என்னுஞ்சூத்திரத்தாற் பெறுதும். ஈண்டு முடியினும் என்றதற்குப் பொருள்தொடர்புபடினும் என்றவாறுகக் கொள்க.

199 16. அருஆர் ப என. 21. வரும் சொல்லாம். எ-று. 22. அரு என்புழிவந்த. 23. ஒற்றிறுகவரும் சொற்கள்.

200 30. [பி. ஒர். தி. ஓர்.]

கரு௫

2. இ-ள்:—மாரீற்று வினைச்சொல்லும். 6. பீடில் மன்னரை.

கருசா

202 2. எண் என்பன இரண்டு 4. எண்ணப்பட்டியன்ற மருங்கின்.

204 25. மூவீற்றினும் அகாரம். 27—28. 'நல்லைமகனென நகூஉப் பெயர்ந் தோளே' 'சென்றோ ரன்பிலர் தோழி' 30. சொல்லாமற் பெறும் என்று.

கருஎ

206 27—28. பெயருமன்றி வினையுமன்றி. 29. நிற்றலின் வினைக்குறிப்பெனக் குறிப்பெற்றது. 29—30. சாத்தன் மாடத்துக்கண்ணிருந்தான்.

௩௩௯

4–5. வருதலின் இதுவும் வினைக்குறிப்பாயிற்று. 5—6. ஒத்தல் பொருளுமன்றி வினையுமன்றி. 7–8 நிற்றலின் இதுவும் வினைக் குறிப்பாயிற்று 9. என்பதப் பொருட்குப் பண்பாதலின் அப்பண்புடையானை.

௩௩௯

207 2. [பி. அவன். தி. ஆவன்.] 5. நில்லாது. அதுவும் குறித்தது கொள்ளநிற்கும். 12. [பி. யாகாதோ. தி. யாகாவோ.] 14. குழையை உடையன்.

208 31—32. என்றவாறும். 'பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்' என்பதனால்.

௧௪௰

209 12. முன்னிலை வினை ஆகாதாகலானும் அஃறிணைக்கே. 13. ஆதலான் அதுவும் தெரிநிலை. 17. தன் வினையுரைக்கும். 20. வழக்கின்மையானும் அவை உரைக்குங்கால். 22. காப்புக்கருவி. 26. [பி. உயர்வினை. தி. உயர்திணை], 26—27. தன்மைவினை இன்றெனக.

௧௪௧

210 6. உணரவரும் சொல்லாமாறு.

211 17—18. பன்மையு மொருமையுமாகிய பால் உணரப்பட்ட ஆறு.

212 27. இப்பண்டியுள்ளது எவன், இப்பண்டியுள்ளன.

௧௪௨

213 11—13. என்பன ஒரு பொருளின்மை உணர வருவன, கோடின்று கோடில எனவரும். உடைய, உடைத்து என்பன ஒருபொருட்கு ஒருபொருள் உண்டென்னும் பொருண்மேல் வரும். கோடுடைத்து, கோடுடைய என வரும். அன்று, அல்ல, என்பன தாம்குறித்த பொருண்மை விளக்கவரும். 15—16. கிளவி ஒரு பொருளின் உண்மை.

214 28. [பி. பறநடை. தி. புறநடை]

௧௪௩

2. இதற்கும் ஈறுயதென்றவாறும். 3. உ-ம்:— உடைத்து, இன்று.

215 16. [பி. திரிபு. தி. பிரிபு.] 20. (மேற்சொல்லப்பட்ட வற்றுள் என்பது இவ்வேட்டில் இல்லை.) 21—22. பிரிந்து வேறுபடூஉம் செய்கையவாகி இருதிணை. 24. உதாரணம் முன்னர்க்காட்டுதும்.

216 29–30. வினைச்சொல்லுள் ஒருமைபுணர்த்தும் ஈறு உணர்த் துதல்.

கசச

4—5. அஃறிணை ஒருமைப்பாற்கும். 15. வா, அறி. 19–20 ஆய் என்னும் சொல் குறைந்து.

217 23. இருஈர் மின். 26. பன்மை உணர்த்தும் ஈறுஉணர்த்து தல். 31. உண்மின், உண்ணலிர், உண்ணீர், உண்ணன்மின்.

கசரு

2—3. இவ்வினைக்குப் பெயராகிய நீ, நீயிர் என்பன வற்றிற்கு. 4–11. என விதித்தார் ஆண்டை விதியே ஈண்டுங் கொண்டு சொல்லுவான் குறிப்பினானும் தொடர்வுபட்ட பெயரினானும் உணர்ந்துகொள்க. உண்டாயோ மகனே, உண்டாயோ மகளே என்றவழி உயர்திணை உணரப்பட்டது. உண்டாயோ குயிலே என்றவழி அஃறிணை யுணரப்பட்டது. உண்டீரோ மக்காள் என்றவழி உயர்திணை உணரப்பட்டது. உண்டீரோ கிளிகாள் என்றவழி அஃறிணை உணரப்பட்டது. உண்டீரோ மக்காள் என்றவழி ஆண்பன்மை பெண்பன்மை விளங்கல் வேண்டின் அதனோடு தொடர்ந்த சொல்லான் உணர்க.

218 14—15. சொற்கள் பால் உணர்த்துதல் நுதலிற்று. 27. நீ வேறு, நீயிர் வேறு அவன். 31. நீயாம், அவர்கூட்டு, அவர் ஆம் என மூன்றிடத்துக்கண்ணும்.

கசசா

219 9. இடத்து நிலைபெறுது. ஈ-று. 11–12. எனின், செய் என் னும் பொருட்கண்ணும் தவிர் என்னும். 22 [பி. கடையார்க் துக். தி. கடையாத்துக்] 23. இனிது விளங்குதலின் அவ் வாறு. 30. செய்புளகத்தும் வந்ததால். 31. பாக கடாவுக.

கசஎ

3. வியங்கோட்கிளவி. 7—8. ஈறு திரியும் வருதலும். 9. அல்வீறு வருதலும். 15. பொருண்மைக்கண் வந்தது.

20. [பி. எதினூட்டுறைவார். தி. எதினூட்டுறைபவர்.]
29. முன்னும் 'அவ்வாறுபொருட்டும்'.

கசஅ

220 6. நிகழ்காலம் என்றதென்னை.

221 13. வினை எச்சமாமாறு உணர்த்துதல். 15. சொல்லாம். எ-று. 17—18. நிற்கும் வினைச்சொல். அது பால்உணர்த் தாது. 19. என்பது இறந்தகால அணிமையும் நிகழ்கால மும். 24—25. திரிந்து முடிதலானும் வேறேதப்பட்டது.

கசகூ

222 6–7. அத்தன்மையவாகிய மரபினுல். 10, அன்னமரபினுற் கொள்ளப்படுவன. 11. உம், மற், மை, கிற், இன்றி, அன்று, இனிக்கொண்டான், நனிவந்தான் என வருவன பிறவும். [இனிக்கொண்டான், நனிவந்தான் என்பவற்றில் கொண்டான், வந்தான் என்பன மிகைபோலும்.]

223 17. முந்துற்ற மூன்று சொல்லும் வினைக்குக் கருத்தா வாகிய. 21–22. பெரிதுவந்தனளே. இஃது இறந்தகாலம். குறிப்பு:—வரி 26 முதல், வரி 29-ல் வினையெச்சம் என்ப துள்பட உள்ளவை இவ்வேட்டில் இல்லை.]

கருய

224 8. சினை வினையோடுமுடியாவாய் முதல். 16. உய்த்துக் கொண்டுணர்த்தல் என்னும். 17. சினைமுதலொடு முடிதலே.

225 27. மழை பெய்தது என. 29—30. பெற்றது. இது இறந்தகாலம்.

கருக

3. எழுந்தது. இது எதிர்காலம். 4. வினை முதல் வினை முதல் வினையான் முடிந்தன. 12—13. தானுண்டக்கடை வரும். இது, இது என்னும் காலம் குறித்து நின்றது.
குறிப்பு:—14. தான் உண்டவிடத்துவரும் என்பதன்பின் பிறன் உண்டவிடத்துவரும் (17-வரி) என்பது உள்பட இவ்வேட்டில் இல்லை. 18—19. அந்நிலையன்றி அத் தொழில். 20. ஒழினுர். அன்ன மரபினுற் கொள்ளப்படு வன. 24. குறிப்பறிவான், செவ்வன் தெரிகிற்பான், விருந் தின்றி. 25—26. கொண்டான். அணி வந்தான். நனி வந்தான். பிறவும் இவ்வாறு வருவன கொள்க.

௧௫௨

226 2. வினையெச்சச்சொற்கள் சொற்றோறும். 5—6. ஓடிப் பாடி வந்தான், உண்டு பருகூஉத் தின்றுபு வந்தான் என வரும்.

227 8. பொருளும் காலையும் கருவியும். 10. அவ்வாறு பொருட்கும். 19. இவற்றொடு முடியும் எ-று. எனவே 22. சிவணி என்பதனான் அடங்காவோ. 23—24. ஐந்து பாலாகி வரும். இவை அவ்வாறன்றிச் செயப்படுபொருளோடும். 25—26. வினைமுதலோடு ஒத்த இயல்பிற்றாகி.

228 32. வரும்வழி.

௧௫௩

6. உண்டகாலம். 9. நீ. நீயிர். 11—13. கொள்க. கருவி என்பதனால் மூன்றாவதற்கு ஓதிய காரணமும் ஏதுவுங் கொள்க. வந்தது கண்டு வாராதது முடித்தல் என்பதனால், நிலம்பூத்த மாமிசை நிமிர்பாலும் என்றவழி. [பி. மலர்- தி. மாம்.] 14. யானோ 15. ஒலிக்கக்கூவி. 18. யானோ- 20. ஒலிக்கக்கூவி. 23. பொருத்தமின்றென்க. இவையிற்றை. 25. தனிமொழி ஆதல் அன்றி வினையோடும். 26—27. அவற்றைத்தொடர்மொழி கூறுகின்றுழிக்கூறல் வேண்டும் எனின். 33. பெறாமையானும் இவையும்.

௧௫௪

229 7—8. பொருணிலையிற்றிரியா. எ-று. 10—11. என்னும் இரண்டிற்கும் மறை. பிறவுமன்ன. 12—14. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும் எதிர்மறுத்து வரும் என்றோதி முற்றுச்சொல் எதிர்மறையோதாதது என்னையெனின். 15—17. ஓதுகின்றுழி உடம்பட்ட சொல்லான் ஓதுதலின் எதிர்மறை ஓதல் வேண்டிற்று. முற்றுச்சொற்கு ஈற்றெழுத்து ஒதினமையான் அவை தாமே.

230 28. இவை பெயரெச்சம், இடைகிடப்பு. 29—30. சிவணுதலின் அமைதியுமாயிற்று.

௧௫௫

2. [பி. சாத்தன் தன்கை. தி. சாத்தன் தந்தை]. 3. என்பதற்குச் சாத்தன் தந்தையை முடிபாக.

231 13—14. மெய்யோடும் கெடும் இடம் அறிந்து கொள்க எ-று. 18. [பி. சாரனுடைவென் றெழிழியும். தி. சாரனுடைவென் றேழிழியும்.]

232 22. வினையெச்சத்துக்கண் வரும். 26—27. நிகழ்ந்துழிக் கூறுதல் அன்றி, நிகழாத.

கருசு

233 7. யாதானும் ஒரு முறைமையினையுடைய. 8—9. நிகழுங் காலத்தப் பொதுநிலைப் பொதுச்சொல்லால். 13—14. என்று வாறுயிற்று. ஒருவன் உண்பானைக அகம்புக்கான். 16—17. உண்டான் எனவுமாகாது உண்கின்றான் எனவுமாகாது. ஆயிடை உண்ணும் என்க.

234 23. இ-ள் :—எதிர்காலத்தும் நிகழ்காலத்தும். 24. இறந்த காலத்துக்கட்குறிப்பொடு. 25. விரைந்தபொருள என்று சொல்லுவர் புலவர். 26. ஒருவனை உண்டாயோ போதாயோ.

கருஎ

235 12. அப்பொருட்கண் மிகுதலாகிய தொழிலை. 19—21. பொருட்கண் மிக்கது என்னும் வினைச்சொல்லைக் குறித்து மிக்கபண்புணர. 22. இனிது விளக்கும் எ-று. 27–28. பூமியிற் சுவர்க்கம் மிகும் எனவும் ஆம்.

கருஅ

236 6—7. என்னும் சொல் இரண்டிடத்தும்.

237 15. எதிர்மறுத் துணர்த்தற் குரிமையும் உடைத்தே. 17. வன்புறுத்தற் பொருண்மைக்கண் வரூஉம் வினவுடை. 20. உ-ம். யான் வைதேனே. யான் வைதேனோ. 21. [பி. வைகிலேன். தி. வைதிலேன்.]

கருகூ

238 2—4 போகலுற்றானை, அவ்விடத்துப் போகுவையாயின், படுவை எனற்பாலான்வாய் பட்டாய் எனவும். 9. வாழ் நாள் சேறலும் கூற்று.

13. இவ்வேட்டிலும் தொழிற்படக்கிளத்தலும் என்பதே யுளது. 14. வினைச்சொற்கள் பொருண்மை மயங்குமாறு. 18 வழக்கியன்ற மாபு எ-று. 21—22. கருவியைக் கருத்தாவாகக் கூறலுங்கொள்க. வாள் வெட்டிற்று.

கசூ௰

241 (8-வது வரியின் பின். 9-வது வரியாக) வினையியல் முடிந்தது என்பதுளது. 12—13. என்று ஓதிலாததற்கு இலக்கணம் யாண்டுப்பெறுதும். 17. அறிந்தேனுகுங்கால் முற்றிலக்கண மும்.

242 22. அம்மூ விடத்தான்.

கசூக

5. எட்டும், ஒருமையும். 15. உண்குவிர், கரியிர். 25–27. உண்டன. உண்ணு கின்றன. உண்குவ, கரிய எனவும் இவை பொருண் முகத்தாற் பன்மையாதலின், மூன்று காலமும் வினைக்குறிப்புமாகி நான்காய் அடங்கின.

243 [பி. அவ்வியன் நிலையும். தி. அவ்வயின் நிலையும்.]

கசூஉ

244 15—16. பெயரோடல்லது தொடர்புபெறுது 24—25. அரசன் நல்லன் அறிவுடையன் செவ்வியன். 26. ஆகா வெனின். 32. பிரிநிலை வினையே யென்னும்.

கசூ௩

5. அஃதற்றாக. 7. அடுக்கி வருமாறு கூறிப்பெயரெச்சம் அடுக்கி வருமாறு கூறாதது. 8. வினையெச்ச அடுக்குப் போல் முன்னது முடிய முடியாமையின்.

முடிபு—ஆறாவது வினையியல் முடிந்தது. இவ்வோத்தினுட் சூத்திரமுட்பட்ட உரையினதளவு கிரந்தவகையான் ஆயி ரத்து நானூற்றறுபது. ஆக்கிரந்தம்——

கசூச

ஏழாவது இடைச்சொல்லியல்.

245 5. [பி. ஒத்து. தி. ஓத்து.]

கசூரு

246 9. ஒரு சொல்லோடு ஒரு சொல் புணர்ந்தியலும்வழி. 12. [பி. அற்றே. தி. வறறே. 19. இறந்தகாலங்குறித்த ிகாரமும்.

கசுசு

10. 'குறிப்பொடுகொள்ளும்,' 16-17. வரிகட்கு இடையே 'வினைசெயல் மருங்கிற் காலமொடு வருவன்' வினையியலுட் கூறப்பட்டன.

247 29. மொழிமுன்.

கசுள

3. வருகதி லம்ம.

248 [16—17க்கு இடையே] 'பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணுமன்னே.' 17—18. 'புதுமலை ரணிய வின்றுவரி னதுமனெம் பரிசிலாவியர் கோவே.' 20—21. 'திட்பமின்று' என்றுனும் வெட்டவல்லா ருவாராயின் என்று னும்.

249 26. விழைவு பொருளையும்.

கசுஅ

2. மாய்ந்தென வருப்பற வள்ளிதழ். 4—5. எமக்கு இக் காலத்துப் பொய்கையொடு.

250 16. [பி. நரலடி. தி. நாலடி.]

கசுகூ

251 3—4. தன்னை யொழிந்த. 7. கையாதாங் கைக்குமாம். 11 [பி. அரந்தங் கண்ணி. தி. நாரந்தங்கண்ணி]. 12. (இவ ளிடை என்பதன்பின்) காந்த வுள்ளமொடு என்றவழி—. 14—15. எதிர்மறுத்த தொழிற்கண்—. 21. வளியும் வளித் தலைஇய தீயும், தீயின் முரணிய நீரும் எனவரும். 72—28. [பி. அதன்கண்ணும். தி. அதன்கண்உம்.]

களய

252 [28. பி. பட்டன. தி. பட்டது.]

களக

2. திருமகளோ அல்லள், நாமகளோ வல்லள் 4. சிறப்பென் பது பொருளின் உயர்வு குறித்து. 7. [பி. என்பதூஉ மொன்று. தி. என்பதூஉமொன்று.] 10. வாராத ஐய முங்கொள்ளப்படும்.

253 [13-14. வது வரிகட்கிடையே இதுவுமது என்பது சேர்க்க.] 17. வது வரியிலுள்ள வரும் என்பதன் பின்னும் 20. வது வரியிலுள்ள வரும் என்பதுவரை இவ்வெட்டில் விடுபட்டுள

ளது. 20—21. ஆயிரண்டெச்சம். ஈற்றசை. 22. கடல்பேரொன்றல. 23—25. அஃதேல் எழுத்ததிகாரத்துள் மாறுகோள் எச்சமும் வினவும் எண்ணும் என எகர இறுதி கூறினர், அவற்றுள் மாறுகோள் எச்சம். 27. உடைத்தே என்றாராகலின். 30—31. மறைப்பொருளும் பட்டது. இவை மூன்று சொல்லும்.

கஎ௨

254 5. எண்ணே பெயரோ டவ்வாறு கிளவியும்.
8—9. ஆறு சொல்லினையும் குறித்த. 11—12. என்பது விரைவு என்னும் குறிப்பு. 14. கன்முகை யருவி தண்ணெனப்பருகி. 15. பாழென. (பரி. ௩: எஎ). 16. இரண்டெனவென்பது எண்ணுக்குறித்து நின்றது. 17. பெயர் குறித்து நின்றது. 21. உறையூர் எனவும் சிறப்புப்பற்றி.

255 27—28. துண்ணென்று துடித்தது. ஒல்லென்று.

கஎ௩

257 14. அளபினெடுத்தல். 16. தேற்ற எகாரமும். 18. [பி. மேற்காட்டப்பட்டது. தி. மேற்காட்டப்பட்டன.] 21. ஒரு பொருள் குறித்த.

கஎ௪

260 14. இது பொருள் மாற்று என்பதனை. 16. 'கண்ணும் வருவகை தானே'. 22. மற்றையதோ என்றவழிக் கொணர்ந்த தொழிய.

கஎ௫

263 11. அந்தில் ஆங்கசை நிலைக்கிளவி. [ஆ அங்கசை நிலை(?)]
28. [பி. நற்றினை. தி. நற்றிணை.]

கஎ௬

266 10—11. ஒருமைப்பொருண்மை மேல்வரினும் பலர்க்குரி எழுத்தாகிய எழுத்தினையுடைய. 15—16. வினையொடும் என்ற உம்மை எச்ச உம்மையாதலான். 18. அமைத்தவாறும். 21. என்பன ஒருமைபுணர்த்தி நின்றனவாயினும். 22—23. எனவரும். நம்பியார் வந்தான், நங்கையார் வந்தாள் என இவ்வாறு— 24. 'பன்மைக்கிளவியும்' என்பதனுள் அடங்காதோ எனின். 28. வேறு எடுத்தோதல் வேண்டிற்று.

களஎ

267 13. எ எ என்பது.

268 24. 'ஓர்மா தோழியவர் தேர்மணிக் குரலே' எனவரும்.

களஅ

2. 'தண்டுறை யூரயாங் கண்டிக.'

269 4. [பி. பூணடிசிற்கடையும். தி. பூண்டிசிற்கடையும்] 5—6. செல், பூண்டாய் என்னும் பொருட்கண் ஆய்—.(?) 13—14. [பி. தகுநிலைபுடைத்தென்று. தி. தகுநிலை யுடையவென்று.]

270 16. [பி. படுமோயென்றிசின். தி. படுமோவென்றிசின்.] 17–18. "புகழ்ந்திகுமலரோபெரிதே"; "பாடல்சான்ற விறல் வேந்தனும்மே". 19—20. "வெப்புடைய வாண்கடந்து துப்புறுவர் புறம் பெற்றிசினே." இவை புகழ்ந்தார், பெற் ருன் என்னும் பொருட்கண்வந்தன. 'யாரஃதறிந்திசினோரே.'

களகூ

273 13. வருதலின் அசை நிலையாயிற்று.

274 16. ஆவேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி.

20. "தோழியா சுவாகதம் போக்கிங்கென்" 21—22. பிற-தான்பிற, வரிசையறிதலின். 25. [பி. மாதவத். தி. மாதவர்க்.]

275 28. ஆவின மூன்றும் பிரிவில் அசைநிலை.

கஅ௰

3—4. இரட்டித்த விடத்து அசை நிலையாம். எ-று.

276 10. அளபெடை யின்றித் தான்வருங் காலையும்.

24. [பி. ஆ, ஆ என்ப. தி. ஆ அ என்பன] 24. தமக் கிசைவில்லாததொன்றை—. 26—27. ஊ உ என்றவழி, இசைவை உணர்த்தும்—எ எ இஃதொத்தன் என்றவழி— 28. எ என இறைஞ்சி யோளே—. 29-30. ஓ ஓ உவமன் உறழ்வின்றி யொத்ததே. (களவழி. ௩௯.)

கஅக

2. ஓ ஓ என்பது விலக்குதலை—. 5—6. எவுங் குரைவு மென மேல் ஒத—. 7—8. ஈண்டுப் பொருளுணர்த்தும் நிலைமை.

277 12. ஒகாரங்கட்கு வருவதோர் வேறுபாடு. 23—24. "நின்னையன்றே நிருமூக் குடையாய்" என்றவழி, அன்றே யென்பது அல்லாமையை. 26. பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக், கொன்னே தலைக்கூடப் பெற்றிருந் தும்—அன்னோ, பயமில் பொழுதாக் கழிப்பரே நல்ல, நயமி லறிவி னவர்" என்பதனுள்-. [பி. பொன்னே. தி. பொன்னே.]

30. பிறவும் ஆகி வருவன வந்தவழி.

கனஉ

278 7. ஒரு தொழில் கூறல் வேண்டும்.

279 11—12. சொல்லாயின் அவ்வும்மை. 15. வரும் என்க, சாத்தனும் வந்தான், கொற்றன் வரும் என்னற்க. 18. இது வும் உம்மைக்கண்—.

280 20—21 தொகைச் சொல்லின்கண், எச்சப்பொருண் மையும் உரித்து.

கனங

281 2. [பி. தோன்றல். தி. தோன்றல.]

282 10. பவழமும் பொன்னுங் கொணர்ந்தான்.

கனச

284 7—8 எழிலுமென்று, சாயலும் நாணும், மடனு மென்று என்பதனுள்.

285 15. எனு என்று என்பவற்றன்.

[குறிப்பு:—இச்சூத்திரவுரை, இப்பிரதியிலும் பெரும்பகுதி கைப்பிழையாக விடுபட்டுளது.] 21. சீரே யடியாப் பெனுஅ மரபே தூக்கே தொடைவகை யெனுஅ, நோக்கே பாவே அளவிய லெனுஅ, திணையே கைகோள் கூற்றுவகை யெனுஅ, கேட்போர் களனே காலவகை யெனுஅப், பயனே மெய்ப்பா டெச்சவகை யெனுஅ, முன்னம் பொருளே துறை வகை யெனுஅ, மாட்டே வண்ணமடி யாப்பியல் வகையின், ஆறுதலையிட்ட—.

கனரு

286 12. உம்மை ஒரேவிடத்துத் தொகுதலும். 16. இயங்கு படையரவம் எரிபரந்தெடுத்தல்.

287 28. 'மகளிர் வளைக்கை தரூஉந்து.' 32. 'முன்னீர்ப்பாயுள் தாங்கா விளையு ணல்லூர் கெழீஇய.'

கஅசு

288 18. [பி. செருஉ மேம்படூஉம். தி. செருமேம்படூஉம்.]
19. மணங்கெழுதானை ஒண்பூவேந்தர்.

கஅஎ

289 6. ஆவேழ் சொல்லும். 16. (பெயரியல் ச) என்ற வழி ஏகாரம். [பி. ஏகார. தி. ஏகாரம்.] 17. பிற எண்ணொடும் வருமாறு.

290 26—27. எடுத்து உரைக்கப்பட்டனவாயினும்—
27—28. குறிக்கப்புலப்படும் மற்றொரு.

கஅஅ

3. உம்மை இசைநிறை.
4. [பி. படர்ந்தோர்க்குக் கண்ணும். தி. படர்ந்தோற்குக் கண்ணும்.] 5. உம்மை அசை நிலையாயிற்று 6. என்றவழி, ஏகாரம் சிறப்புக் குறித்து.

291 18. அத்தன்மைய பிறவுமாகி வருவனவும், இசைநிறை அசைநிலையாகி வருவனவும் பொருள் வேறுபடுமாறு அறிந்துகொள்க.
27–28. ஒள்ளழற் பரந்ததாமரை. [பி. அசைநிலை. தி. அசை நிலை.] 31—32. சொலிய ரத்தைநின் வெகுளி என்றவழி அத்தை என்பது அசைநிலை.

கஅகூ

4–5. ஆன் அசைநிலையாயிற்று. 7. [சஎ] என்பதன்பின், 'ஏழாவது இடைச்சொல்லோத்து முடிந்தது' எனஉளது. 10. இவ்வரியின் பின்னர் ஆகக்கிரந்தம், என்பதுள்ளது.

ககூ0

எட்டாவது உரிச்சொல்.

292 8. பயிலாவற்றைப். 17—18. என ஓதுவாராயிற்று.
26—27. தொழிலாவது வினையும், வினைக்குறிப்புமாதலின்

அவ்விருவகைச் சொல்லிற்கும் அங்கமாகி வெளிப்படாதன ஈண்டுக் கூறப்படுகின்றன. 29. அவற்றிற்குப் பொருளுணார்த்துந்திறனும்.

கககக

4—5. என்பது. (இசையென்பது சொல்) சொல்லானும்—. 5. பண்பானும் புலப்பட்டு. எ-று. 6. இதனின் இஃதுறும். 10. [பி. வெருளிக்க. தி. வெருட்கிக்கு]. 10—11. (பண்பாற் புலப்பட்டது என்கின்ற) சிவந்தான் என்பது வெகுண்டாற்குக் கண்சிவக்கும் என்பதனுல் கண்ணின் சிவப்பு. 12–14. இவைபிற்றை வடநூலாசிரியர், முக்கியம், இலக்கணை, கௌணம் என்ப. சொற்பொருள்படும் வழிச் சொல்லானும். 16. பொருள்படும். 22—23. உறுவர் என்றவழி. 23. உற்றூர் என்றவழி. 27. ஒரு பொருட்கு உரியவாகித் தோன்றினும். 34. சார்த்துதலாவது இச்சொற்கள்.

கககஉ

4—6. செய்தெனெச்ச உரிமை தோன்றினும் செயின் என் எச்சத்தோடன்றிக் கிளக்கவென்னும் வியங்கொடுமுடிந்தது. 12. பயின்ற சொற்களோடு சேர்த்தி.

293 20. உரிச்சொன் மேலன. 26. இனி வெளிப்பட வழங்காதன. 28. அவைதாம்,

கககங

294 11. கண்டுகொள்க என்பதன்பின், 'வருகின்ற சூத்திரங்கட்கும் இறுதிச்சொல்லான் அறியப்படும் பொருண்மேல் வருமென்பதனைக் கூட்டியுரைத்துக்கொள்க' என்பதுளது. குறிப்பு :—295, 296-ஆம் சூத்திரங்கள் ஏனையுரைகள்போல ஒன்றாகவேயுள்ளன.

295 15. உருகெழுகடவுள். (பதிற். 21.)

கககச

298 3. சொல்லும் இன்னுமையின்கண் வரும்.

302 22. உவந்துவந்தாரவர் நெஞ்சமொடு.

கக௫

306 [12. பி. யாழிசையூப்புக்கு. தி. யாழிசையாப்புக்கு]
307 17. அலமாலாயம்.
308 [20. பி. குழ ஏன்னும். தி. குழ என்னும்.]

ககசு

312 14—15. கதழ், துனை வென்னுஞ் சொற்களை இனிது விளக்குதற் பெயராக்கி. 19. துனைபரி துரக்குஞ் துஞ்சாச் செலவின். (அகம். 9.)
313 20. அதிர்வும் விதுப்பும் நடுக்கம் 21. விதுப்பு என்பதும். 24. விதுப்புற வறியா—.

ககஎ

314 5. வார் கயிற்றொழுகை. 6. வெள்வேல், விடத்தேரொடு காருடைபோகி.
315 12. பிறன்வினை.

ககஅ

318 2. நளி என்னுஞ்சொல் செறிதல்.
319 9. பழுதுகழி வாழ்நாள்.
320 13. சாயன் மார்பு.
321 17. 'உலகமுழுதாண்ட' (சிலப். அந்தி. க.)
323 23. காதல் என்னும் பொருள்படும்.

ககக

325 8—9. பொருட்குள்ள அளவின்றனுக்கத்தை.
326 15. தனிமை என்பதன் பொருள்படும்.
327 22. ஆரியர் துவன்றிய பேரிசை மூதூர்.
328 23. முரஞ்ச முதிர்வே. 24—25. முரஞ்சென்னுஞ் சொல் முதிர்வு என்பதன் பொருள்படும்.
26. 'கோடு—யாலம்' (மலைபடு. 268.)
329 30. நீவெய்யோளொடு. (அகம். 6.)

உ௱

330 5. அடுக்கம் பொற்பச்சூர்மகள்.
332 10. ஏற்ற நினைவும். 11. ஏற்றென்னுஞ்சொல். குறிப்பு— பரிமேலழகர் "ஏற்று" என்று கொண்டு ஏத்தன்மைத்து என உரைகூறியுள்ளார்.

333 19. அரும்பிணைப் பகற்றி வேட்ட.

334 23. பொருளும், பெருமை என்பதன் பொருளும். 25, (அகம். க.) இது பெருமை.

உ௱க

335 3. [பி. கன்றுவயிற்படர். தி. கன்றுவயிற்படா.]

336 8—9. சிறுமை யுறுப செய்பறி யலரே.

337 குறிப்பு :— "எய்யாமையே யறியாமையே' 'நன்று பெரிதாகும்' என்னுஞ் சூத்திரங்கள் "எய்யாமை யறியாமை நன்று பெரிதாகும் என ஒரு சூத்திரமாகக் காணப்படுகின்றன.

11. அறியாமை என்பதன்பொருள்.

340 27. நீர்செவு நிரைத்தொழுவர்.

உ௱உ

341 3. பகை என்பதன் பொருள்படும்.

342 10. விறந்த காப்பொடுண்ணன்று வலியுறுத்து.

343 14. வேரூஉப் பொருட்கும் ஆகும்.

15. இ-ள். மேற் சொல்லப்பட்டவற்றுள் விறப்பு. 16. என்பதன் பொருள்படும்.

344 23. இவை நான்கும் அரவம் என்பதன் பொருளே. 25. [பி. ஒருபெருஞ். தி. ஒலிபெருஞ்.] 26. உயவுணர்ந் தின்றிவ் வழுங்க லூரே.

உ௱௩

345 5. அழுங்கிய. இஃது இரக்கம்.

346 8. கழுமென்னுஞ் சொல் மயக்கம்.

347 11. [பி. செழு. தி. செழுமை.] 13–14. "செழுந்தடி தின்ற செஞ்ஞாயேற்றை" இது கொழுப்பு.

349 25—26. தொகுதி என்பதன் பொருள்—.

உ௱௪

350 3. நிறைந்தென்பதன் பொருள்படும். எ-று.

353 20. அரிவளை துவைப்ப.

உ௱௫

356 7. ஞெமர்தலும். 8. ஞெமர்தல் என்னும். 10. தருமணல்ஞெமரிய.

357 12. கவர்வு. 13. கவர்வு.
358 19. சேர்ந்தசெறி.
360 24. பேஎம் நாம். 26–27. இ-ள். பேஅம் என்னும் சொல்லும். 27. அம்முறையையுடைய.

உாகூ

361 8. வயக்களிறு. (மது. 15)
363 14—15. திரிபாகிய பொருளையுணர்த்தும். எ-று. 16. துயவுற்றேம் யாமாக.
364 19. எ-று. உயங்கல் என்பது ஓய்தல்.
365 24. யானென்று.........சிறிது. (கலி. 7.)

உாஎ

366 2. உ-ம். தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டும்—கடுவயா நாகுபோல் நோக்கி. (முல்லைக்கலி. 16.) (நச்சினார்க்கினியர் உரை வேறுபாடுகாண்க).
367 6. என்பதன் பொருள்படும். எ-று. 7. [பி. கடிமுனையாமை போல். தி. அரணம்போல்.] 8. நீரிழிபாக்கம்.
368 9. நிறத்துருபுரைத்தற்கும். 11. நிறத்துருபு உரைத்தற்கும்.
369 17. நொசிமருங்குல் (குறி-கலி. 24.)
370 19. கிளவியின் றணிமைப் பொருட்டே. 20. ஈன்றணித்தென்னும் பொருள்பட்டுநிற்கும்.
371 24. களன் என்பதன் பொருண்மையும்.

உாஅ

372 5. பதவுமேய லருந்திய மதவுநடை நல்லான்.
373 11 [பி. பாண்டிறேஞறச் தி. பாண்டிறேஞாச்.] 12. [பி. மதையினள். தி. மதைஇனள்.] (இவ்வேட்டில் பொருநாகிளம் என்னும் தொடக்கத்தில் பொரு என்பது விடுபட்டுள்ளது). பொரு–மதைஇனள். (முல்லைக்கலி. 9.)
374 15—16. சொல்புநிறுபடுதற் பொருண்மை.
376 23. ஆணுக்கவினுகும். 24. இ-ள் :—ஆணு என்னும் சொல். 26–27. ஆணு விசும்பின் அமரருளப்பட-பேணிப் பேணிப் பெரிதெனப் பெட்டபின்.

உாகூ

377 5. [பி. கடவுட்பாவிக். தி. கடவுட்பாவி.] கைதொழூஉப் பழிச்சி. (மலை. 538.)

378 12. ஓதப்பட்ட பத்துச்சொல்லானும் தெளிய. 16. கடு என ஈறுதிரிந்து 17. கடியில் புகூஉம் கள்வன் போல. இது காவல். 18. சில்குரல். 19. இது புதிதுண் கடவுள். 19–20. கடுந்தேர்-ஆங்கண் (புறம். 15.) 21. [பி. கடிகாவற். தி. கடிகாவிற்.]

உருய

380 4—5. ஐயென விம்மி யவற்கது கூறிய, பொய்யில் புகழோன் புகழடி கைகூப்பி. வியப்பென்றது விம்மியென்றவாறு.

381 6. முணவு முனிவாகும். 7. முணவு என்பது. 9. சேற்று நிலை முனை இய.

383 18. பரேரெறுழ்த்திணிதோள்.

384 20. வருபவை நாடி. 25—28. இ-ள். பொருள்பெறச் சொல்லப்பட்ட உரிச்சொல்லெல்லாவற்றினையும் முன்னும் பின்னும் வருமொழிகளின் பொருண்மையை யாராய்ந்து, அவற்றிற்கியைந்த மொழியாற் புணர்ந்துரைக்கவே தத்தம் மரபினாற் பொருள்தோன்றும். எ-று. எனவே பல பொருளொருசொல் வந்துழி, முன்னும் பின்னும் வந்தமொழி யறிந்து, அதற்கொப்பப் பொருளுணாக்க என்றவாறும். உதாரணம்—.

உகக

385 3. அவற்றேடு கோளலே.
9. பேஎ நாஅந் தாழ்நீர்ப்பனிச்சுனை. [இறைய-உரை. சூ. 7. உரை.] [ஈண்டும்–பேஎ—என்றேயுளது.] 11—12. ‘புதுமையின்கண்வந்தது’ என்பதன்பின், ‘கமலமலர் என்ற வழி மணத்தின்கண் வந்தது. மேன்முறைக் கண்ணே கடியென்றூர் கற்றறிந்தார் என்றவழிக் கடியென்பது வதுவை யின்கண் வந்தது’ என்பனவுள. தூவற்கலித்த......புன்னை (புறம். 24.) 13—14. அடர்பொனவிரேய்க்கு மவ்வரியாட. (பாலைக்கலி. 22.)

386 19. பொருட்குப் பொருளாராயின் எல்லை.

௨௧௨

387 2. உணர்த்தல்வல்லின். 5. அவன் கொள்ளுமாறு ஆசிரியன் அஃது... 13. வருகின்றசூத்திரத்தான் விளங்கும்.

388 15. மாணுக்கர்க்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல். 17. அஃதாவது உணர்த்தப்படுவது. 18. உணர்வோரது வலியையுடைத்து. 21. உணரப்படுவனவற்றை உணர்வாரை—

௨௧௩

389 2. காரணமுளவென்பதூஉம்:—5. பொருண்மையை அச் சொற்காட்டுதற்குக் காரணம். 7—8. தொன்றுபட்டு வருகின்றதாகலின், உலகினுள்மிக்காரெல்லாரும் 9—10. இவ் வெழுத்து. இப்பொருள் 11. மறைநூலகத்தும் பிறண்டும்.

390 17. இத்தமிழகத்திலக்கணமில்லை. எ-று. 19. பொருள் தெரியின் என்பது. 19—20. கூறப்பட்டது உரிச்சொற்கும் பொருளுணர்த்துமாறும்.

391 29—30. ஈண்டு எடுத்தோதப்பட்டன வல்லாத.

௨௧௪

8. விதி பாதுகாவலாக. 10. ஒத்தமொழியாற் புணர்த்தனா ருணர்த்தல் என. 20–21. விதியினானே, சொல்லானுங் குறிப் பானும். 23. கழுதாருவின. 26. செய்யப்படும் என்பது. 26—27. ['மன்னு—குறித்தோர்' புறம். 165] 27–28. மன் னென்பது நிலைபெறுதல் குறித்து நின்றது. இரும் பிடித் தொழுதியொடு பெருங்கயம்படியா. (புறம். 44.) 30. அஞ்செங் குவளைக் கண்போ லாயிதழ் என்றவழி அம் என் பது அழகு. '31–32. வானமூர்ந்த—அங்காட்டு' (அகம். 11). 33. அவிரென்பதூஉம் விளக்கங்குறித்தன.

௨௧௫

8—11. நொறியில் புரவி யதிரகாகோமான் (?) என்றவழி. நொறி என்பது நடக்கத்தின்கண் வந்தது. நொறியிற்புரவி கழற்காலிளையோன் என்றவழி நொறி யென்பது விரைவின் கண் வந்தது. கருவி மான்கணம் கல்லறை தெவிட்ட. 12—13. களிறு-அல்கி (பொரு. 49.) 13—14. நெடும்—காந்தள் (அகம். 4.) 17. 'நாற்ற நாட்டத் தறுகாற் பறவை (புறம். 70.). 19—20. குரலோர்த்தொடுத்த சுகிர்புரி நரம்பின், அரலை திரிவுறீஇ. (மலைபடு. 23—24) என்றவழி

அாலே குற்றங்குறித்தது. இதன் பின்னுள்ளன:—மாக்கடல் நிவந்தெழு செஞ்ஞாயிற்றுக்கவினை (புறம். 4) என்றவழி நிவப்பென்பது ஒக்கங்குறித்தது. 'மாகந்நிவளடி வருநீள் கொடி மாடவீதி என்றவழி, நிவள்தலென்பது நீண்டுதல் குறித்தது. இவர்தலென்பது பாத்தல்குறித்தது. 'வாயாச் செத்தோய் எனவாங்கே யெடுத்தனன்' என்றவழிச் செத் தென்பது குறிப்புணர்த்திற்று. பிறவுமன்ன. எ௰௬. ஆக முந்நூற்றறுபத்தாறு. எட்டாவது உரிச்சொல்லோத்து முடிந் தது. இவ்வோத்தினுட் சூத்திரமுட்பட்ட உரையினதளவு கிரந்தவகையான் இருநூற்றெண்பது. ஆகக்கிரந்தம்......

உ௧௯

எச்சவியல்.

392 12. எனவரும் அந்நால்வகைத்து.

393 18. தம்பொருள் வழாமை. 22. தத்தம் பொருள்.

உ௧எ

394 24. திரிசொல்லாகிய சொல். எ-று. 25. எனவே இயற் சொல்லுணர்த்தப்படும்—.

உ௧௪

394 2. சேரவைத்ததனுல். 6. சுளம் என்பதற்குப் பூழி, பாழி எனவும்—.

395 20—21. வையையாற்றின் தென்கிழக்காகிய பொதுங்கர் நாடு. ஒளிநாடு. 21. கருங்குட்ட நாடு, குட்ட நாடு. 23. வட தலை என்பன. இவை— 24. சேர்ந்த நாடென்றமையால்.

உ௧௧

2–5. 'குடபா லிருபுறச் சமயத் துடனுறைபு புகூஉந்தமிழ் திரிநிலங்களும், முடிநிலைமூவர் இடுநிலவாட்சியின் அரசுமேம் பட்ட குறுநிலக்குடுமிகள் பதின்மரு முடனிருப்பிருவரும் படைத்த பன்னிரு திசையில் சொன்னயமுடையவும்.' என் பது அகத்தியச் சூத்திரம். இதனுள் எல்லையின் புறத்த வும், தமிழ்திரிநிலங்களுமாகிய பன்னிருவாசரும் படைத்த. 6. விருப்புடையனவும். 13. சிங்களமும் மையத்தின் மேற்குப்பட்ட. 18—19. குமரியாற்றின் வடகரைக்கண் அப்பெயரானே கொல்லமெனக் குடியேற்றினர் போலும். 24. குடாவடி யுளியம் (முருகா. 313.) [பி. குடா என்

பது. தி. சூடா என்பது.] 26. யான்றற்கரையவந்து என்றவழி. 27. விளிப்பொருண்மை புணரக்கூறுவது.

உ௨௰

396 4. வடசொற்கிளவியாமாறு. 12. வட்டம், நட்டம், பட்டினம்.

397 16. எழுத்தொடு பொருந்தியசொல்லையன்றி. 19. (தச நான்கு, சாகரம், சத்திரம் என்பன இவ்வேட்டில் இல்லை.)

௨௨௧

398 2—6. வலிக்குவழி, மெலிக்குவழி, விரிக்குவழி, தொகுக்கு வழி, நீட்டுவழி, குறுக்குவழி என்பன இவ்வேட்டின் பாடங்கள்.

௨௨௨

11. தண்டையினக்கிளி கடிவோள், பண்டையளல்லள் மா ணேக்கினளே என்பதனுள். 13. தண்ணந்துறைவன் தக விலனே என்றவழி. 14. தண்ணமென. 18. வருதல் என் புழி அடங்காதோ. 20—21. உயர்திணைப் பொருட்கண் தொகாது நிற்றல் வேண்டுமாயினும். 24—25. யானை— யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்—திருத்தார்நன் றென்றேன் றியேன்.

399 30. மொழிபுணரியல்பே. 31. பொருள்புணர்ச் சொற் றொடுக்குமாறு.

௨௨௩

3—4. சொல்லுப: பொருண்மேல் மொழிபுணர்க்கும்

400 இயல்பு. எ-று. 14. ஆராயப் புலப்பட்டு முடிபுநோக்கி நிற்குஞ்சொற்களை. 15–16. அவற்றிற்கு முடிபாகிய பொரு ளுணர்த்துஞ் சொற்களைச்சேரநிறுத்தல். எ-று. 22. ஓடும், மலரும், பார்க்கும்—.

௨௨௪

4—5. என்றமையால் பொருள் விளங்கநில்லாது நினைத் தாற்றோன்றுமாறுக. 8—9. களிறுபோலுங் கலமும், கந்துபோலுங்கூம்பும் என மயங்கி.

401 16—17. துணித்துப்பொருந்துவழி யறிந்து கூட்டி. 25—26. ஒட்டிற்று. பி. ஒட்டியது. தி. ஒட்டியது.

௨௨௫

402 15—16. வார வெனினே யானஞ் சுவலே. சாரஉ கிவா லாறே. 19—20. என அடிமாறிப் பொருள்உணர்த் தியவாறு கண்டுகொள்க.

403 குறிப்பு:—இவ்வேட்டினும், தோற்றமும்வரையார் என்ற அளவிலே, சூத்திரம் முடிக்துளது.

௨௨௬

404 17—18. அவ்வடிக்கண்ணும் பிறவடிக்கண்ணும் முன் பாயினும் பின்பாயினும் எற்சம் வழிக் கொளுவப்பெறும். 23. [பி. மொதிமாற்பி. தி. மொழிமாறி.]

௨௨௭

405 16. கீ. கிர் என. 19. ஒட்டிநின்று, தமன், தமர். 22-23. தன்மையினும் வருவன. 28-29. உணர்த்துவன. இச் சொற்களெல்லாம். 30—31. ஒட்டிநின்ற பொரு ளுணரப்படும். ள-று.

௨௨௮

406 4. உவமத்தொகையே. 6. அன்மொழித் தொகையே யென்(று). 10-11. தொகையும், தொழில் குறித்த தொகையும். 15—16. இரண்டு விட்டிசைத்து நில்லாது.

௨௨௯

(குறிப்பு:— இசை நிறை எனத் தொடங்கும் சூத்திரம் இவ் வேட்டில் இங்கு இல்லை).

407 18—19. குதிரையாற் பூட்டப்பட்ட தேர். தாயொடு கூடி மூவர். 25-26. இறுதி நின்ற சொல் தொழிலுணர்த்தாது.

௨௩0

19. குறிப்பு:- உலகமுவப்ப என்பது முதல் கணவன் என்ப திருகவுள்ள அடிகளெல்லாம் இவ்வெட்டில் எழுதப்பட் டுள்ளன. 24. பூந்தொடைபோலக்கொள்க. 29. [பி. தொடை யொடே. தி. தொடையோடே.] 30--31. இரண்டு பின் னுகச் சேர்த்தது. 32. இணைத்ததாம். 33. இவ்வாறு வரு மென்று—.

உ௬௧

குறிப்பு:—தொடக்கத்தில் உள்ளவை—'உலகுமுவப்பவொனு தல் கணவன் என்பது இரண்டொன்ருக ஒட்டியவாறு என்னையெனின்' உலகமென்பது—. 9. நிகழ்காலங்குறித்த செய்பெனெச்சமும். 11. வேற்றுமை ஏற்றபெயர்—. 17. சொல்லாகி நின்றது என்பதன்பின் இவ்வேட்டில் உள்ளன:– 'அது திரிதருவென்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று. ஞாயிறு என்பதற்கு முன்னுள்ள சொல்லெல்லாம் தொகுத்து நோக்க ஞாயிற்றிற்கு அடையாகி நின்றன.' ஞாயிற்றை யென்னும் உருபு—. 22–23. [பி. செயவெனச்சவாய்பாடு. தி. செயவெனெச்சவாய்பாடு.] 30. [பி. ஒரு சொல் நீர்மை. தி. ஒரு சொல் நீர்மை. 31. இஃது இமைக்கும்.

உ௬௨

6—7. அது மதம் என்னும் உரிச்சொல். 8. நின்றது. உடைய என்பது உடைஎனச்செய்யுள் விகாரத்தாற் ருெக்கு நின்றது. நோன்மை பொறை. 17. உவம நிலையான அடையாகி—. 22. அடையடுத்து நின்று சினையிற்கூறும். 27—28. தொகையாகிய வாணுதல் கணவனென ஒரு பெயராயிற்று.

உ௬௩

5—6. இவ்வாறே சொன்னிலையுணர, இரண்டு சொல்லே—.

408 21. விரிதலானும்.... 22. ஒப்போதலானும்– 26. வருஞ் சொற்களை உவமத்தொகை– 28. ஓதுவாராயிற்று.

உ௬௪

409 14—15. அது தொகுங்காலத்துப் பொருண்மையுணர்ந் துஞ் சொல்லே.

410 23. அளவிற் சுவையினேன்(று). 29. பிறவுமாகி ஒரு பொருளினது.

உ௬௫

3. எல்லாச்சொல்லும் பண்புத்தொகையாம். 5. வட்டம் பலகை. 19–20. தம்முள் ஒருபுடை. 25–26. ஆசிரியன் நவ்வந்துவன். 27—28. முதற்பெயரே விசேடணமாகி.

411 31. அவ்வாறு கிளவியும்.

உ௬௯

10. அளவு தன்னேயே. 11—12. என்பனவும், கூப்பீடு காதம் என்பனவும். எண்—. 15—16. குன்றி, மஞ்சாடி, கால்—. 19. என்பன. அவ்வாறு கிளவியும்—. 20. ஆறு வகைப்பட்ட பெயரையும்—. 22. வரையறுத்து ஓதாமை யான். 24. கபிலர் பாணர் வந்தார்—.

உ௬எ

3. முந்நாழி, நூற்றிருபத்தைவர், மாகாணி—. 5. பல் பொருட்கேற்பின் வல்லது கோடல்' என்பதனுல் எண்ணும் மையே—. 9—10. ஒட்டிநிற்கும் சொல்லினது இலக் கணம்—.

412 18. இறுதிக்கண்ணின்றியலும் அன்மொழி—. 21. முன் னும் பின்னும் நின்ற இரண்டு சொல்லானும் உணரப்படும். 27. இது பண்பு வந்தது. 28. தகர ஞாழல் என்ப தும்மைத்தொகை. 30—31. தூணிப்பதக்கு என்றவழி அளவிற்குப் பெயராதலன்றி அளக்கப்படும் பொருளுக் கும்—.

உ௬அ

6—8. அன்மொழித்தொகையாம். ஈண்டுத்தொடிக் கடை யாகி நின்ற பொன் தொடியையுடையாளது செல்வத்தைக் காட்டுதலின், இவ்விரண்டு. 10. தாழ்குழலெனவும்—. 17—18. எடுத்தோதுவாராயிற்று என உணர்க.

413 24. மேற்சொல்லப்பட்ட தொகைக்கட் பொருள்நிற்கு மாறு. 26. முன்மொழிக்கட் பொருள் நிற்றலும். 29. நால்வகைப்படும் என்ப: பொருணிற்கு மாபு. எ-று. 30. எல்லாத் தொகையுஞ் சுட்டுதலான்.

உ௬௯

10—11. அம்மொழியல்லாத மொழிமேற்பொருள். 12. வினைத்தொகைகளும் பொருள்நிற்குமாறு.

414 23. கழஞ்சரை குறைந்தது. 26. குதிரையை, உவாப் பதினன்கை, பொற்றொடியை.

415 31. ஒருமருங்கு விலக்குதலை உணர்த்துதல்.

உ௪0

5. கபிலர் பாணர் வந்தார்.

416 21—22. செலவு வரவு என்பன கொள்ளப்படும். 22—23. சொல்லுதலுஞ் செய்தலுங் கொள்ளப்படும். அன்னவை யெல்லாம் என்றதனால். 27. குறியிட்டாராம். 28. இசை னொடு பொருந்திற்று. 30–31. 'சென்றதுகொல் போந்தது கொல்.'

உசக

3. மொய்ம்மலர்த்தார் மாறற்—சூழ்ந்துபின். 6. என்னும் புறப்பாட்டினுள்.

417 14. ஒரு பொருண்மேல் ஒரு சொல்லடுக்கி வருவழிவரும் வேறுபாடு—. 16. ஒரு சொல்மேலடுக்கி வருஞ் சொல்—. 22—23. துறக்குவ னல்லன் துறக்குவ னல்லன், தொடர் வரை வெற்பன் துறக்குவனல்லன், தொடர்பு வினையவை தோன்றின் விசும்பிற், சுடருள் இருடோன்றி யற்று- [கலி-சக]. இதனுள்—. 24—25- அசைநிலை செய்யு ளின்பங் குறித்து வரும். 29. செய்க என்றவழி—.

உசஉ

418 2. இசை நிறை யடுக்கி நிற்கும் வரையறை—. 7. விளக் கினிற் சிஃறிரி யொக்குமே.

419 13. விரைவு பொருண்மை. 17. அடுக்காயிற்று.

420 21. கண்டீ ரென்று கோண்டீ ரென்று. 27–28. அப்பொரு ளினை யிசைக்கும்—. 29. எனவே அச்சொற்களோடு—.

உசரு

2–3. கண்டீரோ கண்டீரோ கண்டீர் என்பன. 4–5. அவை அசைநிலையாகி வருமாறு—. படை விடுவான் மற்கண்டீர் காமன் மடையடும் பாலொடு கோட்டம் புகின் (கலி-முல். 9). 7. உதாரணம் வந்தவழி—.

421 15—17. மோரோடு வந்தா டகைகண்டை யாரொடுஞ், சொல்லியா ளன்றே வனப்பு. (முல்லைக்கலி 9) என்றவழி. [குறிப்பு:—இவ்வேட்டில் 421-ஆம் சூத்திர முடிவில் இறப் பினிகழ்வின், எவ்வயின் வினையும், அவைதாம் தத்தங் கிளவி என்னுஞ் சூத்திரங்களும், 'இம்மூன்று சூத்திரங் களுக்கும் பொருள் வினையியலுள் உரைக்கப்பட்டது' என் னும் உரையும் எழுதப்பட்டுள்ளன.

உசச

422 6. ஒரு பெயர்ச்சொல் எஞ்சி நிற்பது. 9—10. அன்ன வவ்வாமாறு உதாரணத்தால் விளங்கும். 18. பிறிது மொரு பொருளை—. 19. சொற்படு பொருளின்றிச். 21. ஒரு சொற்றனக்குரிய பொருளன்றி.

423 32—33. இவ்வையத்தாருள் எனக்கருதினுறையின், இவ் வையத்தாருள்—.

உசரு

4. முற்றுப்பெற்றவாறு கண்டுகொள்க.

424 17—18. பகைவர் கேடு தருதல் தப்பியும் வரும் எனப் பொருளுரைக்க வேண்டுதலின்—. 20. அற்றாது குணங் களை அழிக்கும் பசியைப் போக்குவது செய்ய—.

425 28—29. அவன் என்னும் பெயர் எஞ்சி நின்றது.

உசசா

2—3. ஆசிரியர் என்னும் பெயர். 7. வேற்றுமை ஏற்ற பெயர் எஞ்சி நின்றது.

426 10—11. அவ்வொழிந்த சொல்லிறைற் பொருள்—. 14. என்றுதல் ஒழிந்த பொருண்மை குறித்தவழி அப்பொருள்—.

427 20. அவ்வெதிர் மறையாற் பொருண்முடிவு—. 21—22. 'இம்மைப் பிறப்போ பிரியல மென்றேமாக்—கண்ணிறை'—.

உசஎ

428 2. முன்னின்ற சொல்லும் பின்னின்ற சொல்லும். 6. அவ் வினையோடு பொருந்திய—. 7—8. தான் வந்தது முடிதலே யன்றி. 22–23. ஐயங்குறித்து—. 30. சாத்தன் வந்தான் கொற்றன் வரும் எனவும் சாத்தன் வந்தான் கொற்றன் போம் எனவும் காலமும் வினையும்—. 31. [பி. சூத்திரத் தான. தி. சூத்திரத்தான்]

உசஅ

429 12. இவை உம்மை கொடாமல்—. 17. பொருள் இனிது விளங்குமாயின்—.

430 30—31. என என்பது எஞ்சி நின்று வியப்பென்பதனொடு தொடர்ந்தது. இதுவினை. பிரிநிலை—.

உசக

2. குறிப்பே, இசையே யென அவ்வீரைந்தும்—. 3. எஞ்சி நின்று ஈரைந்தென்னும்—.

431 14—15. என்றவாறு—.அஃதாமாறு வருகின்ற சூத்திரத் தான் விளங்கும்.

432 19—20. சொல்லும் வந்து முடிக்குஞ் சொல்லே—. 22. உதாரணம் தக்கம் சிறப்பு—.

433 26—27. எச்சம் அச்சொல் லளவல்லது முன்னும் பின்னும்-

உரு௦

2. அடும் புனலுள்—. 4—5. தமது நிலத்தில் எளியாரும் வலியராவர் ; பிறர் நிலத்தில் வலியாரும்—.

434 11—12. ஓதுதலால் ஆண்டு அடங்கிற்று. அதன்கண்—20—21. குற்றம் பயக்குமாதலின் அவையல் கிளவியாயின. இடக்கரடக்கிக் கூறுதல்—. 26. [பி. மேல்தற்கு. தி. மேல தற்கு.]

435 27—28. அவைக்களத்தல்லாத சொற்களை மறைத்துச் சொல்லுங்கால் அவைக்களத்து மருவிப்போந்த சொல்லே—.

உருக

436 10. கொடுப்போன் கூற்றுமாதலன்றி. 13. கொடு என் பது மிக்கோன் கூற்று—.

437 24. தன்னைப் பிறன்போற் கூறுதலிற் குறிப்பெச்ச மாயிற்று.

உருஉ

438 11. இச்சொற்குப் பொருள் இதுவென்னும் நியமம் இல—. 12. பிறிது பொருளும் படும்—. 22. எஞ்சி நின்றதென்று கொள்ள. 26—27. புலிப்பொருண்மை புணர்த்திற்றுயின், மாப்பொருண்மை புணர்த்துஞ் சொல் யாது என ஒரு கடா வரும். அக்கடா வேங்கையென்னுஞ் சொல்லின் கண்ணே மாப்பொருண்மையை புணர்த்தவதோர் ஓசை எஞ்சி நின்ற தெனினல்லது—.

௨௫௩

2. முந்துற்ற வழக்காகி—. 3. செய்யுளகத்தினும் பாவை வழக்கினும். 20. இப்பெயருடையாளைக் குருகென்றார்.

௨௫௪

438 2—3. சிவகதியும் பெறலாமே. 5. நமச்சிவாய என.

440 ஈயுமேவும். 19. [முன்னிலை மரபின் என்பதே இவ்வேட்டின் பாடமும்.] 20. வினைச்சொற்க(ண்) வருவதோர் வேறுபாடு. 26. ஈற்றெழுத்தொடு பால்காட்டும். 30. எனவரும். மேலோதப்பட்ட இ, ஐ, ஆய்.

௨௫௫

441 6. கடியப்படா: அவ்வினைச்சொற்கள். 10. பாடினியும்மே, யேருடைய. 17. தேரோடு புறங்காணேனாயி(ன்). 21–22. அவளூர் வினவி. 24. சான்றோயல்லை யென்றாம் வரற்கே. 25. [பி. சென்மொ. தி. சென்மோ.]

௨௫௬

442 10. ஆ அல் என்றவழி ஆல் என்பது.

443 20. உதாரணம் மேற்காட்டப்பட்டன.

444 24. எஞ்சிநின்றதோர் பொருள் நிகழ்ச்சி. 28. பொருளையும் தொழிலையும் நேர்காட்டாது.

௨௫௭

445 [குறிப்பு:—14. எறுவன் தவவன் எனவும்படிக்கலாம்.]

# நூற்பா முதற்குறிப்பு.


| அ | பக்கம். |
|---|---|
| அஆ வென-சொல்லே | ௧௪ |
| அஆ வென-படர்க்கை | ௧௪௦ |
| அஎனப் பிறத்தல் | ௮௪ |
| அச்சக் கிளவிக்(கு) | ௭௭ |
| அச்சம் பயமிலி | ௧௬௮ |
| அடிமறிச் செய்தி | ௨௨௫ |
| அடைசினை முதலென | ௨௫ |
| அண்மைச் சொல்லிற்(கு) | ௯௮ |
| அண்மைச் சொல்லே | ௯௬ |
| அதற்குவினை யுடைமையின் | ௬௧ |
| அதனி னியறல் | ௫௯ |
| அதிர்வும் விதிர்ப்பும் | ௧௯௬ |
| அதுச்சொல் வேற்றுமை | ௧௩௭ |
| அதுவிது வுதுவென | ௧௧௬ |
| அதுவென் வேற்றுமை | ௭௭ |
| அத்திணை மருங்கின் | ௧௪௧ |
| அந்தி லாங்க | ௧௭௫ |
| அந்நாற் சொல்லும் | ௨௨௧ |
| அப்பொருள் கூறின் | ௩௦ |
| அமர்தன் மேவல் | ௨௦௮ |
| அம்ஆம் எம்ஏம் | ௧௩௨ |
| அம்மகேட் பிக்கும் | ௧௭௮ |
| அம்ம வென்னும் | ௧௦௫ |
| அம்முக் கிளவியும் | ௧௫௦ |
| அயனெடி தாயின் | ௧௦௨ |
| அரியே யைம்மை | ௨௦௪ |
| அர்ஆர் பஎன | ௧௩௪ |
| அலமரல் தெருமரல் | ௧௯௫ |
| அவற்றின் வரூஉம் | ௧௮௪ |
| அவற்றுள், அழுங்கல் | ௨௦௨ |
| அ-ள், அன்னென் னிறுதி | ௯௭ |
| அ-ள், இஈ யாகும் | ௯௫ |
| அ-ள், இ உ ஐ ஓ | ௯௫ |
| அ-ள், இகுமும் சின்னும் | ௧௭௮ |
| அ-ள், இயற்சொல் தாமே | ௨௧௯ |

| அ | பக்கம். |
|---|---|
| அ-ள், இரங்கல் கழிந்த | ௨௦௪ |
| அ-ள், எழுவாய் வேற்றுமை | ௪௯ |
| அ-ள், செய்கென் கிளவி | ௧௩௩ |
| அ-ள், செய்யும் என்னும் | ௧௫௫ |
| அ-ள், தடவென் கிளவி | ௧௯௭ |
| அ-ள், நான்கே இயற்பெயர் | ௧௨௦ |
| அ-ள், நிரனிறை தானே | ௨௨௩ |
| அ-ள், நீயென் கிளவி | ௧௨௬ |
| அ-ள், பன்மை உரைக்கும் | ௧௩௫ |
| அ-ள், பிரிநிலை எச்சம் | ௨௪௪ |
| அ-ள், பெயரெனப் படுபவை | ௧௧௦ |
| அ-ள், முதனிலை மூன்றும் | ௧௪௯ |
| அ-ள், முன்னிலைக் கிளவி | ௧௪௩ |
| அ-ள், முன்னிலை தன்மை | ௧௪௯ |
| அ-ள், யாதென வரூஉம் | ௨௮ |
| அ-ள், விறப்பே வெரூஉ | ௨௦௨ |
| அ-ள், வினைவேறு படூஉம் | ௩௯ |
| அ-ள், வேற்றுமைத் தொகையே | ௨௨௯ |
| அவற்றொடு வருவழி | ௧௫௨ |
| அவைதாம், தத்தங் கிளவி | ௧௬௨ |
| அ-ம், தத்தங் குறிப்பின் | ௨௪௯ |
| அ-ம், தத்தம் பொருள்வயின் | ௯௧ |
| அ-ம், புணரியல் நிலையிடை | ௧௬௪ |
| அ-ம், பெண்மை இயற்பெயர் | ௧௨௧ |
| அ-ம், பெயர்ஐ ஒடுகு | ௪௮ |
| அ-ம், முன்மொழி நிலையலும் | ௨௩௮ |
| அ-ம், முன்னும் பின்னும் | ௧௬௬ |
| அ-ம், வழங்கியல் மருங்கில் | ௮௮ |
| அவையல் கிளவி | ௨௫௦ |
| அவ்வச் சொல்லிற்கு | ௧௮௭ |
| அவ்வழி, அவனிவன் | ௧௧௧ |
| அவ்வே, இவ்வென அறிதற்கு | ௯௪ |
| அளபெடைப் பெயரே | ௯௯, ௩௧, ௩௪ |
| அளபெடை மிகூஉம் | ௯௬ |

| அ | பக்கம். |
|---|---|
| அளவு நிறையும் | ௯௨ |
| அன்ஆன் அள்ஆள் | ௧௩௪ |
| அன்மையி னின்மையின் | ௧௩௮ |
| அன்னபிறவும்-புலவர் | ௨௧௩ |
| அன்னபிறவுந் தொன்னெறி | ௭௮ |
| அன்னபிறவு மஃறிணை | ௧௧௭ |
| அன்னபிறவு முயர்திணை | ௧௧௫ |

| ஆ | |
|---|---|
| ஆக ஆகல் | ௧௭௯ |
| ஆக்கக் கிளவி | ௨௨ |
| ஆக்கந் தானே | ௨௨ |
| ஆங்க வுரையசை | ௧௭௯ |
| ஆடூஉ வறிசொல் | ௯ |
| ஆண்மை சுட்டிய | ௧௨௩ |
| ஆண்மை திரிந்த | ௧௬ |
| ஆண்மை யடுத்த | ௧௧௩ |
| ஆயென் கிளவியும் | ௧௩௭ |
| ஆரு மருவும் | ௧௦௦ |
| ஆவோ வாகும் | ௧௨௮ |
| ஆறன் மருங்கின் | ௭௮ |
| ஆறு குவதே | ௬௪ |
| ஆனெ னிறுதி | ௯௮ |

| இ | |
|---|---|
| இசைத்தலும் உரிய | ௪௫ |
| இசைநிறை யசைநிலை | ௨௪௧ |
| இசைப்படு பொருளே | ௨௪௨ |
| இசைப்பிசை யாகும் | ௧௯௫ |
| இடைச்சொல் லெல்லாம் | ௨௫௬ |
| இடைச்சொற் கிளவியும் | ௧௦௯ |
| இடையெனப் படுவ | ௧௬௪ |
| இதன திதுவிற்று | ௮௫ |
| இதுசெயல் வேண்டும் | ௧௫௮ |
| இயற்கைப் பொருளை | ௨௧ |
| இயற்கையி னுடைமையின் | ௬௫ |
| இயற்சொற் றிரிசொல் | ௨௧௬ |
| இயற்பெயர்க் கிளவியும் | ௩௩ |
| இயற்பெயர் சினைப்பெயர் | ௧௨௦ |
| இயற்பெயர் முன்னர் | ௧௭௬ |
| இயைபே புணர்ச்சி | ௧௯௫ |
| இரட்டைக் கிளவி | ௩௬ |
| இரண்டன் மருங்கின் | ௭௫ |
| இரண்டா குவதே | ௫௬ |
| இருதிணைச் சொற்கும் | ௧௧௮ |
| இருதிணைப் பிரிந்த | ௧௩௦ |
| இருதிணை மருங்கின் | ௧௫ |
| இருபெயர் பலபெயர் | ௨௩௫ |
| இர்ஈர் மின்னென | ௧௪௪ |
| இலம்பா டொற்கம் | ௨௦௫ |
| இறப்பின்-ஆறே | ௧௩௦ |
| இறப்பின்-மொழியே | ௧௬௦ |
| இறப்பே யெதிர்வே | ௧௫௧ |
| இறுதியு மிடையும் | ௮௧ |
| இறைச்சிப் பொருள்வயின் | ௧௨௮ |
| இனச்சுட் டில்லா | ௨௦ |
| இனைத்தென வறிந்த | ௨௮ |
| இன்றில வுடைய | ௧௪௨ |
| இன்ன பெயரே | ௧௨௭ |

| ஈ | |
|---|---|
| ஈதா கொடுவென | ௨௫௧ |
| ஈரள பிசைக்கும் | ௧௮௦ |
| ஈற்றுநின் றிசைக்கும் | ௧௮௨ |
| ஈற்றுப்பெயர் முன்னர் | ௭௬ |

| உ | |
|---|---|
| உகப்பே யுயர்தல் | ௧௯௪ |
| உசாவே சூழ்ச்சி | ௨௦௬ |
| உணர்ச்சி வாயில் | ௨௧௨ |
| உம்முந் தாகும் | ௧௮௫ |
| உம்மை தொக்க | ௧௮௩ |
| உம்மை யெச்சம் | ௨௪௬ |
| உம்மை யெண்ணின் | ௧௮௫ |
| உம்மை யெண்ணும் | ௧௮௩ |
| உயர்திணை மருங்கின் | ௨௩௧ |
| உயர்திணை மருங்கினும் | ௩௭ |
| உயர்திணை யென்மனார் | ௫ |
| உயாவே யுயங்கல் | ௨௦௬ |
| உரிச்சொற் கிளவி | ௧௧௦ |
| உரிச்சொல் மருங்கினும் | ௨௫௭ |
| உருபுதொடர்ந் தடுக்கிய | ௭௧ |
| உருபென மொழியினும் | ௨௩ |
| உருவுட் காகும் | ௧௯௩ |

| உ | பக்கம். |
|---|---|
| உரையிடத் தியலும் | ௨௫௮ |
| உவப்பே யுவகை | ௧௧௬௪ |
| உவமத் தொகையே | ௨௩௩ |
| உளவெனப் பட்ட | ௧௦௫ |
| உறுதவ நனியென | ௧௬௨ |
| **எ** | |
| எச்சஞ் சிறப்பே | ௧௯௮ |
| எச்ச வும்மையும் | ௧௮௧ |
| எஞ்சிய கிளவி | ௧௪௫ |
| எஞ்சிய மூன்றும் | ௨௪௬ |
| எஞ்சிய விரண்டின் | ௧௦௨ |
| எஞ்சுபொருட் கிளவி | ௧௮௨ |
| எடுத்த மொழியினம் | ௪௫ |
| எண்ணுங் காலை | ௩௯ |
| எண்ணே காரம் | ௧௮௩ |
| எதிர்மறுத்து மொழியினும் | ௮௪ |
| எதிர்மறை யெச்சம் | ௨௪௯ |
| எப்பொரு ளாயினும் | ௩௦ |
| எய்யா மையே | ௨௦௧ |
| எல்லாச் சொல்லும் | ௧௦௭ |
| எல்லாத் தொகையும் | ௨௩௬ |
| எல்லா மென்னும் | ௧௨௫ |
| எல்லாரு மென்னும் | ௧௧௩ |
| எல்லே யிலக்கம் | ௧௭௫ |
| எவ்வயிற் பெயரும் | ௫௪ |
| எவ்வயின் வினையும் | ௧௯௧ |
| எழுத்துப்பிரிந் திசைத்தல் | ௨௧௩ |
| எறுழ்வலி யாகும் | ௨௧௦ |
| எற்றென் கிளவி | ௧௭௪ |
| எனவெ னெச்சம் | ௨௪௮ |
| என்று மெனவும் | ௧௮௯ |
| என்றென் கிளவியும் | ௧௭௨ |
| **ஏ** | |
| ஏபெற் றாகும் | ௧௬௪ |
| ஏவுங் குரையும் | ௧௭௭ |
| ஏழா குவதே | ௯௭ |
| ஏற்றம் நினைவும் | ௨௦௦ |
| ஏனைக் காலமும் | ௧௯௦ |
| ஏனைப் புள்ளி | ௬௭ |
| ஏனை யுயிரே | ௬௯ |

| ஏ | பக்கம். |
|---|---|
| ஏனை யுருபு மன்ன | ௮௯ |
| ஏனை யெச்சம் | ௧௫௦ |
| **ஐ** | |
| ஐந்தா குவதே | ௬௨ |
| ஐயமுங் கரிப்பும் | ௨௦௬ |
| ஐயுங் கண்ணும் | ௮௩ |
| ஐவியப் பாகும் | ௨௧௦ |
| **ஒ** | |
| ஒப்பில் போலியும் | ௬௭௬ |
| ஒருபெயர்ப் பொதுச்சொல் | ௩௭ |
| ஒருபொரு ளிருசொல் | ௨௫௬ |
| ஒருபொருள்-இலவே | ௩௪ |
| ஒருபொருள்-கிளவி | ௨௧௭ |
| ஒருமைசுட்டிய பெயர்நிலை | ௨௫௬ |
| ஒருமைசுட்டிய எல்லாப் பெயரும் | ௧௨௪ |
| ஒருமை யெண்ணின் | ௩௫ |
| ஒருவ ரென்னும் | ௧௨௭ |
| ஒருவரைக் கூறும் | ௨௯ |
| ஒருவினை யொடுச்சொல் | ௭௩ |
| ஒழியிசை யெச்சம் | ௨௪௯ |
| ஒன்றறி கிளவி | ௧௪ |
| ஒன்றறி சொல்லே | ௧௦ |
| ஒன்றன் படர்க்கை | ௧௪௧ |
| ஒன்றுவினை மருங்கின் | ௪௦ |
| **ஓ** | |
| ஓம்படைக் கிளவிக்கு | ௭௯ |
| ஓய்த லாய்தல் | ௧௬௬ |
| ஓவும் உவ்வும் | ௬௫ |
| **க** | |
| கடதற வென்னும் | ௧௩௩ |
| கடிசொல் லில்லை | ௨௫௫ |
| கடியென் கிளவி | ௨௦௬ |
| கண்கால் புறமகம் | ௯௭ |
| கண்டீ ரென்ற | ௨௪௨ |
| கண்ணுந் தோளும் | ௪௯ |
| கதழ்வுந் துனைவும் | ௧௬௯ |
| கமநிறைந் தியலும் | ௨௦௪ |

| க | பக்கம். |
|---|---|
| கம்பலை சும்மை | ௨௦௨ |
| கரும மல்லா | ௭௧ |
| கருவி தொகுதி | ௨௦௩ |
| கவவகத் திடுமே | ௨௦௪ |
| கவர்புவிருப் பாகும் | ௨௦௫ |
| கழிவே யாக்கம் | ௧௯௭ |
| கழுமென் கிளவி | ௨௦௩ |
| கள்ளொடு சிவணும் | ௪௧௭ |
| கறுப்புஞ் சிவப்பும் | ௨௦௭ |
| கன்றலுஞ் செலவும் | ௭௨ |
| **கா** | |
| காப்பி னொப்பின் | ௫௭ |
| காலந் தாமே | ௧௩௦ |
| கால முலகம் | ௬௪ |
| **கி** | |
| கிளந்த வல்ல வேறு பிற | ௧௩ |
| கிளந்த வல்ல அன்னபிறவும் | ௧௮௮ |
| கிளந்த விறுதி | ௧௦௪ |
| **கு** | |
| குஐ ஆனொ | ௮௪ |
| குடிமை யாண்மை | ௬௧ |
| குத்தொக வரூஉம் | ௭௭ |
| குருவுங் கெழுவும் | ௧௯௩ |
| குறித்தோன் கூற்றம் | ௬௧ |
| குறிப்பினும் வினையினும் | ௧௩௧ |
| குறைச்சொற் கிளவி | ௨௫௯ |
| குறைந்தன வாயினும் | ௨௫௯ |
| **கூ** | |
| கூர்ப்புங் கழிவும் | ௧௯௯ |
| கூறிய கிளவி | ௨௧௧ |
| கூறிய முறையின் | ௫௫ |
| **கெ** | |
| கெடவரல் பண்ணை | ௧௯௭ |
| **கே** | |
| கேட்டை யென்றா | ௨௬௩ |

| கொ | பக்கம். |
|---|---|
| கொடுவெவ் கிளவி | ௨௫௧ |
| கொல்லே யையம் | ௧௭௫ |
| **சா** | |
| சாயல் மென்மை | ௧௯௮ |
| **சி** | |
| சிதைந்தன வரினும் | ௨௨௦ |
| சிறப்பி னாகிய | ௩௩ |
| சினைநிலைக் கிளவிக்கு | ௭௧ |
| **சீ** | |
| சீர்த்தி மிகுபுகழ் | ௧௯௫ |
| **சு** | |
| சுட்டுமுத லாகிய | ௩௨ |
| சுட்டுமுதற் பெயரும் | ௧௦௩ |
| சுட்டுமுதற் பெயரே | ௧௦௨ |
| சுண்ணந் தானே | ௨௨௪ |
| **செ** | |
| செந்தமிழ் சேர்ந்த | ௨௧௮ |
| செப்பினும் வினாவினும் | ௧௯ |
| செப்பும் வினாவும் | ௧௭ |
| செப்பே வழீஇயினும் | ௧௮ |
| செயப்படு பொருளை | ௧௫௯ |
| செயற்கைப் பொருளை | ௨௨ |
| செய்து செய்யூ | ௧௪௮ |
| செய்த னெச்சத்து | ௧௫௫ |
| செய்யா யென்னும் | ௨௫௪ |
| செய்யுள் மருங்கினும் | ௨௬௧ |
| செலவினும் வரவினும் | ௨௬ |
| செல்ல லின்னல் | ௧௯௩ |
| செழுமை வளனும் | ௨௦௩ |
| **சே** | |
| சேரே திரட்சி | ௨௦௫ |
| **சொ** | |
| சொல்லெனப் படுப | ௧௦௯ |
| சொல்லெ னெச்சம் | ௨௪௯ |

| ஞெ | பக்கம். |
|---|---|
| ஞெமிர்தலும் பாய்தலும் | ௨௦௫ |
| **த** | |
| தகுதியும் வழக்கும் | ௨௦ |
| தஞ்சக் கிளவி | ௧௭௫ |
| தடவுங் கயவும் | ௧௩௭ |
| தடுமாறு தொழிற்பெயர்க்(கு) | ௭௯ |
| தத்த மெச்சமொடு | ௧௫௪ |
| தநநு எனன | ௧௦௯ |
| தநநு எனனும் | ௨௨௭ |
| தன்மேற் செஞ்சொல் | ௨௪௭ |
| தன்மை சுட்டலும் | ௨௪ |
| தன்மை சுட்டின் | ௧௨௭ |
| தன்மைச் சொல்லே | ௩௪ |
| **தா** | |
| தாமென் கிளவி | ௧௨௫ |
| தாவே வலியும் | ௨௦௧ |
| தானென் கிளவி | ௧௨௫ |
| தானென் பெயரும் | ௧௦௦ |
| **தி** | |
| திணையொடு பழகிய | ௧௨௩ |
| **தீ** | |
| தீர்தலும் தீர்த்தலும் | ௧௩௭ |
| **து** | |
| துயவென் கிளவி | ௨௦௯ |
| துவன்று நிறைவாகும் | ௧௧௩ |
| துவைத்தலுஞ் சிலைத்தலும் | ௨௦௪ |
| **தெ** | |
| தெவுக்கொளற் பொருட்டே | ௨௦௧ |
| தெவ்வுப்பகை யாகும் | ௨௦௨ |
| தெரிநிலை யுடைய | ௧௧௮ |
| **தே** | |
| தெரிபுவேறு நிலையலும் | ௧௦௮ |
| தெளிவி னேவும் | ௧௭௩ |

| தே | பக்கம். |
|---|---|
| தேற்றம் வினாவே | ௧௭௧ |
| **தொ** | |
| தொழிலிற் கூறும் | ௩௮ |
| தொழிற்பெய ராயின் | ௧௦௧ |
| **ந** | |
| நம்பு மேவும் | ௧௩௮ |
| நனவே களனும் | ௨௦௭ |
| நன்றீற் றேவும் | ௧௮௧ |
| நன்றுபெரி தாகும் | ௨௦௧ |
| **நா** | |
| நான்கா குவதே | ௯௧ |
| **நி** | |
| நிகழூஉ நின்ற | ௧௧௩ |
| நிரனிறை சுண்ணம் | ௨௨௨ |
| நிலப்பெயர் குடிப்பெயர் | ௧௧௩ |
| நிலனும் பொருளும் | ௧௫௨ |
| நிறத்துரு வுணர்த்தற்கும் | ௨௦௭ |
| நின்றாங் கிசைத்தல் | ௪௫ |
| **நீ** | |
| நீயிர் நீயென | ௧௨௯ |
| **நு** | |
| நும்மின் றிரிபெயர் | ௧௦௨ |
| **நொ** | |
| நொசிவும் நுழைவும் | ௨௦௭ |
| **ப** | |
| பசப்புநிற னாகும் | ௧௧௫ |
| படரே யுள்ளல் | ௨௦௦ |
| பணையே பிழைத்தல் | ௨௦௦ |
| பண்புகொள் பெயரும் | ௩௩, ௧௦௧ |
| பண்புதொக வரூஉம | ௨௩௭ |
| பயப்பே பயனாம் | ௧௩௪ |
| பரவும் பழிச்சும் | ௨௦௩ |
| பலவயி னானும் | ௩௮ |

| ப | பக்கம். |
|---|---|
| பல்ல பலசில | ௧௧௬ |
| பல்லோர் படர்க்கை | ௧௪௭ |
| பழுதுபய மின்றே | ௧௯௮ |
| பன்முறை யானும் | ௧௫௧ |
| பன்மை சுட்டிய | ௧௨௪ |
| பன்மையும்-இலவே | ௧௩௧, ௧௪௨ |
| பன்மையும்-அஃறிணையவ்வே | ௧௪௧ |
| **பா** | |
| பாலறி மரபின் | ௧௩௬ |
| பான்மயக் குற்ற | ௨௩ |
| **பி** | |
| பிணையும் பேணும் | ௨௦௦ |
| பிண்டப் பெயரும் | ௭௩ |
| பிரிநிலை வினாவே | ௧௭௦ |
| பிரிநிலை வினையே | ௨௪௩ |
| பிறிதுபிறி தேற்றலும் | ௮௧ |
| பின்முன் கால்கடை | ௧௪௯ |
| **பு** | |
| புதிதுபடற் பொருட்டே | ௨௦௮ |
| புரையுயர் பாகும் | ௧௯௩ |
| புலம்பே தனிமை | ௧௯௯ |
| புள்ளியு முயிரும் | ௧௦௪ |
| புனிறென் கிளவி | ௨௦௭ |
| **பெ** | |
| பெண்மை சுட்டிய சினைமுதல் | ௧௨௨ |
| பெண்மை சுட்டிய வுயர்திணை | ௧௧ |
| பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும் | ௧௨௩ |
| பெண்மைச் சினைப்பெயர் | ௧௨௧ |
| பெண்மை முறைப்பெயர் | ௧௨௨ |
| பெயரி னாகிய | ௫௩ |
| பெயரெஞ்சு கிளவி | ௨௪௫ |
| பெயரெஞ்சு கிளவியும் | ௧௫௪ |
| பெயர்நிலைக் கிளவி | ௫௫ |
| பெயர்நிலைக் கிளவியின் | ௨௫௧ |
| **பே** | |
| பேஎனாம் உருமெண | ௨௦௫ |
| **பை** | **பக்கம்.** |
| பையுளும் சிறுமையும் | ௨௦௬ |
| **பொ** | |
| பொருடெரி மருங்கின் | ௨௨௫ |
| பொருட்குத் திரிபில்லை | ௨௧௨ |
| பொருட்குப் பொருடெரியின் | ௨௧௧ |
| பொருண்மை சுட்டல் | ௫௧ |
| பொருண்மை தெரிதலும் | ௧௦௮ |
| பொருளொடு புணரா | ௩௦ |
| பொற்பே பொலிவு | ௨௦௦ |
| **ம** | |
| மகடூஉ மருங்கின் | ௧௨௮ |
| மதவே மடனும் | ௨௦௮ |
| மல்லல் வளனே | ௧௯௪ |
| மழவும் குழவும் | ௧௯௫ |
| மறைக்கும் காலை | ௨௫௦ |
| மற்றென் கிளவி | ௧௭௩ |
| மற்றைய தென்னும் | ௧௭௪ |
| மன்றவென் கிளவி | ௧௭௪ |
| மன்னாப் பொருளும் | ௨௯ |
| **மா** | |
| மாதர் காதல் | ௧௯௮ |
| மாரைக் கிளவியும் | ௧௩௪ |
| மாலை யியல்பே | ௧௯௬ |
| மாவென் கிளவி | ௧௭௭ |
| **மி** | |
| மிகுதியும் வனப்பும் | ௨௦௮ |
| மிக்கதன் மருங்கின் | ௧௫௭ |
| மியாயிக மோமதி | ௧௭௭ |
| **மு** | |
| முதலிற் கூறும் | ௮௯ |
| முதலும் சினையும் | ௭௩ |
| முதற்சினைக் கிளவிக்கு | ௭௨ |
| முந்நிலைக் காலமும் | ௧௫௬ |
| முரஞ்சல் முதிர்வே | ௧௯௧ |
| முழுதென் கிளவி | ௧௯௮ |
| முறைப்பெயர்-இயல | ௧௦௩ |
| முறைப்பெயர்-வருமே | ௯௧ |

| மு | பக்கம். |
|---|---|
| முறைப்பெயர் மருங்கின் | கூசு |
| முற்படக் கிளத்தல் | ௯உ |
| முற்றிய வும்மை | க௮உ |
| மூனவு முனிவாகும் | உகO |
| முன்னத்தி னுணரும் | உ௫க |
| முன்னிலைச் சுட்டிய | உசுO |
| முன்னிலை முன்னர் | உ௫ச |
| முன்னிலை வியங்கோள் | கச௯ |

| மூ | |
|---|---|
| மூன்றனும் ஐந்தனும் | எச |
| மூன்ரு குவதே | ௫க |

| மெ | |
|---|---|
| மெய்பெறக் கிளந்த | உகO |

| மொ | |
|---|---|
| மொழிப்பொருட் காரணம் | உகஉ |
| மொழிமாற் றியற்கை | உஉசு |

| யா | |
|---|---|
| யாஅ ரென்னும் | க௯சு |
| யாகா பிறபிறக்கு | களக |
| யாணுக் கவினும் | உO௮ |
| யாத னுருபி(ல்) | ௮௯ |
| யாதெவ னென்னும் | உள |

| ர | |
|---|---|
| ரஃகா னொற்றும் | ௰௯ |

| வ | |
|---|---|
| வடசொற் கிளவி | உஉO |
| வண்ணத்தின் வடிவின் | உ௯ச |
| வண்ணம் வடிவே | சு௯ |

| வ | பக்கம். |
|---|---|
| வம்புநிலை யின்மை | கக௮ |
| வயவலி யாகும் | உOசு |
| வயாவென் கிளவி | உOசு |
| வறிதுசிறி தாகும் | உOO |
| வன்புற வரூஉம் | க௫௮ |

| வா | |
|---|---|
| வாராக் காலத்தும் | க௫சு |
| வாராக் காலத்து | க௫௮ |
| வாரா மரபின | உசO |
| வார்தல் போகல் | கககூ |
| வாளொளி யாகும் | உOசு |

| வி | |
|---|---|
| வியங்கோ ளெண்ணுப்பெயர் | ௯௫ |
| வியலென் கிளவி | உO௫ |
| விரைசொல் லடுக்கே | உசஉ |
| விழுமஞ் சீர்மையும் | உO௯ |
| விளைவின் றில்லை | கள௯ |
| விளைவே காலம் | கசுஎ |
| விளியெனப் படுப | கூச |
| விறப்பு முறப்பும் | உOஉ |
| வினவுஞ் செப்பே | க௮ |
| வினையிற் றோன்றும் | க௫ |
| வினையினும் பண்பினும் | கO௯ |
| வினையின் றொகுதி | உ௯ச |
| வினையெஞ்சு கிளவிக்கு | உச௫ |
| வினையெஞ்சு கிளவியும் | உ௫எ |
| வினையெனப் படுவது | க௯O |
| வினையே குறிப்பே | களஉ |
| வினையே செய்வது | ௮எ |
| வினையொடு நிலையினும் | க௮சு |
| வினைவேறு படாஅ | சக |
| வினைவேறு படூஉம் | ௯கூ |

| வெ | |
|---|---|
| வெம்மை வேண்டல் | கககூ |
| வெளிப்படு சொல்லே | கககூஉ |

| வே | பக்கம். |
|---|---|
| வேறுவினைப் பொதுச்சொல் | ௫௫ |
| வேற்றுமை தாமே | ௪௮ |
| வேற்றுமைத் தொகையே | ௨௨௮ |
| வேற்றுமைப் பொருளை | ௬௯ |

| வை | |
|---|---|
| வையே கூர்மை | ௨௧௦ |

| ள | பக்கம். |
|---|---|
| ளஃகா னொற்றே | ௧௫ |

| ன | |
|---|---|
| னஃகா னொற்றே | ௧௨ |
| னரல்ள வென்னும் | ௯௭ |